V2 11, 31 P03
P03. 52.1
185052

**3-11-2003**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் .. .. .. | iii-vi |
| Governor and Council of Ministers .. .. .. | vii-x |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் .. .. | xi-xiv |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) .. .. .. | xv-xxv |
| **1. இரங்கற் குறிப்புகள்—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு .. .. .. | 1-3 |
| **2. வினாக்கள்–விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 3-35, 37-78 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 முதல் 6 வரை) .. .. | 79-444 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டித்தது .. | 36 |
| (ஆ) கோயில்களில் ஆடு, கோழி பலியிடுதல் குறித்து .. | 445 |
| **4. அறிவிப்பு—** | |
| மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. .. .. | 445 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2003 .. | 446-447 |

**5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, *2003* .. 447

(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, *2003* .. 448

**6. கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2003–2004, அளித்தல்—** .. 448-452

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** .. 453-458




**ஆளுநரும் அமைச்சரவையும்**

**ஆளுநர்–திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன் ராவ்**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைக சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

**4. சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல். மின்சாரம் மற்றும் மரபு சாரா எரிசக்தி மேம்பாடு.

5. **இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**
இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. **கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**
கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

7. **மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்,

8. **வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

9. **சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் ... குற்றவாளிகள் சீர்திருத்த நிறு...

10. **ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**
ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.



11. **போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

12. **தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**
தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. **ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**
குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

14. **வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**
வணிக வரிகள், மற்றும் கூட்டுறவு.

15. **உணவு துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**
உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

16. **உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றி யங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதரன்:
காலநடை பராமரிப்பு.

18. வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:
வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:
வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

20. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:
பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

21. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:
கைத்தறி மற்றும் துணித் தொழில்.

22. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். ராதாகிருஷ்ணன்:
மீன்வளம்.

23. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர்:
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

24. பிற்படுத்தப்பட்டோர் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. அன்[illegible]
பிற்படுத்தப்பட்டோர், [illegible] பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்



25. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

26. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:
விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**
Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.

2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** .. **The Hon. Thiru O. Panneerselvam:**
Public Works, Highways, Irrigation including minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

3. **Minister for Finance** .. **The Hon. Thiru C. Ponnaiyan:**
Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies.

4. **Minister for Law, Information Technology and Electricity** .. **The Hon. Thiru D. Jayakumar:**
Law, Courts, Information Technology, Electricity and Non-conventional Energy Development.

5. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**
Hindu Religious and Charitable Endowments.

6. **Minister for Education** .. **The Hon. Thiru S. Semmalai:** Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

7. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:** Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

9. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Labour** .. **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakf's.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:** Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangam:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

14. **Minister for Commercial Taxes and Co-operation.** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:** Commercial Taxes and Co-operation.

15. **Minister for Food** .. **The Hon. Thiru P. Mohan:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics.

16. **Minister for Local Administration** .. **The Hon. Thiru M.C. Sampath:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

17. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:** Animal Husbandry.

18. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control.

19. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

20. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development.

21. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles.

22. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries.

23. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation.

24. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru P. Annavi:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

25. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.P. Anbalagan:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.

26. **Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:** Sports and Youth Welfare.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள்***

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. செ. கு. தமிழரசன்

**செயலாளர்**

திரு. வெ. இராசாராமன்

* 3-11-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர். |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ., | .. குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ.,பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |



## பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. | பெரணமல்லூர் |
| 13. அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. அன்பில் பெரியசாமி, திரு. | ... | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செவ)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே. பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி. ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே. என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆவா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ)
43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆவா.)
60. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே. ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செவ)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே. பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி. ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே. என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆவா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்



42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆவா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்

64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை



86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)
89. சாமி, திரு. ஆர். - மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்

108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி.
110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்ககிரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)



130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
136. நடராசன், திரு. வது. - இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி - போளூர்
140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)

151. பழனிப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. இ. - தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு



172. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
177. மணி, திரு. டி. - விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. - கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. - தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. - சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப் பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
194. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை

195. ராமசாமி, திரு. பி.சி. - மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். - காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்
205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி



217. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-1
220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
222. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
223. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
225. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
226. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்
227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி
228. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி
231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 17, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 நவம்பர் 3, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

தம்மைத் தாமே வருத்திக் கொண்டு ஒரு குறிக்கோளுக்காக நோன்பு, நோற்பவர்களை எந்தத் துன்பங்கள் தாக்கினாலும் அவர்கள் சுடச்சுட ஒளிவிடும் பொன்னைப் போல் புகழ் பெற்றே உயர்வார்கள்.

## 1. இரங்கற் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. வி. ரவிச்சந்திரன் அவர்கள் 20-05-2003 அன்றும், தமிழக முன்னாள் அமைச்சர், திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் அவர்கள் 20-05-2003 அன்றும், திரு. ப.சு. துரைசாமி அவர்கள் 13-06-2003 அன்றும், திரு. கே. இராமச்சந்திரன் அவர்கள் 25-06-2003 அன்றும், சட்டமன்றப் பேரவை முன்னாள் துணைத் தலைவர், திரு. வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் 17-07-2003 அன்றும் திரு. அ. தேவராஜ் அவர்கள் 19-07-2003 அன்றும், திரு. ஆர். சீனிவாசக நாயக்கர் அவர்கள் 21-07-2003 அன்றும், திரு. ப.மு. கிருஷ்ணன் அவர்கள் 23-07-2003 அன்றும், திரு. எஸ்.எம். கிருஷ்ணன் அவர்கள் 13-09-2003 அன்றும், திரு. ஆ. கோவிந்தராசன் அவர்கள் 26-10-2003 அன்றும் மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. ரவிச்சந்திரன் அவர்கள் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை உப்பிலியாபுரம் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் அவர்கள் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை சிவகங்கை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரியமுறையில் பணியாற்றியுள்ளார். மேலும் அவர் 1967 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரை மக்களவை உறுப்பினராகவும், 1989 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை மாநிலங்களவை உறுப்பினராகவும், 26-03-1998 முதல் 14-05-2001 வரை தமிழக நெடுஞ்சாலைகள் துறை அமைச்சராகவும் திறம்பட பணியாற்றியுள்ளார்.

திரு. ப.சு. துரைசாமி, அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை பர்கூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. இராமச்சந்திரன் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை பரமக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை மற்றும் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை வேடசந்தூர் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேலும், 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராகப் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. அ. தேவராஜ் அவர்கள் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை செய்யாறு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஆர். சீனிவாசக நாயக்கர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை சாத்தூர் தொகுதி இடைத்தேர்தலில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றியுள்ளார்.

திரு. ப.மு. கிருஷ்ணன் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை பாலக்கோடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு



சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ்.எம். கிருஷ்ணன் அவர்கள் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை தாம்பரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. ஆ. கோவிந்தராசன் அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை புவனகிரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்களுடைய மறைவினால் அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருமக்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

*முற்பகல் 10-05*

## 2. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் 1, திரு. ஆஸ்டின், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இந்த நேரத்தில் இல்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Mr. Speaker Sir, I want to make a submission.

[2003 நவம்பர் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், இந்த நேரத்தில் இல்லை. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், விதிகளுக்குப் புறம்பாக நீங்கள் நினைத்த நேரத்தில் எல்லாம் எழுந்து பேச முடியாது. இது மரபல்ல, அவையினுடைய விதியும் இதை அனுமதிக்காது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

1—

**வருவாய் வட்டங்களைப் பிரித்தல்**

***3955—திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள பெரிய வருவாய் வட்டங்களை இரண்டாகப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாவட்ட நிர்வாகம் திறம்படச் செயல்படவும்,......

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான சப்ஜெக்ட் குறித்து...



2003 நவம்பர் 3]

| | |
|---|---|
| வட்டங்கள் | 206 |
| உள்வட்டங்கள் | 1,120 |
| கிராமங்கள் | 17,274 |

தேவைப்படின், பெரிய வட்டங்கள் அந்தந்தப் பகுதியிலுள்ள நிர்வாகத்திற்குச் சிரமமாக இருப்பதாக அரசு நினைத்தால், பொதுமக்களுக்கு நன்மை பயக்கின்ற வகையில், அந்த வட்டங்களைப் பிரிப்பதனால் நிலைமை ஏற்படுமாயின் வட்டங்களைப் பிரிப்பதற்கு அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன். தமிழகத்திலுள்ள பெரிய வட்டங்களையெல்லாம் பிரிக்கின்றபோது—ஈரோடும், மொடக்குறிச்சியும் ஒன்றாக இருக்கின்றன. ஈரோடு-நொய்யல் 44 கிலோமீட்டர் உள்ளதால் மக்கள் அங்கிருந்து வருவதற்கு மிகவும் அவதிப்படுகிறார்கள்; ஈரோடுக்கு வருவதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். எனவே — ஈரோடு இரண்டாகப் பிரிக்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அந்தியூர் தொகுதி மக்கள் நீண்ட காலமாகத் தனி வட்டாட்சியர் அலுவலகம் வேண்டுமென்று கோரி வருகிறார்கள். அந்தியூர், பவானி ஒன்றாக இப்போது செயல்பட்டு வருகின்றன. பவானி to அந்தியூர் 20 கிலோமீட்டர்; பவானி to தொட்டிகிணர் 30 கிலோமீட்டர்; பவானி to பர்கூர் 80 கிலோமீட்டர் வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாக இருப்பதால், அந்தியூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர், அம்மா அவர்கள் ஆட்சியில் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி.

**திரு. கோ.சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, வட்டங்கள் எந்த அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிர்வாக அமைப்பில் மாவட்டங்கள் மிக முக்கிய நிர்வாக அளவுகோலாக அமைந்துள்ளன. வருவாய் நிருவாகத்தில் மாவட்ட வருவாய் நிருவாகம் இன்றியமையாத முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்ட நிருவாகத்தை வெளிப்படையானதாகவும், மக்களுடன் நட்புடையதாகவும், முடிவுகள் மேற்கொள்வதில் திறனுள்ளதாகவும் உருவாக்க அரசு மேற்கொண்டு வரும் பெருமுயற்சிகளால் நிருவாகத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை வெகுவாக உயர்ந்துள்ளது. அதனால் நலத் திட்டப் பணிகளைப் பெறுவதிலோ, ஒழுங்குபடுத்தும் பணிகளை நிறைவேற்றுவதிலோ தங்களுக்குள்ள குறைகள் ஆராயப்படும் என்பதில் மக்களுக்கு அதிக நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகம் திறம்படச் செயல்படவும், பின்தங்கிய பகுதியிலுள்ள பொதுமக்கள் குறைகளைத் துரிதமாகத் தீர்க்கவும், பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் மற்றும் இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் காலங்களில் உதவவும் மக்கள் நலப் பணிகள் தாமதமின்றி நடைபெறவும் அவசியம் ஏற்படும்போது பெரிய மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள், உள்வட்டங்கள் மற்றும் கிராமங்கள் சீரமைக்கப்பட்டு புதிய மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் படிப்படியாக உருவாக்கப்படுகின்றன. இவை தவிர, பொதுவாக ஏதேனும் பெரிய வட்டங்களைப் பிரிக்க சட்டமன்ற உறுப்பினர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெறின் அவை ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் தகுதி மற்றும் தன்மையை ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகளின் விளைவாக, தற்போதுள்ள மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் முதலியவற்றின் எண்ணிக்கை பின்வருமாறு :

| | |
|---|---|
| மாவட்டங்கள் | 29 |
| கோட்டங்கள் | 73 |





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குத் தந்த பதிலில் இதுவும் இருக்கிறது. வட்டங்கள் பிரிக்கப்படும்போது, அளவுகோலின்படி பிரிக்கப்படுகின்ற வட்டங்கள் இருந்தால், அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியதாக உள்ள வட்டங்களைப் பிரித்து, புதிதாக வட்டங்கள் அமைக்கின்ற நேரத்திலே அதற்குரிய நல்ல நவீன வசதியோடு கூடிய கட்டடங்கள் அமைத்துத் தரப்படுகின்றன. ஆனால், எங்களுடைய உசிலம்பட்டி தொகுதி போன்று, பல ஆண்டுகளாக வட்டங்களாக இருக்கின்ற இடத்திலே போதிய அளவு கட்டட வசதி இல்லாமலும், மக்கள் சென்று வருவதற்கும், அதிகாரிகள் இருப்பதற்கும் கூட முடியாத சூழ்நிலையும் இருக்கிறது. அப்படிப்பட்ட வட்டங்களுக்கு எல்லாம் புதிய நல்ல இடங்களைத் தேர்வு செய்து, புதிய கட்டடங்கள் அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடனே அரசாங்கத்தில் இருக்கின்ற அலுவலகங்கள் அனைத்தும் சொந்தக் கட்டடங்களில் நவீன முறைப்படி கட்டப்பட வேண்டுமென்று பல்வேறு துறைகளுக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உசிலம்பட்டி தொகுதியில், உசிலம்பட்டி வட்டத்தில் சொந்தக் கட்டடம் தேவை இருப்பின் அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய வட்டமான ராதாபுரம், சுமார் 3 ஆயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவுக்கு அதிகமாகவும்,

[2003 நவம்பர் 3

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை உண்மையிலேயே மக்களுக்குப் பயனுள்ளதாக இருப்பின் அரசு ஆய்வு செய்யும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய மாவட்டங்கள், புதிய கோட்டங்கள், வட்டங்களைப் பிரிப்பதற்கான காரண காரியங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த வகையிலே, பின்தங்கிய பகுதிகளை முன்னேற்றம் அடையச் செய்வதற்கும், அரசாங்கத்தினுடைய நலத் திட்டங்கள் விரைவாகச் சென்றடைவதற்கும், நிர்வாக வசதி போன்ற பல்வேறு காரணங்களுக்காகவும் பிரிக்கப்படுவது என்ற நியாயமான ஒன்றை வலியுறுத்தக்கூடிய வகையிலே இப்போது தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, பின்தங்கிய மாவட்டங்களை, பரப்பளவில் கூடுதலாக, மக்கள் தொகை எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடிய மாவட்டங்களை, சேலம், வேலூர், ஈரோடு, கோவை, விழுப்புரம், கடலூர், மதுரை இதுபோன்ற பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் எல்லாம் இருக்கின்றன; அவசியத் தேவையும் இருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா? இதைப்போல் உள்ள பல்வேறு வட்டங்களையும் கோட்டங்களையும், தேவையின் அடிப்படையிலே பிரிப்பதற்கு நடப்பாண்டில் அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-2002 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தற்போதைய தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிய மாவட்டம் கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒரு நபர் குழு நியமனம் செய்து தனது அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறு ஆணையிடப்பட்டது. ஒரு நபர்க் குழு தனது அறிக்கையை அரசுக்கு



2003 நவம்பர் 3]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பின்தங்கிய பகுதிகளிலே உள்ள பொதுமக்களின் குறைகளைத் துரிதமாகத் தீர்க்கவும், பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும், சட்டம் & ஒழுங்குப் பிரச்சினைகள் மற்றும் இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் காலங்களில் உதவவும், மக்கள் நலப் பணிகள் தாமதமின்றி நடைபெறவும் அவசியம் ஏற்படும்போது பெரிய வட்டங்கள் சீரமைக்கப்பட்டு புதிய வட்டங்கள் படிப்படியாக உருவாக்கப்படுகின்றன. இதன் விளைவாகத் தற்போது 206 வட்டங்கள் உள்ளன என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மொத்தம் 4 வருவாய் வட்டங்கள் இருக்கின்றன. அதிலே கல்குளம் மற்றும் விளவங்கோடு ஆகிய 2 வருவாய் வட்டங்கள் மிகப் பெரிய வட்டங்கள் ஆகும். இந்த 2 வட்டங்களும், 5 சட்டமன்றத் தொகுதிகளையும் சுமார் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையையும் உள்ளடக்கியதாக உள்ளன. எனவே இந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் சான்றிதழ்கள் பெற வேண்டும் என்று சொன்னாலும்கூட மிகவும் சிரமப்பட்டுத்தான் வாங்கக்கூடிய நிலை இருக்கிறது. ஏனென்றால் இந்த வட்டாட்சியருடைய அலுவலகங்கள் அதிக தூரத்தில் இருக்கக்கூடிய காரணத்தால் மிகவும் சிரமப்படக்கூடிய நிலை இருந்து வருகிறது. அதுமட்டுமல்லாமல் அரசினுடைய நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் இயற்கை இடர்பாடுகள் ஏற்படுகிற நேரத்திலே துரிதமாகச் செயல்படுவதற்கும் அரசு அதிகாரிகளுக்கும் கூட பல்வேறு சிரமங்கள் இருந்து வருகின்றன. எனவே இதைக் கருத்திலே கொண்டு, இந்த 2 வட்டங்களையும் பிரித்து புதிய வட்டங்களை உருவாக்குவதற்கு முன்னுரிமை வழங்கி, இந்த ஆண்டிலே புதிய வட்டங்களை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழகத்திலுள்ள பெரிய வருவாய் வட்டங்களை இரண்டாகப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்று கேட்டார்கள். அதற்கு, தக்க பதிலை அளித்திருந்தேன். அவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற மிகப் பெரிய வட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். விதிகளின்படியும், மக்களுடைய தேவையின்படியும் அவ்வட்டங்[illegible] பிரிக்கப்படுவதற்கு உண்டான காரண காரியங்கள் இருந்த[illegible]

அதிக பரப்பளவு 2 ஆயிரம் சதுர கிலோமீட்டரும், 1 இலட்சம் முதல் அதிக அளவு 5 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் தொகையும், குறைந்த அளவு 30 கிராமங்களும் இருக்கவேண்டும். புதிதாக அமைக்கப்படும் கோட்டத்தில் 1 ஆயிரம் சதுர கிலோமீட்டர் முதல் அதிக அளவு 4,500 சதுர கிலோமீட்டர் பரப்பளவும், 4 இலட்சம் முதல் அதிக அளவு 15 இலட்சம் வரை மக்கள் தொகையும், குறைந்த அளவு 100 கிராமங்களும் இருக்க வேண்டும். இதில் குறைந்த அளவு 2 வட்டங்கள் இருக்க வேண்டும். புதிதாக அமைக்கப்படும் மாவட்டத்தின் பரப்பளவு 2,500 சதுர கிலோமீட்டர் முதல் அதிக அளவு 9 ஆயிரம் சதுர கிலோமீட்டர் என்பதும்; 10 இலட்சம் முதல் அதிக அளவு 30 இலட்சம் வரை மக்கள் தொகையும், குறைந்த அளவு 20 கிராமங்களும், குறைந்த அளவு 5 வட்டங்களும், குறைந்த அளவு 2 கோட்டங்களும் இருக்க வேண்டும். தற்போது சட்டமன்ற, நாடாளுமன்றத் தொகுதிகளின் எல்லை வரம்பிடுதல் பணிக்காக 01-08-2002 நடைமுறையில் உள்ள நிர்வாக அலகுகளை மேற்படி எல்லை வரையறைப் பணி முடியும் வரை பிரிக்கவோ அல்லது மாற்றம் செய்யவோ கூடாது எனத் தடை விதித்து அரசாணை இருப்பதால், தற்போது அந்தப் பணி தொடர்ந்து நடைபெற முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானாமதுரை தொகுதியில் மானாமதுரை தாலுகா, பரந்து விரிந்து கிடக்கின்ற தாலுகா. ஜமீன்தார்கள் ஆண்ட காலத்திலேயே அங்கே தாலுகா அலுவலகங்கள் இருந்திருக்கின்றன; treasury இருந்திருக்கிறது. அப்படிப்பட்ட தாலுகாவுக்கு விரிந்த எல்லை இருக்கிற காரணத்தினாலே அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று 1982-1983 ஆம் ஆண்டிலேயே அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறேன். ஆகவே, அதைப் பரிசீலனை செய்து அதைத் தனித் தாலுகாவாக, திருபுவனத்தை—திருபுவனம் நான் சொல்வது ஜமீன்தார்கள் ஆண்ட காலத்திலேயே தாலுகாவாக அது இருந்திருக்கிறது; treasury இருந்திருக்கிறது; அதைத்—தாலுகாவாக அறிவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.





**திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; தமிழகத்தின் விடிவெள்ளி, தரணி ஆளும் தாரகையாய், ஏழைகளின் ஏந்தலாய், வெற்றியின் சிகரமாய், பெண் இனத்திற்கே பெருமை சேர்க்கும் வகையில் நல்லோர் அனைவராலும் போற்றப்படுகின்ற எங்கள் தாய், தெய்வத் தாய் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நீர் நிலை ஆதாரங்கள் செப்பனிடப்பட்டு வருகின்றன. இதனை மக்கள் பெரிதும் போற்றுகின்றார்கள். என்னுடைய முசிறி தொகுதியின் மிக முக்கியமான பெரமங்கலம் ஏரியின் பாசன வாய்க்கால்களைச் சீரமைக்கும் திட்டத்தினை இவ்வாண்டே நிறைவேற்ற அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரமங்கலம் ஏரியில் தூர் வாருதல், உபரி வாய்க்கால் மற்றும் வரத்து வாய்க்கால் பணிகள், ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுத் தந்த நிதி உதவியுடன் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. முதல் வட கால்வாய் 2.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூபாய் 9 இலட்சம் செலவில் 27 எக்டர் பயன் அளிக்கும் வகையில் செய்யப்படவுள்ளது; மதகு இரண்டின்கீழ் உள்ள தென் கால்வாய் 2.4 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இக்கால்வாயினைத் தூர் வாரி lining செய்ய ரூபாய் 7 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மற்றும் உள்ள மதகுகளைச் சீர்திருத்திட ரூபாய் 7 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு NABARD வங்கியின் உதவிக்கு அனுப்பும் நிலையில் உள்ளது. இப்பணியின் மொத்த மதிப்பீடு ரூபாய் 23 இலட்சம் ஆகும். NABARD வங்கியின் அனுமதி கிடைத்தவுடன் வரும் ஆண்டுகளில் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மல்லிகா சின்னசாமி.

ஒரு புறத்திலிருந்து மறுபுறம் சென்றால் சுமார் 100 கிலோமீட்டர் தூரமுள்ள மிகப்பெரிய பரந்து விரிந்த ஒரு தொகுதியாகவும், ஒரு வட்டமாகவும் இருக்கிறது. இந்த வட்டம், ஏற்கெனவே திசையன்விளையைத் தலைநகராகக் கொண்டு இரண்டாகப் பிரிக்கப்படும் என்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதே சட்டமன்றத்தில் உறுதி அளித்திருந்தார்கள். இருந்தாலும்கூட, இதுவரை அந்த முயற்சி நடைபெறவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகப் பெரிய வட்டமான ராதாபுரம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, திசையன்விளையைத் தலைநகராகக் கொண்டு புதிய வட்டத்தை இந்த ஆண்டே உருவாக்கித் தருவார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டங்களைப் பிரிக்கும்போது பின்பற்றப்படவேண்டிய அளவுகோல்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ராதாபுரம் தொகுதியில் வட்டங்களைப் பிரிக்கும்போது இருந்தால் இப்பணி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டங்களை, கோட்டங்களைப் பிரிப்பதற்கான கருத்துருக்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலே கூறியிருக்கிறார்கள். அப்படி மாநில அளவிலே, வட்டங்களை, கோட்டங்களைப் பிரிப்பதற்கான எண்ணிக்கை எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது? அப்படி அந்தக் கருத்துரு கொடுக்கப்பட்டிருப்பதிலே மன்னார்குடி தொகுதிக்கு உட்பட்ட கூத்தாநல்லூர், திருத்துறைப்பூண்டி தொகுதிக்கு உட்பட்ட முத்துப்பேட்டை ஆகிய இரண்டும் தாலுகாவாக ஆக்கப்படவேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது. அதுவும், அந்தப் பட்டியலிலே இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி



சமர்ப்பித்துள்ளது. ஒரு நபர்க் குழு அளித்த பரிந்துரையை ஏற்று அதன் அடிப்படையில் தருமபுரி மாவட்டத்தை தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களாகப் பிரிப்பது என்று முடிவு எடுக்கின்ற நிலையில் தற்போது சட்டமன்ற, பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லை வரம்பிடுதல் பணிக்காக 1-8-2002 அன்று நடைமுறையிலுள்ள நிர்வாக அலகுகளை மேற்படி எல்லை வரையறை பணி முடிவுறும்வரை பிரிக்கவோ அல்லது மாற்றம் செய்யவோ கூடாது என்று தடை விதித்து அரசாணை (நிலை) எண் 1055, பொது (தேர்தல்-2) துறை, நாள் 28-11-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில் எல்லை வரையறை பணி முடிவடைய இன்னும் பல மாதங்கள் ஆகும் என்பதால் தருமபுரி மாவட்டத்தைப் பிரிப்பது குறித்து ஆணை வெளியிடும் முன் மத்திய அரசின் தொகுதிகள் எல்லை வரையறை ஆணையத்தின் ஒப்புதல் பெறுவதற்காக முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல மாவட்டங்கள் பெரியதாக இருக்கின்றன அவற்றைப் பிரிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை, தேவையிருப்பின், மக்களுக்குப் பயனுள்ளதாக இருப்பின் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் வட்டம் என்றால் எவ்வளவு வருவாய் வர வேண்டும் என்பது அதிலே வகுக்கப்பட்டிருக்கிறது. எல்லையை நிர்ணயிக்கும்போது எத்தனை ரெவின்யூ கிராமங்களை உள்ளடக்கியது ஒரு வட்டம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்களைப் பிரிக்கும்போது, பின்பற்றப்பட வேண்டிய அளவுகோலை நிர்ணயித்து 9-6-2003 ஆம் நாளிட்ட வருவாய்த் துறை, அரசாணை (நிலை) எண் 279-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி புதிதாக அமைக்கப்படும் வட்டத்தில் 250 சதுர கிலோ மீட்டர் முதல்

வேண்டும் என்றும், பொதுமக்களுக்கு எல்லா சான்றிதழ்களும் அங்கு வழங்கப்படவேண்டும் என்றும் நான் பேசியிருந்தேன். அது அரசின் குறிப்பில் இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவருடைய கோரிக்கை ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

2—

**வாய்க்கால்கள் சீரமைத்தல்**

***28548—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, பெரமங்கலம் ஏரியின் வட, தென்புற பாசன வாய்க்கால்கள் சீரமைக்கப்பட திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, பெரமங்கலம் ஏரியின் வட, தென்புற பாசன வாய்க்கால்களைச் சீரமைக்க NABARD வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.





பட்டதாரிகள்; 1,200 கம்ப்யூட்டர் சையின்ஸ் இளநிலை பட்டதாரிகள்; 600 கம்ப்யூட்டர் சையின்ஸ் முதுநிலை பட்டதாரிகள் மற்றும் 20,000 மற்ற துறைகளைச் சார்ந்த பட்டதாரிகள்; பட்டம் பெற்று பணி புரிய, தொழில் துவங்க தயாராக வருகிறார்கள். ஆகவே, கோவையிலே மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த ஒரு டைடல் பார்க் வருகிறது என்கின்ற நல்ல ஒரு செய்தியை, கோவையிலே இருக்கின்ற மக்களுக்கு நல்ல செய்தியாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நீங்கலாக மற்ற மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாகக் கடந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டன. இப்படிப்பட்ட வறட்சி மாவட்டங்களை எல்லாத் துறைகளிலும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நல்ல அடிப்படையிலும், தொழில் துறையிலும் முன்னுக்கு கொண்டுவர வேண்டும் என்ற நல்ல அடிப்படையிலும் எங்கள் ஆட்சியின்போது வர்த்தக அமைச்சர் அண்ணன் முரசொலிமாறன் அவர்களுடைய பெருமுயற்சியின் காரணமாக நாங்குநேரியில் 8,000 கோடி ரூபாய் திட்டத்தில் ஒரு உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஆரம்பிப்பதற்கான திட்டம் தீட்டி அதற்கென 22,000 ஏக்கர் நிலப்பரப்பைக் கையகப்படுத்தி, அடிக்கல் நாட்டு விழாவும் நடத்தப்பட்டது. ஆனால், அடுத்து ஆட்சி மாற்றம் நிகழ்ந்த காரணத்தால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, கோயம்புத்தூரிலே டைடல் பார்க்.

**திரு. பரிதி இளம்வழுதி:** அதேதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி. (குறுக்கீடு)

**திரு. பரிதி இளம்வழுதி:** இல்லை, இதை முடித்துவிடுகிறேன். என்ன என்று கேட்டுக்கொள்ளுங்கள். ஆகவே, என்னுடைய நோக்கம் என்னவென்றால் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால், அந்த

[2003 நவம்பர் 3

**திருமதி மல்லிகா சின்னசாமி:** அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. கோவை தங்கம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

3—

**இளைஞர்களுக்கு வாய்ப்பு**

*** 31589—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாக்காளர் சேர்த்தல், புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு ஏற்கெனவே பணிபுரிந்து வரும் ஆசிரியர், ஆசிரியைகளுக்குப் பதிலாக வேலை இல்லாத இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாக்காளர் சேர்ப்பது, புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு ஏற்கெனவே பணிபுரிந்து வரும் ஆசிரியர், ஆசிரியைகளுக்குப் பதிலாக வேலை இல்லாத இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவுகள் 13-பி மற்றும் 29-ன்படி விதிகளில் இடமில்லை.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் சேர்ப்பது, புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு ஆசிரியர், ஆசிரியைகளை இந்தப் பணியில் ஈடுபடச் செய்வதால் அவர்கள் தங்களுடைய குடும்பப் பணிகளை முடித்துவிட்டு பள்ளிக்குச் சென்று குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து மீண்டும் வீட்டுக்கு வந்து தொடர்ந்து இந்தப் பணியைச் செய்வதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாட்டில் கடந்த 20, 25 ஆண்டு



2003 நவம்பர் 3]

கொடுத்தால், எத்தனை வட்டங்கள், பிரிப்பது குறித்து, அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்ற விவரங்கள் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் அரக்கோணம் தாலுகா உள்ளடங்கியுள்ளது. அரக்கோணத்திலிருந்து காவேரிப்பாக்கம் பிர்காவிற்கு வரவேண்டும் என்று சொன்னால் 45 கிலோமீட்டர் இடைவெளி உள்ளது. ஆகையால் காவேரிப்பாக்கம் பிர்காவை 10 கிலோமீட்டர் அருகிலே உள்ள வாலாஜா தாலுகாவிலே சேர்க்கிற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

அதேபோன்று வாலாஜா தாலுகாவில் உள்ளடங்கியது சோளிங்கர் நகரப் பகுதி; 18,000 வாக்காளர்களும், 30,000 பொதுமக்களும் வசிக்கின்ற அந்த நகரப் பகுதியை வாலாஜா தாலுகாவிலிருந்து பிரித்து, தனித் தாலுகாவாக ஆக்கும் முயற்சி அரசின் செயற்குறிப்பிலே இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கொடுத்து விடையைப் பெறலாம் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். எனது கடையநல்லூர் தொகுதி தென்காசி தாலுகாவிலே அடங்கியுள்ளது. ஏற்கெனவே, சட்டமன்றத்திலே இந்தக் கூட்டத் தொடரிலே நான் இது குறித்து பேசியிருக்கிறேன்; தென்காசியில் இரண்டு தாலுகா அலுவலகங்கள் உள்ளன. தென்காசியில் ஒரு தாலுகா அலுவலகம்; செங்கோட்டைக்கு அருகிலே 5 கிலோமீட்டரில் ஒரு அலுவலகம் இருக்கிறது. இப்படி ஒரே தொகுதியில் இரண்டு தாலுகா அலுவலகங்கள் உள்ளன. எனது தொகுதியான கடையநல்லூர் தொகுதியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாலுகா அலுவலகம் அமைக்க

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10-30*

**4—**

**டைடல் பார்க்**

***5259—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அமைந்துள்ளதைப் போல கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த "டைடல் பார்க்" போன்ற மையம் அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த டைடல் பார்க் அமைப்பது குறித்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகின்றேன். இந்தியக் கூட்டமைப்பு இந்த ஆண்டு வெளியிட்ட ஒரு ஆய்வு அறிக்கையிலே தொழில் துவங்கி நடத்துவதற்கு மிகவும் ஏற்ற நகரங்கள் என்று இந்தியா முழுவதற்குமாக முதல் பத்து நகரங்களை வரிசைப்படுத்தியுள்ளது. இதில், கோவை நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது. கோவையில் தரம் வாய்ந்த பொறியியல் கல்லூரியிலிருந்து ஆண்டுதோறும் 5,500 பொறியியல் பட்டதாரிகள் வருகிறார்கள். இவர்களில் 50 சதவிகிதம் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பொறியியல்





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டைடல் பார்க் ஏற்படுத்த குளிர்சாதன வசதி செய்ய வேண்டும். அதற்கு அரசுக்குச் செலவுகூட ஏற்படும். ஆனால் நீலகிரி மாவட்டம் இயற்கையாக குளிர்சாதன வசதியுள்ள மாவட்டம். அங்கே அரசுக்கு மின்சாரச் செலவோ அல்லது குளிர்சாதன வசதிச் செலவோ இல்லை. எனவே, நீலகிரி மாவட்டம், குன்னூரில் ஒரு டைடல் பார்க் ஏற்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களது உத்தரவினுடைய அடிப்படையிலே tier 2 cities ஆக, சென்னையைத் தவிர, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, மதுரை போன்ற பெருமாநகரங்களிலே அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. எனவே, அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை குறித்து ஆய்வு செய்வதற்கு ஒரு Consultant team-ஐ, அனுப்பி அங்கே ஆரம்பிப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்குமானால் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்கள் அதைப் பரிசீலிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகளை நாம் பேசுவதில்லை. பரவாயில்லை, வந்துவிட்ட பிறகு ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்ததில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 160-லிருந்து 2000 சொச்சமாகப் போய் இருக்கின்றபோது கிட்டத்தட்ட 20 மடங்கு (குறுக்கீடு) 3200 கோடிக்கு போய் இருக்கிறபோது உயர்ந்திருக்கிறது. அது முன்னேற்றம் இல்லையா என்று நான் அமைச்சரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது ஒவ்வோர் ஆண்டும் முன்னேற்றம் இருக்க வேண்டும். 1998, 1999, 2000 ஆகிய அந்த 3 ஆண்டுகளில் 11 சதவீதம் அளவுக்குத்தான் இருந்ததேயொழிய முன்னேற்றம் இல்லையே?

ஜில்லாவிலே இருக்கக்கூடிய 2,00,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க ஒரு வாய்ப்பு உள்ளது. எனவே, இதைக் கருத்தில்கொண்டு இந்த அரசு மீண்டும் அதைத் தொடங்குவதற்கான உத்தேசம் உண்டா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Project ஆரம்பிக்கப்படவேண்டுமென்றால் முதலிலே viability பார்க்க வேண்டும். எனவே, viability பார்க்காமல் அவசர கோலத்திலே அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டத்திற்கு தற்போது viability இருக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்யப்படுகின்றது. அவர்களுடைய ஆட்சியின் சிறப்பைப் பற்றிச் சொன்னார்கள். எந்த அளவிற்கு, கடந்த காலத்திலே ஒரு பின்னடைவு தகவல் தொழில்நுட்பத் துறையிலே இருந்திருக்கிறது என்பதை நான் இப்பொழுது சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். 1996-97 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையிலே மென்பொருள் ஏற்றுமதி 161 கோடி ரூபாய், அதாவது 4 சதவிகிதம்; 1997-98-ல் 393 கோடி ரூபாய் - 6 சதவிகிதம்; 1998-99-ல் 1246 கோடி ரூபாய் - 11 சதவிகிதம்; 1999-2000-ல் 1914 கோடி ரூபாய் - 11 சதவிகிதம். 2000-2001-ல் 3111 கோடி ரூபாய் - 11 சதவிகிதம். இந்த மூன்று ஆண்டு உங்களுடைய ஆட்சியிலே ஒரு முன்னேற்றமும் இல்லை. 11 சதவிகிதம் அளவிற்கு மட்டும்தான் இருந்தது. ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே ஒரு மாபெரும் புரட்சியைச் செய்ததன் காரணமாக 2001-2002 ஆம் ஆண்டிலே மட்டும் 14 சதவிகிதம் அளவிற்கு மென்பொருள் ஏற்றுமதி 5223 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) 3111 எங்கே, 5223 எங்கே? அதேபோன்று 2002-2003 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையிலே மொத்தம் 7,000 கோடி ரூபாய் - 17 சதவிகிதம். எனவே, இப்பொழுது ஒரு மாபெரும் புரட்சியை நம்முடைய அம்மா அவர்கள் செய்ததன் காரணமாக வருகின்ற இந்த நிதி ஆண்டில் மட்டும் கிட்டத்தட்ட 9,000 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) 20 சதவிகிதம் அளவிற்கு மென்பொருள் ஏற்றுமதியிலே இந்தியாவிலேயே முதன்மையான ஒரு மாநிலம் தமிழ்நாடு (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பெருமையை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



காலமாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கின்ற இளைஞர்களை அல்லது பதிவு செய்யாமல் இருக்கின்ற இளைஞர்களைக்கூட இதில் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆகவே, இந்தப் பணியில் படித்துவிட்டு வேலை இல்லாத இளைஞர்களைப் பயன்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு முதலில் பதில் அளிக்கும்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். Representation of People Act-ன்படி இதற்கு சட்டத்தில் இடம் இல்லை என்பதைத் தெரிவித்தார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்கம் என்ன? சட்டத்தில் இடம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் அரசிடம் எதிர்பார்க்கின்ற பதில்; வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கின்ற வகையில் படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கு வாய்ப்பினைக் கொடுக்கின்ற வகையில் நம்முடைய தமிழக அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி இந்தப் பணியைச் செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே சட்டத்தின் நிலையினை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மைய அரசுக்கு இது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் கூறிய ஆலோசனையின் அடிப்படையில் அரசும் ஆய்ந்து எழுதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி சம்பந்தப்பட்ட வரைக்கும் சென்னையிலே அமைந்துள்ளதுபோல கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த டைடல் பார்க் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான். ஏற்கெனவே கடந்த நிதிநிலை அறிக்கை கூட்டத்தின்போதுகூட, இந்தப் பிரச்சினை வந்து, அமைச்சர் அவர்கள் பேசும்போது, சென்னையைப்போல கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய பெருநகரங்களிலே இந்த டைடல் பார்க் அமைக்க திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். இது ஏற்கெனவே கோயம்புத்தூர் மாதிரி இருக்கக்கூடிய முக்கியமான தொழில் நகரங்களிலே பஞ்சாலை, பனியன், பவர்லூம், இன்ஜினியரிங் போன்ற ஆதாரத் தொழில்கள் பாதிக்கப்பட்ட நிலையிலே, இப்படிப்பட்ட ஒரு டைடல் பார்க் என்பது, வளர்ந்துவரும் தொழில்நுட்பத் துறையில் அந்த மாவட்டம் மட்டுமல்ல, நம்முடைய மாநிலத்தின் பொருளாதாரத்தையும் ஸ்திரப்படுத்துவதற்கு உதவி செய்யும். ஆகவே, உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று வலியுறுத்தினோம். அதனுடைய ஆரம்பகட்டப் பணிகள் நடப்பதாகப் பொதுவான தகவல் இருக்கிறது. அதனுடைய முழு விவரங்களை சபைக்கும் நாட்டுக்கும் அறிவிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின்படி திருவாளர்கள் பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர் என்கின்ற நிறுவனம் மேற்கொண்ட ஆராய்ச்சியின்படி, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளின் வணிகத்திற்கு கோயம்புத்தூர் ஏற்ற இடமாகும் என்பதுடன் கோயம்புத்தூரில் தொழில்நுட்பப் பூங்காவினை ஏற்படுத்தலாம் என்கின்ற ஒரு கருத்தையும் தெரிவித்துள்ளது. நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டங்களின்படி இத்தொழில்நுட்பப் பூங்கா 2008 ஆம் ஆண்டு வாக்கில் 14,000 தொழில் முனைவோருக்கு 14 இலட்சம் மில்லியன் சதுர அடி பரப்பளவில் பணி அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் கிடைக்கும் மொத்த ஏற்றுமதி வருவாய் 2008 ஆம் ஆண்டு வாக்கில் யு.எஸ். டாலர் 113 மில்லியன் டாலராக இருக்கும். இந்த வாய்ப்பின் மூலம் உருவாகும் வருவாய் ஆதார வளம் 2008 ஆம் ஆண்டு வாக்கில் — யு.எஸ். டாலர் — 50 மில்லியன் டாலர் என்கின்ற



அளவில் இருக்கும். தொழில்நுட்பப் பூங்காவினை உருவாக்க கோயம்புத்தூர், வடக்கு கோயம்புத்தூர், விளாங்குறிச்சி என்ற கிராமத்தில் நில அளவு புல எண் 426/1, 2, 427 மற்றும் 436-ல் அமைந்துள்ள கோவை மருத்துவக் கல்லூரி நிலத்தில் 12.5 ஏக்கர் பரப்பளவு நிலம் எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஏ. ஹக்கீம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** தலைவர் அவர்களே, அரசுக்கும், அமைச்சருக்கும் மனப்பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வேலையை விரைவாக உரிய காலத்தில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மதுரையைப் பற்றிக் கேள்வி கேட்க வேண்டுமென்று நினைத்தேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்பதற்கு முன்னாலேயே அதற்கு ஒரு கனிவான பதிலையும், அம்மா அவர்களுடைய திட்டத்தையும் அறிவித்தார்கள். மதுரை மாவட்டத்தின் மக்கள் சார்பிலே என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். Administrative Capital சென்னை. இது பொதுவாக தமிழ்நாட்டில் பேசப்படுகிற வழக்கு. அரசியல் தலைநகரம் என்று மதுரையைத்தான் சொல்வார்கள். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால்.

“மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்—என்று
யானைகட்டிப் போரடித்த மாமதுரை”

என்று சொல்லப்பட்ட இடத்தில் இன்றைக்கு வைகையும் வறண்டிருக்கிறது; சுற்றுவட்டாரங்களும் வறண்டிருக்கின்றன. மிகப் பெரிய வறட்சிக்கு ஆளாகியிருக்கிறோம். ஆனால், ஏராளமான இன்ஜினியரிங் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள்; டிப்ளமோ பட்டதாரிகள் நிறையப் பேர் இன்றைக்கு பொறியியல் துறையிலே படித்து பட்டம் பெற்று இலட்சக்கணக்கில் வேலையில்லாமல் அந்த மாவட்டத்திலும் அதைச் சுற்றியிருக்கிற 100 கிலோமீட்டர் தூரத்திலும் பரவியிருக்கிறார்கள் என்பதை அரசும் அறியும்; அமைச்சரும் அறிந்திருப்பார்கள். இன்னும் சொல்வது என்றால்....

[2003 நவம்பர் 3

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம் என்ன செய்ய வேண்டும்?

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** அந்த மதுரை இன்றைக்கு மிகப் பெரிய ஏக்கத்திற்கும் வறட்சிக்கும் பசிக்கும் ஆளாகியிருக்கிறது. ஆகையினாலே, சென்னைக்கு அடுத்தபடியாக இன்றைக்கு இந்த நாட்டில் யார், எங்கே, எந்த இடத்தில் கேட்டாலும் மதுரை என்பார்கள். மதுரைக்கு அன்னை மீனாட்சி; அதே மாதிரியாக பிரசித்தி பெற்ற கோயில் இருக்கிற நகரம். அந்த நகரத்தில் வேறு தொழிலே இல்லை; வேறு வாய்ப்பே இல்லை. பசித்துக் கிடக்கிற மதுரைக்கு, சென்னைக்கு அடுத்தபடியாக என்கிறபோது நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடுத்ததாக முதலிடம் கொடுத்து அந்த டைடல் பார்க்-ஐ துவக்க வேண்டும் என்ற எங்கள் ஆசையைத் தெரிவித்து அதற்குண்டான பணிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை மாத்திரம் மாண்புமிகு அமைச்சர் வாயிலாகத் தெரிந்துகொள்வதற்கு விருப்பம் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, tier 2 சிட்டியில் மதுரை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் கவலைப்பட வேண்டாம். நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்கள் மதுரையிலே டைடல் பார்க் போன்ற ஓர் அமைப்பை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்ற ஒரு நம்பிக்கையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, திருமதி செல்வி முருகேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**5—**

**தடுப்புச் சுவர்**

***21141—திருமதி செல்வி முருகேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியத்திலுள்ள சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் மலைப்பாதையில் தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணியபடி, ஆலயங்களும் கல்விச் சாலைகளும் நன்றாக இருந்தால்தான் ஆட்சி நன்றாக நடக்கும் என்ற அடிப்படையில் ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியத்திலுள்ள சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு 20 இலட்சம் ரூபாய் செலவில் நிதி ஒதுக்கீடு செய்து, பொதுப் பணித் துறை மூலம் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுச் சிற்பியின் மறு உருவமாய், முற்போக்குச் சிந்தனையாளராக, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக, எவருக்கும் அஞ்சேன், எதைக் கண்டும் பயப்படேன் என்று சிங்கமெனச் சீறி எழுந்து, கொக்கரிக்கும் குள்ளநரிக் கூட்டங்களின் கொட்டங்களை அடக்கி, அரசியல் வரலாற்றிலே, இந்தியத் துணைக் கண்டத்திற்கே எடுத்துக்காட்டாய், புரட்சிகரத் திட்டங்கள் பல படைத்து, ஆயிரம் ஆயிரம் சாதனைகளை அன்றாடம் நடத்திடும் அற்புதத் தாயே, விண்ணின் மழைத் துளி மண்ணின் உயிர்த்துளி எனப் பெய்யும் மழையின் ஒவ்வொரு சொட்டு மழை நீரையும் வீணாக்காமல் சேமித்து வைப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, குளம் குட்டைகளைத் தூர்வாரச் செய்து செப்பனிட்டு, நாட்டை வளம் மிக்க தமிழ் நாடாக இந்தியாவின் முதன்மை மாநிலமாக முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லக் காத்துக்கொண்டிருக்கும் காவல் தெய்வமே, இமயத்தின் உயரத்தை தன் இரக்கத்தால் வென்றிட்ட இதய தெய்வமே, ஆழ்கடலின் ஆழத்தைத் தளராத ஆற்றலால் வென்றிட்ட வீரத்தின் விளைநிலமே, ஆகாயத்தின் பரப்பினை அயராப் பணியினால் வென்றிட்ட புவிபோற்றும் புரட்சி பூபாளமே, தாங்கள் இருக்கும் திசை நோக்கி திருவடிகளைப் பணிந்து வணங்கி நன்றியைக் காணிக்கையாக்கிக் கொண்டு ஒருகால பூசைக்கே வழி இல்லாமல் இருந்த ஆலயங்களுக்கு

[2003 நவம்பர் 3

ஒரு கால பூசை முறையைக் கொணர்ந்து ஆலயங்களில் திருப்பணிகளை மேற்கொள்ளச் செய்து கும்பாபிஷேகங்களை நடத்தி, ஆலயங்களில் இருக்கும் குளங்களையெல்லாம் தூர்வாரச் செய்து, செப்பனிட்டு திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி பக்தர்களின் பசியைப் போக்கிய காவல் தெய்வமே, என்னுடைய காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியத்திலுள்ள சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் மலைப் பாதைக்குத் தடுப்புச் சுவர் கட்டுவது பொதுப் பணித் துறையின் மூலமாக எடுக்கப்பட்டு தற்போது பணி சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது. ஆனால், அந்தத் தடுப்புச் சுவர் மலைக் கோயிலின் அடிவாரம் வரை கட்ட வேண்டும். பாதை மிகவும் குறுகலாக இருப்பதால் மலைக் கோயிலுக்கு வரும் பேருந்து, வேன், கார் மற்றும் இரு சக்கர வாகனங்கள் ஒன்றையொன்று முன்னேறிச் செல்லும் பகுதி பாதுகாப்பற்றதாக இருக்கிறது. அதனால் மலைக் கோயில் அடிவாரம் வரை தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக் கோயிலுக்குச் செல்லும் பாதை வனத் துறையினுடைய பொறுப்பிலே இருக்கிற காரணத்தினாலே அகலப்படுத்துவதற்கு வனத் துறையினுடைய அனுமதியைப் பெற்று கீழேயிருந்து மேலே செல்லக்கூடிய அளவிற்கு பணிகளைத் துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி செல்வி முருகேசன்:** அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**6—**

**நூல் நிலையம்**

***22548—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுதொண்டமாதேவியில் நூல் நிலையம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிராமப்புற நூலகங்கள், கிளை நூலகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றால் சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். நூலகம் அமைக்க rent free building— வாடகை இல்லாத கட்டடம்— ஒன்றைப் பொதுமக்கள் ஏற்பாடு செய்து தர வேண்டும். அதையடுத்து நூலக ஆணைக் குழுவால் சொந்தக் கட்டடம் கட்டித் தரும் வகையில் 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனையை நூலக ஆணைக் குழுவிற்கு பத்திரப் பதிவு செய்து தர வேண்டும். 100 பேர்களுக்குக் குறையாமல் உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும். 2000 ரூபாய் மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும். அதோடு தலா ரூபாய் 1000 வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும். இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதாகக் கூறி சிறுதொண்டமாதேவி கிராமத்திலிருந்து நூலகம் அமைக்க வேண்டி விண்ணப்பம் எதுவும் இதுவரை பெறப்படவில்லை. இருந்தாலும் இந்த நிபந்தனைகளையெல்லாம், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நிறைவேற்றித் தர முன்வருவாரேயானால், இந்த ஆண்டேகூட அங்கு நூலகம் ஒன்றை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு உத்தரவிடத் தயாராக இருக்கிறது.

*முற்பகல் 10-45*

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டிலே பொது மக்களுக்குச் சொந்தமான ஓர் இடத்தைத் தேர்வு செய்து அரசுக்கு வழங்குவதற்கு கிராம மக்கள் தயாராக இருக்கிறார்கள். அப்படித் தயாராக இருக்கின்ற பட்சத்தில் தமிழக அரசு நடப்பு நிதியாண்டிலே அதற்கு ஒப்புதல் அளித்து சிறுதொண்டமாதேவி கிராமத்தில் கிளை நூலகம் இயங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், அமைச்சர்தான் சொல்லிவிட்டாரே; அந்த நிபந்தனைகளையெல்லாம் நீங்கள் நிறைவேற்றிக் கொடுத்தால் அமைத்திடுவோம் என்று சொல்கிறார்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இரண்டு பதில்களைச் சொல்லியிருக்கின்றார். ஒன்று 5 சென்ட் நிலம் கொடுத்தால் செய்து தருவோம் என்றார். அப்படி இல்லையென்றால் கிராம மக்கள் முன்வந்து இடம் தந்தால், வாடகை இடத்தில் செய்து தருவோம் என்றார். வாடகை இடத்தில் செய்வதற்குத் தயாராக இருந்தால் அவர் சொன்ன அந்த 2,000 ரூபாயைச் செலுத்தி, அவர் சொன்னபடி 100 உறுப்பினர்களைக் கட்டணம் கட்டச் சொல்லிச் சேர்த்து, உடனடியாகச் செய்து தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 867 கிராமப்புற நூலகங்களை அமைப்பதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையில் கடலூர் மாவட்டத்திற்கு மட்டும் 21 நூலகங்கள் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதுவரை 8 இடங்களில்தான் அப்படிப்பட்ட நூலகங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. எனவே இன்னும் 13 இடங்களிலே நூலகங்கள் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றித் தரும்பட்சத்தில் நிச்சயமாக அங்கே இந்த ஆண்டே நூலகம் அமைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்கள் அமைப்பதற்குரிய வரைமுறைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எங்களுக்கெல்லாம் சுற்றறிக்கைகள் மூலம் அனுப்புவார்கள். அதுபோல, எங்கள் தொகுதியிலே நூலகங்கள் அமைப்பதற்குரிய வரைமுறைகளைச் சுற்றறிக்கை மூலமாக அறிவிப்பாரா என்பதைத் தெரிந்துகொண்டு, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு எத்தனை நூலகங்கள் கொடுக்க இருக்கின்றார்கள் என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நூலக அலுவலர்கள், அந்தந்த சட்டமன்ற





உறுப்பினர்களைத் தொடர்பு கொள்ளச் சொல்லியிருக்கிறோம். எனவே அதிலே ஒன்றும் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. எனவே மாவட்ட வாரியாக எவ்வளவு தேவையோ அந்த அளவுக்கு நூலகங்களை அமைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு, குறிப்பாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சகோதரி யசோதா அவர்கள் தொகுதிக்கு எத்தனை நூலகங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று விரும்புகிறாரோ, இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அந்த இடங்களில் எல்லாம் அமைத்துத் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஒரு கிளை நூலகம் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால் குறைந்தபட்சம் 500 மக்கள் தொகை இருக்க வேண்டும். அதுபோல கிராமப்புற நூலகம் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால் 1,000 முதல் 5,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். பகுதி நேர நூலகம் இருக்க வேண்டுமென்று சொன்னால், 1,000 மக்கள் தொகை இருந்தால்கூடப் போதுமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிளை நூலகங்கள் மதுரை கிழக்குப் பகுதியிலே 3 இருக்கின்றன. மூன்றுமே மிகுந்த வசதிக் குறைவாக இயங்குகின்றன. இட மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று நூலக ஆணைக் குழுவும் கருதுகின்றது. மாநகராட்சியும்கூட இட ஒதுக்கீடு செய்வதற்கு உகந்த முடிவு எடுத்து இருக்கிறது. ஆனால் இன்னும் அந்தப் பணி சரிவர நிறைவேற்றப்படவில்லை. இது சரிவர நிறைவேற்றப்படுவதற்கு கல்வித் துறையும், உள்ளாட்சித் துறையும் இணைந்து செயல்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 54 நூலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு 4.35 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் மாநகராட்சியோடு தொடர்பு கொண்டு, அங்கே இடம் ஒதுக்கித் தருவார்களேயானால் நிச்சயமாக அங்கே விரைவாக—முடிந்தால் இந்த ஆண்டேகூட—அங்கே கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

[2003 நவம்பர் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டத்தில் 21 புதிய நூலகங்கள் அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது; அதிலே 8 தொடங்கப்பட்டிருப்பதாகத் தகவலை தெரிவித்திருக்கின்றார்கள். கடலூர் மாவட்டத்தில், குறிப்பாகப் பல்வேறு கிராமப்புற நூலகங்களிலே அந்த நூலகர் பணியிடம் காலியாக உள்ளது. பக்கத்து கிராமத்தில் இருக்கக்கூடிய நூலகர் அந்தப் பணியைப் பார்க்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகின்றார். ஆதலால் இருக்கின்ற நூலகங்களிலே அந்த நூலகர் பணியாளர் பணியிடம் என்பது காலியாக உள்ள நிலையில், புதிதாக நூலகம் அறிவிக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நூலகங்களில் அந்த நூலகர்களை அமர்த்துவதற்கும் ஆணை பிறப்பித்திருக்கிறார்களா? அதோடு மட்டுமல்லாமல் மிக மிகப் பின்தங்கிய கிராமப்புறப் பகுதிகளில் இதற்குச் சற்று விதிவிலக்கு அளித்து, இந்த நிபந்தனைகளைத் தளர்த்தி, அரசாங்கமே இனை நூலகத்தைக் கிராமப்புறங்களிலே உருவாக்குவதற்கு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நூலகங்களை அரசாங்கமே அமைத்துக் கொடுப்பதற்கு எதுவும் தடை இல்லை. ஆனால் அதைப் பயன்படுத்துவது யார்? பொது மக்கள்தான். எனவேதான் பொது மக்களுடைய பங்கேற்பு இதிலே இருக்க வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. இதற்குக் காரணம், படிக்க வேண்டும் என்ற ஆர்வம் பொது மக்களிடம் வர வேண்டும். குறிப்பாக படித்தவர்களேகூட நூலகங்களைப் பயன்படுத்துவதிலே அதிக ஆர்வம் காட்டுவதில்லை. சிறந்த நூல்களே நல்ல நண்பர்கள் என்று சொல்வார்கள். எனவே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், ஊருக்கு ஒரு நூலகம் அல்ல. வீட்டுக்கு ஒரு நூலகம் இருக்க வேண்டும் என்று விரும்புபவர். அதைப்போல, தன்னுடைய வீட்டில் சிறந்த நூல்களைக் கொண்ட ஒரு பெரிய நூலகத்தை வைத்து அதை அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, அந்தவகையிலே பொது மக்களுடைய பங்கேற்பு இருக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். அப்படி



2003 நவம்பர் 3]

அதிகமான நூலகங்கள் நாட்டிலே அமைக்கப்பட வேண்டும் என்பதும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசினுடைய நோக்கம். சுவாமி விவேகானந்தர் அவர்கள் ஒரு முறை ஒரு நூலகம் திறக்கப்படுகிறபோது, ஆயிரம் சிறைச்சாலைகளின் கதவுகள் மூடப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் மனிதனுக்கு நல்லறிவு கொடுப்பதும், கண்களைத் திறப்பதுமான இந்த நூலகங்களை அமைப்பதற்கு அரசுக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வேண்டும். அப்படித் திறக்கப்படுகின்ற நூலகங்களுக்கு, பகுதி நேர நூலகங்களுக்கு பகுதி நேர நூலகர்கள் அரசாலே நியமிக்கப்படுகிறார்கள். அதிலே எந்தத் தடையும் இல்லை. அப்படி ஏதாவது காலி இடங்கள் இருந்தால் நிச்சயமாக நிரப்புவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு புதிய நூலகம் கட்டுவதற்காக 5 கோடி ரூபாய்க்கு மேலாக ஒதுக்கி உள்ளதாகத் தகவல் தெரிவித்தார்கள். அதனடிப்படையிலே என்னுடைய மேலூர் தொகுதியில், மேலூர் நகரில் மக்கள் தொகை 40 ஆயிரத்திற்கு மேலே இருக்கின்றது. ஏற்கெனவே அங்கே வாடகைக் கட்டடத்திலே ஒரு குறுகிய பாதை இல்லாத சிறிய சந்தாக இருக்கின்ற மாடியிலே உள்ள நூலகத்தில் படித்துக்கொண்டு இருக்கிறார்கள். முதியோர் மாடியிலே ஏறி படிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது என்றும் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்றும் சொல்லி சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கேட்டிருந்தேன். அதை, இந்த 5 கோடி ரூபாய்க்கு மேலாக இந்த ஆண்டு ஒதுக்கி இருக்கின்ற நிதியிலே மேலூர் நகரிலே—நகராட்சியிலே கட்டடம் கட்டுவதற்கு இடமெல்லாம் ஏற்கெனவே தெரிவு செய்து வைத்து இருக்கின்றோம். அதை இந்த ஆண்டு, அதை ஒரு புதிய கட்டடமாக—நூலகக் கட்டடத்தைக் கட்டித் தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த பொற்கால ஆட்சியில் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் தயாராக இருந்தால், நடைமுறையிலே உள்ள நூலகங்களுக்கு நிச்சயமாகக் கட்டடம் கட்டித் தரப்படும்.

[2003 நவம்பர் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திரு. ராதாரவி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

7—

## அடையாள அட்டை

***31115—திரு. ராதாரவி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாட்டுப்புறக் கலைஞர்கள், மரபு வழிக் கலைஞர்கள் உட்பட அனைத்து வகைக் கலைஞர்களுக்கும் அடையாள அட்டை வழங்கும் திட்டம் கடந்த 2002-2003ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) அரசின் நல உதவியைப் பெறுதல், அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளுக்குக் கலைஞர்களைத் தெரிவு செய்தல், கலைஞர்கள் பயணச் சலுகை பெறுதல் போன்ற பயன்களைக் கலைஞர்கள் பெற ஏதுவாக, கலை-பண்பாட்டுத் துறையின் சார்பில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு, மாவட்டக் கலை மன்றங்கள் மூலமாக மாநிலத்திலே உள்ள அனைத்து வகையான கலைஞர்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 11,079 கலைஞர்களுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசால் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. ராதாரவி:** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த அடையான அட்டை வழங்கும் திட்டம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் ஆரம்பிக்கப்பட்டது. அதைப்போல கிராமியக் கலைஞர்களாக 45 இலட்சம் பேர் இந்த



2003 நவம்பர் 3]

நாட்டில் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கலைஞர்கள் நல வாரியம் என்று ஒன்றை அமைத்துக்கொடுத்தால் நலமாக இருக்கும். அதேபோல ஆயுள் காப்பீட்டு வசதியில்லாமல் கிராமியக் கலைஞர்கள் சிரமப்படுகிறார்கள். அந்த ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்தினால் அவர்களுடைய குடும்பம் வளம் பெற நிச்சயமாக உதவியாக இருக்கும். அதேபோல, பரத நாட்டியக் கலைஞர்களுடைய குழந்தைகளுக்கு மருத்துவம், பொறியியல் ஆகிய படிப்புகளில் 2 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள். அதேபோல, கிராமியக் கலைஞர்களுடைய குழந்தைகளும் இந்தப் படிப்புகளைப் பெற குறிப்பிட்ட விழுக்காடு இட ஒதுக்கீடு செய்து தருவார்களா?

அதேபோல நிகழ்ச்சி நடத்தச் செல்லும் நாடகக் கலைஞர்களுக்கு அரசுப் பேருந்துகளில் பயணம் செய்தால் 50 விழுக்காடு அரைக் கட்டணச் சலுகைகள், என்று அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். ஆனால், இதையே 22-11-1995 அன்று அம்மா அவர்கள், அதேபோல் கிராமியக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகளின்போது அரசுப் பேருந்துகளில் 50 விழுக்காடு பயணக் கட்டணச் சலுகை தரவேண்டுமென்று சொன்னார்கள். அதை அடுத்து வந்த ஆட்சியில் நிறைவேற்றவில்லை. ஆனால், இப்போது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அதை நிறைவேற்றித் தரவேண்டும்; நிறைவேற்றித் தருவார்களா?

அதேபோல மதுரை, வேலூர் மாவட்டங்களில் நடைபெறுவதைப் போல்...

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவி, ஒவ்வொரு கேள்வியாகக் கேளுங்கள். அமைச்சர் குழம்பிப் போய்விடுவார்.

**திரு. ராதாரவி:** இல்லை, மொத்தமாகவே கிராமியக் கலைஞர்களைப் பற்றித்தான். மதுரை, வேலூர் மாவட்டங்களில் நடைபெறுவதைப்போல, கிராமியக் கலைஞர்கள் குடியிருக்க இலவச வீட்டுமனை ஒதுக்கீடு செய்து தரவேண்டும், அரசு பிரச்சார நாடகங்கள், அரசுப் பொருட்காட்சிகள், சுற்றுலாத் தலங்களில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளுக்கு சென்னையிலிருந்து நாடகக் குழுக்களை அனுப்புகிறார்கள். அதைப்போல, அந்தந்த மாவட்டங்களில் இருக்கும் கிராமியக் கலைஞர்களின் குழுக்களை அனுப்பினாலும் அது மிகவும்

சிறப்பாக இருக்கும். இதைப்போல திட்டங்கள் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாரவி அவர்கள் சொன்ன கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றவேண்டுமென்று சொன்னால், இதற்காக ஒரு தனி பட்ஜெட்டே போட வேண்டும்போல் தெரிகிறது. எனவே, இருக்கின்ற நிதியாதாரங்களைக் கொண்டு கலைஞர்களுக்கு மதிப்பளிக்கிற வகையில், கலைஞர்களுக்கு உதவி செய்கிற வகையில் பல நல்ல திட்டங்களை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு செய்து வருகிறது; இப்போதுகூட நலிந்த கலைஞர்களுக்கு வருடத்திற்கு 500 பேருக்கு தலா 500 ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கி வருகிறது. அதைப்போல மாவட்டவாரியாக ஐந்து கலைஞர்களை, மரபு வழிக் கலைஞர்களை, நாட்டுப்புறக் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து, துறைவாரியாக வயதிற்குத் தக்கபடி அவர்களுக்கு மரியாதை செலுத்துகிற வகையில், அவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. எனவே, அந்தவகையில், இன்னும் சொல்லப்போனால் கலை நிகழ்ச்சிகள் அவர்கள் நடத்துவதற்கு நிதியொதுக்கம் செய்யப்பட்டு, இந்த ஆண்டு 5 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கி, அவர்கள் கிராமங்களுக்குச் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்துவதில் அவர்களை ஊக்குவித்து வருகிறோம். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, வாரியம் அமைப்பது குறித்து, சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அரசு முடிவெடுக்கும்.

அதேபோல இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், சமீபத்திலே உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, குறிப்பிட்ட சில பிரிவினர் தவிர, மற்ற யாருக்கும் இட ஒதுக்கீடு செய்யக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இட ஒதுக்கீடு செய்வதற்கு நிச்சயமாக வாய்ப்பில்லை. அதைப்போல பேருந்துகளிலே பயணம் செய்வதற்கு இலவச Bus pass-ஐப் பொறுத்தவரையிலே, அந்தத் துறை அமைச்சர்தான் அதற்கு பதிலளிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டுப்புறக் கலைஞர்களைப் பொறுத்தளவிலே சீர்காழியிலே கிட்டத்தட்ட 29 பூம்பூம் மாட்டுக்காரர்கள் வசித்து வருகிறார்கள்.



அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை சமீபத்திலே வழங்கியுள்ளார்கள். அந்த 29 பூம்பூம் மாட்டுக்காரக் குடும்பங்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மரபுவழிக் கலைஞர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள் அந்தந்த மாவட்டங்களிலே இருப்பார்களேயானால், அவர்கள் முறையாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு விண்ணப்பித்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிசீலித்து அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கையை நிச்சயமாக எடுப்பார்கள்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினரின் மாவட்டமான நாகப்பட்டினம் மாவட்டத்தில் 511 பேர் விண்ணப்பித்து இருக்கிறார்கள். அந்த மனுக்கள் பரிசீலனையில் இருக்கின்றன. அந்த மனுக்களிலே அந்த பூம்பூம் மாட்டுக்காரர்கள் இருப்பார்களேயானால் நிச்சயமாக அவர்களையும் மரபு வழிக் கலைஞர்கள் என்று கருதி, அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கு நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும். அப்படி அவர்கள் இதுவரை விண்ணப்பிக்கவில்லையென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுத் தந்தால் இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். குறிப்பாக, இதுபோன்ற அங்கீகாரம் இல்லாத நாட்டுப்புற, கிராமப்புறக் கலைஞர்களுக்கு சமுதாயத்திலே ஓர் அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான், இந்த அடையாள அட்டைத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. நெப்போலியன். (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்

### (அ) வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டித்தது

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை கூடிய Business Advisory Committee-யில் 11-00 மணியானால், கேள்விகள் பாக்கியிருந்தாலுங்கூட, அதனை நிறுத்திவிட்டு இதர அலுவல்களை எடுத்துக்கொள்வது என்று முடிவு எடுத்து இருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது). இப்போது என்ன முடிவு சொன்னாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன். அதிலே நான் குறுக்கிடவில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்குப் போதுமான நேரம் இருக்கிறது. அவையின் இன்றைய அலுவல்களை நடத்துவதற்கு நமக்குப் போதுமான நேரம் இருக்கிறது.

**திரு. துரைமுருகன்:** அப்படியானால், இன்றைக்கு மட்டும் விதிவிலக்கு; மற்ற நாட்களில் 11 மணிக்கு நிறுத்திவிடுவீர்கள். அப்படித்தானே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பார்க்கலாம். அதுகுறித்து என்னுடைய அறையிலே பேசுவோம்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சென்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தினுடைய முடிவு சென்ற கூட்டத்திற்குத்தான் பொருந்தும். இந்தக் கூட்டத்திற்கு இன்னும் முடிவு எடுக்கவில்லை. எனவே, பேரவைத் தலைவர் அவர்களுக்கு விதியிலே அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி நீட்டிப்புத் தருகிறார்.

**திரு. துரைமுருகன்:** சபாநாயகருக்கு, எந்த முடிவையும், எதையும் எந்த நேரத்திலும் அறிவிக்கக்கூடிய அதிகாரம் உண்டு. அதை நான் மறுக்கவில்லை. அது வேறு விஷயம். ஆனால் போன Business Advisory Committee-யின் முடிவு போன கூட்டத் தொடருடன் முடிந்துவிட்டது என்று சொல்ல முடியாது. அப்படியானால், போன முறை எடுத்த பில்லை இப்போது எடுக்க மாட்டீர்களா? இதற்கு நிதி அமைச்சர் அவர்களுடைய வாதத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. சபாநாயகருடைய தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.



## 2. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்த கலைஞர்களுக்கு உதவித் தொகை பல ஆண்டுகளாக அரசு அளித்து வருகிறது. 500 ரூபாயிலிருந்து அதனை ஆயிரம் ரூபாயாகவும், 1000 நபர்களுக்கு அளித்து வருவதை 2000 நபர்களுக்கென்றும் அதனை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 ரூபாய் என்று சொன்னால் 500 பேருக்கு; 500 கலைஞர்களுக்கு இப்பொழுது நாம் நிதி உதவி செய்து வருகிறோம். இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஆண்டிற்குக் குறைவாகத்தான் நிதியொதுக்கம் செய்யப்படுகிறது. எனவே, நிதியொதுக்கத்தை ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்துத் தர வேண்டுமென்று துறையின் சார்பிலே நாங்கள் கேட்டிருக்கிறோம். எனவே, அப்படி அதிகமாக நிதி ஒதுக்கும் சமயத்தில் நிச்சயமாக அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும், அதிகமான தொகையை உயர்த்தித் தருவதற்கும் இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுப்புறக் கலைஞர்கள், அதேபோல நலிவடைந்த கலைஞர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள், மயிலாட்டம், இதுபோல் கரகாட்டம் என்று பலவகையான கிராமப்புறக் கலைகளைப் பின்பற்றி வாழ்க்கை நடத்திக் கொண்டு இருக்கின்ற கலைஞர்கள் அந்தப் பட்டியலிலே எந்தெந்த இனத்தவர்கள் அதிலே வருகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அறிவிப்பார்களா? எங்கள் மாவட்டத்திலேகூட, மாவட்ட ஆட்சித் தலைவர், மாறன் என்கின்ற ஒரு சிறந்த மயில் ஆட்டக்காரருக்கு, 6 வருடங்களாகப் பரிந்துரை செய்தும்கூட, இன்னமும் அவருக்கு அந்த பென்ஷன் கிடைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது அவர்களுக்கு அடையாள அட்டையை மட்டும் கொடுத்தால் போதாது, அவர்களுக்கு பென்ஷன்

கொடுப்பதற்கும், நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுவாக, புகழ்பெற்ற சினிமா நடிகர்கள், அருமை நண்பர்கள் ராதாரவி அதேபோல நெப்போலியன், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு என்று வாதாடுகின்ற அளவிற்கு இந்தத் துறை ஓரளவிற்கு நலிவடைந்து இருக்கிறது. சினிமா துறையிலே பணம் வைத்திருக்கிறவர்களிடமிருந்துகூட—சில நடிகர்கள் கோடி ரூபாய்கூட வாங்குகிறார்கள், அவர்களிடமிருந்துகூட—கொஞ்சம் பணத்தைப் பெற்று நலிவடைந்த கலைஞர்களுக்கு உதவிட, அவர்களைக் காப்பாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? Bus pass-ஐப் பொறுத்தவரையில், நீங்கள் சொன்னீர்கள் அந்த அமைச்சர்தான் முடிவு எடுக்க வேண்டுமென்று. நீங்கள் பணத்தை ஒதுக்கி அந்தத் துறைக்குக் கட்டினால்தான், அவர்கள் Bus pass கொடுப்பார்களேயொழிய, அவர்களாகவே கொடுக்க மாட்டார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள், அதற்குப் பணம் கட்டத் தயாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட இனத்தவர் என்று கலைஞர்களை நாம் பிரித்துப் பார்ப்பதில்லை. ஆகவே, எந்த இனத்தவர்களாக இருந்தாலும், கலைஞர்களுக்கு இந்த உதவிகள் நிச்சயமாகத் தொடரும். பொதுவாக நாட்டுப்புறக் கலைஞர்கள், மரபு வழிக் கலைஞர்கள், நவீன கலைஞர்கள், இயல், இசை, நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம் ஆகியவற்றில் கலைத் தொண்டு புரியும் கலைஞர்கள், ஆக, இவர்களெல்லாம் நிச்சயமாக இதிலே அடங்குவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்ன அந்தக் கலைஞர் இதிலே ஏதாவது ஒரு வகையில் அடங்குவாரேயானால் அவர்களுக்கு அரசு உதவியை நிச்சயமாகக் கொடுக்கும். Bus pass-ஐப் பொறுத்தவரையில் இப்பொழுது நிதி ஒதுக்கம் குறைவாக இருக்கிறது. ஆக, நிதி ஒதுக்கம் அதிகமாகக் கிடைக்கும் பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையையும் நிச்சயமாக அரசு பரிசீலிக்கும். ஆனால் Bus pass கொடுப்பதைவிட வேறு வகையில் கலைஞர்களுக்கு நிதி உதவியாகக் கொடுத்தால் அவர்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படும். எனவே, வெறும் Bus pass-ஐக் கொடுத்தால் அவர்கள் பஸ்ஸிலே ஏறி காலத்தைச் செலவழிப்பார்களே தவிர, அவர்களுடைய வாழ்க்கைக்கு அது நிச்சயமாக உதவாது. எனவே, வேறு வகையிலே அவர்களுக்கு உதவுவதற்கு இந்த அரசு முன்வரும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு அடையாள அட்டை மற்றும் உதவி சம்பந்தமான பிரச்சினைகளிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதை நானும் வலியுறுத்துகிறேன். 8 வருடங்களுக்கு முன்னால் ஒரு கலைஞர் இறந்து போனார். அந்தக் குடும்பத்திற்கு நிவாரணம் வேண்டுமென்று 7 வருடங்களாக ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. 2½ வருடங்களாக நான், கலை மற்றும் பண்பாட்டுத் துறையிடம் வலியுறுத்தி வருகிறேன். ராஜரத்தினம் என்பது அந்தக் கலைஞருடைய பெயர். டி.எம். சௌந்திரராஜன்தான் அதற்கு சேர்மன். அவரையே நேரிலே போய்ப் பார்த்தேன். இன்றைக்கு வரையில் அது நிறைவேறாமல் இருக்கிறது. ஆகவே, நலிவுற்ற கலைஞர்களைவிட இந்தப் பண்பாட்டுத் துறை ரொம்ப நலிவடைந்து போயிருக்கிறது என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அந்தத் துறையைப் பலமடையச் செய்து உண்மையாக பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்த கலைஞர்கள் அவர்கள் உதவி பெற்று வரும் அந்தக் காலத்தில் அவர்கள் இறந்து விடுவார்களேயானால் அந்த நிதி உதவி அவர்களுடைய மனைவிக்கு நிச்சயமாக இப்பொழுது கிடைத்து வருகிறது. அதற்கான உத்தரவையும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிறப்பித்து இருக்கிறார்கள். ஆக, ஒரு கலைஞருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு அவர் இறந்து விடுவாரேயானால் அப்படிப்பட்ட அந்த இறந்த கலைஞரினுடைய மனைவிக்கு அரசு நிதி உதவியை நிச்சயமாகக் கொடுக்கும். ஆனால் இதுவரை உதவி பெறாமலேயே அந்தக் கலைஞர் இறந்துவிட்டால் அவருடைய மனைவிக்குக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை. எனவேதான் அது தாமதப்படுத்தப்படுகிறது. அந்த வகையிலே, அதாவது உதவி பெற்று வருகிற கலைஞர்கள் இறந்து விட்டால் அவர்களுடைய மனைவிக்கு இப்பொழுதும் தங்குதடையின்றி நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

[2003 நவம்பர் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், மற்ற விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரிலே போய்க் கேளுங்கள். திரு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் பன்னெடுங்காலமாக இழவு வீடுகளிலும் துக்கங்களிலும் பறை என்கிற ஒரு மிகப்பெரிய புராதன இசையை அவர்கள் வாசித்து வருவதை நாடு அறியும். அது ஒரு இழிவான கலையாகவே கருதப்படுகிறது. அதை மரபு வழிக் கலையாக அரசு அங்கீகரித்து மரபு வழிக் கலைஞர்களாக, நாட்டுப்புறக் கலைஞர்களாக அவர்களை அங்கீகரித்து அவர்களுக்கு ஓய்வூதியமும், அரசு வழங்குகின்ற கலைமாமணி போன்ற பட்டங்களும் தருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். அடுத்ததாக, அரசு நடத்துகிற இசைப் பயிற்சிக் கல்லூரிகளிலே இதையும் ஒரு பாடமாக அவர்கள் சேர்ப்பார்களா என்பதையும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பறை அடித்தல் என்பது, அதுவும் ஒரு கிராமப்புறக் கலைதான். எனவே, அந்தக் கலைஞர்கள் இப்படிப்பட்ட உதவிகளைப் பெறுவதற்கு, அடையாள அட்டை பெறுவதற்கு அல்லது அந்தக் கிராமப்புற கலைஞர்களுக்கான நிதி உதவியைப் பெறுவதற்கு அவர்கள் நலிந்த நிலையில் இருப்பார்களேயானால், அவர்கள் விண்ணப்பங்கள் கொடுப்பார்களேயானால் அதுகுறித்தும் இந்த அரசு நிச்சயமாகப் பரிசிலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பறை அடித்தலை இசைப் பள்ளிகளில் சேர்ப்பார்களா என்று கேட்கிறார்கள். அப்படிப்பட்ட கோரிக்கைகள் வருமேயானால் நிச்சயமாக இசைப் பள்ளிகளிலும், இசைக் கல்லூரிகளிலும் அதற்காக ஒரு தனிப் பிரிவைக்கூட ஏற்படுத்தலாம். அப்படிப்பட்ட கோரிக்கைகளை நிச்சயமாக அரசு பரிசிலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



2003 நவம்பர் 3]

8—

### புதிய கட்டடம்

***35246—திரு. சி. இராசேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் ஒன்றியம், ஆலக்குடி ஊராட்சி மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆலக்குடி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தை ரூ.12.00 இலட்சம் செலவிலே கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது. கட்டடப் பணி விரைவிலே துவங்கும்.

*முற்பகல் 11-10*

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில், இந்தக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கிய, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில், என்னுடைய நன்றியையும், தொகுதி மக்களுடைய நன்றியையும் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த அரசுக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

9—

### நிலத்தடி நீர்வளம்

***31782—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

நிலத்தடி நீர்வளம் குறைந்துள்ள நிலையில், அதனைச் சமன்செய்ய அரசிடம் மாற்றுத் திட்டங்கள் உள்ளனவா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிலத்தடி நீரை உயர்த்த வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், மழைநீர் சேகரிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து, தொலைநோக்குப் பார்வையோடு, அதனை மக்கள் இயக்கமாக மாற்றிச் செயல்படுத்தி வருகிறார்கள். பண்ணைக் குட்டைகள் அமைத்தல், பழுதடைந்த கிணறுகள்மூலம் மழைநீர் சேகரித்தல், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், தமிழ்நாட்டிலுள்ள குளங்கள், குட்டைகள், ஏரிகளைத் தூர்வாரி, ஆழப்படுத்துதல் மற்றும் ஒவ்வொருவரும் தங்களுடைய சமூகக் கடமையை உணர்ந்து, தங்களுடைய வீடுகளிலும், அரசுக் கட்டடங்களிலும், மழைநீர் சேகரித்து, அதன்மூலம் நிலத்தடி நீர் வளத்தினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்துவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், தூர் வாரும் பணிகள் போன்றவையெல்லாம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். இதுவரை, எத்தனை பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன? எந்த அளவுக்கு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பண்ணைக் குட்டைகள் வெட்டுவதற்காக 27 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, 9,050 பண்ணைக் குட்டைகள் வெட்டுவது என்று திட்டமிடப்பட்டு, 8,792 பண்ணைக் குட்டைகள் வெட்டப்பட்டுள்ளன என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே, தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க வேண்டுமென்று சூளுரைத்து, 20 மணி நேரம் பணியாற்றும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நிலத்தடி நீரின்



2003 நவம்பர் 3]

அளவினை உயர்த்திட, பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவற்றிலே வருவதுதான் வீடுதோறும் மழைநீர் சேகரித்தல், தனியார் பட்டா நிலத்தில் பண்ணைக் குட்டைகள் அமைத்தல், ஏரிகள் தூர் வாருதல், பொய்த்த கிணற்றைத் தூர் வாரி, மழைநீரைச் சேகரித்தல், இவைபோன்ற பலவகை திட்டங்கள்; இவையனைத்தும் வெற்றி அடைந்துள்ளன. இதனை மத்திய அரசும் மற்றும் பல தனியார் துறைகளும் பாராட்டியுள்ளன. அவற்றிலே ஒன்றுதான் தனியார் நிலத்தில், பண்ணைக் குட்டைகள் அமைத்தல். அதற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. எங்கள் நாமக்கல் மாவட்டத்திலே, சுமார் 505 பண்ணைக் குட்டைகள் அமைத்த காரணத்தினால், ஆயிரம் அடி ஆழத்தில் இருந்த ஆழ்துளைக் கிணற்றில் இருந்த தண்ணீரின் மட்டம், தற்போது 500 அடியாக உயர்ந்துள்ளது. எனவே, இவற்றையெல்லாம் மனதிலே வைத்து, மேலும் பண்ணைக் குட்டைகள் அமைத்திட, நடப்பாண்டிலேயே நிதியொதுக்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் மூலமாக, ஆணை பிறப்பிக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் நல்ல திட்டங்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடிநீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்காக, பல்வேறு திட்டங்களை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே குறிப்பாக, பண்ணைக் குட்டைகள் வெட்டுவது, தூர்ந்துபோன கிணறுகளைத் தூர் வாருவதற்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், அப்படிப்பட்ட அந்தப் பணியைச் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகிறபோது, அதற்காக ஒதுக்கப்படுகிற தொகை என்பது, அதனுடைய அளவு என்பது மாறுபடுகிற நிலையிலே, கிணறுகளைத் தூர் வாருவதற்கான அந்தத் திட்டம் நடைமுறை சாத்தியம் இல்லாமல் இருக்கிறது என்று எங்களது திருவாரூர் மாவட்டத்தில் சொல்லப்படுகிறது. அதை மறுபரிசீலனை செய்து, தேவையான அளவுக்குரிய மாற்றங்களோடு

அதைப் பரிசீலனை செய்து, நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமா என்பதோடு, இந்த நிலத்தடிநீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கான முயற்சியாக, இந்தக் காரியங்களைச் செய்வதோடு மழைவளம் பெறுவதற்கான முயற்சி எடுக்கின்றவகையில், அரசு மரங்களை நடுவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன். அப்படிப்பட்ட பணிகளிலே, எங்களது மாவட்டத்திலே, எங்களது இயக்கத்தின் சார்பிலே வருகிற 7-ஆம் தேதி, இரண்டரை இலட்சம் மரக் கன்றுகளை நடுவதற்காக முயற்சிகள் எடுத்து, அந்தப் பணிகளை நாங்கள் தொடங்கியிருக்கிறோம். அதற்கும் அரசு உதவி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 18 இலட்சம் கிணறுகள் உள்ளன. அவற்றிலே ஒரு இலட்சத்து 59 ஆயிரம் கிணறுகள் பழுதடைந்து பயனற்ற நிலையிலே இருக்கின்றன. அந்தக் கிணறுகளிலே 50 ஆயிரம் கிணறுகளைப் பயனுடையதாக ஆக்க வேண்டும் என்பதற்குத் திட்டமிடப்பட்டு, முதல்கட்டமாக 5 ஆயிரம் கிணறுகளில் 10 கோடி ரூபாய் முதலீட்டிலே பழுது நீக்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது, அப்படி ஒதுக்கப்படுகிற தொகை, சில இடங்களிலே மாறுபடுவதாகச் சொல்கிறார்கள். சில கிணறுகளைப் பழுது பார்ப்பதற்கு அதிகமாகவும், சில இடங்களிலே குறைவான பழுது இருப்பின் அங்குக் குறைவாகவும் வருவதால் இந்த வித்தியாசம் வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, மழைநீரைப் பெறுவதற்கு மரம் வளர்ப்போம் என்பது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கை. அதன் அடிப்படையிலே அம்மா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் தமிழகத்திலே இருக்கக்கூடிய தரிசு நிலங்களை எல்லாம் விளை நிலங்களாக மாற்றுவது என்றும், மரங்களை நடுவது என்றும் திட்டமிடப்பட்டு அந்தப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. ஆகவே, முதலமைச்சர் அம்மா அவர்கள் மழைநீரைப் பெறுவதற்கும், மழைநீரைச் சேகரிப்பதற்கும், 'மழைநீரைப் பெறுவதற்குத் தேவையான மரம் வளர்ப்போம்' என்ற திட்டத்தையும் அம்மா அவர்கள்





நடைமுறைப்படுத்தி வருகிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணைக் குட்டைகள் அமைக்கும் திட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டம் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு இருக்கிறதா? செயல்படுத்தப் படவில்லை என்றால் அனைத்து மாவட்டங்களுக்கும் அதை விஸ்தரிக்கின்ற குறிப்பு ஏதாவது அமைச்சரிடத்திலே இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணைக் குட்டைகள் வெட்டும் திட்டம் மாநிலம் பூராவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீரைப் பெருக்குவதற்காக அரசு மேற்கொள்கிற அனைத்து முயற்சிகளும் வரவேற்கத்தக்கவை என்றாலும், கோவை போன்ற வறண்ட மாவட்டங்களுக்கு மிக மிகத் தேவையான பாண்டியாறு-புன்னம்புழா நீர்ப்பாசனத் திட்டமும், தென்பகுதி மாவட்டங்களுக்குத் தேவையான அச்சன்கோவில்-பம்பா நீர்ப்பாசனத் திட்டமும் நிறைவேற்றப்படுவதற்கு கேரள அரசோடு தமிழக அரசு நடத்துகின்ற பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற்குத் தனியாகக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை வேளாண்மைத் துறை அமைச்சரிடம் கேட்கக் கூடாது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணைக் குட்டைகளை வெட்டுவதும், குளங்களைத் தூர்வாருவதும், ஒரு நல்ல திட்டம் என்ற முறையிலே சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

[2003 நவம்பர் 3

ஆனால் அதற்குள்ளே இருக்கின்ற ஒரு சிக்கல்; மண்ணை வெட்டி அதனுடைய கரையிலே வைத்துவிடுகிறார்கள். அது, அடுத்த 2 மழை பெய்கின்றபோது, மீண்டும் அந்தக் குட்டைகளிலே, குளங்களிலே போய்ச் சேர்ந்துவிடுகிறது. எனவே, அந்த மதிப்பீடு தயாரிக்கின்றபோது, அந்த மண்ணை ஒரு கிலோமீட்டர் தூரத்திலோ அல்லது இன்னும் அகலமான இடத்திலோ கொண்டுபோய்ப் போடுவதன் மூலமாகத்தான் நாம் எடுத்திருக்கின்ற அந்தத் திட்டம் முழுமையாக மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் அமையும். அந்த வகையில் அந்த மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணைக் குட்டைகள் அமைக்கிறபொழுது, அதிலிருந்து எடுக்கப்படுகிற மண்ணை அங்கே, பக்கத்திலேயே போடாமல், 5 அடி அல்லது 10 அடி தள்ளியே போட வேண்டுமென்றுதான் அரசால் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. இந்தப் பணிகளை அந்த நிலத்திற்கு உரியவராக இருக்கிற விவசாயிகளே செய்கிறார்கள். அப்படிச் செய்கிறபோது அந்தக் குற்றச்சாட்டுகளைப் பரிசீலித்து அதற்கு உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் பணிவோடு தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணைக் குட்டைகளை அமைப்பது, நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பது போன்ற கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதில் அளித்து இருக்கிறார்கள். பண்ணைக் குட்டை என்ற திட்டம் ஒரு நல்ல திட்டம்; நீர் ஆதாரங்களை, நிலத்தடி நீரைச் சமன்படுத்துவதற்கு அரசு எடுக்கின்ற நடவடிக்கை. சமீபத்தில் மழையின் அளவு நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது; இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. மழை அளவும் வேறுபடுகிறது; ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் சொன்னதைப்போன்று, மழை வளங்களைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால், கண்டிப்பாக மரங்களை நட்டு வளர்ப்பது அரசினுடைய சிறப்புக்கூறு திட்டத்திலே செய்யப்பட வேண்டும்; அப்படிச் செய்தோமென்று சொன்னால், இந்த மழைநீர் ஆதாரங்களைப் பெருக்குவதற்கு நல்ல வாய்ப்பை உருவாக்க முடியும். அந்த வகையிலே, சாலை ஓரங்களிலே, ஊராட்சி ஒன்றியச் சாலைகளிலே, ஊராட்சிச் சாலைகளிலே ஊராட்சி மூலமாக அல்லது



2003 நவம்பர் 3]

ஒன்றியத்தின் மூலமாக மரங்களை வளர்ப்பதற்கு அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா? ஏற்கெனவே சாலைப் பணியாளர்கள் 10 ஆயிரம் பேர் நீக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்களை நியமித்து, இதுபோன்ற சிறப்புத் திட்டத்தின்கீழ் மரங்களை வளர்ப்பதற்கு அரசிடம் திட்டங்கள் ஏதும் உள்ளதா? மரம் என்பது தானாக வளரப் போவது இல்லை. இருந்தாலும் எங்களுடைய இயக்கத்தின் சார்பாக 2½ இலட்சம் கன்றுகள், பழம் தரும் கன்றுகள் நாங்கள் வளர்ப்பதற்காக இருக்கிறோம். இதிலேயும் அரசு ஆதரவு கொடுக்க வேண்டும். அதுபோன்று, அங்கே இருக்கக்கூடிய பொதுப் பணித் துறை போன்ற துறைகளின் சார்பாக—பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறைகளின் மூலமாக—அரசின் அனுமதி பெற்றுத்தான், கன்றுகளை நடவேண்டும் என்று சொல்லிக்கூட இன்றையதினத்திலே மறுத்து வருகிறார்கள். இப்படிப்பட்ட பணியை எந்த இயக்கம் செய்தாலும் அதற்கு அரசு ஆதரவு அளிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லது எதுவாக இருந்தாலும் அரசு அதற்கு ஆதரவாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். போன ஆண்டு மட்டும் வேளாண்மைத் துறையின் சார்பில் 29 இலட்சத்து 53 ஆயிரத்து 132 மரக்கன்றுகள் நடப்பட்டு இருக்கின்றன. கடுமையான வறட்சியிலும்கூட இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதுபோல இந்த ஆண்டு 36 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்வதற்குக் கையிலே இருப்பாக இருக்கின்றன. நல்ல திட்டத்திற்கு அரசை அணுகுகிறபோது, அரசு அதற்கு அனுசரணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிலத்தடி நீர்வளம் குறைந்துள்ளது என்று சொன்னால், என்னுடைய தொகுதியிலே ஸ்ரீபெரும்புதூர் யூனியன் முழுக்க முழுக்க அதனாலே பாதிக்கப்பட்டுள்ள யூனியன் ஆகும். அங்கே நிலத்தடி நீரைச் சேமிப்பதற்கு—மழைநீரைச் சேமிப்பதுபோல, அந்த நிலத்தடி நீரை சேமிப்பதற்கு—100 ஏக்கர் அல்லது 50 ஏக்கர் போன்ற அளவிலே நிலங்களை தனிப்பட்டவர்கள் கொடுப்பதற்குத் தயாராக இருந்தால் அரசாங்கம் அதிலே மழைநீரைச் சேமிப்பதற்கு ஏதேனும் திட்டம் தனிப்பட்ட முறையிலே வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2003 நவம்பர் 3

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய குளங்கள், ஏரிகள் போன்றவற்றைப் பராமரித்தால் ஓரளவு இருக்கக்கூடிய தண்ணீர் பிரச்சினையை நீக்க முடியும் என்பதற்காக அரசு, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து குளங்கள், ஏரிகளை எல்லாம் இந்த ஆண்டு ஆழப்படுத்தித் தூர் வாரி இருக்கிறது. அந்தவகையிலே அவர்களாகவே முன்வந்து அவரவர்கள், இருக்கக்கூடிய நிலங்களிலேயே அவர்களே மழைநீரைச் சேகரிப்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொண்டால் அரசு அதற்கு உதவி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மரக்கன்றுகள் நடுகின்ற பணியில் ஒருசில குறிப்பிட்ட ஊராட்சிகளை மட்டும் தேர்வு செய்து அதிலே மரக்கன்றுகளை நடவேண்டும் என்கிற நிலையை அரசு எடுத்திருக்கிறது. ஆனால் எல்லா ஊராட்சிகளிலும் இருக்கிற தரிசு நிலங்களிலே தனியார் மரக்கன்றுகளை நடுவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அந்தத் திட்டத்தை, எல்லா தரிசு நிலங்களிலேயும் மரங்களை நடும் வகையில் அரசு விரிவாக்கம் செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு முதல்கட்டமாக 10 மாவட்டங்களைத் தேர்வு செய்து அந்த 10 மாவட்டங்களில் இந்த மரம் வளர்ப்பு, தரிசு நிலங்களை மேம்படுத்துவது போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டங்கள் தமிழ்நாடு பூராவும் படிப்படியாக அமல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மழைநீர் சேகரிப்புத் திட்டத்திலே பண்ணைக் குட்டைகள், குளங்கள், ஏரிகள் எல்லாம் தூர் வாரப்படுகின்றன. எனது பேராவூரணி தொகுதி கல்லணைக் கால்வாயினுடைய கடைமடைப் பகுதியாகும். இந்தப் பகுதியிலே, அக்கினியாறு வடிநிலக் கோட்டத்தைச் சேர்ந்த ஏறக்குறைய, அக்கினியாறு, வில்லுனியாறு, நரியாறு, மகாராஷ்டிர சமுத்திரம், அம்புலியாறு, பூனைக்குட்டியாறு, பாப்பங்கன்னியாறு போன்ற பல்வேறு காட்டாறுகள் உள்ளன. இந்த காட்டாறுகளிலே தற்போது



2003 நவம்பர் 3]

பெய்கின்ற மழைநீரிலே, மிக அதிகமான தண்ணீர் கடலிலே வீணாகக் கலக்கிறது. இவற்றைத் தடுத்து இந்தப் பகுதியிலே நிலத்தடி நீரை அதிகப்படுத்துகின்ற நோக்கத்தோடு ஆங்காங்கே சிறிய Check-dams அமைக்கும் திட்டம் இத்திட்டத்திலே ஏற்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைநீரைச் சேகரிப்பதற்கு, தண்ணீர் கடலிலே விழுந்து அது வீணாகாமல் தடுப்பதற்கு ஆங்காங்கே தடுப்பு அணைகள் கட்டுவதற்கான திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. கே.வி. முரளிதரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**10—**

### உருளைக்கிழங்கு பயிர்

**•31949—திரு. கே.வி. முரளிதரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேன்கனிக்கோட்டை மற்றும் ஓசூர் ஆகிய வட்டங்களில் உருளைக்கிழங்கு பயிரிடுவோர்க்கு தரம் குறைந்த ரகத்தைச் சேர்ந்த உருளைக்கிழங்குகள் வழங்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) இது தொடர்பாக அரசுக்கு ஏதேனும் அறிக்கை வரப்பெற்றுள்ளதா?

(இ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தேன்கனிக்கோட்டை மற்றும் ஓசூர் ஆகிய பகுதிகளில் உருளைக்கிழங்கு பயிர் செய்வதற்கு அதன் கிழங்குகளே விதையாகப்

[2003 நவம்பர் 3

பயன்படுத்தப்படுகின்றன. தோட்டக்கலைத் துறை மூலம் விதைகள் விநியோகம் செய்யப்படுவதில்லை. இதற்கான திட்டமும் செயல்படுத்தப்படுவதில்லை. இப்பகுதியைச் சேர்ந்த உருளைக்கிழங்கு பயிர் செய்யும் விவசாயிகள் சில தனியார் நிறுவனங்களிடமிருந்து உருளைக்கிழங்கு விதைகளைப் பெற்றுப் பயிர் செய்து வருகின்றார்கள்.

(ஆ) இதுவரை இப்பகுதியைச் சேர்ந்த உருளைக்கிழங்கு பயிர் செய்யும் விவசாயிகளிடமிருந்து எந்தவிதமான புகார்களோ/பிரச்சினைகளோ அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை மற்றும் ஓசூர் ஆகிய வட்டங்களில் உருளைக்கிழங்கு பயிர் செய்யப்படுகிறது. கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த சிக்கபலாபுரம் என்ற ஒரு டவுனிலிருந்து உருளைக்கிழங்கு விதைகளை நாங்கள் வாங்கிக்கொண்டு வருகிறோம். கடந்த 2000-ல் இந்தக் கேள்வி போட்டோம். இப்போது வந்து இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு உருளைக்கிழங்கு 7 மூட்டை தேவைப்படுகிறது. 7 மூட்டைக்கு 250 மூட்டை வரைக்கும் எங்களுக்கு மகசூல் வரும். 2000-ல் நாங்கள் கேள்வி போடும்போது அப்போது 70 மூட்டைதான் வந்தது. அதுபற்றி நாங்கள் ஓசூரிலும், தளியிலும் போராட்டம் எல்லாம் செய்தோம். நாங்கள் Horticulture Officer-இடம் தெரிவித்து, அவர்கள் அரசுக்குத் தெரிவித்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரைக்கும் விவசாயிகளுக்கு ஏந்த ஒரு நஷ்ட ஈடும் கொடுக்கவில்லை. அடுத்து அரசு ஆணை பிறப்பித்து நஷ்டஈடு கொடுக்குமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 5,561 எக்டேர் பரப்பில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு 1,00,688 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தித் திறன் 18.11 மெட்ரிக் டன் ஆக இருக்கிறது. உருளைக்கிழங்கைப் பொறுத்தவரையில் உருளைக்கிழங்கு பயிர் செய்கிற விவசாயிகளிடமிருந்துதான் அவர்கள் அந்த விதைகளைப் பெற்று நடவு செய்கிற பழக்கம் இருந்து வருகிறது. அந்த விவசாயிகளே அவர்களுடைய நிலத்திலே உள்ள தரமான அந்த விதைகளை எடுத்து நடவு செய்து வருகிறார்கள். ஆகவே இதுபற்றி அரசினுடைய கவனத்திற்கு ஏதாவது



2003 நவம்பர் 3]

புகார் வந்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** அமைச்சருக்கு நன்றி. அதேபோல் அவர்கள் சம்பந்தமான ஒரு Question. விவசாயிகள் Vegetables-ஐ மார்க்கெட்டில் கொண்டு வந்து போட்டால் கமிஷன் 10% வாங்குகிறார்கள். ஆனால் seller கிட்டே 5% buyer கிட்டே 5%-தான் வாங்கவேண்டும் என்று உள்ளது. ஆனால் 10% கமிஷன் விவசாயிகளிடமே கேட்கிறார்கள். அதை 5% ஆகச் செய்துதர அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாக ஒரு கேள்வி போட்டால் அதற்குரிய பதிலை நாங்கள் தருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, திரு. ஜி. கோதண்டராமன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**11—**

**மாணவியர் விடுதி**

**•35855—திரு. ஜி. கோதண்டராமன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர், கண்டாச்சிபுரத்தில் ஆதிதிராவிட மாணவியர் விடுதி துவக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் துவக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஜி. கோதண்டராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்கால வளமான இந்தியாவை உருவாக்க தலைமை

ஏற்று இருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புற மக்களின் கல்வி முன்னேற்றத்தில், குறிப்பாக ஆதிதிராவிட பெண்களின் கல்வி முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர். எனவேதான், +1, +2 வரை படிக்கும் ஆதிதிராவிட மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டி தொடர்ந்து வழங்கி வருகிறார்கள். முகையூர் ஒன்றியம் 63 ஊராட்சிகளை உள்ளடக்கிய மிகப் பரந்த அளவுகொண்ட ஒன்றியம். அந்த ஒன்றியத்தில் 41,617 ஆதிதிராவிட மக்கள் வாழ்கிறார்கள். ஆதிதிராவிட மாணவியர் தங்கிப் படிப்பதற்கு விடுதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் அரசு, அடுத்து வருகிற கல்வி ஆண்டில் கண்டாச்சிபுரத்தில் ஆதிதிராவிட மாணவியர் தங்கிப் படிக்க அரசு ஆதிதிராவிட மாணவியர் விடுதி ஒன்று ஆரம்பிக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில்தான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியரின் கல்வி முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி கல்வித் தரம் உயர்வதற்காக விடுதிகள் ஏற்படுத்தி, சுகாதார வசதிகளுடன் கூடிய தங்கும் இடமும் நல்ல தரமான உணவும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. 1,076 ஆதிதிராவிடர் நல விடுதிகளில் ஏறக்குறைய 75 ஆயிரம் மாணவ, மாணவியரும், 26 பழங்குடியினர் நல விடுதிகளில் 1,300 மாணவ, மாணவியரும், தொண்டு நிறுவன விடுதிகளில் 4,300 மாணவ, மாணவியரும், உண்டு உறைவிடப் பள்ளிகளில் ஏறக்குறைய 45 ஆயிரம் மாணவ, மாணவியரும் ஆக மொத்தம் ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயன்பெற்று வருகிறார்கள். அதற்கான செலவு ரூ. 39.28 கோடி; உணவுக்கு மட்டும் செலவு செய்யப்படுகிறது. எனவே, தற்போதுள்ள சூழ்நிலையில் தொடர் செலவினம் ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு செயற்குறிப்பினையும் நிதிநிலை சீரடைந்தவுடன் பரிசீலிக்கலாம் என மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவு செய்துள்ளதால் முகையூர் தொகுதி கண்டாச்சிபுரத்தில் புதிய ஆதிதிராவிடர் நல விடுதி ஆரம்பிக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திருமதி எஸ். கனிதா சம்பத், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**12—**

**புதிய வழித்தடம்**

**•6459—திருமதி எஸ். கனிதா சம்பத்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்திலிருந்து சிங்கப்பெருமாள்கோயில் வழியாக அனுமந்தபுரம், சிறுகுன்றம், மலாரிப்பேட்டை, வெங்கூர் வழியில் கொட்டமேடு வரை சென்றுவர புதிய பேருந்து வழித்தடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரத்திலிருந்து சிங்கப்பெருமாள்கோயில், அனுமந்தபுரம், சிறுகுன்றம், மலாரிப்பேட்டை, வெங்கூர், கொட்டமேடு வழித்தடத்தில் மலாரிப்பேட்டையைத் தவிர்த்து மற்ற அனைத்து ஊர்களும் போதிய பேருந்து வசதி பெற்றிருப்பதால் கோரிக்கை வழித்தடத்தில் புதிய பேருந்து வழித்தடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி, தாம்பரத்திலிருந்து சிங்கப்பெருமாள் கோயில் வழியாக அனுமந்தபுரம், சிறுகுன்றம், மலாரிப்பேட்டை, வெங்கூர் வழியில் கொட்டமேடு இங்கேயெல்லாம் விவசாயம் அதிகம்; காய்கறிகள் பூச்[illegible]

[2003 நவம்பர் 3

பயிரிடுகிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், பள்ளிக்குச் சென்று படிக்கும் மாணவ, மாணவிகள் சிங்கப்பெருமாள்கோயில், கூடுவாஞ்சேரி, செங்கற்பட்டு, தாம்பரம் சென்றுதான் படிக்க வேண்டும். ஆகையால், திருப்போரூர் தொகுதி மக்களின் நலனைக் கருதி, வரும் நிதியாண்டிலாவது, புதிய வழித்தடம் அமைத்துத்தர அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டிருக்கின்ற வழித்தடமான தாம்பரம், கொட்டமேடு வழி சிங்கப்பெருமாள்கோயில், அனுமந்தபுரம், சிறுகுன்றம், மலாரிப்பேட்டை, வெங்கூர் வழித்தடத்தின் மொத்த நீளம் 41 கிலோமீட்டர். இதில் தாம்பரத்திலிருந்து சிறுகுன்றம் வரையிலான 38 கிலோமீட்டர் வரை காஞ்சிபுரம் அரசு போக்குவரத்துக் கழகம் தடம் எண் 82-ன் மூலம் வேண்டிய அளவுக்கு, போதுமான அளவுக்குப் பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற 38-வது கிலோமீட்டரில் உள்ள சிறுகுன்றத்திலிருந்து வெங்கூர் வரையிலான 2 கிலோமீட்டர் தூரத்திற்கு மட்டும்தான் பேருந்து வசதி இல்லை. இருந்தாலும்கூட, இடைப்பட்ட தூரத்திலே இருக்கின்ற அந்த கிராமம், பக்கத்து கிராமங்களிலே இருக்கின்ற 2 கிலோமீட்டர் தூரத்திற்குப் பக்கத்திலே போதிய அளவு பேருந்து வசதி பெற்றிருக்கின்ற கிராமங்கள் இருப்பதால் அந்த இடத்திலிருந்து பேருந்து வசதியைப் பெற்றுக்கொள்ள இயலும். மேலும் அந்த வழித்தடத்தில் அந்த 2 கிலோமீட்டர் தூரத்திற்கும் புதிய பேருந்து விடவேண்டும் என்று சொன்னால், அதிலே இடையிலே இருக்கின்ற ஒரு பாலம் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது. பேருந்து இயக்க முடியாத நிலையிலே அந்தப் பாலம் பழுதடைந்து இருப்பதால், அந்தப் பழுதை நீக்க வேண்டுமென்று பொதுப் பணித் துறைக்கு எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பாலத்தைச் சரி செய்ததற்குப் பின்பு மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



2003 நவம்பர் 3]

13—

## பேருந்து இயக்குதல்

**•6930—திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், தென்காசி-சுரண்டை, கடப்போகத்தி, சடையப்பபுரம், மேலப்பாவூர் வழியாக இயக்கப்பட்ட தடம் எண் 22 நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் எப்பொழுது இப்பேருந்து இயக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதியில், கடப்போகத்தி, சடையப்பபுரம், மேலப்பாவூர் வழியாக தென்காசி-சுரண்டை வழித்தடத்தில் இயங்கிய தடம் எண் 22, செப்டம்பர் 2001-ல் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தொழில்நுட்ப காரணங்களால் ஓரிரு சுற்றுகளில் இழப்பு ஏற்பட்டது. பிறகு 20-9-2001 முதல் 29-4-2002 முடிய இப்பேருந்து முறையாக இயக்கப்பட்டது. பிறகு பயணிகள் அடர்வு மிகவும் குறைவாக இருந்த காரணத்தால், இப்பேருந்து இயக்கம் தற்போது நிறுத்தப்பட்டு விட்டது. மீண்டும் இத்தடப் பேருந்தினை இயக்கிடும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

**திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதியில் தென்காசி, சுரண்டை, கடப்போகத்தி, சடையப்பபுரம், மேலப்பாவூர் வழியாக இயங்கிய தடம் எண் 22 பேருந்து வெகுகாலமாக ஓடிக் கொண்டிருந்தது. தடம் எண் 22 பேருந்து தொடர்ந்து ஓடும்போது அதிக அளவில் வசூல் கிடைத்தது. எனவே மேற்குறித்த கிராம மக்கள் பயன்பெறும் வகையிலே அதிக வசூல் தரக்கூடிய தடம் எண் 22-ல் மாற்றுப் பேருந்தினை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல அந்தக் கோரிக்கை வழித்தடத்தில் 20-9-2001 முதல் 29-4-2002 முடிய ஏறத்தாழ 7 மாத காலத்திற்குத் தொடர்ந்து வேண்டிய அளவிற்கு அந்தப் பேருந்து வசதி செய்யப்பட்டது. ஆனால் அந்த வழித்தடத்தில் 7 மாத காலமாகத் தொடர்ந்து இயக்கினாலும்கூட போதிய அளவிற்கு வருவாய் இல்லாமல் மிகக் குறைந்த அளவிலேயே வருவாய் இருந்ததன் காரணமாக, அது தற்போது நிறுத்தப்பட்டது. மற்றொரு காரணம், கடப்போகத்தி கிராம மக்கள் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கும் திருநெல்வேலி-தென்காசி பிரதான சாலைக்கும், சடையப்பபுரம் பொதுமக்கள் ஒரு கிலோமீட்டர் தூரத்திலுள்ள மேலப்பாவூருக்கும் சென்று பேருந்து வசதியைப் பெற்று வருகிறார்கள். அந்தக் கிராமத்திற்குப் பக்கத்திலே ஒரு கிலோமீட்டர் தூரத்திலே போதுமான பேருந்து வசதி இருப்பதன் காரணமாக அந்த வழித்தடத்தில் புதிய பேருந்துகளை இயக்குகின்ற குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, திருமதி தமிழ்மொழி ராஜதத்தன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**14—**

### கிரானைட் தொழிற்சாலை

***23957—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் கிடைக்கும் கறுப்புக் கல்லை ஏற்றுமதி செய்யும்பொருட்டு கிரானைட் தொழிற்சாலை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேல்மலையனூர் தொகுதியில் கிடைக்கும் கறுப்புக் கல்லை ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். செஞ்சி வட்டத்திலுள்ள மேல்மலையனூர், செஞ்சி ஆகிய இரண்டு தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளிலே கறுப்புக் கல் நிறைந்த மலைப்பகுதிகள் அதிகமாகக் கிடக்கின்றன. தங்கத்திற்கு ஈடான இந்தக் கல்லைப் பயன்படுத்தி கிரானைட் தொழிற்சாலை அமைத்தால் அரசுக்கு அதிகமான வருமானம் கிடைப்பதோடு மட்டுமல்லாது, என் தொகுதிக்குட்பட்ட மக்களுக்கு மறைமுகமாகவும், நேர்முகமாகவும் 500 பேர்களுக்கு மேல் வேலைவாய்ப்பும் அளிக்கின்ற வாய்ப்பு உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள், விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கின்ற என்னுடைய தொகுதி மக்களின் நலன் கருதி மீண்டும் பரிசீலனை செய்து இந்த கிரானைட் தொழிற்சாலையை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாடு கனிம நிறுவனம் சென்னை மணலியிலும் மற்றும் தருமபுரி மாவட்டம், மாதேப்பள்ளியிலும், ஆக இரண்டு கிரானைட் ஏற்றுமதித் தொழிற்சாலைகளை இயக்கி வருகின்றது. இத்தொழிற்சாலைகளில் ஏற்கெனவே பலவகை கிரானைட் கற்கள் மெருகேற்றப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. தற்பொழுது சீனா, தென் ஆப்பிரிக்கா மற்றும் பிரேசில் போன்ற நாடுகளில் அதிக அளவில் கிரானைட் கற்கள் மற்றும் கிரானைட் பொருட்கள் மிகக் குறைந்த விலையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆதலால் உலக அளவில் இந்திய கிரானைட் கற்கள், மெருகூட்டிய கிரானைட் ஸ்லாப்புகள் விற்பனையில் கடும் போட்டி காணப்படுகின்றது. மேலும் தற்பொழுதுள்ள இரு தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் கிரானைட் ஓடுகள் மற்றும் ஸ்லாப்புகளுக்குப் போதிய சந்தை வாய்ப்பு இல்லையென்பதால் இத்தருணத்தில் சுமார் 15 கோடி ரூபாய் முதலீடு செய்து புதிய மெருகூட்டும் தொழிற்சாலை அமைத்தால் இலாபகரமாக இருக்காது. இந்நிலையில் புதிதாக மேல்மலையனூர் தொகுதியில் கறுப்புக் கற்கள் ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ்.

[2003 நவம்பர் 3

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே மணல் குவாரிகளை அரசே ஏற்று நடத்துகின்ற வகையிலே ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டுவந்ததைப் போல கிரானைட் குவாரிகளையும் அரசே ஏற்று நடத்த முன்வருமா எனக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 15, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

15—

### குடிநீர் ஆதாரங்கள்

**•5336—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர் ஆதாரங்களை உருவாக்க அரசிடம் சிறப்புத் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரின் குடிநீர் வழங்கலை மேம்படுத்தும்பொருட்டு சென்னை நகருக்குக் குடிதண்ணீர் கொண்டு வரும், சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-1-ன் பணிகள் 720 கோடி ரூபாய் செலவில் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-2-ன்கீழ் 110 கோடி ரூபாய் செலவில் பாலாற்றின் குறுக்கே வயலூரில் தடுப்பணை கட்டி நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டரும் மற்றும் செங்கற்பட்டு கொளவாய் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டரும் நீர் கொண்டு வரும் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 நவம்பர் 3]

மேலும் சென்னை குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-3 உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் 7.5 கோடி ரூபாய் செலவில் மாதவரம், இரட்டை ஏரி, கொரட்டூர் மற்றும் அம்பத்தூர் ஏரிகளின் கொள்ளளவை அதிகரிக்க, தூர் வாரும் பணி மற்றும் கரைகளை உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. கொசத்தலையாற்றின் குறுக்கே, திருத்தண்டலம் அருகில் ஒரு தடுப்பணை கட்டுவதற்கும், மேலும் அந்த ஆற்றில் ஏற்கெனவே உள்ள வல்லூர் அணைக்கட்டைச் சீரமைத்து மதகுகள் பொருத்துவதற்குமான பணி 87.5 கோடி ரூபாய் செலவில் எடுத்துக்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 30 மில்லியன் லிட்டர் குடிநீர் கூடுதலாகக் கிடைக்கும். ஆரணியாறு, கொசத்தலையாறு படுகையில் நிலத்தடி நீர்வளம் அதிகபட்சம் எவ்வளவு இருக்கிறது என்பதற்கான ஆய்வு, உலக வங்கி நிதியுதவியுடன் தொடங்கப்பட்டு, முதல் கட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன. இதற்கான அறிக்கை பெறப்பட்டு, மேலும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடல் நீரிலிருந்து குடிநீர் பெறுவதற்காக நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர், 200 மில்லியன் லிட்டர், 300 மில்லியன் லிட்டர் வழங்கும் திறன்கொண்ட நிலையத்தை ஒப்பந்தக்காரர் தன் சொந்தச் செலவிலே வடிவமைத்து, கட்டுவித்து, இயக்கி, பராமரித்து, பிறகு சென்னை குடிநீர் வாரியத்திடம் ஒப்படைக்கும் பணி மேற்கொள்வதற்கான ஒப்பந்தங்கள் 14-11-2003 அன்று பெறப்பட உள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னைவாழ் மக்களின் குடிநீர்த் தேவையை நிரந்தரமாகவும் முழுமையாகவும் போக்குகின்ற வகையில் தொலைநோக்குப் பார்வையில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் ஆதாரங்களைப் பொறுத்தமட்டில் தமிழகம் முழுமைக்கான கேள்வியை நான் கேட்டிருந்தேன். இருந்தாலும், நான் சென்னை நகர் உறுப்பினர் என்ற காரணத்தினாலே, சென்னை நகரைக் குறிப்பிட்டு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். நிரந்தரமான தீர்வு என்று சொல்கின்றபோது, இதுவரையிலே நாம் எடுத்த முயற்சிகள் எல்லாம்

மழை நீரை நம்பியும், நிலத்தடி நீரை நம்பியும் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. இப்போது கடல் நீரை நிரந்தரமாகக் குடிநீராக ஆக்குகின்ற முயற்சிக்காக ஒப்பந்தங்கள் கோரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. உலகளாவிய அளவில் ஒப்பந்தங்களைக் கோருகின்றபொழுது, கொடுத்திருக்கின்ற கால அவகாசம் போதுமானது இல்லை என்ற ஒரு கோரிக்கை இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அப்படி அந்த ஒப்பந்தத்தை இன்னும் சரியான முறையிலே எடுத்துக்கொள்வதற்கு கால அவகாசம் கொடுக்கப்படுமா என்பது ஒரு கேள்வி. அடுத்ததாக, நிரந்தரமாக இதுவரையிலே ஒகேனக்கலிலே இருந்து நீர் கொண்டு வருவதற்கான முயற்சி எடுக்கப்படவில்லை. காவிரியினுடைய நுழைவாயிலாக ஒகேனக்கல் இருக்கின்றது. ஒகேனக்கல் எந்தக் காலத்திலும் வறட்சியில் உட்பட்டது இல்லையென்று சொல்லப்படுகின்றது. அப்படியானால் ஒகேனக்கலிலே இருந்து சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டுவருவதற்கான திட்டத்தை அரசு பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்திற்குக் கால அவகாசம் வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவையில் கேள்வி வைத்தார். ஏற்கெனவே கடந்த நான்கு மாத காலமாக அந்த ஒப்பந்தப்படிவங்கள் வரப்பெற்று, இரண்டாம் கட்டமாக தற்சமயம் அவர்கள் ஒப்பந்தப்படிவங்கள் தரவேண்டுமென்று, அரசின் மூலமாகக் கேட்டுக்கொள்ளப்பட்டது. இரண்டாம் கட்டமாகக் கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்றுவரையில் 10 ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்படிவங்கள் வழங்கியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே கால அவகாசம் நீட்டிப்புச் செய்வது இயலாது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இங்கே கேள்வி வைத்தார். உலக வங்கிக் கடன் பெற்று அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று, இந்த அரசு அதற்கான முயற்சிகளை முன்மொழிந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரைக் குடிநீராக்குகின்ற முயற்சி என்பது இந்தியாவிலேயே முதல் முறையாக எடுத்துக்கொள்ளப்படுகின்ற முயற்சி. இதிலே முதல்வர்





அவர்களும் சிரத்தை எடுத்திருக்கின்றார்கள் என்பதாகச் சொல்லப்படுகின்றது. அப்படியானால் மிக்க நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் ஒப்பந்தம் கொடுக்கின்ற அளவிற்கு முயற்சி சரியாக இருப்பதற்காகத்தான் கால அவகாசம் கொடுக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டேன். ஆகவே இன்னும் ஆழ்ந்த பரிசீலனையோடு அது செய்யப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-45*

•**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெரிய மாநகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகக் கடல் நீரை நன்னீராக்கும் ஒரு திட்டத்திற்காக ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும்போது, அதுவும் global tender உல்களாவிய ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும்போது ஆழ்ந்த சிந்தனை, பரிசிலனைக்குப் பிறகுதான் அரசு இத்தகைய ஒரு முடிவை மேற்கொள்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே ஒரு முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பெற்று, இரண்டு நிறுவனங்கள் தான் ஒப்பந்தப்புள்ளிகள் தந்திருந்தன. அந்த இரண்டிலும் சில நடைமுறைக் குறைகள் procedural lapses இருப்பதாகத் தெரிவித்து இரண்டையும் ஏற்க இயலாது என்று அதிகாரிகள் தெரிவித்ததால் அந்த டெண்டர் ரத்து செய்யப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகளை கோரப்பட்டு re-tender விடப்பட்டுள்ளது. இப்போது மாண்புமிகு அமைச்சர் தெரிவித்ததுபோல் ஏறக்குறைய 10 புகழ்பெற்ற நிறுவனங்கள் ஒப்பந்தப் படிவங்களை வாங்கியிருக்கின்றன. இன்னும் கால அவகாசம் நீட்டிக்க முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். கால அவகாசம் நீட்டிப்பதால் எந்த பிரத்தியேக நன்மையும் ஏற்படப் போவதாகத் தெரியவில்லை. இந்தக் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை எவ்வளவு விரைந்து செயல்படுத்த முடியுமோ அவ்வளவு நல்லது என்று இந்த அரசு கருதுகிறது. ஏற்கெனவே கடந்த 3 ஆண்டுகளாக சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளின் catchment area-வில் போதுமான மழை இல்லாததால் இங்கே சென்னை மாநகரில் சென்னை வாசிகளுக்குக் குடிநீர் வழங்க இந்த அரசு எவ்வளவு அல்லல்பட்டிருக்கிறது என்பதெல்லாம் பலமுறை இந்த அவையிலேயே எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது; மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரியும். ஆகவேதான் நாம் எதிர்பார்த்தபடி மழை பெய்யாததாலும், நாம் அண்டை மாநிலத்திலிருந்து எதிர்பார்த்த குடிநீரும் வராததாலும் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை எவ்வளவு விரைந்து செயல்படுத்த

முடியுமோ அவ்வளவு விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. இருப்பினும் Tender Act-ன்படி என்னென்ன விதிமுறைகள் கூறப்பட்டுள்ளனவோ அவற்றின்படிதான் இந்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *16*, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**16—**

### சமூக நலக் கூடங்கள்

***36944—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 60-க்கும் மேற்பட்ட சமூக நலக் கூடங்களை மக்கள் தங்கள் இல்ல நிகழ்ச்சிகளுக்கு அதிக அளவு பயன்படுத்தாத நிலையை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 47 சமூக நலக் கூடங்கள் சென்னை. மாநகரில் உள்ளன. இவற்றில் 38 சமூக நலக் கூடங்கள் மக்களால் அவர்களது இல்ல நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 9 சமூக நலக் கூடங்கள், குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் சமூக நலக் கூடங்களின் வழியோரங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளது, கழிப்பிடங்களுக்கு அருகில் உள்ளது, கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது போன்ற காரணங்களால் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளன. மேற்படி பயன்பாட்டில் இல்லாத 9 சமூக நலக் கூடங்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசால் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே 38 சமூக நலக் கூடங்கள் பயன்பாட்டிலும், மீதம் 9 சமூக நலக் கூடங்கள் பயன்படுத்த





முடியாத சூழ்நிலையிலும் இருப்பதாகவும், இந்த 9 சமூக நலக் கூடங்களை வேறு பயன்பாட்டிற்குப் பயன்படுத்துவதற்குண்டான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் பதிலுரை அளித்திருக்கிறார்கள். அப்படிப் பயன்படாமல் இருக்கின்ற இந்த 9 சமூக நலக் கூடங்களை வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்துகின்ற முயற்சிகளை மேற்கொள்கின்றபோது—மாநகரத்திலேயே பல்வேறு நகர நல்வாழ்வு மையங்கள் போதிய இடவசதி இல்லாமலும், வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகிற நிலை இருக்கிறது, ஆகவே பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படுகின்ற இந்த 9 சமூக நலக் கூடங்களை மருத்துவமனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பயன்படுத்துகிற முயற்சியினை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவமனைக்கு இந்தச் சமூக நலக் கூடங்களைப் பயன்படுத்த முடியுமா என்ற கேள்வியை வைத்தார். மாநகராட்சியினுடைய தீர்மானத்தின் அடிப்படையில் இந்த அரசு இதற்கு முயற்சி மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரத்திலே பெருகி வருகின்ற மக்கள் தொகை சூழ்நிலையால், திருமணங்கள் நிச்சயிக்கப்பட்டும் பல திருமணங்களுக்கு திருமண மண்டபங்கள் கிடைக்காத காரணத்தினால், திருமணங்கள்கூட தள்ளி நடைபெறுகின்ற ஒரு சூழ்நிலை நிலவுகின்றது. மாநகராட்சியின் சார்பிலே இயங்குகின்ற 38 சமுதாய நலக் கூடங்களில் ஒரு சில சுபநாட்களில்தான் திருமணங்கள் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுகின்ற சூழ்நிலையும், மீதமுள்ள நாட்களில் அந்தச் சமூக நலக் கூடங்களை மக்கள் அதிகமாகப் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையும் நிலவுகின்றது. இதற்குக் காரணம், அந்த மாநகராட்சி சமுதாயக் கூடத்திலே திருமணத்திற்குத் தேவைப்படுகின்ற மேசை, நாற்காலிகள், திருமணத்திற்குத் தேவைப்படுகின்ற தண்ணீர் மற்றும் திருமணத்திற்குத் தேவைப்படுகின்ற சமையல் பாத்திரங்கள் போன்றவற்றை வெளியிலேயிலிருந்து வாடகைக்கு எடுத்து வந்து அந்தத் திருமணக் கூடத்திலே வைத்துத் திருமணங்களை

நடத்த வேண்டிய ஒரு சூழ்நிலை நிலவுவதால், சாதாரண ஏழை, நடுத்தர மக்கள் தங்களுக்கு இருக்கின்ற பணிச் சுமையின் காரணமாக இப்படிப்பட்ட பணிகளைக் கவனிக்க முடியாத சூழ்நிலையால் மாநகராட்சி திருமண சமூகக் கூடங்களுக்குக் குறைவான வாடகை இருந்தும்கூட பயன்படுத்தப்பட முடியாத ஒரு சூழ்நிலை நிலவுவதால் மாநகராட்சியே இந்தத் திருமணக் கூடங்களில் சமையல் பாத்திரங்கள், மேசை, நாற்காலிகள் போன்ற பொருட்களை வாங்கி சராசரி வாடகை நிர்ணயம் செய்து பயன்பாட்டிற்கு விடுமேயானால் அதிக அளவிலே ஏழை எளிய மக்கள் இந்த மண்டபங்களைப் பயன்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, இதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ள முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகர ஏழை எளிய மக்களுடைய நலன் கருதி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். அந்த அடிப்படையிலே பொருட்களுக்கும் பாதுகாப்பு வேண்டும்; மாநகராட்சியில் வாங்கப்படுகின்ற நாற்காலி, மேசை சாமான்கள் போன்ற பொருட்களுக்கும் பாதுகாப்பு வேண்டும். அந்தப் பாதுகாப்பினுடைய நிலை கருதி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசால் மாநகராட்சிக்கு அந்த ஆலோசனை வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் இயங்கி வருகின்ற, மாநகராட்சியின் சார்பிலே நடத்தப்பட்டு வருகின்ற சமூகநலக் கூடங்கள் இன்றைக்கு பராமரிப்பின்றி கவனிக்கப்படாத ஒரு சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, அமைச்சர் அவர்கள் இங்கே பதிலுரையிலே சொல்கிறபோது 9 சமூகக் கூடங்கள் பராமரிப்பு இல்லாமல் பழுதடைந்து இருக்கின்றன என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன எண்ணிக்கையைவிடக் கூடுதலான எண்ணிக்கையில் சென்னை நகரில் இன்றைக்கு மாநகராட்சி சமூகக் கூடங்கள் பழுதடைந்து இருக்கின்றன. நான் ஏன் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், சென்னை நகரத்தில் இருக்கிற ஏழை எளிய மக்கள், தனியார் கல்யாண மண்டபங்களிலோ அல்லது தனியார் இடங்களிலோ இன்றைக்கு அதிக அளவிலே





பணத்தைச் செலுத்தி வாடகைக்கு இடம் எடுக்க முடியாத சூழ்நிலையில் மாநகராட்சி சமூகக் கூடங்களைத்தான் நம்பி அவர்கள் அந்தப் பணிக்கு இடத்தைப் பார்த்து எடுத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு நிதியிலிருந்து—அதாவது என்னுடைய தியாகராயர் நகர் தொகுதியிலேயிருந்து ஆற்காடு சாலையிலே இருக்கின்ற ஒரு சமூக நலக் கூடம் பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது என்று சொல்லி, நிதியினை—ஒதுக்கி ஆறு மாத காலமாகியும் இன்னும் அந்தச் சமூகக் கூடம் கட்டப்படாமலேயே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநகராட்சிக்கு—அதனுடைய பணிகளை வேகப்படுத்த, இனிமேலாவது மாநகராட்சி—சென்னை நகர மக்களின் ஏக்கத்தை தீர்த்து வைக்கின்ற அளவில் செயல்படுமாறு அமைச்சர் அறிவுறுத்துவாரா என்று நான் உங்கள் மூலம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சென்னை மாநகராட்சி மக்களுடைய ஏக்கங்களை முழுமையாகத் தீர்க்க வேண்டுமென்று பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளது. அதன் அடிப்படையில்தான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் ஒரு திருமணக் கூடம், அவருடைய சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கியும் இதுவரை அந்தத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டார். அந்தத் திட்டப் பணிகளை உடனடியாக நிறைவேற்றித் தருவதற்கு இந்த அரசு ஆவன செய்யும். அதோடுமட்டுமல்லாமல், தற்சமயம் புள்ளிவிவரப்படி 9 சமுதாய நலக் கூடங்கள்தான் பழுது பார்க்கப்பட வேண்டும். பல்வேறு ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டிய பணிகள் உள்ளன. அதையும் உடனடியாக இந்த ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன் கருதி இந்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முழுமையாக அந்தத் திட்டங்களை நிறைவேற்றித் தந்து, அந்த 9 சமுதாய நலக் கூடங்களும் ஏழை மக்களுக்காக, திருமணத்திற்கு வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9 சமூக நலக் கூடங்கள் பழுதடைந்த நிலையிலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அறிந்த வரையிலே, என்னுடைய தொகுதியிலே ஜட்காபுரத்திலே ஒரு திருமண மண்டபமும், எழும்பூர் தொகுதியிலே அவதானம் பாப்பையர் தெருவிலே ஒரு திருமண மண்டபமும் கட்டப்பட்டு, திறக்கப்பட்டு 3 வருஷங்கள் ஆகியும்—3 வருஷங்களுக்கு மேலாகியும் இருக்கிறது.—இந்த 3 வருஷ காலத்திலே ஒரு நிகழ்ச்சிகூட இந்த 2 திருமண மண்டபங்களிலே நடத்தப்பெறவில்லை. அப்படியானால், மக்களுக்குத் தேவையில்லாத இடங்களில் கட்டியதற்கு யார் பொறுப்பு? இனி அவற்றைப் பயன்படுத்துவதற்கு என்ன முயற்சியை அரசாங்கம் எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-க்குப் பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மாவினுடைய அரசு பொறுப்புக்கு வந்த பிறகு எந்தத் திருமணக் கூடமும் தேவையற்ற இடங்களில், மக்களுக்குப் பயன்படாத இடங்களில் கட்டப்படவில்லை என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இது மூன்று ஆண்டுகளுக்கு முன் கட்டிய திருமண மண்டபம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், குறிப்பாக இதற்குத் தனியாக எந்த ஆண்டில் கட்டப்பட்ட திருமண மண்டபம் என்ற வினாவுடன் கூடிய-அதற்குண்டான வினா-தனி வினா போட்டால் அதற்குண்டான முழுமையான, விவரமான பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, திருமதி சசிகலா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

17—

### கால்நடை மருத்துவமனை

*18441—**திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடவூர் ஊராட்சி ஒன்றியம், பாலவிடுதி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவங்க அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள், தற்போது இதில் செயற்குறிப்பு ஏதுமில்லை என்று தெரிவித்தார்கள். கடவூர் ஒன்றியம், பாலவிடுதி ஊராட்சியில் அதிகமான கால்நடைகள் உள்ளதால் அவர்கள் மருத்துவமனைக்கு 13 கிலோ மீட்டர் தூரம் செல்ல இருப்பதால், வருகின்ற நிதியாண்டிலாவது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று துவக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கடவூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும், ஒரு கால்நடை மருந்தகமும் 3 கால்நடைக் கிளை நிலையங்களும் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சகோதரி அவர்கள் குறிப்பிட்டுள்ள கடவூர் ஊராட்சி ஒன்றியம், பாலவிடுதி ஊராட்சிக்கு அருகில் கால்நடை மருந்தகங்களோ, கால்நடைக் கிளை நிலையங்களோ இல்லை. அப்பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 13,000 ஆகும். வரும் நிதியாண்டில் புதிய கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்படும்போது பாலவிடுதி ஊராட்சிப் பகுதியில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தப்படுவது பற்றி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**18—**

### அரசு இரப்பர் கழகம்

**•12124—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் கழகத்தில் வனத் துறை அதிகாரிகள் அயற்பணி முறையில் பணியாற்றி வருகிறார்களா?

(ஆ) எத்தனைபேர் பணியாற்றுகிறார்கள்?

(இ) இவர்களுக்கு அதிகப்படியாக ஏற்படும் செலவு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசு இரப்பர் கழகத்தில் 17 வனத் துறை அதிகாரிகள் அயற்பணி முறையில் பணியாற்றி வருகிறார்கள்.

(இ) இவர்களுக்குச் சம்பளம் வழங்கும் வகையில் அரசு இரப்பர் கழகத்திற்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.37,68,000/- செலவாகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் கழகத்தில் 4 ஆயிரம் ரூபாயிலிருந்து 40 ஆயிரம் ரூபாய் வரை சம்பளம் வாங்குகிற 50-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தகவல். இப்படி இந்த ஊழியர்கள் சம்பளம் காரணமாக 50 லட்சத்திற்கு அதிகமான செலவு அதிகப்படியாக அரசு இரப்பர் கார்ப்பரேஷனுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும், இந்த நிதிநிலை மோசம் என்ற காரணத்தைக் காட்டி பஞ்சப்படி உயர்வு கூடத் தொழிலாளிகளுக்குக் கொடுப்பதற்கு நிருவாகம் முடியாமல் இருக்கிற நேரத்திலே, அதேபோன்று தொழிலாளிகளுக்கு மற்றும் பல சலுகைகளைக் கொடுக்க முடியாமலும் இருக்கின்ற நேரத்திலே, இந்த அயற்பணி முறையிலே பணியாற்றி வருகிறவர்களை அங்கிருந்து வாபஸ் பெற்று இந்த நிதியில் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளைக் கொடுப்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



நண்பகல் 12-00

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு ரப்பர் கழகத்தில் பணிபுரியும் 106 அயற்பணியாளர்களால் ஏற்படும் சம்பளச் செலவினம் ஆண்டுக்கு ரூபாய் 1.18 கோடி ஆகும். மேலும் அயற்பணியில் இருப்பவர்கள் அனைவரையும் தாய்த் துறைக்கு அனுப்பிவிட்டு கழகப் பணியாளர்களை வைத்துக்கொண்டு முழுமையாகப் பார்க்க இயலாது; கழகப் பணி பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. இருப்பினும் இதுகுறித்து ஆய்வு செய்து அயற்பணியில் உபரியாக உள்ளவர்களைத் தெரிவு செய்து தாய்த் துறைக்குத் திரும்ப அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 20,000-க்கு மேலே, ரூபாய் 40,000-க்குள்ளே சம்பளம் வாங்குகிற மூன்று பெரிய I.F.S. அதிகாரிகள் அங்கே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இப்படி மூன்று பெரிய சம்பளம் வாங்குகிற அதிகாரிகள் தேவைதானா என்று அரசு பரிசீலித்து, ஒரு மேனேஜிங் டைரக்டர், ஒரு சேர்மன் என்ற முறையிலே வைத்திருப்பதற்குப் பதிலாக, ஒரு அதிகாரியை இந்த நிர்வாகப் பொறுப்பிலே வைத்துக்கொண்டு அரசு செலவினத்தைக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்து, தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பஞ்சப்படி உயர்வு, அதேபோன்று மற்ற உரிமைகளைக் கொடுப்பதற்கு அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

**19—**

### மாநகராட்சியிடம் ஒப்படைத்தல்

**•3400—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

(அ) சேலம்-2-வது தொகுதி, அய்யம்பெருமாள்பட்டி கிராமத்தில் வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ள வீடுகள் சேலம் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஒப்படைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வீட்டு வசதி வாரியத்தால் பணிகள் நிறைவுற்ற பகுதிகளை உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பதற்கான அரசாணை, வீட்டு வசதித் துறையின் மூலம், ஆணை எண் 289-ல் பிறப்பித்து, அந்த நிறைவுற்ற பணிகளை உள்ளாட்சி அமைப்புகளே எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்து உள்ளாட்சியினுடைய உயர் அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அப்படி நடைபெறாத பகுதிகளில் உடனடியாக அந்தப் பணிகளை உள்ளாட்சி அமைப்புகளே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகள், வீட்டு வசதி வாரியத் திட்டங்களைத் தொடர் பராமரிப்புக்கு எடுத்துக்கொள்ளுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகத் துறைச் செயலாளர்களுக்கு தலைமைச் செயலாளர் மூலமாக—உடனடியாக எடுக்க வேண்டும் என்று—அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் தண்டனூர் பகுதிக்கு உட்பட்ட மிட்டாயனபுரம் என்ற கிராமத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பாகக் கட்டப்பட்ட வீடுகள் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு மேலாக முழுமையான பராமரிப்பு இல்லாமல் இருந்து வருகின்றன. அந்தப் பகுதிக்குச் சென்று மக்களைச் சந்திக்கின்றபோது அவர்கள் போதிய குடிநீர் வசதி இல்லையென்றும், அந்தப் பகுதிக்குப் போதிய விளக்கு வசதி



2003 நவம்பர் 3]

இல்லையென்றும் மனுக்களைக் கொடுத்திருக்கின்றார்கள். அவற்றைச் சம்பந்தப்பட்ட சேலம் மாநகராட்சி அதிகாரியிடம் கூறும்போது, அந்த இடத்தை இன்னும் மாநகராட்சியிடம் ஒப்படைக்காத காரணத்தாலே அந்தப் பகுதியிலே, அந்தப் பணிகளை மாநகராட்சி செய்ய இயலாது என்று கூறி வருகிறார்கள். அதேபோல் சம்பந்தப்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அதிகாரிகளிடம் கேட்கும்போது, வீட்டு வசதி வாரியத்திலே போதிய நிதி இல்லாத காரணத்தாலே எங்களாலும் செய்ய இயலாது என்று அவர்களும் மறுத்து வருகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற நூற்றுக்கணக்கான மக்கள் இரு தரப்பினராலும் புறக்கணிக்கப்பட்டு, போதிய பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமலும், போதிய சாலை வசதி இல்லாமலும் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். ஆகவே, அரசு உடனடியாக இதில் தலையிட்டு, ஒன்று, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாகவோ அல்லது சேலம் மாநகராட்சி மூலமாகவோ அந்தப் பகுதியிலே இருக்கின்ற அரசு அதிகாரிகள் குடியிருப்புக்கும் மற்றும் தனியார் குடியிருப்புகளுக்கும் உடனடியாக அந்த வசதிகளைச் செய்து தருவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் *12-05*

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிறைவுற்ற பணிகளை உள்ளாட்சி அமைப்புகள் எடுப்பதிலே பல்வேறு தயக்கங்களைக் காட்டிவந்த காரணத்தாலே அரசாணை பிறப்பிக்கப்பட்டு தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்படி உடனடியாக அந்தப் பணிகளை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி எடுக்கப்படாத பகுதிகளிலே வெகு விரைவிலே எடுக்கப்பட்டு பராமரிக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைமுறையிலே அதிலே பல சிக்கல்கள் இருப்பதாகக் கூறுகிறார்கள். உதாரணத்திற்கு, அதிலே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இடத்தைக்

[2003 நவம்பர் 3

கையகப்படுத்தும்போது, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் குடியிருப்பவர்களுக்கு என்று தனியாக விளையாட்டு மைதானம், அதேபோல கல்விக்கூடம் கட்டுவதற்கான இடங்கள் என்று பிளானிலே காட்டியிருக்கிறார்கள். ஆனால் இன்று மாநகராட்சிக்கு ஒப்படைக்கும்போது அந்த இடங்கள், அந்த வரைபடத்தில் இல்லாமல் இருக்கிறது, இடங்கள் குறைவாக இருக்கின்றன அதிலே தவறு இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆகவே போதிய இடங்கள் இல்லாததால் மாநகராட்சி எடுப்பதற்கு, அந்த இடங்களைக் கையகப்படுத்துவதற்குத் தயங்குகிறது. ஆகவே அந்த இரு தரப்பினருக்கும் இருக்கின்ற பிரச்சினைகளை அரசு ஆய்வு செய்து அதிலே இருக்கின்ற சிரமங்களில் உடனடியாக அரசு தலையிட்டு அந்தப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை, எப்படி இருந்தாலும் அந்தப் பகுதிகளில் இருக்கின்ற மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும். கிட்டத்தட்ட 10, 12 ஆண்டுகளாகக் குடிநீர்கூட இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அதை முறையாக வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகளை நிவர்த்தி செய்வதற்காகத்தான் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையின்படி ஆணைகள் வெளியிடப்பட்டு, குறிப்பிட்ட இந்த, இந்தப் பகுதிகளில் எல்லாம் இதுபோன்ற பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதால் உடனடியாக அவற்றை நிவர்த்தி செய்வதற்காக வீட்டு வசதி வாரியத்தினுடைய உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி மன்றத்தினுடைய அலுவலர்களை வைத்து உடனடியாகச் செய்வதற்காக ஆணையிட்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அது நிறைவு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று தெரிவித்தார்கள். பல ஆண்டு காலமாக இந்த வீட்டு வசதி வாரிய பகுதிகளில் இருக்கக்கூடிய பகுதிகள் அடிப்படை வசதிகள்கூட இன்றி உள்ளாட்சி அமைப்புகளாலும்



2003 நவம்பர் 3]

எடுத்துக்கொள்ள முடியாமல், அதை வீட்டு வசதி வாரியமும் கவனிக்க முடியாமல் தொடர் பிரச்சினையாகவே இருந்து வந்திருக்கிறது என்பதுதான் தெரியவருகிறது. திண்டுக்கல்லில் இருக்கக்கூடிய வீட்டு வசதி வாரியத்திலும் இதுபோன்ற நிலைதான். சமீபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உட்பட தலையிட்டு இப்போது அந்த இடங்களை அளவு செய்ய உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பணிகள் ஏனோ தாமதமாகவே இருக்கிறது. ஆகவே, இந்தத் துறையினுடைய அதிகாரிகள், அலுவலர்கள் மூலமாக உடனடியாக நகராட்சி அமைப்புகள், மாநகராட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டும். அங்கே இருக்கக்கூடிய வீட்டு வசதி வாரியத்தினுடைய சிறு சிறு அலுவலகங்கள் வேலையும் செய்யாமல், அரசினுடைய நிதியில் அந்த அலுவலகங்கள் எந்தவிதமான பணியும் இன்றி இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, இதுபோன்ற அலுவலகங்களில் ஒப்படைப்பதைக் காட்டிலும் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பதே மிகச் சிறந்தது. இந்தப் பணியை 6 மாத காலத்திற்குள், கால நிர்ணயம் செய்து முடிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு இதுபோன்ற குறைகள் வரப்பெற்றவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வகையிலே அந்தப் பணிகள் வெகு சீக்கிரத்திலே நிறைவு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கின்ற குறைகளை 6 மாத காலத்திற்குள் நிறைவு செய்கின்ற பணியைச் செய்வோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

[2003 நவம்பர் 3

20—

### வீட்டு வசதி வாரிய விடுகள்

**•8424—திரு. மீ. அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தாம்பரம் தொகுதியில், வீட்டு வசதித் துறை மூலம் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?*

*(ஆ) அவற்றில் விற்பனை ஆகாதவை எத்தனை?*

*(இ) அதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) கட்டப்பட்ட வீடுகள் 1070, விற்பனை ஆகாத வீடுகள் 93.*

(இ) விற்கப்படாத வீடுகளை விற்பதற்காக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாரியத்தில் இருக்கின்ற நிர்வாகிகள் மூலம் வெகு சீக்கிரத்தில் விற்பனை செய்ய வேண்டும் என்ற வகையிலே திட்டங்களைத் தீட்டி உடனடியாக விற்பனை செய்வதற்காக—விற்பனை ஏன் செய்யப்படவில்லை, எதற்காக செய்யப்படவில்லை, ஏன் விற்கவில்லை என்ற காரணங்களை அறிந்து, அதையெல்லாம் அடையாளம் கண்டு, வீட்டு வசதி வாரியத்தின் மூலம், உயர் கமிட்டி மூலம் அதை விற்பதற்காக—என்ன விலை அமைக்கலாம், எப்படி விற்கலாம் என்ற நடவடிக்கையை இப்போது எடுத்து வருகிறார்கள். அந்த வகையிலே வெகு சீக்கிரத்திலே அந்த வீடுகளை எல்லாம் விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

*பிற்பகல் 12-10*

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்த 93 வீடுகள் எந்தப் பகுதியிலே விற்கப்படாமல் இருக்கின்றன? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல என்ன காரணம் என்பதையெல்லாம் அரசு கண்டறிந்து இருக்கிறதா, அந்த விலைகளிலே ஆண்டிற்கு ஏற்றாற்போல் வட்டி விகிதம் சேர்க்கப்பட்டு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதா, அல்லது தள்ளுபடி செய்து அந்த வீடுகளை விற்பதற்காக அரசு ஏதாவது ஆலோசனை வைத்திருக்கிறதா என்பதனைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2003 நவம்பர் 3]

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உரிய உத்தரவிட்டு இருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே தேவையில்லாத வீடுகளை, கடந்த கால ஆட்சியாளர்கள் கட்டிய காரணத்தினால், அந்த வீடுகள் எல்லாம் இன்றைக்கு விற்கப்படாத நிலை. அதுபோல, வீட்டு வசதி வாரியத்திற்காக வாங்கப்பட்ட நிலங்கள் எல்லாம் தேவையில்லாத இடங்களில் வாங்கப்பட்ட காரணத்தினால், விலையை அதிகமாகக் கொடுத்து வாங்கப்பட்ட காரணத்தினால், அதை விற்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்காக துறையின் மூலம் தனியாக அதற்கு ஒரு ஆய்வு செய்து, அதை உடனடியாக ஏறத்தாழ இந்த ஒரு மாத காலத்திற்குள் அதை விற்பனை செய்வதற்காக உயர் கமிட்டிக்கு அனுப்புவதற்காக இப்போது திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. தாம்பரத்தில் எந்தப் பகுதியில் இருக்கிறது என்ற கேள்விக்கு உங்களுக்கு சரியான பதிலைச் சொல்லுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது வீடு கட்டுவதற்கு அனைத்து வங்கிகளும் வட்டியை மிகவும் குறைத்து 7½ சதவிகிதம் வரை அவர்கள் நிதி கொடுக்கின்ற காரணத்தினாலே பலரும் தாங்களே கடன் பட்டு வீடு கட்டிக்கொண்டு இருக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் வீட்டு வசதித் துறை மூலமாகக் கட்டியிருக்கின்ற வீடுகளுக்கு ஆன interest accumulation என்பதை cost-ல் சேர்ப்பதனாலே அவர்களுக்கு இப்பொழுது கட்டுகின்ற வீட்டைவிட வாங்குகின்ற வீட்டிற்கான விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால்தான் விற்பனையாகாமல் இருக்கின்றன. இதை அரசாங்கம் கையிலே வைத்துக் கொண்டு தொடர்ந்து அந்த interest accumulation

இருந்துகொண்டிருந்தால் விற்க முடியாது என்கின்ற காரணத்தினால் யதார்த்த நிலையை உணர்ந்து வட்டியை அந்த cost-லே சேர்ப்பதைக் கழித்து, தள்ளுபடி செய்துவிட்டு, அதை மக்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பல்வேறு குறைகளெல்லாம் இன்றைக்கு அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, எதன் காரணமாக விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கின்றது, எதை வைத்துக் குறைக்கலாம் என்ற வகையிலே, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் சொன்னது மாதிரி ஏற்பட்டிருக்கின்ற குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்வதற்காகத்தான் இன்றைக்கு உயர்மட்ட கமிட்டி மூலம் இந்தக் குறைகளை நிவர்த்தி செய்யவேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அடிப்படையிலே எந்த வகையிலே குறைக்க முடியுமோ, அதையெல்லாம் குறைத்து விற்பதற்கு ஆணையிட்டிருக்கின்றார்கள். அது நிறைவு செய்யப்படும் என்பதை சொல்லிக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ. அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டிய உயர் மட்டக் குழுவிலே யார் யார் இடம்பெற்று இருக்கிறார்கள்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தப் பகுதியிலே விற்காமல் இருக்கிறது என்று சொல்கிறேன் என்று சொன்னார்கள். சொல்லாமலே அமர்ந்து விட்டார்களே! அதையும் சொல்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கமிட்டியிலே யார் யார் இருக்கின்றார்கள் என்று கேட்டார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில், அந்தத் துறையினுடைய அமைச்சர், அந்தத் துறையினுடைய செயலர், அந்தத் துறையினுடைய எம்.டி.,





தலைமைச் செயலாளர், அதுபோல நிதித் துறைச் செயலாளர் இவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி அமைத்து இருக்கின்றார்கள். அதன் மூலம் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம் தாம்பரத்திலே 93 வீடுகள் இன்றைக்குக்கூட குடியேறாமல் நிலுவையில் இருக்கின்றன. சென்னை நகரத்தை ஒட்டி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்ட வீடுகள் இன்னும் காலியாக இருப்பதாக அறிகிறேன். அதுகுறித்து நான் வீட்டு வசதி வாரியத்தினுடைய மேலாளரைப் பார்க்கின்றபோது, தொகை மிகவும் அதிகமாக இருக்கிறது என்பது மட்டுமல்ல; மாதத்திலே கட்டக்கூடிய தொகையும் 8000/- ரூபாய், 9000/- ரூபாய் என்று இருந்தால், நிச்சயமாக நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்களாலே அந்த வீடுகளுக்குக் குடி போகவும் முடியாது, அந்தக் கடனையும் திரும்பச் செலுத்துவதற்கு அவர்களுக்கு சிரமமாக இருக்கும் என்ற காரணத்தினால் மாதா மாதம் கட்டுகின்ற தொகையினைக் குறைத்துக் கொடுப்பதற்கு வீட்டு வசதி வாரியத்தினுடைய அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பதையும், எவ்வளவு வீடுகள் காலியாக எந்தெந்தப் பகுதியிலே இருக்கின்றன என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதியிலே எவ்வளவு வீடுகள் காலியாக இருக்கின்றன என்ற கேள்வியைக் கேட்டார்கள். அதற்கு தனிக் கேள்வி கேட்டால் பதில் தரலாம். கடந்த கால ஆட்சியிலே தேவையில்லாத இடங்களில் வாங்கப்பட்ட இடங்கள், தேவையில்லாத இடங்களிலே கட்டப்பட்ட வீடுகளெல்லாம் இன்றைக்கு ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகள் எல்லாம் தரக்குறைவாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த நிலைகளையெல்லாம் போக்குகின்ற வகையிலேதான் (குறுக்கீடு) இன்றைக்கு அந்த வீடுகள், குறிப்பாக பல்வேறு இடங்களிலே குடிபோக முடியாத ஒரு சூழ்நிலையெல்லாம் இருக்கின்றது. அதையெல்லாம் சரி செய்வதற்காக மாண்புமிகு தமிழக

முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். அந்தப் பணிகள் வெகு சீக்கிரத்திலே நிறைவு பெறும். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12-15*

**திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது; அமைச்சர் அவர்கள் அதைச் சொல்கிறார்கள். அதற்கு ஒன்றும் இல்லை. ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் தரமற்றவை; தேவையில்லாத இடத்திலே வாங்கப்பட்டது என்று சொன்னார்கள். அதை அவர் நிரூபித்தால் அதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால், ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது, உயர்மட்டக் கமிட்டி என்றால் அந்தக் கமிட்டியிலே யார் யார் இருக்கிறார்கள் என்று உறுப்பினர் கேட்டார். அந்தக் கமிட்டியிலே இன்னார், இன்னார் உறுப்பினர் என்று திட்டவட்டமாக அதைத் தெரிவிக்க முடியாத அமைச்சர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் அதைப்பற்றிச் சொன்னாரே?

**திரு. துரைமுருகன்:** அதிலே ஊழல் மட்டும் நடந்திருக்கிறது என்று சொல்கிறாரே, இதற்குத்தானா வேண்டியது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, அதையும் சொன்னார்கள் அவர்கள். மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர், செயலாளர் என்று அவர்களை எல்லாம் சொன்னார்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் துறையினுடைய அமைச்சர் அந்தக் கமிட்டி உறுப்பினர்கள் யார் யார் என்று சொல்லவில்லை என்று சொன்னார். இது, மாண்புமிகு உறுப்பினர் ஏதோ ஒரு சிந்தனையோடு தூங்கிக் கொண்டிருந்தாரோ (மேசையைத் தட்டும் ஒலி) என்று எண்ணக்கூடிய விதத்திலே அமைந்திருக்கிறது என்பதைத் தெரியப்படுத்துகிறேன்.





## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*
## (பட்டியல்கள் 1 முதல் 6 வரை)
## முதல் பட்டியல்

1—

### வடிகால் அமைத்தல்

**வினா எண் 5163—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், அக்கரை கோட்டகம் ஊராட்சி, கீழகோட்டகம் சந்தனநல்லூர் வடிகால் தூர்வாரவும், மழைக்காலங்களில் பயிர் நீரில் மூழ்குவதைத் தடுக்க புதிய வடிகால் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், சந்தனநல்லூர் வடிகால் 2,900 மீட்டர் தூரத்திற்கு தூர்வாரும் பணிகள் அனுமதிக்கப்பட்டு, தலைப்பு முதல் 1,200 மீட்டர் தூரம் வரை தூர்வாரப்பட்டுள்ளது. மீதி வேலைகள் தண்ணீர் வந்துவிட்டதால் செய்ய இயலவில்லை. வரும் ஆண்டில் கிடைக்கும் நிதி நிலையைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் மீதி வேலைகள் செய்து முடித்தால் அக்கரை கோட்டகம், கீழக்கோட்டகம் பகுதிகள் தண்ணீரால் மூழ்காது. இதற்கு புதிய வடிகால் அமைக்கத் தேவையில்லை.

2—

### ஆற்றின் கரையைப் பலப்படுத்துதல்

**வினா எண் 5165—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2003 நவம்பர் 3

*(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், அக்கரை கோட்டகம் ஊராட்சி, பள்ளியூர் பொன்னுகொண்டான் ஆற்றின் கரையை பலப்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், அக்கரை கோட்டகம் கீழ்ப்பகுதியில் செல்லும் பள்ளியூர் வடிகால் இடதுகரை சென்ற ஆண்டு 2001-2002 தூர்வாரும் பணிகளின்கீழ் 1,300 மீட்டர் தூரத்திற்கு கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. பொன்னுகொண்டான் கரைகள் நல்ல நிலையில் உள்ளது. சந்தனநல்லூர் வடிகாலில் மீதமுள்ள வேலைகளை தற்போது எடுத்துச் செய்ய வாய்ப்பு இல்லை. வரும் ஆண்டுகளில் நிதி நிலைமையைப் பொறுத்து எடுத்துக்கொள்வதற்கு கருதப்படும்.*

**3—**

**வருவாய்க் கிராமங்களை இணைத்தல்**

**வினா எண் 5824—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு கீவளூர் வட்டத்தோடு இணைக்கப்பட்ட வருவாய் கிராமங்களை மீண்டும் நாகப்பட்டினம் வட்டத்தோடு இணைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழாது.*



2003 நவம்பர் 3]

**4—**

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 8560—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*எடப்பாடி தொகுதி, பக்கநாடு கிராமம், 3/6-4/6 தார்ச்சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள பக்கநாடு கிராமச் சாலை கி.மீ. 0/0-4/6 என்ற மாவட்ட இதர சாலைகள் இனத்தைச் சார்ந்த சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0-3/6 வரையிலான பகுதி நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 4/0 முதல் 4/6 வரையிலான பகுதி 2000-2001 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. கி.மீ. 3/6-4/0 வரையிலான பழுதடைந்துள்ள பகுதியினை ஓரடுக்கு கப்பி பரத்தி தார்ச்சாலையாக அமைக்க தோராயமாக ரூ. 1.75 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணியினை எதிர்வரும் நிதியாண்டில் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்படும் பராமரிப்பு நிதியில் எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதுவரை இச்சாலைப் பகுதியில் ஏற்படும் குழிப் பள்ளங்களுக்கு அவ்வப்பொழுது ஒட்டுப்பணிகள் செய்து சாலையில் வாகனப் போக்குவரத்து தடையின்றி நடைபெற பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**5—**

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 14002—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் மேட்டூர்—எடப்பாடி சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையைப் பழுது பார்க்கும் பணி 2003-2004-ஆம் நிதியாண்டில் பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அதுவரை இச்சாலையில் ஏற்பட்டுள்ள சிறு பழுதுகள் தார் நொடிகள் போட்டு வாகனப் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்படும்.

**6—**

### சாலை செப்பனிடல்

**வினா எண் 14007—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி—கன்னடங்கம் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை இந்நிதியாண்டில் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இச்சாலையானது நெடுஞ்சாலைத் துறையால் மாவட்ட இதர சாலையாக பராமரிக்கப்பட்டு வரும் கன்னடங்கம் கிராமச் சாலை கி.மீ. 0/0-6/4 ஆகும். இச்சாலையில் கி.மீ. 2/0-3/0 வரையிலான பகுதி 2000-2001-ஆம் ஆண்டில் தார்தளம் புதுப்பிக்கப்பட்டு நல்லநிலையில் உள்ளது. கி.மீ. 5/0-6/4 வரையிலான தார்தளம் புதுப்பிக்கப்பட்டு, பணி தற்போது செயலாக்கத்தில் உள்ளது. இப்பணி விரைவில் முடிவடையும். கி.மீ. 3/6-5/0 வரையிலான பகுதி நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள கி.மீ. 0/0-2/0 மற்றும் 3/0-3/6 வரையிலான பழுதடைந்த பகுதிகளை



தார்தளம் புதுப்பிக்க தோராயமாக ரூ.7.50 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணியை எதிர்வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப மேற்கொண்டு சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**7—**

### வாய்க்காலை நீட்டித்தல்

**வினா எண் 15097—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், பூமாண்டன்வலசு அருகில் கவலைகாட்டுவலசிலிருந்து ரங்கய்யன்வலசு வரை பி.ஏ.பி. வாய்க்காலை நீட்டிப்பு செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் பாசன விரிவாக்கம் செய்ய போதிய அளவு தண்ணீர் இல்லாததாலும், மேலும் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் புதிய ஆயக்கட்டை சேர்ப்பதில்லை என்று அரசு முடிவெடுத்துள்ளதாலும், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் வாய்க்காலை நீட்டிக்கும் திட்டம் இல்லை.

**8—**

### அரசுக்கு சொந்தமான இடங்கள்

**வினா எண் 16192—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்குலே & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

(அ) சென்னை, பூக்கடை காவல் நிலையம் இருக்கின்ற இடம் புதுவை மாநில அரசுக்குச் சொந்தமானதா?

(ஆ) இதுபோல புதுவை மாநில அரசுக்குச் சொந்தமான இடங்கள் தமிழ்நாட்டில் எங்கெங்கு உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சென்னை மாவட்டம், மாம்பலம்-கிண்டி வட்டம், விருகம்பாக்கம் கிராமம், பிளாக் எண் 41, புல எண் 19 இல் 4 கிரவுண்ட் 227 சதுர அடி நிலம் மட்டும் சென்னை வீட்டு வசதி வாரியத்தால் பாண்டிச்சேரி அரசுக்கு ஒப்படைக்கப்பட்டு விருந்தினர் இல்லம் அமைந்துள்ளது.

**9—**

### ஏரி மதகு சீர் செய்தல்

**வினா எண் 17962—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, அனுக்காவூர் ஏரி மதகு உடைந்துள்ளதை சீர் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் மழை காலத்திற்குப் பிறகு பணி மேற்கொள்ளப்படும்.



2003 நவம்பர் 3]

**10—**

### புதிய கல்வெட்டு அமைத்தல்

**வினா எண் 18585—திருமதி கு. கலாவதி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம்-கொல்லிமலைக்கு செல்லும் வழியில், காரவள்ளிக்கு அருகில் கல்வெட்டு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் புதிய கல்வெட்டு அமைத்துத் தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சேந்தமங்கலம்-கொல்லிமலைக்கு செல்லும் வழியில் காரவள்ளிக்கு அருகில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள சிறுபாலம், 2000-ஆம் ஆண்டில் பெய்த கனமழையினால் ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்தால் மிகவும் பழுதடைந்துள்ளது. இச்சிறுபாலத்தை புதிதாக கட்டுவதற்கு தோராயமாக ரூ. 35 இலட்சம் தேவைப்படும். இப்பணியை மைய சாலை நிதித் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்வதற்கான கருத்துருக்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றதும் இப்பணியை தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**11—**

### கால்வாய் தூர் எடுத்தல்

**வினா எண் 18834—திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, மார்க்கண்டேய நதியில் இருந்து குப்பாச்சிபாறை, குந்தபள்ளி, பீமாண்டப்பள்ளி நீர்வழி கால்வாய் தூர் எடுத்து பாசனத்திற்கு தண்ணீர் விட ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பீமாண்டப்பள்ளி அணைக்கட்டிலிருந்து பீமாண்டப்பள்ளி கிராமம் வரை 3.5 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் அமைக்கப்பட்டு பாசனத்திற்கு தண்ணீர் செல்லும் வகையில் கால்வாய் உள்ளது. கால்வாயில் சீராக முழு கொள்ளளவில் தண்ணீர் செல்லும் வகையில் தூர் வாரும் திட்டத்தின்கீழ் போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறின், இப்பணியை முன்னுரிமை அடிப்படையில் சேர்த்து கால்வாயில் உள்ள தூரினை அகற்றி சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**12—**

**சாலை பழுதுபார்த்தல்**

**வினா எண் 23686—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலைக் கோட்டத்தைச் சேர்ந்த தளி குமரலிங்கம் முதல் குருவப்பநாய்க்கனூர் வரை செல்லும் சாலை கி.மீ. 0/0 முதல் கி.மீ. 2/0 வரை மிகப் பழுதடைந்துள்ளதால் அதை மேம்பாடு செய்ய அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையினை மேம்படுத்த தோராயமாக ரூ. 10 இலட்சங்கள் தேவைப்படும். தற்போது அரசின் நிதிப் பற்றாக்குறையினால் நடப்பு ஆண்டில் (2002-2003) இப்பணி மேற்கொள்ளப்படவில்லை. தற்போது இச்சாலையில் ஏற்படும் நொடிகளுக்கு அவ்வப்போது தார் நறுக்குகள் போடப்பட்டு கனரக வாகனப் போக்குவரத்துக்கு உகந்த முறையில் சாலை வைக்கப்பட்டு உள்ளது.





**13—**

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 23711—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதியைச் சேர்ந்த ஜிலேபிநாய்க்கன்பாளையம் முதல் பாலாறு செல்லும் சாலை கி.மீ. 3/6 முதல் 5/2 வரை மிகப் பழுதடைந்துள்ளதால் அதனைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள சாலையின் பெயர் ஜிலேபிநாய்க்கன்பாளையம்-பாலாறு சாலை கி.மீ. 0/0-5/2 என்பதாகும். இதில் சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள கி.மீ. 3/6-5/2 வரை பழுது நீக்கம் செய்து, சாலைத் தளத்தை மேம்படுத்த ரூ.9 இலட்சங்கள் தோராயமாகத் தேவைப்படும். அரசின் நிதிப் பற்றாக்குறையினால் இப்பணியை மேற்கொள்ளவில்லை. எனினும் தார் தளத்தில் அவ்வப்போது ஏற்படும் நொடிகள் உடனுக்குடன் தார் நறுக்குகள் போடப்பட்டு, சீர் செய்யப்பட்டு கனரக வாகனப் போக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

**14—**

**சாலை பழுதுபார்த்தல்**

**வினா எண் 23718—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை, நெடுஞ்சாலைத் துறை உட்கோட்டத்தைச் சேர்ந்த ஆண்டிப்பட்டி கிராமச் சாலை கி.மீ. 1/0 முதல் 3/0 மற்றும் கி.மீ. 4/0 முதல் 5/4 வரை மிகப் பழுதடைந்துள்ளதால் செப்பனிட அரசு முன்வருமா?

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளில் கி.மீ. 0/0-1/0 மற்றும் கி.மீ. 3/0-4/0 ஆகிய பகுதிகள் ஓரளவு நல்ல நிலையில் உள்ளன. மீதியுள்ள பகுதிகளான கி.மீ. 1/0-3/0 மற்றும் 4/0-5/4 ஆகிய பகுதிகளில் மேம்பாடு செய்ய தோராயமாக ரூ. 12 இலட்சம் தேவைப்படும். இச்சாலையை நடப்பாண்டில் மேம்பாடு செய்ய போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனினும், இச்சாலையில் அவ்வப்போது ஏற்படும் குழிப்பள்ளங்களுக்கு தார் நொடிகள் போட்டு சாலை போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**15—**

**கள்ளச் சாராய வழக்குகள்**

**வினா எண் 23899—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் சரக காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சென்ற 2001 ஆம் ஆண்டு எத்தனை கள்ளச் சாராய வழக்குகள் பதிவு செய்யப்பட்டன?

(ஆ) அவற்றில் எத்தனை வழக்குகளில் நீதிமன்றம் மூலம் தண்டனை வழங்கப்பட்டது என்பதை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் சரக காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 2001 ஆம் ஆண்டு 391 கள்ளச் சாராய வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில், 209 வழக்குகளில் நீதிமன்றம் மூலம் தண்டனை வழங்கப்பட்டுள்ளன.



2003 நவம்பர் 3]

**16—**

**கள்ளச் சாராய வழக்குகள்**

**வினா எண் 23900—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், நல்லூர்-கந்தம்பாளையம் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சென்ற 2001-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கள்ளச் சாராய வழக்குகள் எத்தனை?

(ஆ) அவற்றில் நீதிமன்றம் மூலம் தண்டனை வழங்கப்பட்ட வழக்குகள் எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், நல்லூர்-கந்தம்பாளையம் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 2001 ஆம் ஆண்டு 195 கள்ளச் சாராய வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில், நீதிமன்றம் மூலம் தண்டனை வழங்கப்பட்டுள்ள வழக்குகள் 174 ஆகும்.

**17—**

**கள்ளச் சாராய வழக்குகள்**

**வினா எண் 23901—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையம் சரக காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சென்ற 2001 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட கள்ளச் சாராய வழக்குகள் எத்தனை?

(ஆ) அவற்றில் நீதிமன்றம் மூலம் தண்டனை வழங்கப்பட்ட வழக்குகள் எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையம் சரக காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 2001 ஆம் ஆண்டு 221 கள்ளச் சாராய வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

(ஆ) அவற்றில், 220 வழக்குகளில் நீதிமன்றம் மூலம் தண்டனை வழங்கப்பட்டுள்ளன.

**18—**

**மதுவகைகள் கடத்தி விற்பனை**

**வினா எண் 24399—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் மதுக்கடைகளில் கலப்படத்துடனும், கேரளாவில் இருந்து கடத்தி வந்து விற்பதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டப்பேரவைத் தொகுதியில் மொத்தம் 18 மதுபானக் கடைகள் இயங்கி வருகின்றன. மேற்படி கடைகளில் கேரளாவில் இருந்து கடத்தி வரப்பட்ட மதுபானங்களை விற்பனை செய்வதாக தகவல் ஏதும் இல்லை. மாவட்ட மற்றும் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் துறையினர் தொடர்ந்து வாகனத் தணிக்கை செய்து வருகிறார்கள். மேலும் வனத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் வணிகவரித் துறை அலுவலர்களும், சோதனைச் சாவடிகள் நிறுவி வாகனங்களை சோதனை செய்து வருகிறார்கள். எனினும், கேரள மாநிலத்திலிருந்து வால்பாறை



2003 நவம்பர் 3]

சட்டப்பேரவைத் தொகுதி பகுதிகளுக்கு கள்ளத்தனமாக மதுவகைகளைக் கடத்தி வந்து விற்பனை செய்ததாக வழக்குகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

**19—**

**சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்**

**வினா எண் 24707—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியத்தில் எந்தெந்த சாலைகளை இ.ஏ.எஸ். திட்டத்தில் சேர்த்து பணி மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியத்தில் 21.60 கி.மீ. நீளமுள்ள மாநில சாலைகளை மேம்பாடு செய்ய ரூ.205.20 இலட்சங்களுக்கு மைய சுடுகலவை கொண்டு மேம்பாடு செய்யும் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 32.35 கி.மீ. நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளை ரூ.297.35 இலட்சங்கள் செலவில் மேம்பாடு செய்ய, நபார்டு 10-வது ஐந்தாண்டு திட்டத்தில் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் 2 கி.மீ. நீளமுள்ள மாவட்ட இதர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் பகுதி-3-ல், ரூ.7.00 இலட்சங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**20—**

**பெண் கைதிகளுக்கு சிறைச்சாலை**

**வினா எண் 24780—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

தமிழகத்தில் பெண் கைதிகளுக்கு என்று எத்தனை இடங்களில் மத்திய சிறைச்சாலை உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் பெண் சிறைவாசிகளுக்காக வேலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் பெண்கள் தனிச் சிறைகள் உள்ளன. மேலும் சமீபத்தில் வெளியிடப்பட்ட அரசு ஆணையில் கீழ்க்காணும் 10 தனிக் கிளைச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் முழுவதும் பெண் பணியாளர்களைக் கொண்டு நிர்வகிக்கப்படும் வகையில் பெண்கள் தனிக் கிளைச் சிறைகள்/கிளைச் சிறையாக மாற்றம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது—

1. தனிக் கிளைச் சிறை, சேலம்
2. தனிக் கிளைச் சிறை, கொக்கிரகுளம்
3. கிளைச் சிறை, விழுப்புரம்
4. கிளைச் சிறை, கிருஷ்ணகிரி
5. கிளைச் சிறை, திருவாரூர்
6. கிளைச் சிறை, நிலக்கோட்டை
7. கிளைச் சிறை, பரமக்குடி
8. கிளைச் சிறை, தக்கலை
9. கிளைச் சிறை, சாத்தூர்
10. கிளைச் சிறை, குன்னூர்.

**21—**

**கள்ளச் சாராய ஊறல்**

**வினா எண் 24881—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

(அ) சேலம் மாவட்டத்தில் 2001 ஆம் ஆண்டில் டிசம்பர் வரை எவ்வளவு மதிப்புள்ள கள்ளச் சாராய ஊறல்கள் அழிக்கப்பட்டன?

(ஆ) இது தொடர்பாக எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 2001 ஆம் ஆண்டில் டிசம்பர் வரை 25,75,450 லிட்டர் சாராய ஊறல் கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்டது. இதன் மதிப்பு ரூ.2,57,54,500 ஆகும். கள்ளச் சாராய ஊறல் வைத்திருந்தமைக்காக 844 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**22—**

**கள்ளச் சாராய வழக்குகள்**

**வினா எண் 24886—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் பிடிக்கப்பட்ட கள்ளச் சாராய வழக்குகள் எத்தனை?

(ஆ) அதில் முடிவு பெற்ற வழக்குகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 2000 ஆம் ஆண்டில் 27,196 கள்ளச் சாராய வழக்குகளும், 2001 ஆம் ஆண்டில் 26,326 கள்ளச் சாராய வழக்குகளும் பிடிக்கப்பட்டன. அவற்றில் 2000 ஆம் ஆண்டில் 25,399 வழக்குகளும், 2001 ஆம் ஆண்டில் 20,813 வழக்குகளும் முடிக்கப்பட்டுள்ளன.

[2003 நவம்பர் 3

**23—**

### கள்ளச் சாராயத்தின் மதிப்பு

**வினா எண் 24889—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாமக்கல் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காகவும் விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?*

*(ஆ) அழிக்கப்பட்ட கள்ளச் சாராயத்தின் மதிப்பு எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தில் 2001 ஆம் ஆண்டில் கள்ளச் சாராயம் காய்ச்சிய குற்றத்திற்காக 296 பேர்களும் விற்பனை செய்த குற்றத்திற்காக 3,546 பேர்களும், 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் வரையில் கள்ளச் சாராயம் காய்ச்சிய குற்றத்திற்காக 228 பேர்களும், விற்பனை செய்த குற்றத்திற்காக 1,795 பேர்களும் கைது செய்யப்பட்டார்கள். 2001 ஆம் ஆண்டு 1,36,528 லிட்டர் கள்ளச் சாராயம் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இதன் மதிப்பு ரூ.40,95,840/- ஆகும். 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரையில் 1,13,874 லிட்டர் கள்ளச் சாராயம் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இதன் மதிப்பு ரூ.34,16,220/- ஆகும்.*

**24—**

### தார்சாலை செப்பனிடல்

**வினா எண் 24989—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எடப்பாடி தொகுதி, மாணிக்கப்பட்டி—அவடத்தூர் சாலை 0/0-1/0 தார்சாலை மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?*



003 நவம்பர் 3]

*(ஆ) ஆம் எனில், அச்சாலையினை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) இப்பணி அரசின் ஒப்புதல் பெற்றுள்ள எந்தவொரு திட்டத்திலும் தற்போது இடம் பெறவில்லை.*

**25—**

### பத்திரக் கட்டணம்

**வினா எண் 25054—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2001-2002 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் பத்திரக் கட்டணம் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*2001-2002 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலம் அரசுக்கு மொத்தமாக ரூபாய் 1264.20 கோடி வருவாய் கிடைத்துள்ளது.*

[2003 நவம்பர் 3

26—

**சாராய மதிப்பு**

**வினா எண் 25119—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சங்ககிரி சரகத்தில் 2001-2002 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அழிக்கப்பட்ட சாராயத்தின் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் சங்ககிரி சரகத்தில் 2001 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் ஆண்கள் 303 பேர்களும், பெண்கள் 104 பேர்களும் கைது செய்யப்பட்டனர். 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை, ஆண்கள் 109 பேர்களும், பெண்கள் 34 பேர்களும் கைது செய்யப்பட்டனர். சேலம் மாவட்டத்தில் சங்ககிரி சரகத்தில் 2001 ஆம் ஆண்டில் அழிக்கப்பட்ட சாராயத்தின் மதிப்பு ரூ.6,90,200/- ஆகும். 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை அழிக்கப்பட்ட சாராயத்தின் மதிப்பு ரூ.65,175/- ஆகும்.

27—

**நஷ்டஈடு**

**வினா எண் 25320—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலங்களை தனியாரிடம் இருந்து அரசு கையகப்படுத்தும்போது தற்போதைய மார்க்கெட் மதிப்பை நஷ்டஈடாக வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

நில உடைமைதாரர்களுக்கு
(அ) மற்றும் (ஆ) நிலம் கையகப்படுத்தப்பட்ட நில எடுப்புச் சட்டப் தற்பொழுது சந்தை மதிப்பு வழங்கப்பட்டு வருகிறது. நில எடுப்புச் சட்டப் பிரிவு 4(1)-ன்கீழ் அறிவிக்கை வெளியிட்ட நாளில் நிலவிய சந்தை மதிப்பு வழங்கப்படுகிறது. சந்தை மதிப்பு நிலத்தின் அருகில் ஒத்த நிலங்கள் என்ன விலைக்கு விற்கப்பட்டுள்ளனவோ அந்த விவரங்கள் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டு, நில மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது. அத்துடன் நில உடைமைதாரர் ஆட்சேபணையின் பேரில் இழப்பீட்டுத் தொகை பெறுவாராயின் அவர் கீழ்மை நீதிமன்றத்தில் கூடுதல் இழப்பீட்டுத் தொகை பெற சட்டப் பிரிவு 18 வழிவகை செய்கிறது. மேலும் நில எடுப்புச் சட்டத்தின் 23(1ஏ) பிரிவுபடி நில உடைமைதாரர் 12 சதவீதம் கூடுதல் சந்தை மதிப்புத்தொகை மற்றும் 30 சதவீதம் ஆறுதல் தொகை பெற வழிவகை செய்கிறது. மேலும் சட்டப் பிரிவு 28 மற்றும் 34 ஆகியவை முறையே 9 சதவீதம் மற்றும் 15 சதவீதம் கூடுதல் வட்டித் தொகை பெற வழிகோலுகிறது.

28—

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 25441—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலம் ஒன்றியம், உத்திரகிடி காவல் ஊராட்சிக்குட்பட்ட தாண்டாகவுண்டனூர் கிராமத்தில் தீர்வை ஏற்பட்ட தரிசு அரசு புறம்போக்கு நிலத்தில் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக விவசாயம் செய்துவரும் நிலமற்ற ஏழை மிகவும் பின்தங்கிய சமுதாயத்தைச் சார்ந்த விவசாயிகளுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட உத்திரகிடி காவல் கிராமம் புல எண்46/1இல் கரடு (தீர்வை ஏற்பட்ட தரிசு) மொத்த பரப்பு 118.18.5 எக்டேர் ஆகும். இதில் விவசாயம் செய்து வரும் நபர்களுக்கு அடமானம் வழங்கக் கூடாது என உத்திரகிடி காவல் ஊராட்சி ஆட்சேபணை செய்து தீர்மானம் இயற்றியுள்ளதாலும், மேற்படி புலம் தமிழ்நாடு அரசு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளதாலும், இப்புலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு பட்டா வழங்க இயலாது.

**29—**

**நிவாரணத் தொகை**

**வினா எண் 25533—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இயற்கைச் சீற்றத்தினால் கால்நடைகள் உயிரிழப்பு ஏற்பட்டால் அதற்கான நிவாரணத் தொகை வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். இயற்கைச் சீற்றத்தினால் கால்நடைகள் உயிரிழப்பு ஏற்பட்டால், அவைகளின் உரிமையாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு அரசால் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.



2003 நவம்பர் 3]

| | | |
|---|---|---|
| (i) பசு, எருது, எருமை ஒன்றிற்கு | - | ரூ.5,000/- |
| (ii) பசுக்கன்று அல்லது எருமைக்கன்று ஒன்றிற்கு | - | ரூ.3,000/- |
| (iii) வெள்ளாடு அல்லது செம்மறி ஆடு ஒன்றிற்கு | - | ரூ.1,000/- |

**30—**

**ஆய்வாளர் குடியிருப்புப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 27836—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரம் வருவாய் ஆய்வாளர் குடியிருப்பைப் பழுதுபார்க்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பழுதடைந்துள்ள அலுவலக கட்டடங்கள்/குடியிருப்புகளைப் பழுதுபார்க்க ஆண்டுதோறும் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எட்டயபுரம் வருவாய் ஆய்வாளர் குடியிருப்புப் பழுதுபார்க்கும் பணி முன்னுரிமை அடிப்படையில் நிதிநிலையைப் பொறுத்து மேற்கொள்ளப்படும்.

**31—**

**கால்வாய் சீரமைப்புப் பணி**

**வினா எண் 27877—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் காண்டூர் கால்வாய் சீர் அமைப்பு பணி வலதுபுறம் செய்யப்படவில்லை என்பதால் கால்வாய்க்கு பாதிப்பு ஏற்படும் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உலக வங்கி நிதியுதவியுடன் காண்டூர் கால்வாயின் வலது பக்கத்தில் மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட பகுதிகளில் மட்டுமே மேம்பாட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பகுதிகளில் செய்யப்படாததால் கால்வாய்க்கு ஆபத்து ஏதுமில்லை. இருப்பினும் காண்டூர் கால்வாயில் இருபக்கங்களிலும் விடுபட்டுப்போன பகுதிகளுக்கும் மேம்பாட்டுப் பணிகளுக்குரிய திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு WRCP-II Phase திட்டத்தின்கீழ் நிதி உதவி பெறும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**32—**

## கிராமச் சாலைகள் திட்டம்

**வினா எண் 27917—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில், பஞ்சாத்தி-ஆமாஞ்சி சாலையை (வழி விடத்திரான் வயல்) கிராமச் சாலைகள் திட்டத்தில் எடுத்துச் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மேற்கண்ட வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் இடையே விடத்திரான் வயல் என்ற கிராமம் உள்ளது. இதன் மக்கட்தொகை 1991 ஆம் ஆண்டின்படி 200 பேர், இதில் ஆதிதிராவிடர் 130 பேர் உள்ளனர்.



தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 18582.

ஆதிதிராவிடர் மக்கட்தொகை 50 விழுக்காட்டிற்கு மேல் இருப்பதால் இந்த சாலையை சிறப்பு உறுப்புத் திட்டத்தில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் பரிந்துரை செய்யப்படும்.

**33—**

## கிராமச் சாலைகள் திட்டம்

**வினா எண் 27919—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் கிராமச் சாலைகள் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் செய்யானம்-கீழ்யேம்பல் சாலையில் மீதமுள்ள 2 கி.மீ. சாலையை இவ்வாண்டு எடுத்துச் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில், சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள சாலையின் பெயர் கீழ்யேம்பல் சாலை கி.மீ.0/0-11/0 என்பதாகும். இந்த சாலையானது முத்துப்பேட்டை-மீமிசல் சாலை கி.மீ. 71/2-ல் பிரிந்து செய்யானம்-கீழ்யேம்பல், கிளாரவயல், வெட்டிவயல், சாத்தியடி வழியாக சென்று அம்பலவானேந்தல், மஞ்சக்குடி சாலை கி.மீ.3/10-ல் இணைகிறது. இச்சாலை மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இதில் கி.மீ. 0/0 -1/0 வரை ஊராட்சி ஒன்றிய தார் சாலையாகும். இதில் கி.மீ.1/0-4/4 வரை கிராமச் சாலை திட்டத்தில் நபார்டு திட்டம்-8-ல் எடுத்து தார்சாலையாக மேம்பாடு செய்யப்பட்டது. பின்பு கி.மீ.4/4-8/0 வரை நபார்டு-12 ஆம் திட்டத்தில் தார் சாலையாக மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றது. மீதமுள்ள 8/0-11/0 வரையுள்ள பகுதியை செய்யப்பட்டு வருகின்றது. மீதமுள்ள 8/0-11/0 வரையுள்ள பகுதியை மேம்பாடு செய்ய ரூ.25 இலட்சங்கள் தேவைப்படும். இதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

[2003 நவம்பர் 3

34—

### கிராமச் சாலைகள் திட்டம்

**வினா எண் 27921—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அறந்தாங்கி தொகுதியில், இரும்பநாடு சாலையில் கிராமச் சாலைகள் திட்டத்தினால் செய்யப்பட்டது போக மீதமுள்ள 2 கிமீட்டர் சாலையை இவ்வாண்டு எடுத்துச் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கண்ட சாலை கி.மீ. 3/0-5/2 வரை மேம்பாடு செய்ய கிராமச் சாலைகள் திட்டத்தில் பரிந்துரை செய்யப்படும்.*

35—

### சாலை பழுதுபார்த்தல்

**வினா எண் 28038—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எடப்பாடி தொகுதி, சித்தூர்-ஆடையூர் வழி ஒருவாப்பட்டி சாலை 0/0-5/0 கி.மீ. பழுதடைந்து உள்ளது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதை பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சித்தூர்-ஆடையூர் சாலை (வழி) ஒருவாப்பட்டி சாலையில் கி.மீ.1/6-3/4 வரையில் உள்ள பகுதிகள் நல்ல நிலையில் உள்ளன. மீதியுள்ள கி.மீ.0/0-1/6 மற்றும் 3/4-5/0 வரையிலான பழுதடைந்துள்ள பகுதிகளை சீரமைக்க உத்தேச மதிப்பீடாக ரூ.16/- இலட்சம்*



2003 நவம்பர் 3]

*தேவைப்படுகிறது. இச்சாலைப் பணிகள் அரசின் எந்த திட்டத்திலும் தற்போது இடம் பெறவில்லை.*

36—

### வாய்க்கால் தூர் வாருதல்

**வினா எண் 28188—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சி, கெள்வேரி கோட்டம் வாய்க்காலை தூர் வாரி சுத்தப்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) தூர் வாரும் திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*

37—

### வாய்க்கால் தூர் வாரி ஆழப்படுத்துதல்

**வினா எண் 28202—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், நல்லூர் ஊராட்சி நரிமுடுக்கு வாய்க்கால் தூர் வாரி ஆழப்படுத்திடும் திட்டம் அரசுக்கு உண்டா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதும் பரிசிலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**38—**

**வாய்க்கால் தூர் வாரும் திட்டம்**

**வினா எண் 28203—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம் 65நீ எடக்குடி வடபாதி ஊராட்சி கீழ்வெளி சாந்தப்புத்தூர், அட்டக்குளம் தோட்டமாலையும் ஆகிய ஊர்கள் வழியாக வருகின்ற முடவன் பாசன வாய்க்கால் தூர் வாரும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம் 65நீ எடக்குடி வடபாதி ஊராட்சி கீழ்வெளி சாந்தப்புத்தூர், அட்டக்குளம் தோட்டமாலையம் ஆகிய ஊர்கள் வழியாக வருகின்ற முடவன் பாசன வாய்க்கால் திட்டம் கடந்த 2000-2001 ஆம் ஆண்டு தூர் வாரும் திட்டத்தின்கீழ் ரூ.8.00 இலட்சம் செலவில் தூர் வாரி முடிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பணியினை 2005-2006 ஆம் ஆண்டிற்கு பிறகே எடுத்துக்கொள்ள இயலும்.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



2003 நவம்பர் 3]

**39—**

**தூர் வாரும் திட்டம்**

**வினா எண் 28204—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், 65நீ எடக்குடி வடபாதி சோமனான்டி வாய்க்காலை தூர் வாரும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், 65நீ எடக்குடி வடபாதி சோமனான்டி வாய்க்கால் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விவசாய தொழிலாளர்களுக்கான நிவாரண திட்டத்தின்கீழ் பி, சி மற்றும் டி வாய்க்கால்கள் தூர் வாரும் திட்டத்தில் ரூ.28,000/- செலவில் தூர் வாரப்பட்டுள்ளது.

**40—**

**தூர் வாருதல்**

**வினா எண் 28414—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பண்ணங்குடி ஊராட்சி, பெரிய குப்பம் சின்ன வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்குண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி பண்ணங்குடி ஊராட்சி பெரிய குப்பம் சின்ன வாய்க்கால் தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் ஏதுமில்லை.

**41—**

### கள்ளச் சாராய விற்பனை

**வினா எண் 28821—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் காவல் நிலைய எல்லைக்குள் கள்ளச் சாராயம் மற்றும் ஆர்.எஸ். விற்றவர்கள் மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் என்ன?

(ஆ) ஒலக்கூர் காவல் நிலையம் அருகிலேயே கள்ளச் சாராய வியாபாரிகள் பஸ்களில் கள்ளச் சாராயம் ஏற்றிச் செல்வது அரசுக்குத் தெரியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட இடங்களில் கள்ளச் சாராயம் விற்றவர்களில் 2001 ஆம் ஆண்டில் 239 பேர்கள் மீதும், 2002 ஆம் ஆண்டில் 289 பேர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2001-ல் 2,208 லிட்டர் சாராயமும், 2002-ல் 2,798 லிட்டர் சாராயமும் கைப்பற்றி அழிக்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டில் எரிசாராயம் விற்றவர்களில் 3 பேர் மீதும், 2002 ஆம் ஆண்டில் 5 பேர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒலக்கூர் காவல் நிலையம் அருகில் 2001 ஆம் ஆண்டு 36 நாட்களும், 2002 ஆம் ஆண்டு 30 நாட்களும் தொடர்ந்து வாகன தணிக்கை செய்ததில் வழக்குகள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, ஒலக்கூர் காவல் நிலையம்



2003 நவம்பர் 3]

அருகிலேயே கள்ளச் சாராய வியாபாரிகள் பஸ்களில் கள்ளச் சாராயம் ஏற்றிச் செல்வதாகக் கூறப்படுவது உண்மைக்கு மாறானது.

**42—**

### தூர் வாரும் பணி

**வினா எண் 29050—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, (கொள்ளிடம் ஒன்றியம்) வேட்டங்குடி ஊராட்சி, குமாரக்கோட்டம், தில்லை வாய்க்கால் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, (கொள்ளிடம் ஒன்றியம்) வேட்டங்குடி ஊராட்சி, குமாரக்கோட்டம், தில்லை வாய்க்காலை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 2002-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விவசாய தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தூர் வாரி பணி முடிக்கப்பட்டுள்ளது.

**43—**

### தூர் வாரும் திட்டம்

**வினா எண் 29057—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சி, வழுதலைகுடி, வடக்கு வெளி வாய்க்காலை தூர் வாரி சுத்தப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 நவம்பர் 3

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை நாள் 3—2—2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாய தொழிலாளர்களின் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க சீர்காழி தொகுதி, வழுதலைகுடி, வடக்கு வெளி வாய்க்காலும் பிசிடி, வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

44—

## தூர் வாரும் திட்டம்

**வினா எண் 29059—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லை வாசல் ஊராட்சி, எல்லை கோவில் பாசன வாய்க்காலை தூர் வாரி சுத்தப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லை வாசல் ஊராட்சி, எல்லை கோவில் பாசன வாய்க்கால் தற்போது நடைபெற்று வரும் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் கால்வாய்கள் மற்றும் குளங்களை விவசாயத் தொழிலாளர்கள் மூலம் நியமன அடிப்படையில் பிசிடி, வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு செய்து முடிக்கப்படும்.



2003 நவம்பர் 3]

45—

## தூர் வாரும் திட்டம்

**வினா எண் 29065—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, (சீர்காழி ஒன்றியம்) பெருமங்களம் ஊராட்சியில் உள்ள ஓடை வாய்க்கால்கள் அறபோறை வாய்க்கால், தெற்கு வாய்க்கால் ஆகியவைகளை தூர் வாரிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, (சீர்காழி ஒன்றியம்) பெருமங்களம் ஊராட்சியில் உள்ள ஓடை வாய்க்கால்கள் அறபோறை வாய்க்கால், தெற்கு வாய்க்கால் ஆகியவை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 2002 மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விவசாய தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தூர் வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

46—

## தூர் வாரும் திட்டம்

**வினா எண் 29066—திரு. நா. சந்திரமோகன்**—மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியில் உள்ள கீழவெளி, சாந்தப்புத்தூர், அட்டக்குளம் போன்ற கிராமங்களின் பாசன வாய்க்காலான காய்க்காச்சி வாய்க்காலை (சுமார் 5 கி.மீ. தூரம்) தூர் வாரி சீர்செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியில் உள்ள கீழவெளி சாந்தப்புத்தூர், அட்டக்குளம் போன்ற கிராமங்களின் பாசன வாய்க்காலான காய்க்காச்சி வாய்க்கால் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 2002-ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விவசாய தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பணி செய்து முடிக்கப்பட்டது.

**47—**

## கோயில்களில் வருமானம்

**வினா எண் 20288—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் உள்ள கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த கோயில்களின் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது? அதனால் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்கண்ட திருக்கோயில்களின் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டு அதன் மூலம் பெறப்படும் வருமானங்கள் விவரம் வருமாறு:—





| | திருக்கோயிலின் பெயர் | ஆண்டு குத்தகை வருமானம் |
|---|---|---|
| 1. | அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம் | ரூ.11,588/- |
| 2. | அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரி அம்மன் திருக்கோயில், சின்ன கடைவீதி | ரூ.1,750-8 கண்டகம் நெல். |
| 3. | அருள்மிகு அம்பலவாணசுவாமி திருக்கோயில், குகை, சேலம். | ரூ.6,900/- |
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சித்திரைச்சாவடி, செவ்வாய்பேட்டை. | ரூ.2,000/- |
| 5. | அருள்மிகு வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில், சின்னதிருப்பதி, சேலம் | ரூ.3,355/- |
| 6. | அருள்மிகு கோட்டை அழகிரிநாதர் திருக்கோயில், சேலம் | ரூ.12,500/- |
| 7. | அருள்மிகு ஞானதண்டாயுதபாணி திருக்கோயில், நெத்திமேடு | ரூ.6,040/- |
| 8. | அருள்மிகு கோவிந்தராஜப்பெருமாள் திருக்கோயில், நெத்திமேடு | ரூ.1,200/- |
| | கூடுதல் | ரூ.45,333/- |

**48—**

## கோயிலுக்கு பக்தர்கள் செல்ல பாதை

**வினா எண் 20656—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், இடைகால் கிராமத்திலுள்ள இலங்கை பார்வதியம்மன் கோயிலுக்கு பக்தர்கள் செல்ல பாதை அமைத்துத் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், இடைகால் கிராமத்திலுள்ள இலங்கை பார்வதியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் என்பதால் இத்திருக்கோயிலுக்கு பக்தர்கள் செல்ல பாதை அமைத்துத் தருவதற்கான திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**49—**

**மண்டபம் கட்டுதல்**

**வினா எண் 20743—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், கரியபெருமாள் மலைக்கோயில் முன்புறம் மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், பணி எப்போது நடைபெறும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், நெத்திமேடு அருள்மிகு கரியபெருமாள் மலைக்கோயில் முன்புறம் மண்டபம் கட்ட திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லாததால், உபயதாரர் மூலம் மேற்படி திருப்பணியினை செய்ய, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



**50—**

**கோயில் குளம் தூர் வாருதல்**

**வினா எண் 21302—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலத்திலுள்ள கைலாசநாதர் கோயிலின் குளத்தை தூர்வாரி தெப்பம்விட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில் உள்ள கைலாசநாதர் திருக்கோயிலின் திருக்குளம் ஒரு வருடத்திற்கு முன் தூர்வாரப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. திருக்கோயில் "தேர்த்திருப்பணி" முடிவடைந்தவுடன் தேர்த்திருவிழாவும் தெப்ப உற்சவமும் நடைபெறும்.

**51—**

**கோயிலைப் புதுப்பித்தல்**

**வினா எண் 21310—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, ஆவணிப்பேரூர் கீழ்முகம், போடிநாயக்கன்பட்டியிலுள்ள, இடிந்து மிகமோசமாக உள்ள மாரியம்மன் கோயிலை உடனடியாக புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* இக்கோயிலுக்கு எவ்வளவு நிலம் உள்ளது, வருட நில வருவாய் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி வட்டம், ஆவணிப்பேரூர் கீழ்முகம், போடி நாயக்கன்பட்டியில் உள்ள அருள்மிகு சின்னமாரியம்மன் திருக்கோயிலை சீரமைக்க சுமார் ரூ.2.00/- லட்சம் செலவாகும். மேலும் திருக்கோயிலை சீரமைக்க உபயதாரர் எவரும் முன்வராததால், அறங்காவலர் நியமனம் செய்த பிறகு, திருப்பணிக்குழு அமைத்து பொதுமக்களிடம் நன்கொடை மூலம் நிதி திரட்டி, திருக்கோயிலை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இத்திருக்கோயிலுக்கு ஆவணிப்பேரூர் கீழ்முகம் கிராமத்தில் சர்வே எண் 246/2-ல் 6 ஏக்கர் 30 சென்ட் நிலங்கள் உள்ளது. நிலங்களை குத்தகை விடுவது தொடர்பாக சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.118/99 வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளபடியால், நிலங்கள் மூலம் வருமானம் ஏதுமில்லை.

**52—**

**மிதி வண்டி நிறுத்தம்**

**வினா எண் 21316—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலுள்ள நஞ்சுண்டேஸ்வரர் ஆலய இடத்தில் மிதிவண்டி நிறுத்தம் வாடகை விடப்பட்டுள்ளது என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு வரிவசூல் செய்யப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலுள்ள நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயில் இடத்தில் அறநிலையத் துறை சட்டவிதிகளின்படி பசலி 1411-ல் ரூ.19,500/-க்கும் மற்றும் பசலி 1412-ல்



ரூ.42,000/-க்கும் மேற்படி மிதிவண்டி நிறுத்தம் வாடகை கட்டணம் வசூலிக்கும் உரிமம், ஏலம் விடப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயில் சட்டப்பிரிவு 46(I)-ன் கீழ் பிரசுரம் செய்யப்பட்ட பட்டியலில் சேர்ந்த திருக்கோயில். ஆதலால் இதுகுறித்து அரசுக்கு தெரிவிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**53—**

**திருமண மண்டபம் கட்டுதல்**

**வினா எண் 21334—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியிலுள்ள ஈஸ்வரன் ஆலயம் சார்பாக ஒரு திருமண மண்டபம் கட்ட அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில் உள்ள ஈஸ்வரன் ஆலயம் சார்பாகத் திருமண மண்டபம் கட்டுவதற்கு காலி இடமோ, நிதி வசதியோ இல்லையென்பதால் திருமண மண்டபம் கட்ட இயலாத நிலை உள்ளது.

**54—**

**தெப்பக்குளம் சீரமைத்தல்**

**வினா எண் 27363—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி, அருள்மிகு மாரியம்மன் கோயில் தெப்பக்குளத்தை சீரமைக்கும் திட்டம் அரசு வசமுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு என்று திருக்குளம் ஏதும் இல்லாத நிலையில் திருக்குளத் திருப்பணி செய்யும் அவசியம் எழவில்லை.

**55—**

**சுற்றுச்சுவர் அமைத்தல்**

**வினா எண் 11520—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் அரசு வட்ட மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் அரசு வட்ட மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் கட்டும் செயற்குறிப்பு, அரசின் பரிசீலனையில் தற்போது ஏதும் இல்லை.

**56—**

**மருந்து தொழிற்சாலை**

**வினா எண் 11716—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவத் துறைக்குத் தேவையான மருந்துகளை தயாரிக்க அரசு 2000-01 நிதியாண்டில் எத்தனை தொழிற்சாலைகளைத் தொடங்கி உள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) எதுவும் தொடங்கப்படவில்லை.

(ஆ) பதில் எழவில்லை.

**57—**

**துணை சுகாதார நிலையம்**

**வினா எண் 20089—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்ணந்தேரியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம் கண்ணந்தேரியில் துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால், மேலும் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**58—**

**துணை சுகாதார நிலையம்**

**வினா எண் 20094—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சியில் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சியில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருவதால் அங்கு புதிதாக துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**59—**

**துணை சுகாதார நிலையம்**

**வினா எண் 24911—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி மற்றும் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆடையூர், பத்தநாடு ஆகிய இரண்டு ஊராட்சிகளில் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியைச் சார்ந்த பத்தநாட்டிலும் ஆடையூர் கிராமத்திலும் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் இயங்கி வருவதால் இக்கிராமங்களில் மேலும் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**60—**

**பார்வை இழப்பு தடுப்புத் திட்டம்**

**வினா எண் 28079—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

புதுக்கோட்டையில் பார்வை இழப்பு தடுப்புத் திட்டத்தின் மூலம் பயன் பெற்ற பயனாளிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

பார்வை இழப்பு தடுப்புத் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் கண் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் 32,233. இலவச கண் கண்ணாடி பெற்ற பயனாளிகள் எண்ணிக்கை 2,796 ஆகும்.

**61—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 28150—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்தில் உள்ள நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இடிந்துபோன மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை புதிதாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி கொள்ளிடம் ஒன்றியம், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இடிந்து போன மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி புதிதாக கட்டப்பட்டு பிப்ரவரி 2002 முதல் உபயோகத்தில் உள்ளது.

[2003 நவம்பர் 3

62—

### அடிப்படை வசதிகள்

**வினா எண் 28159—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சட்டமன்றம் சூழியார்நகர் ஆரம்ப சுகாதார நிலையம் அடிப்படை வசதிகள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன? எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் சூழியார் நகர் என்ற ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. சோலையார் நகர் என்ற ஆரம்ப சுகாதார நிலையம் எல்லா அடிப்படை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

63—

### தண்ணீர் வசதி

**வினா எண் 28170—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சட்டமன்றம் ஆழியார் நகர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தண்ணீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**



2003 நவம்பர் 3]

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆழியார் நகர் ஆரம்ப சுகாதார நிலையம், பரம்பிக்குளம் ஆழியாறு நகர் திட்டக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்திற்கு, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டக் குடியிருப்புப் பகுதி, பொதுக்குழாயின் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் தண்ணீர் போதுமானதாக இல்லை. ஆகையால் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தனியாக தண்ணீர் வசதி செய்துதர உதவிப் பொறியாளர் (பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்) கோரப்பட்டுள்ளார்.

64—

### சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 29918—திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரிசூழ்ந்தமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரிசூழ்ந்தமங்கலம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம்தான் செயல்பட்டு வருகிறது. இந்த துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட நிலம் தயாராக உள்ளதால், கட்டடம் கட்டுவதற்கு நபார்டு வங்கியிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. நிதியுதவி கிடைத்தவுடன், கட்டடம் கட்டுவதற்கு ஆணை வெளியிடப்படும்.

65—

### தாய்சேய் நல விடுதியைப் புதுப்பித்தல்

**வினா எண் 30001—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாலூர் தாய் சேய் நல விடுதியை புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சாலூர் துணை சுகாதார நிலைய கட்டடத்தை சீர் செய்ய ரூ. 2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன் பொதுப் பணித் துறையினரால் இந்நிதியாண்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**66—**

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 31005—திரு. சே. இராசேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, கீழ் ஈராலில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, கோவில்பட்டி தொகுதி கீழ் ஈராலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் எதுவும் தற்சமயம் அரசிடம் இல்லை.



**67—**

**படுக்கை வசதியுடைய சுகாதார நிலையம்**

**வினா எண் 31689—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு தொகுதி, சித்தோட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. இதை முப்பது படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக மாற்றப்படும் என்று அரசு அறிவிப்பில் உள்ளது. இது எந்த ஆண்டு நடைபெறும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

ஈரோடு தொகுதி, சித்தோட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினை முப்பது படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக மாற்றப்படும் என அரசு அறிவிப்பு எதுவும் இல்லை. தமிழகத்தில் மேம்படுத்தப்பட்ட மருத்துவ சிகிச்சை வசதியில்லாத ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் தகுதியுடைய ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் முப்பது படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக படிப்படியாக தரம் உயர்த்தப்படும் என்ற அறிவிப்பை அரசு வெளியிட்டது. அதனடிப்படையில் 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் 58 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட ஆணையிடப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சித்தோடு ஆரம்ப சுகாதார நிலையம், ஈரோடு ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்தது. ஈரோடு ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே ஈரோடு மாவட்ட மருத்துவமனை மூலம் மேம்படுத்தப்பட்ட மருத்துவ வசதி அளிக்கப்படுவதால் சித்தோடு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

68— [2003 நவம்பர் 3

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 31921—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், மாதகடப்பு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாதகடப்பு கிராம மக்கள் தொகை 946 ஆகும். இக்கிராமம் மதனாஞ்சேரி துணை சுகாதார நிலையத்தினையும் ஆலங்காயம் ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தினையும் சார்ந்தது. இக்கிராமம் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,14,308 (1991 கணக்கெடுப்பு) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், தமிழ்நாட்டில் கிராம மக்கள் தொகைக்கு ஏற்ப 1411 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும் மாதகடப்பு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

69—

**தேசிய கொள்ளை நோய் தடுப்பு கண்காணிப்புத் திட்டம்**

**வினா எண் 32096—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

(அ) சேலம் மாவட்டத்தில் தேசிய கொள்ளை நோய் தடுப்பு கண்காணிப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் நிதியாண்டில் சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள் தேசிய கொள்ளை நோய் தடுப்பு கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் மாதிரி மாவட்டங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற நிபுணத்துவம் வாய்ந்த அலுவலர்களால் மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு திட்டத்தை செயலாக்கம் செய்யும் அலுவலர்கள் என்ற முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு, மேற்படி திட்டம் சேலம் மாவட்டத்திலும் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் கொள்ளை நோய் தடுப்பு/முன் தடுப்பு கண்காணிப்புப் பணிகள் செய்யப்பட்டு வாராந்திர மற்றும் மாதாந்திர அறிக்கைகள் இந்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது.

70—

**அவசர கால ஊர்தி**

**வினா எண் 32896—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வள்ளுவக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர கால ஊர்தி (ஆம்புலன்ஸ்) கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வள்ளுவக்குடி கிராமத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கி வருகிறது. அவசர கால ஊர்தி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மட்டுமே வழங்கப்படுகிறது. எனினும் அவசர நிமித்தம் தேவைப்படும்போது அருகில் உள்ள முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள அவசர கால ஊர்தி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

71—

**அவசர கால ஊர்தி**

**வினா எண் 32899—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர கால ஊர்தி (ஆம்புலன்ஸ்) கொடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குன்னம் கிராமத்தில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது. அவசர கால ஊர்தி முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மட்டுமே வழங்கப்படுகிறது. எனினும் அவசர நிமித்தம் தேவைப்படும்போது அருகில் உள்ள முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள அவசர கால ஊர்தி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

72—

**அறுவை அரங்கம் மற்றும் செவிலியர் குடியிருப்பு**

**வினா எண் 32902—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமலைராயசமுத்திரத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மேலும் அறுவை அரங்கம் மற்றும் செவிலியர் குடியிருப்பு வளாகம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமலைராயசமுத்திரம் என்று ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படவில்லை. திருமலைராயபுரம் என்றே ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. இது கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகும். பிரதான ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டுமே அறுவை அரங்கு வசதி உள்ளது. இந்த ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம். ஆகையால் அறுவை அரங்கு வசதி செய்ய இயலாது. மேலும், இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, செவிலியர் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை. பெண் துணை செவிலியர் (ANM) பணியிடமே உள்ளது. குடியிருப்பு கட்டடம் கட்ட அரசால் தற்சமயம் நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் பெண் துணை செவிலியருக்கு குடியிருப்பு கட்டடம் கட்டித் தரும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

73—

**சுற்றுச் சுவர் கட்டுதல்**

**வினா எண் 35100—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், கீழசரால் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்று சுவர் கட்ட தற்போது அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனவே, தூத்துக்குடி மாவட்டம், சொந்தக் கட்டடத்தில் இயங்கி வரும் கீழஈராலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டும் சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*

**74—**

## இலவச மனைப் பட்டா

**வினா எண் 929—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட சாமிசெட்டிப்பட்டி, கமலநத்தம், பங்குநத்தம், ஏலகிரி, கருதுகாரன்பட்டி, குறும்பட்டி, சவுளூர், ஈச்சம்பட்டி, பள்ளிப்பட்டி, நாகர்கூடல், கழனிகாட்டூர், பால்கெங்கமென அள்ளி, கெங்கலாபுரம் ஆகிய கிராமங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கி தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பா சுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களில் வாழும்*



*மிகப்பிற்படுத்தப்பட்டோர் இன மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க அரசிடம் திட்டம் தற்போது இல்லை. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இத்துறையால் செயல்படுத்தப்படவில்லை. பொதுவாக தகுதியின் அடிப்படையிலும், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.*

**75—**

## இறுதிச் சடங்கு நிதியுதவி

**வினா எண் 34315—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*செங்கல்பட்டுத் தொகுதியிலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் குடும்பங்களில் இறுதிச் சடங்கு தொடர்பாக 2002-2003 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிதியுதவித் தொகை எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பா சுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*2002-2003 ஆம் நிதியாண்டில் செங்கல்பட்டுத் தொகுதியில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் குடும்பங்களுக்கு ஈமச் சடங்கு உதவித் தொகை வழங்கப்படவில்லை.*

**76—**

## அட்டை தொழிற்சாலை

**வினா எண் 23870—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

ஆலங்குளம் தொகுதி, அத்திமூத்தில் உள்ள அரசு அட்டை தொழிற்சாலையை இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய கட்டுப்பாட்டின்கீழ் 19 கைமுறை காகித அலகுகள் செயல்பட்டு வந்தன. தொடர்ந்து அவை நட்டத்தில் இயங்கி வந்ததால், அவற்றில் 4 அலகுகளைத் தவிர அத்திமூத்தில் உள்ள அரசு அட்டை தொழிற்சாலை (கைமுறை காகித அலகு) உட்பட 15 அலகுகளை மூடுவதற்கும் அவற்றில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு சேரவேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையை வழங்குவதற்கும் அரசாணை (நிலை) எண் 199, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை, நாள்:12-11-1999-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்திமூத்தில் உள்ள அலகில் 8 பணியாளர்கள் பணியாற்றி வந்தனர். இவ்வலகு 1-12-1999 முதல் மூடப்பட்டது. அரசு ஆணையின்படி மூடப்பட்ட இவ்வலகினை மீண்டும் திறக்க சாத்தியக்கூறு ஏதுமில்லை என்று தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தெரிவித்துள்ளது.

**77—**

### புதிய கணினிகள் வழங்குதல்

**வினா எண் 31850—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் கணினிகள் அடிக்கடி பழுதடைவதால், புதிய கணினிகள் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில், 7-7-1995 அன்று கணினி நிறுவப்பட்டது. கணினிக்கு ஒரு வருட இலவச பராமரிப்பும், 7



2003 நவம்பர் 3]

வருட ஒப்பந்த பராமரிப்பும் உள்ளது. காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலுள்ள கணினி நிறுவப்படுவதற்கு முன்பாக சில மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கணினி நிறுவப்பட்டது. தற்போது அவ்வலுவலகங்களில் இயங்கும் கணினிகள் படிப்படியாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகக் கணினியும் உரிய காலத்தில் மேம்படுத்தப்படும்.

**78—**

### குளிர் சாதனக் கருவியைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 31851—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உள்ள ஏ.சி பழுதடைந்துள்ளதால், ஏ.சி இயந்திரம் பழுது நீக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பழுதடைந்துள்ள குளிர் சாதனக் கருவியை பழுது நீக்கம் செய்வதற்கான நடவடிக்கை, நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**79—**

### கரும்பு உற்பத்தியாளர் சங்கம்

**வினா எண் 21510—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப் பணித் துறையில் எப்ஓடி. என ஒரு சங்கம் மதுரை மாவட்டம் முழுவதும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அது போல் எல்லா கிராமங்களிலும் கரும்பு உற்பத்தியாளர் சங்கம் என ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு பயிற்சி கொடுக்கும் திட்டம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு, பணி செய்யும் வகையில், சர்க்கரை ஆலைகளின் எல்லைக்குட்பட்டப் பகுதிகளை, பரப்பளவிற்கு ஏற்ப 8 முதல் 12 கோட்டங்களாகவும், ஒவ்வொரு கோட்டமும், பரப்பளவிற்கு ஏற்ப 5 முதல் 8 பிரிவுகளாகவும் பிரித்து அலுவல் மேற்கொள்ளப்படுகிறது. பயிற்சி பெற்ற கரும்பு அலுவலர்கள் மற்றும் கரும்பு உதவியாளர்கள் தினந்தோறும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராமங்களுக்கு சென்று கரும்பு பயிர் சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைக்கின்றனர். இந்நிலையில், தனியாக கிராமங்கள் தோறும் கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம் அமைத்து பயிற்சி அளிக்க வேண்டிய அவசியமில்லை.

(ஆ) பதில் எழவில்லை.

**80—**

**சுய உதவிக் குழுக்கள்**

**வினா எண் 20305—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் சுய உதவிக் குழுக்கள் மூலம் எத்தனை பெண்கள் பயன் அடைந்துள்ளார்கள்?

(ஆ) இவர்களுக்கு எந்தெந்த தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) அரசால் அறிவிக்கப்பட்ட மகளிர் திட்டத்தின்கீழ், சேலம் மாநகரில் 2001-2002 ஆம் ஆண்டில் 3,876 பெண்களும், 2002-2003 ஆம் ஆண்டில் 2,731 பெண்களும் தொழில் வளம் பெறுவதற்கேற்ற பல்வேறு பயிற்சிகளை பெற்றுள்ளனர்.





(ஆ) இவர்கள் வாழ்க்கை தொழிற்பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி, இயக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி, சுய உதவிக் குழு உறுப்பினர் பயிற்சி போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு அவற்றின் மூலம் தொழில் செய்து வளம் பெற்று வருகின்றனர்.

**81—**

**மகளிர் மேம்பாட்டுத் திட்டம்**

**வினா எண் 27124—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதியிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் மகளிருக்கான மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தொழிற்பயிற்சி அளித்து பட்டுப்பூச்சி வளர்க்க கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை சட்டமன்றத் தொகுதியில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு 2002-2003 ஆம் ஆண்டுக்கு மகளிர் திட்டம் மற்றும் தாட்கோ மூலம் மட்டும் 212 மகளிர்க்கு இன்றுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் தொழில் முனைவோர் பயிற்சி துவக்கப்பட்டு 6 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர். பட்டுத்தொழில் செய்து வரும் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பத்தைச் சார்ந்த 5 நபர்களுக்கு பூசாரிபாளையம் மற்றும் திருமல் பி.ஏ.சி.பி. வங்கியின் மூலம் தலா ரூ.23,600/- வீதம் பட்டுவளர்ச்சித் துறையின் மூலம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

[2003 நவம்பர் 3

**82—**

### மின் உற்பத்தி

**வினா எண் 20368—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் கழிவுகளைக் கொண்டு மின் உற்பத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் நகராட்சி கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் கருத்துரு ஒன்று சேலம் நகராட்சியால், ஆணையர், நகராட்சி நிர்வாகம் சேப்பாக்கம் அவர்களின் நிர்வாக அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி கிடைத்த பிறகு விவரமான திட்ட அறிக்கை இந்திய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்திற்கு நிதி உதவி அனுமதிக்காக அனுப்பப்படும். மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்தின் அனுமதி கிடைத்தப் பின்புதான் இந்தத் திட்டம் அனுமதிக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**83—**

### காற்றாலை அமைத்தல்

**வினா எண் 21053—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

(அ) விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் காற்றாலை அமைக்க மாநில அரசு எவ்வளவு மானியம் அளிக்கிறது?

(ஆ) கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் எத்தனை பேருக்கு மானியம் வழங்கியுள்ளது.

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் காற்றாலை மூலம் நீர் இறைக்கும் அமைப்பிற்கு மாநில அரசின் மானியம் ஏதும் வழங்கப்படவில்லை. விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் காற்றாலை அமைக்க மத்திய அரசால் வழங்கப்படும் மானியத்திற்கும் மேலாக மாநில அரசு பம்பு ஒன்றிற்கு ரூ. 20,000/- மானியமாக 2001-2002 ஆம் ஆண்டிற்கு பின்வருமாறு வழங்கியுள்ளது:—

| வ. எண் | காற்றாலை பம்பு | ஒன்றின் விலை | மத்திய அரசு மானியம் | மாநில அரசின் கூடுதல் மானியம் |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| (1) | கியர் மூலம் இயங்குவது | 82,000/- | 30,000/- | 20,000/- |
| (2) | கியர் இல்லாமல் இயங்குவது | 1,25,000/- | 45,000/- | 20,000/- |

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் இந்த மானிய உதவி 4 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

**84—**

### குடிநீர்க் கட்டணம்

**வினா எண் 26968—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் செயல்பட்டு வரும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நகராட்சி செலுத்த வேண்டிய தொகையின் விவரம் என்ன?

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை முறை எவ்வளவு கட்டணம் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் செயல்பட்டு வரும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ.469/- இலட்சம் செலுத்த வேண்டியுள்ளது.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் பத்து முறை மொத்தம் ரூ.67,59,726/- செலுத்தப்பட்டது.

**85—**

**மருந்தகம்**

**வினா எண் 12695—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி கால்நடை பார்வை கிளை நிலையத்தை மருந்தகமாக தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.



**86—**

**கால்நடை மருத்துவமனைக் கட்டடம்**

**வினா எண் 16318—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, ஏ. வெளாம்பட்டி அக்ரஹாரத்தில் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

அரூர் தொகுதி, ஏ. வெளாம்பட்டி அக்ரஹாரத்தில் கால்நடை கிளை நிலையம்/மருந்தகம்/மருத்துவமனை எதுவும் இல்லாததால் கட்டடம் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**87—**

**மின்கம்பி வேலி**

**வினா எண் 20203—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை கல்லாபுரம், 9/6, அமராவதி, வல்லக்குண்டாபுரம் ஆகிய இடங்களில் வன விலங்குகள், கரும்பு தென்னை, வாழை ஆகியவற்றை சேதம் செய்வதைத் தடுக்க நிலப்பட்டாதாரர்களுக்கு மின்கம்பி வேலி போட அரசு மானியம் தர ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

அரசு விதிமுறைகளின்படி நிலப்பட்டாதாரர்களுக்கு மின்வேலி போட அனுமதிக்கப்படுவதில்லை. தேவைப்படின் சோலார் மின்வேலி அமைக்க அனுமதி மட்டும் வழங்கலாம். சோலார் மின்வேலி அமைக்கவும், நிலப்பட்டாதாரர்கள் சொந்த செலவில்தான் செய்து கொள்ள வேண்டும்.

சோலார் மின்வேலி அமைப்பதற்கு அரசு விதிமுறைகளின்படி அரசு மானியம் வழங்குவதற்கு சட்டத்தில் இடமில்லை.

**88—**

**மிருகக் காட்சிச்சாலை**

**வினா எண் 21486—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வண்டலூரில் உள்ளது போன்று வேலூரை அடுத்த அமிர்தி காட்டில் பெரிய மிருகக் காட்சிச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

வண்டலூரில் உள்ளது போன்று வேலூரை அடுத்த அமிர்தி காட்டில் பெரிய மிருக காட்சிச்சாலை அமைக்கும் பிரேரணை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், வேலூரை அடுத்த அமிர்தியில் அமிர்தி சிறு உயிரியல் பூங்கா உள்ளது.

**89—**

**வன விலங்குகளின் தாக்குதல்**

**வினா எண் 21793—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழகத்தில் சிறுத்தை, யானை போன்ற வன விலங்குகளால் தாக்கப்பட்டு இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் குடும்பத்திற்கு அரசு உதவி செய்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் தமிழகத்தில் சிறுத்தையால் தாக்கப்பட்டு ஒரு நபரும், யானையால் தாக்கப்பட்டு 17 நபர்களும் இறந்துள்ளனர்.





(ஆ) சிறுத்தையால் தாக்கப்பட்டு உயிரிழந்த ஒரு நபரின் குடும்பத்திற்கும், காட்டு யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்த 17 நபர்களில் 16 நபர்களின் குடும்பத்திற்கும் அரசு ஆணை எண் 205, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்.5) துறை, நாள் 12-9-2000-ன்படி ரூபாய் ஒரு இலட்சம் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

**90—**

**தொலைபேசி இணைப்பு**

**வினா எண் 24379—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் டாப்சிலிப் தங்கும் விடுதியில் அவசரத் தேவையைக் கருதி தொலைபேசி இணைப்பை அறையில் வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வன உயிரினங்களால் தொலைபேசி நீட்டிப்பு இணைப்புக் கம்பிக்கு ஏற்படும் பாதிப்பினையும் மற்றும் வன உயிரின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டும் வால்பாறை டாப்சிலிப் தங்கும் விடுதிக்கு தொலைபேசி இணைப்பு நீட்டிப்பு மேற்கொள்ள இயலாது. சுற்றுலாப் பயணிகள் அவர்களது வசதிக்கேற்ப விடுதியினை ஒட்டி அமைந்துள்ள அஞ்சலக தொலைபேசியைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**91—**

**கையகப்படுத்திய நிலத்திற்கு அரசு விலை நிர்ணயம்**

**வினா எண் 6665—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2-வது தொகுதி மிட்டா அய்யம் பெருமாள்பட்டி மற்றும் கன்னங்குறிச்சி கிராமத்தில், 1981-ல் நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட போது நில உரிமையாளர்களுக்கு 1 சதுர அடிக்கு அரசு நிர்ணயம் செய்து கொடுத்த தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

சேலம் அய்யம் பெருமாள்பட்டி மற்றும் கன்னங்குறிச்சி கிராமங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய திட்டங்களுக்காக கையகப்படுத்த 1981 ஆம் ஆண்டில் 4(1) அறிவிக்கை வெளியிடப்பட்டு, 1984 ஆம் ஆண்டில் 6-ன்கீழ் வரைவு அறிவிக்கை ஒப்புதல் பெற்று, தனி வட்டாட்சியரால் 10-09-1986 தீர்வாணம் வழங்கப்பட்டது. தீர்வாணத்தில் சதுர அடி ஒன்றுக்கு 0.56 பைசா என நிர்ணயம் செய்யப்பட்டு, தீர்வாணத் தொகை தனி வட்டாட்சியரால் வழங்கப்பட்டது.

**92—**

**துணி ரகங்கள் விற்பனை**

**வினா எண் 16581—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001 ஆம் ஆண்டு ஈரோடு லூம்வோர்ல்டு விற்பனை வளாகத்திலுள்ள விற்பனை நிலையத்தில் ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரை எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள ஜவுளி ரகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் :**

2001 ஆம் ஆண்டில் ஈரோடு லூம்வோர்ல்டு விற்பனை நிலையத்தில் ஏப்ரல் 2001 முதல் ஆகஸ்டு 2001 வரை ரூ.66.62/- இலட்சம் மதிப்புள்ள துணி ரகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**93—**

**நெசவாளர்களுக்குக் காலனி**

**வினா எண் 22284—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) 2001-2002 இல் நெசவாளர்களுக்கு காலனி கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்திற்கு நீட்டிக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002-ல் தருமபுரி மாவட்டத்தில் உள்ள நெசவாளர்களுக்கு காலனி கட்டிக் கொடுக்க கோரிக்கை எதுவும் அரசிடம் பெறப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**94—**

**நெசவாளர்களுக்குக் காப்பீட்டுத் தொகை**

**வினா எண் 2286—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர்களுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் எத்தனை பேருக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 60 வயது நிறைவு பெறும் முன்பு இறக்க நேரிட்ட 335 உறுப்பினர்களின் நியமனதாரர்/வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

[2003 நவம்பர் 3

95—

## பயனாளிகள் குறித்த கணக்கெடுக்கும் பணி

**வினா எண் 24337—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச வேட்டி, சேலைகள் பெறும் பயனாளிகள் குறித்த கணக்கெடுக்கும் பணி சேலம் மாநகராட்சியின் மூலம் நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது துவங்கப்பட்டுள்ளது? பயனாளிகள் எண்ணிக்கை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டு முதல் வேட்டி, சேலை வழங்கும் திட்டம் அரசால் கைவிடப்பட்டுள்ளதால் இலவச வேட்டி, சேலைகள் பெறும் பயனாளிகள் குறித்த கணக்கெடுக்கும் பணி நடத்தப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

96—

## முதியோர் ஓய்வூதியத் திட்டம்

**வினா எண் 26935—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள், முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் எவ்வளவு நபர்கள் உதவித் தொகை பெற்றார்கள்?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 731 நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் தொகையாக ரூ.16,05,200/-ஐ பெற்றுள்ளார்கள்.

97—

## விளிம்புத் தொகை

**வினா எண் 27082—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி தொழில் வளர டி.என்.எச். (TNH) 149 தியாகி லீலாவதி மகளிர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசு விளிம்புத் தொகையாக ரூ.2,00,000/- வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) டி.என்.எச். (TNH) 149 தியாகி லீலாவதி மகளிர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசு விளிம்புத் தொகை கோரி சங்கத்திடமிருந்து திட்டச் செயற்குறிப்பு பெறப்பட்டால், அது திட்ட விதிகளுக்குட்பட்டு அரசால் பரிசீலனை செய்யப்படும்.

98—

## படகுகள் வழங்குதல்

**வினா எண் 32883—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

பேராவூரணி தொகுதி, மல்லிப்பட்டினத்தில் 500 விசைப்படகு
மீனவர்களுக்கு உதவ படகுகள் வாங்கி அவர்களது வாழ்க்கைக்கு
உத்தரவாதம் அளிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**
மீனவர்களுக்கு உதவிட படகுகள் வாங்கி வழங்கும் திட்டம் ஏதும்
தற்போது அரசிடம் இல்லை.

**99—**

**விடுதி**

**வினா எண் 19553—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத்
துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் சுற்றுலா
கழகத்தின் மூலம் அடுக்குமாடி தங்கும் விடுதி கட்டித் தர அரசு
நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த தகவல்கள் அரசு தருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**
(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில்
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஓட்டல் ஒன்று (இரண்டு
மாடி) நடத்தப்பட்டு வருகிறது.

**100—**

**சுற்றுலாத் துறை அலுவலகம்**

**வினா எண் 31362—திரு. வெ. ஏழுமலை :** மாண்புமிகு
சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டத்திற்கு சுற்றுலாத் துறை அலுவலகம் செஞ்சியில்
அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**
விழுப்புரம் மாவட்டத்திற்கு சுற்றுலாத் துறை அலுவலகம் செஞ்சியில்
அமைத்திடும் செயற்குறிப்பு தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில்
இல்லை.



2003 நவம்பர் 3]

## இரண்டாம் பட்டியல்

**1—**

**தனியார் ஆக்கிரமிப்பு**

**வினா எண் 4151—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி,
மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்
கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், சின்னப்பம்பட்டி
ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு அருகில் உள்ள அரசுக்குச்
சொந்தமான பவுண்ட் நிலத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை
அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு &
ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், சங்ககிரி
வட்டம், வெள்ளாளபுரம் கிராமம், சின்னப்பம்பட்டி கிராம புறம்போக்கு
ச. எண் 498/1 இன் விஸ்தீர்ணம் 0.0079.5 சதுர மீட்டர் ஆகும். மேற்படி
இடத்தில் கால்நடை பவுண்ட் நிலம் காலியிடமாக உள்ளது. அந்நிலத்தில்
தற்போது தனியார் யாரும் பொது உபயோகத்திற்காக ஆக்கிரமிப்பு
செய்யவில்லை.

**2—**

**மயான இடத்தில் ஆக்கிரமிப்பு அகற்றல்**

**வினா எண் 15381—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி,
மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்
கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம்
ஊராட்சி, நதிப்பாறை கிராமப் பகுதி மயான இடத்திலுள்ள
ஆக்கிரமிப்பை அகற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம் கிராமம், நதிப்பாறை கிராமத்தில் உள்ள மயான நிலம் தனியாருக்குச் சொந்தமான புஞ்சை நிலமாகும். இதில் ஆதிதிராவிடர்களுக்கு மயானம் அமைக்க மேற்படி கிராமப் புல எண் 887/2 விஸ்தீர்ணம் 2.80.0 ஹெக்டேர் புஞ்சை நிலத்தில் 0.20.0 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 31/78 இன்கீழ் திருநெல்வேலி மாவட்டாட்சியரால் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3—

### சாலை செப்பனிடுதல்

**வினா எண் 17881—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம் நும்மக்குண்டு-டி. ராமனாதபுரம் சாலையில் பிரிந்து தாடையம்பட்டி சாலையை செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள அரசு மாவட்ட இதரச் சாலையான நும்மக்குண்டு - டி. ராமனாதபுரம் சாலையில் 16/4-ல் பிரிந்து தாடையம்பட்டி செல்லும் சாலை கி.மீ. 0/0-3/4 ஆகும். இச்சாலையில் கி.மீ. 2/0-3/4 மற்றும் 0/4-2/0 வரையுள்ள பகுதிகளை முறையே ரூ.6.00 இலட்சத்திற்கும் மற்றும் ரூ.8.00 இலட்சத்திற்கும் அரசு மாவட்ட இதரச் சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சீர் செய்யும் திட்டம்-1 மற்றும் 2-ல் எடுத்துச் செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது வாகனப் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்படுகிறது.



4—

### சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 17902—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், வாலாத்தூர் பாப்பாபட்டி சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் மொத்த நீளம் 7.6 கி.மீ. ஆகும். இதில் கி.மீ. 6/6-7/0 வரையுள்ள சாலை நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 0/0-2/4, 3/6-3/8 பகுதிகளை ரூ.13.50 இலட்சம் செலவில் மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதர பகுதிகளை மேம்பாடு செய்யவும் நிதி நிலைக்கேற்ப எதிர்வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

5—

### சாலை மேம்பாடு

**வினா எண் 23740—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத் துறை கிராமச் சாலைகள் கோட்டத்தைச் சேர்ந்த பூலாங்கினர் - வெசைபட்டி சாலை கி.மீ. 0/0 முதல் கி.மீ. 2/6 வரை மேம்பாடு செய்ய அரசு ஆணையிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மண் சாலையான பூலாங்கினர்-வெசைப்பட்டி சாலையானது, தேசிய நெடுஞ்சாலை 209-ல் கி.மீ. 96/2-ல் பிரிந்து வெசைப்பட்டி கிராமத்தில் முடிகிறது. இக்கிராமத்திற்கு பூலாங்கினர், கொங்கல் நகரம் என்னும் அரசு இதர மாவட்ட தார்ச் சாலையும் உள்ளது. எனவே, மேற்படி மண் சாலையை கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

6—

## சாலை மேம்பாடு

**வினா எண் 23746—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடுங்கியம் - வல்லக்குண்டாபுரம் சாலை கி.மீ. 0/0 முதல் கி.மீ. 2/0 வரையுள்ள கோயம்புத்தூர் நெடுஞ்சாலைத் துறை கிராமச் சாலைகள் கோட்டத்தைச் சேர்ந்த சாலையை மேம்பாடு செய்திட அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள கொடுங்கியம் - கே. வல்லக்குண்டாபுரம் சாலையினால் பயனடையும் கிராமங்களாகிய கொடுங்கியம் மற்றும் கே. வல்லக்குண்டாபுரம் ஆகிய இரு கிராமங்களும் முன்னதாகவே அரசு தார்ச் சாலையினால் இணைக்கப்பட்டு பயனடைந்து வருவதால், மற்றுமொரு இணைப்புச்சாலை அமைத்திட குறைந்தபட்ச தேவையை பூர்த்தி செய்யும் கிராமச் சாலைகள் திட்டங்களில் சாத்தியக்கூறு இல்லை.

7—

## கடன் உதவி

**வினா எண் 24749—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சிறைச்சாலைகளிலிருந்து தண்டனை முடிந்து வெளிவரும் கைதிகளுக்குக் கடன் உதவி அளித்து தொழில் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

நடப்பிலுள்ள அரசாணையின்படி விடுதலையாகும் சிறைவாசிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 5000/- மிகைப்படாமல் கடனுதவி வழங்கப்படுகிறது. இந்த நிதி உதவியின் வருடாந்திர உச்ச வரம்பினை ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ. 10 இலட்சமாக உயர்த்தி வழங்க அரசு ஆணை ஏற்கெனவே உள்ளது.

சிறைத் துறை நன்னடத்தைப் பிரிவு அலுவலர்கள் விடுதலையான சிறைவாசிகளுக்கு முக்கியமாக நீண்டகால சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையாகும் சிறைவாசிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக விடுதலையான சிறைவாசிகள் சங்கத்தின் மூலம் வழங்கப்பெறும் உதவி மட்டும் அல்லாது சமூகத்தில் கொடைத் தன்மை மிக்க பண்பாளர்கள் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் பொது நோக்கு கொண்ட நிறுவனங்கள் மற்றும் பிற கருணை மனம் கொண்ட சமுதாயத்தினர் மூலமாக உதவிகள் மற்றும் வங்கிக் கடன்கள் மூலம் உதவி செய்யப்பட்டு வருகிறது.

8—

## கைதிகளுக்கு கணினி கல்வி

**வினா எண் 24750—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய சிறைச்சாலைகளில் படித்துப் பட்டம் பெற்ற ஆண், பெண் கைதிகளுக்கு கணினி பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் தொகுதி 2-ல், விதி எண் 291-ன்படி தண்டனை பெற்ற சிறைவாசிகள், அரசு செலவில்

சிறையினுள் உயர்க் கல்வி கற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி 2001-2002 ஆம் கல்வி ஆண்டில், இந்திரா காந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக்கழகம், சிறையிலேயே கல்வி மையம் அமைத்து, அதன் மூலம் கணினி கல்வி 101 சிறைவாசிகளுக்கும், 2002-2003 ஆம் கல்வி ஆண்டில் 19 சிறைவாசிகளுக்கும் "கணினி" கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

9—

**சிறையில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி**

**வினா எண் 24786—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய சிறைச்சாலையில் பெண்களுக்கு என்னென்ன தொழிற் பயிற்சிகள் அரசு வழங்கி வருகிறது?

(ஆ) அந்தத் தொழிற் பயிற்சியில் சிறப்பு பெற்றதற்கான சான்று வழங்கப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மத்திய சிறைச்சாலைகளில் பெண் சிறைவாசிகள் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் பெண் சிறைவாசிகளுக்கென திருச்சி மற்றும் வேலூரில் தனிச்சிறைகள் உள்ளன. வேலூர் பெண்கள் தனிச்சிறையில் நூல் முறுக்கேற்றுதல், நாடா உற்பத்தி செய்தல் போன்ற தொழிற் பயிற்சி அவர்களின் மறுவாழ்வு மற்றும் விடுதலைக்கு பின்னர் சுய தொழில் செய்து வாழ்க்கை நடத்திட ஏதுவாக பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர, அரசு நிறுவனமான தந்தை பெரியார், ஈ.வெ. ராமசாமி அரசினர் பாலிடெக்னிக், வேலூர் மூலமாக (1) தையற் பயிற்சி மற்றும் (2) எம்ப்ராய்டரி தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(ஆ) பெண்கள் தனிச்சிறையில், சிறை தொழிற்கூட பயிற்சி வழங்கப்படுவதால் தனியே சான்று ஏதும் வழங்கப்படுவதில்லை.

10—

**கள்ளச் சாராயம்**

**வினா எண் 24888—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தர்மபுரி மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அழிக்கப்பட்ட கள்ளச் சாராயத்தின் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) தர்மபுரி மாவட்டத்தில் 2001 ஆம் ஆண்டு, கள்ளச் சாராயம் காய்ச்சிய குற்றத்திற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் 16,110 பேர். 2002 ஆம் ஆண்டு, கள்ளச் சாராயம் காய்ச்சிய குற்றத்திற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் 15,382 பேர்.

(ஆ) 2001 ஆம் ஆண்டு 2,62,547 லிட்டர் கள்ளச் சாராயம் அழிக்கப்பட்டது. அதன் மதிப்பு ரூ. 78,76,410/-ஆகும். 2002 ஆம் ஆண்டு 4,41,794 லிட்டர் கள்ளச் சாராயம் அழிக்கப்பட்டது. அதன் மதிப்பு ரூ. 1,32,53,820/-ஆகும்.

11—

**சிறைச்சாலை காவலர்களுக்குக் குடியிருப்புகள்**

**வினா எண் 28245—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் கிளைச் சிறைச்சாலை காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி கிளைச்சிறை காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் கருத்துரு ஏதும் அரசிடம் தற்போது நிலுவையில் இல்லை.

12—

### விஷச் சாராய வியாபாரி மீது நடவடிக்கை

**வினா எண் 28799—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றிய பகுதி ஒலக்கூர் காவல் நிலைய எல்லைக்குள் ஆர்.எஸ். என்ற விஷச் சாராயம் மொத்த விற்பனை செய்தவர்கள்மீது 2002 ஜனவரி முதல் ஜூன் 2002 வரை எடுத்த நடவடிக்கை விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

திண்டிவனத்தைச் சார்ந்த ஏழுமலை என்பவரின் மகன் தனசேகரன் என்ற தெளிந்த சாராவி (Rectified Spirit) மொத்த வியாபாரி மீது ஒலக்கூர் காவல் நிலைய குற்ற எண் 206/02 பிரிவு 4(1)(அ) தமிழ்நாடு மதுவிலக்கு அமல் சட்டம் பிரிவு மற்றும் 5, 6, 11 தமிழ்நாடு எரி சாராய (விதிகள்) படி பதிவான வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தற்போது நீதிமன்ற நிலுவையில் உள்ளது.

13—

### கள்ளச் சாராயம்

**வினா எண் 28820—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, வெள்ளிமேடுப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குள் கள்ளச்சாராயம் விற்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெள்ளிமேடுபேட்டை காவல் நிலைய எல்லையில் மதுவிலக்கு தீவிர சோதனை நடத்தப்பட்டு, 2001 ஆம் ஆண்டில் 184 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 188 குற்றவாளிகள் (ஆண் 178, பெண் 10) கைது செய்யப்பட்டுள்ளனர். 2,240 லிட்டர் கள்ளச்சாராயமும், 140 லிட்டர் கள்ளும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டில், 147 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 147 குற்றவாளிகள் (ஆண் 132, பெண் 15) கைது செய்யப்பட்டுள்ளனர். 1,790 லிட்டர் கள்ளச்சாராயமும், 60 லிட்டர் கள்ளும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. இதேபோல், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினரால் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலைய எல்லையில் மதுவிலக்கு வேட்டை நடத்தப்பட்டு, 2001 ஆம் ஆண்டில் 65 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 65 குற்றவாளிகள் (ஆண் 59, பெண் 6) கைது செய்யப்பட்டுள்ளனர். 600 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டில், 92 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 91 குற்றவாளிகள் (ஆண் 89, பெண் 2) கைது செய்யப்பட்டுள்ளனர். 859 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

14—

### வாய்க்காலை ஆழப்படுத்தும் திட்டம்

**வினா எண் 29067—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, (சீர்காழி ஒன்றியம்) பெருமங்கலம் ஊராட்சி ஓடைவாய்க்காலை ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி (சீர்காழி ஒன்றியம்) பெருமங்கலம் ஊராட்சி ஓடைவாய்க்காலை ஆழப்படுத்தும் பணி கடந்த ஆண்டு ஆகஸ்ட்

2002-ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விவசாய தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

15—

**தூர் வாரும் திட்டம்**

**வினா எண் 29069—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி பச்சை பெருமாள் நல்லூர் ஊராட்சியில் உள்ள வண்ணான் திடல் வாய்க்கால் தெற்கு வாய்க்கால் ஆகியவற்றை தூர்வாரி சீர்செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, பச்சைபெருமாள் நல்லூர் ஊராட்சியிலுள்ள வண்ணான் திடல் வாய்க்கால் தெற்கு வாய்க்கால் ஆகியவற்றை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 2002-ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விவசாயத் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் பணி செய்து முடிக்கப்பட்டது.

16—

**தூர் வாரும் திட்டம்**

**வினா எண் 29070—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, வடகால் ஊராட்சியில் வடக்கு வடகால் வாய்க்கால் பாசனத்திற்காக தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?*





*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி வடகால் ஊராட்சி வடக்கு வடகால் வாய்க்கால் தற்போது நடைபெற்று வரும் வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் கால்வாய்கள் மற்றும் குளங்களை விவசாய தொழிலாளர்கள் மூலம் நியமன அடிப்படையில் பிசிடி வாய்க்கால்கள் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு செய்து முடிக்கப்படும்.

17—

**தூர் வாரும் திட்டம்**

**வினா எண் 29073—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி வடிகால் வாய்க்காலைத் தூர் வாரி, ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாய தொழிலாளர்கள் மூலம் தூர்வார ஆணையிட்டதற்கிணங்க சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி வடிகால் வாய்க்காலும் பிசிடி வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

18—

### தூர் வாரும் பணி

**வினா எண் 29079—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சி, அரப்பரை வாய்க்கால் தூர் வாரி, ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சி, அரப்பரை வாய்க்கால் கடந்த ஆகஸ்டு 2002-ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விவசாய தொழிலாளர்களுக்கான வேலை நிவாரணத் திட்டத்தின்கீழ் தூர்வாரும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

19—

### தூர் வாரும் பணி

**வினா எண் 29087—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சி, நரிமுடுக்கு வாய்க்கால் தூர் வாரி, ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ல் கால்வாய் மற்றும் குளங்களை விவசாய தொழிலாளர்கள் மூலம் தூர் வார ஆணையிட்டதற்கிணங்க, சீர்காழி



தொகுதி, நரிமுடுக்கு வாய்க்காலும் பிசிடி வாய்க்கால் தூர்வாரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும்.

20—

### பார்வையாளர்களுக்கான தனி இடம்

**வினா எண் 29575—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளில் போராட்டங்களில் ஈடுபடும் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளைப் பார்வையாளர்கள் பார்ப்பதற்கு தனி இடம் ஒதுக்கித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் தொகுதியில், விதி எண் 529-ல் சிறையில் சிறைவாசிகளைப் பார்வையாளர்கள் எவ்விடத்தில் நேர்காண வேண்டும் என்று விரிவான விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. சிறைவாசிகளைப் பார்வையாளர்கள் பார்வையிடுவதற்கென நேர்காணல் அறை தனியே கட்டப்பட்டுள்ளது. ஆனால் போராட்டங்களில் ஈடுபடும் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளைப் பார்வையாளர்கள் சிறைச்சாலைகளில் பார்ப்பதற்கென தனி இடம் ஏதும் ஒதுக்கப்படவில்லை.

21—

### சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளி

**வினா எண் 29691—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளி துவங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூரில் ஏற்கெனவே சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளி உள்ளதால் சேலத்தில் தனியே துவங்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**22—**

**சிறை தாழ்வாரங்களில் இரும்புக் கம்பி வலைத் தடுப்பு**

**வினா எண் 29693—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய சிறை சேலம் இணைப்புகள் 1 மற்றும் 2 இல் உள்ள தாழ்வாரங்களில் இரும்புக் கம்பி வலைத் தடுப்பு போட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மத்திய சிறையின் இணைப்புகள் 1 மற்றும் 2 இல் உள்ள தாழ்வாரங்களில் இரும்புக் கம்பி வலைப் பொருத்துவது குறித்த திட்டம் ரூ.1.89 இலட்சம் செலவில் 2001-2002 ஆம் நிதியாண்டிலேயே செயல்படுத்தப்பட்டுவிட்டதால் இக்கேள்விக்கு இடமில்லை.





**23—**

**சாதிச் சான்றிதழ்**

**வினா எண் 29757—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கோமைடுகு பகுதியில் சாதிச் சான்றிதழ் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சாதிச் சான்றுகள் வழங்குவதில் மக்கள் சாசனத்தில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும், எவ்வித புகார்களுக்கும் இடம் கொடாவண்ணம் கவனமுடன் செயல்படவேண்டும் எனவும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் விரிவான அறிவுரைகள் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால், அவரது சுற்றறிக்கை எண் 6/2001/நாள் 24-12-2001 இல் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டாட்சியர்கள் இப்பணியைத் தொடர்ந்து கண்காணிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்கள்.

**24—**

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 29807—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, குளத்தூர் வட்டம், குளத்தூரில் சர்வே எண் 7-ல் அரசு புறம்போக்கு நிலத்தை 40 ஆண்டு காலமாக சீர்செய்து, விவசாயம் அனுபவம் செய்துவரும் ஆதிதிராவிடர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், குளத்தூர் கிராமம், புல எண் 7 இல் விஸ்தீர்ணம் 3.65.0 எக்டேர் வாரி புறம்போக்கு என்பதாலும், நீர்நிலைப் புறம்போக்குகளை ஒப்படை செய்வது அரசால் தடை செய்யப்பட்டுள்ளதாலும் மேற்படி நிலத்திற்கு ஒப்படை வழங்க இயலாது.

**25—**

### பாதை ஆக்கிரமிப்பு

**வினா எண் 31505—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அன்னதானப்பேட்டை கிராமத்தில் ஈமச்சடங்குகள் செய்யும் குளத்திற்கு செல்லும் பாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றிட அரசு நடவடிக்கை எடுக்க இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, அன்னதானப்பேட்டை கிராமத்தில், குளத்திற்கு செல்லும் பாதையில் ஏற்படுத்தியிருந்த முள்வேலி ஆக்கிரமிப்புகள் அனைத்தும் மேற்படி கிராம மக்கள் முன்னிலையில் 22-10-2002 அன்று அகற்றப்பட்டு குளத்திற்கு பொதுமக்கள் செல்வதற்கு பாதையும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

**26—**

### கிணறு அமைத்தல்

**வினா எண் 28331—திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேரன்மகாதேவி தொகுதி, கனியூர் ஊராட்சி, அச்சுமுறித்த பிள்ளையார் கோயிலில் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, கனியூர் ஊராட்சி, அச்சுமுறித்த பிள்ளையார் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் இலாக்கா ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் என்பதால் கிணறு அமைப்பதற்கான திட்டம் ஏதும் இல்லை.

**27—**

### கோயில் சொத்துகள் விவரம்

**வினா எண் 31065—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி வட்டம், சிங்கவரம் அரங்கநாதர் கோயில் சொத்துகள் எந்தெந்த கிராமத்தில் உள்ளன? யாரிடம் உள்ளது? அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

செஞ்சி வட்டம், சிங்கவரம், அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலுக்கு செஞ்சி வட்டம், விற்பட்டு கிராமத்தில் 9 ஏக்கர், 13 சென்ட் நன்செய் நிலமும் 22 ஏக்கர் 77½ சென்ட் புன்செய் நிலமும் சொந்தமாக உள்ளன. மேற்படி நிலங்கள் அனைத்தும் ஒவ்வொரு ஆண்டும் பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது. பசலி 1411 மற்றும் 1412 ஆகிய இரண்டு பசலிகளிலும் நிலங்களை குத்தகைக்கு விட ஏலம் அறிவிக்கப்பட்டதில் மழையின்மை காரணமாக ஏலம் கேட்க ஒருவரும் முன்வராததினால், மேற்படி நிலங்கள் குத்தகைக்கு விடப்படவில்லை.

[2003 நவம்பர் 3

28—

**நூலகம் அமைத்தல்**

**வினா எண் 16487—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கீழ்நல்லாத்தூர் கிராமத்தில் நூலகம் இல்லாதது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நூலகம் அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கீழ்நல்லாத்தூர் கிராமத்தில் ஒரு நூலகம் திறக்க கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவரிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றதையடுத்து நூலகம் துவங்குவதற்கான கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும்படி கேட்டும், அவ்வூர் மக்கள் இதுவரை முன்வராததால் அவ்விடத்தில் நூலகம் அமைக்க இயலவில்லை.

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) எதிர் காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 செண்ட் முதல் 10 செண்ட் வரை காலிமனை நூலக ஆணைக்குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தரப்பட வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ.2000/— மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

(5) தலா ரூ. 1000/— வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.



2003 நவம்பர் 3]

29—

**ஆசிரியர்கள் நியமித்தல்**

**வினா எண் 20465—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் மாணவர்கள் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசிரியர்கள் உடனடியாக நியமிக்கப்படுவார்களா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

அரசு கல்லூரிகளில் மாணவர்கள் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. பணிப்பளு அடிப்படையில் ஒவ்வொரு துறையிலும் ஆசிரியர்கள் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கேற்ப பணியிடங்கள் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். விருத்தாசலம், கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த ஆசிரியர் பணியிடங்களின் எண்ணிக்கை 65 ஆகும். தற்போது அக்கல்லூரியில் 40 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மீதம் 25 பணியிடங்கள் காலியாக இருந்தன. இதில் 17 பணியிடங்களில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டு 8 இடங்கள் மட்டும் காலியாக உள்ளன. தற்போது அனைத்து அரசு கலை மற்றும் கல்வியியல் கல்லூரிகள் சார்ந்த பல்கலைக்கழகங்களின் உறுப்பு கல்லூரிகளாக மாற்றி அரசால் ஆணை பிறப்பித்துள்ள நிலையில் இக்கல்லூரியில் உள்ள காலிப் பணியிடங்களில் ஆசிரியர் நியமனம் செய்யப்படுவது குறித்து வேலூர், திருவள்ளூர் பல்கலைக் கழகம் அரசுடன் கலந்தாலோசித்து முடிவு எடுக்கும்.

30—

**கிளை நூலகம் அமைத்தல்**

**வினா எண் 22782—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

(அ) எடப்பாடி ஒன்றியம், இருப்பாளி கிராமம் குருக்கல்பட்டியில் கிளை நூலகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலக விதிகளின்படி 5,000-க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட ஊர்களில் கிளை நூலகமும் 1,000-5,000 வரை கொண்ட கிராமங்களில் ஊர்ப்புற நூலகமும், 1,000-க்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட ஊர்களில் பகுதி நேர நூலகமும் ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. எடப்பாடி ஒன்றியம், இருப்பாளி கிராமம், குருக்கல்பட்டியில் மக்கள் தொகை 550 ஆகும். குருக்கல்பட்டி கிராமப் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்று அவர்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவு செய்யும் பட்சத்தில் அங்கு ஒரு பகுதி நேர நூலகம் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்:

(1) பகுதி நேர நூலகம் செயல்பட வாடகையற்ற உறுதியான இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட குறைந்தது 5 சென்ட் காலிமனை இலவசமாக பத்திரப் பதிவு செய்து அளிக்கப்பட வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ. 2,000/- பெறுமானமுள்ள நூலகத்திற்குத் தேவையான தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

(5) தலா ரூ. 1,000/- வீதம் செலுத்தி குறைந்தது 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**31—**

**கூடுதல் வகுப்பறைகள்**

**வினா எண் 24203—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், கதுவாயிப்பட்டி பள்ளிக்கு மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தின் மூலம் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை ஒன்றியம், கதுவாயிப்பட்டி பள்ளியில் 58 குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். இரண்டு ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இப்பள்ளிக்கு 22x18=396 சதுர அடியில் ஒரு கட்டடமும் 48x16=768 சதுர அடியில் மற்றொரு கட்டடமும் ஆக இரண்டு கட்டடங்கள் உள்ளன. இப்பள்ளிக்கு கட்டட வசதி போதுமானதாக உள்ளதால் மேலும் வகுப்பறைகள் கட்ட தேவை எழவில்லை.

**32—**

**பெண்கள் கல்லூரி**

**வினா எண் 31086—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நடப்பாண்டில் செஞ்சியில் பெண்கள் கல்லூரி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

செஞ்சி பெண்கள் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை. மேலும், தேவையின் அடிப்படையில், நிதி நிலைமைக்கேற்ப அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்கும், தற்போதுள்ள நிதி நெருக்கடியில் பல்கலைக்கழகங்களால் புதிய கல்லூரிகளைத் துவக்க இயலாது. எனவே, அரசால் செஞ்சியில் மகளிர் கல்லூரியைத் துவக்க இயலாது.

[2003 நவம்பர் 3

33—

### விசைப் பம்புகள்

**வினா எண் 31296—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி மற்றும் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் விசைப் பம்புகள் எத்தனை உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 3,099 எண்களும், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் 2,550 எண்களும், மின்சாரத்தினால் இயங்கும் விசைப் பம்புகள் உள்ளன.

34—

### கரும்பு நிலுவைத் தொகை

**வினா எண் 32651—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தைச் சேர்ந்த அனுமந்தீர்த்தம் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு கரும்பு பயிரிட்டதற்கு 2000-2001 ஆம் ஆண்டிற்கு நிலுவைத் தொகை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தைச் சேர்ந்த அனுமந்தீர்த்தம் எல்லைக்குட்பட்ட பகுதி திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் எல்லைக்குட்பட்ட பகுதியாகும். இங்குள்ள கரும்பு விவசாயிகளுக்கு 2000-2001 ஆம் ஆண்டிற்கான கரும்பு தொகை நிலுவை ஏதுமின்றி முழுவதும் வழங்கப்பட்டுவிட்டது.



2003 நவம்பர் 3]

35—

### அங்கன்வாடி மைய செயல்பாடுகள்

**வினா எண் 32151—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அங்கன்வாடி மைய செயல்பாடுகள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

அங்கன்வாடி மையத்தில் 0-6 வயது வரையுள்ள குழந்தைகளை எடை எடுத்து வளர்ச்சி நிலையை உயர்த்துதல், தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இணை உணவு அளித்தல், குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி முன் பருவக் கல்வி அளித்தல், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி அளித்தல், சுகாதாரப் பணியாளர்கள் மூலம் சுகாதாரப் பணிகள் அளிப்பது, மேல்மருத்துவச் சிகிச்சைக்காக பரிந்துரைத்தல், ஆகியவற்றோடு கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், வளர் இளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றோடு அரசால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகளின்படி பிற பணிகளையும் மேற்கொள்ளுதல்.

36—

### போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்தல்

**வினா எண் 25698—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையம் அருகில் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு நகரமானது, சென்னையிலிருந்து தெற்கு திசையில் சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கிருந்து சென்னை செல்வதற்கு ஏராளமான பேருந்து மற்றும் ரயில் வசதிகள் உள்ளதால் இங்கிருந்து பெரும்பாலான மக்கள் அலுவலகங்களுக்கும், வியாபார ரீதியாகவும் பல்வேறு வீட்டு உபயோக பொருட்களை வாங்கி வருவதற்கும் தினந்தோறும் சென்று வந்த வண்ணம் இருக்கிறார்கள். எனவே புதிய பேருந்து நெரிசலை தவிர்க்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**37—**

### புதிய குடும்ப அட்டைகள்

**வினா எண் 32994—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், திருவணப்பட்டி ஊராட்சி பொதுமக்கள் பலருக்குப் புதிய குடும்ப அட்டை வழங்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம் திருவணப்பட்டி ஊராட்சியில் 17-4-2003 வரை 586 குடும்ப அட்டைகள் புழக்கத்திலுள்ளன. திருவணப்பட்டி ஊராட்சியில் புதிய குடும்ப அட்டை கோரி வரப்பெற்ற 8 மனுக்களும் தணிக்கையில் தகுதியானவையென்று கண்டறியப்பட்டு, அம்மனுதாரர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



**38—**

### புதிய குடும்ப அட்டைகள்

**வினா எண் 33246—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், பெரியதள்ளப்பாடி ஊராட்சி, செட்டியூர் கிராமத்தில் புதிய குடும்ப அட்டைகள் விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், பெரியதள்ளப்பாடி ஊராட்சி, செட்டியூர் கிராமத்தில் 381 குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. 17-4-2003 வரை புதிய குடும்ப அட்டை வழங்க வேண்டி வரப்பெற்ற 7 மனுக்கள் மீதும் தணிக்கை மேற்கொண்டு அவை தகுதியானவை என்று கண்டறியப்பட்டுள்ளன. இந்த 7 மனுதாரர்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் வழங்க நடவடிக்கையெடுக்கப்பட்டு வருகிறது.

**39—**

### புதிய குடும்ப அட்டைகள்

**வினா எண் 33253—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், கொண்டம்பட்டி ஊராட்சியில் விடுபட்ட குடும்ப அட்டைகளை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், கொண்டம்பட்டி ஊராட்சியில் தற்போது 529 குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. 17-4-2003 வரை புதிய குடும்ப அட்டைகள் வழங்கக்கோரி வரப்பெற்ற 23 மனுக்கள் தணிக்கைக்குட்படுத்தப்பட்டு தகுதியானவையென்று கண்டறியப்பட்டுள்ளன. இந்த 23 மனுதாரர்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**40—**

## அரிசி கூப்பன் அட்டைகள்

**வினா எண் 34188—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2002 ஆம் ஆண்டு குடும்ப அட்டைதாரர் எவ்வளவு பேருக்கு தமிழக அரசு அரிசி கூப்பன் அட்டைகள் வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

2002 ஆம் ஆண்டு அரிசிக் கூப்பன் புத்தகங்கள் வழங்கப்பட்டபோது, புதுக்கோட்டை மாவட்டத்தில், 15,005 அந்தியோதையா அன்னயோஜனா திட்டப் பயனாளிகள் உட்பட மொத்தம் 2,81,319 அரிசி விருப்ப அட்டைதாரர்கள் அரிசிக் கூப்பன் புத்தகங்களை வாங்கியுள்ளனர். இவர்கள் மட்டுமே பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி பெற்றுக்கொள்ள தகுதியுடையவர்கள்.



**41—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதுபார்த்தல்

**வினா எண் 4316—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை பெரிய பூலாங்கிணறு முக்கோணம் அருகே மேல்நிலைத் தொட்டியில் ஏற்பட்டுள்ள பழுதை சரி செய்ய அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) இக்குறையை அரசு எப்போது சரி செய்யும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை பெரிய பூலாங்கிணறு ஊராட்சியைச் சேர்ந்த முக்கோணம் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுது நீக்கம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**42—**

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 9276—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கோணங்கி அள்ளி ஊராட்சி, பாரதிதாசன் நகருக்கு தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், கோணங்கிஅள்ளி ஊராட்சி, பாரதிதாசன் நகருக்கு 1997-98 ஆம் ஆண்டு ஒன்றியத்தின் மூலம் ஒரு தெருவிளக்கு அமைக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புக்குத் தேவையான அளவு தெருவிளக்கு உள்ளதால் தற்பொழுது மேற்கொண்டு தெருவிளக்கு அமைக்க அவசியம் இல்லை.

[2003 நவம்பர் 3

43—

### கூடுதல் தெருவிளக்கு

**வினா எண் 9279—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், இண்டூர் ஊராட்சி, இ.கே. புதூர் கிராமத்தில் கூடுதலாக தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், இண்டூர் ஊராட்சி, இ.கே. புதூர் கிராமத்தில் ஏற்கெனவே சோடியம் விளக்கு ஒன்றும் குழல்விளக்கு இரண்டும் உள்ளன. கூடுதலாக தெருவிளக்கு அமைப்பதற்கு இண்டூர் ஊராட்சியில் போதிய நிதி வசதியில்லை.

44—

### தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 9290—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பிக்கம்பட்டி ஊராட்சி, சொக்கன்குட்டை கொட்டாய் கிராமத்திற்கு தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு., எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பிக்கம்பட்டி ஊராட்சியில் தற்போது போதிய நிதி வசதியில்லை. எனவே, சொக்கன்குட்டை கொட்டாய் கிராமத்திற்கு தற்போது தெருவிளக்கு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

### தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 9291—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பாலஜங்கமான அள்ளி ஊராட்சி, காந்தி நகருக்கு தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பாலஜங்கமானஅள்ளி ஊராட்சி, காந்திநகர் குடியிருப்பில் பரவலாக 10 வீடுகள் உள்ளன. தற்சமயம் ஊராட்சியில் போதிய நிதி வசதியில்லை. எனவே, காந்தி நகருக்கு தெருவிளக்கு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

46—

### தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 9698—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம் நாகர்கூடல் ஊராட்சி, நடப்பனஅள்ளி, கும்பளப்பாடி கிராமத்திற்கு தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நாகர்கூடல் ஊராட்சியில் கும்பளப்பாடி கிராமம் அல்ல. அது ஐந்து கொட்டாய்கள் கொண்ட ஒரு குடியிருப்பாகும். அங்கு ஏற்கெனவே ஒரு மின்விளக்கு உள்ளது. கூடுதல் விளக்கு போடுவதற்கு அவசியம் எழவில்லை.

**47—**

### கைப்பம்பு அமைத்தல்

**வினா எண் 9700—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எச்சனஅள்ளி ஊராட்சி, அண்ணா நகர் கிராமத்திற்கு நடப்பாண்டில் கைப்பம்பு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எச்சனஅள்ளி ஊராட்சி, அண்ணா நகருக்கு 2002-2003 ஆம் ஆண்டு மாநில நிதிக்குழு மானியத்தில் ரூ.35,000 மதிப்பீட்டில் ஓர் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**48—**

### மின்விசை மோட்டார் பொருத்துதல்

**வினா எண் 11887—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி, கோவிலூத்து கிராமத்திற்கு 5 எச்.பி. நீர்மூழ்கி மின்விசை மோட்டார் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, கோவிலூத்து கிராமத்தில் தற்போது 4, 5 குதிரைத் திறனுள்ள மோட்டார் மூலம் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இரண்டு ஆழ்குழாய் அடிபம்புகள் மூலமாகவும் குடிநீர் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. 5 குதிரைத் திறன் நீர்மூழ்கி மோட்டார் பொருத்த தற்போது ஊராட்சியின் பொதுநிதியில் போதுமான நிதியில்லை.

**49—**

### போர்வெல் அமைத்தல்

**வினா எண் 13527—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பேடறஅள்ளிக்கு போதுமான குடிநீர் வசதி இல்லாமலிருப்பதால், இங்கு கூடுதலாக போர்வெல் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் 2002-2003 ஆம் ஆண்டு ஒன்றியப் பொது நிதியிலிருந்து பேடறஅள்ளி ஏரி அருகில் ஓர் ஆழ்துளைக் கிணறு கூடுதலாக அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**50—**

### வீடுகள் பழுதுபார்த்தல்

**வினா எண் 15189—திரு. அ. சிவபெருமான்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் தொகுதி, கயத்தார் ஒன்றியம், கரடிகுளம் சிலோன்காலனியில் இலங்கை அகதிகளுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகள் பழுதடைந்துள்ளதை சீர் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் தொகுதி, கயத்தார் ஒன்றியம், கரடிகுளம் சிலோன்காலனியில் இலங்கை அகதிகளுக்கு 1973-ல் 206 குடும்பத்தினருக்கு வீட்டு மனை வழங்கப்பட்டது. வீடு கட்ட தலா ரூ.1,850/- கடன் வழங்கப்பட்டு மேலும் தேவைப்படும் தொகையை அவர்களே செலவு செய்து வீடு கட்டியுள்ளனர். மேற்படி வீடுகள் அகதிகள் பராமரிப்பில் உள்ளதால் பழுதடைந்துள்ள வீடுகளை சரி செய்திட அரசு நடிவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பில்லை.

51—

## மயானக் கொட்டகை அமைத்தல்

**வினா எண் 15558—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேதனிபுரம் கிராமத்திற்கு மயானக் கொட்டகை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேதனிபுரம் கிராமத்திற்கு 2002-2003 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாடுத் திட்டத்தின்கீழ் ரூ0.35 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு மயானக் கொட்டகைகள் அமைத்துத் தர அனுமதி வழங்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.



2003 நவம்பர் 3]

52—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 15577—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், சேங்காலிபுரம் ஊராட்சி, மெயின் ரோடு தெருவிற்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், சேங்காலிபுரம் ஊராட்சியில் 1987-88 ஆம் ஆண்டில் 20 குடியிருப்புகளும், 1992-93 ஆம் ஆண்டில் 20 குடியிருப்புகளும், 1998-99 ஆம் ஆண்டில் 15 குடியிருப்புகளும், 1999-2000 ஆம் ஆண்டில் 20 குடியிருப்புகளும் ஆக மொத்தம் 75 குடியிருப்புகள் இதுவரை கட்டப்பட்டுள்ளது.

53—

## தொகுப்பு வீடுகள் செப்பனிடல்

**வினா எண் 15953—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, வண்ணாகுளம் ஆதி திராவிட இனமக்கள் வசிக்கும் பழுதடைந்த தொகுப்பு வீடுகளை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்த தொகுப்பு வீடுகளின் பழுதினை நீக்கி, சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

54—

### ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

**வினா எண் 15963—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அப்புவிளை கிராம ஜெயராஜேஷ் பள்ளி தெரு, 1,2,3,4 மற்றும் 5-வது தெருக்களில் ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சனையைத் தீர்த்திட தனித்தனியாக தெருக்களில் ஆழ்குழாய் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அப்புவிளை கிராமம், காமராஜ் நகர் குடியிருப்பில் தற்போது செயலில் உள்ள திட்டங்கள் மூலம் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது. எனவே ஜெயராஜேஷ் பள்ளி 1,2,3,4 மற்றும் 5-வது தெருக்களுக்கு தனியாக ஆழ்குழாய் கிணறு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

55—

### பொருட்கள் பாதுகாப்பு அறை

**வினா எண் 17195—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சி பேருந்து நிலையத்தில் பயணிகளின் பொருட்கள் பாதுகாப்பு அறை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி பேரூராட்சி பேருந்து நிலையம் சுமார் 2 ஏக்கர் பரப்பளவு கொண்டது. பொருட்கள் பாதுகாப்பு அறை அமைக்க இட வசதி இல்லை என்பதாலும் பொதுமக்கள் உடனுக்குடன் இடம் பெயர்ந்து விடுவதாலும் பொருட்கள் பாதுகாப்பு அறை அமைத்திட வேண்டியது இல்லை.



56—

### ஈமச் சடங்கு மண்டபம்

**வினா எண் 17383—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஈசானியத் தெருவில் உள்ள முதலியார் குளத்தில் ஈமச்சடங்கு செய்யும் மண்டபம் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, ஈசானிய தெருவில் உள்ள முதலியார் குளத்தில் ஈமச்சடங்கு மண்டபம் கட்ட மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயற்படுத்த பரிந்துரைத்ததன்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி கிடைத்ததும் இப்பணி மேற்கொள்ளப்படும்.

57—

### தார்ச் சாலையாக மாற்றுதல்

**வினா எண் 18196—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பேராவூரணி பேரூராட்சியில் ஸ்ரீநீலகண்ட பிள்ளையார் கோயிலிலிருந்து காலகம் ஆவுடையார் கோவில் வரை இணைப்புச் சாலையை தார்ச் சாலையாக மாற்றித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி பேரூராட்சியில் உள்ள ஸ்ரீநீலகண்ட பிள்ளையார் கோயிலிலிருந்து காலகம் ஆவுடையார் கோவில் இணைப்புச் சாலை ஏற்கெனவே தார்ச் சாலையாக இருந்து வருகிறது. சுமார் 3 கி.மீ. நீளமுள்ள மேற்படி சாலையை மேம்படுத்திட பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை என்பதால் தற்போது இப்பணியை மேற்கொள்ள இயலாது.

**58—**

**கழிவு நீர் வடிகால்**

**வினா எண் 19218—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி, வார்டு எண் 15, நேதாஜி நகர், மதுரை ரோட்டின் தென்புறத்தில் சாக்கடை தேங்கியுள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை நிவர்த்தி செய்ய சாக்கடை கட்டித்தர அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ரூ.7.75 இலட்சம் செலவில் புதிதாக வடிகால் அமைக்கப்பட்டு கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

**59—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 20182—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சியில் உள்ள தொகுப்பு வீடுகள் பழுதடைந்து உள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளின் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு ஏதும் இல்லை.

**60—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 20183—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, சித்தூர் ஊராட்சி அருந்ததியர்களுக்கு அரசு கட்டிக் கொடுத்த தொகுப்பு வீடுகள் பழுதடைந்து உள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளின் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு ஏதும் இல்லை.

**61—**

**குடிநீர் இணைப்பு**

**வினா எண் 20618—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி பகுதி, வார்டு 8-க்குட்பட்ட ஆண்டிசெட்டி தெருவில் குடிநீர் இணைப்பு வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திசையன்விளை பேரூராட்சி, ஆண்டிசெட்டி தெருவில் 8 வீடுகள் மட்டுமே உள்ளன. இத்தெருவின் முகப்பில் ஏற்கெனவே ஒரு பொது குடிநீர் குழாய் உள்ளது. தற்போது புதிய குடிநீர் இணைப்பு வழங்க சாத்தியமில்லை.

62—

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 21219—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், கள்ளப்பாளையத்தில் வசிக்கும் அருந்ததியர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த தகவல்களை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், கள்ளப்பாளையம் கிராமத்தில் வசிக்கும் அருந்ததியர்களுக்கு 2001-2002 ஆம் ஆண்டில் 8 தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் நிதியாண்டில் இரண்டு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

63—

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 22000—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்திலுள்ள வைகுந்தம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வைகுந்தம் ஊராட்சியில் கீழ்க்கண்டவாறு ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு உள்ளன:

(1) *1995-96-ல்* ஆதிதிராவிடர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை-5.

(2) *1996-97-ல்* ஆதிதிராவிடர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை-22.

(3) *1999-2000-ல்* ஆதிதிராவிடர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை-10.

(4) *2001-2002-ல்* ஆதிதிராவிடர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை-5.

மேலும், நடப்பு நிதியாண்டில் *(2002-2003-ல்)* 5 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

64—

**மேல்மட்டக் குழு**

**வினா எண் 22140—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட அளவில் தொகுதி வளர்ச்சி பணிகள், மாவட்ட திட்டப் பணிகள் ஆகியன எவ்வாறு செயல்பட்டு வருகின்றன என்பதைக் கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் அடங்கிய மேல்மட்டக் குழு அமைக்க அரசு பரிசீலிக்குமா?

[2003 நவம்பர் 3

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் வறுமை ஒழிப்பு மற்றும் வேலை வாய்ப்புத் திட்டங்கள் அனைத்தும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் வாயிலாக செயல்படுத்தப்படுகின்றன. அத்துடன் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டம், நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் போன்ற இதர திட்டங்களும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் வாயிலாக செயல்படுத்தப்படுகின்றன. மேற்படி அனைத்து வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடு குறித்து காலாண்டிற்கு ஒரு முறை நடத்தப்படும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் ஆளுகைக் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன. மேற்படி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் ஆளுகை குழுக்களில் அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் உறுப்பினர்களாக உள்ளனர். ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த அனைத்து திட்டப் பணிகள் குறித்தும், சட்டமன்ற உறுப்பினர்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றது. எனவே, மாவட்ட அளவில் தொகுதி வளர்ச்சிப் பணிகள், மாவட்ட திட்டப் பணிகள் ஆகியவற்றைக் கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் அடங்கிய மேல்மட்டக்குழு அமைக்க ஊரக வளர்ச்சித் துறையை பொறுத்தமட்டில் அவசியம் எழவில்லை.

**65—**

## பேருந்து நிலையம்

**வினா எண் 24287—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சியின் பேருந்து நிலையத்தின் நெரிசலைத் தடுக்க வேறு இடத்தில் பேருந்து நிலையம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2003 நவம்பர் 3]

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் ஜனநெரிசலைத் தடுக்க பேருந்து நிலைய நிழற்கூடத்தில் உள்ள கடைகள் 10-1-2003-ல் அகற்றப்பட்டுள்ளன. அதனால், ஜனநெரிசல் ஏதும் தற்போது இல்லை. எனவே, பெண்ணாகரம் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் தற்போது கடைகள் அகற்றப்பட்டுள்ளதால் பேருந்து நிலையத்தை மாற்றியமைக்கத் தேவையில்லை.

**66—**

## பேருந்து நிலையம்

**வினா எண் 24297—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க பேரூராட்சிக்குச் சொந்தமான போதிய இட வசதி இல்லை. எனவே பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**67—**

## குடிநீர் வசதி

**வினா எண் 25170—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கிராமம், எட்டிக்கொட்டைமேடு விநாயகர் கோயில் அருகில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு ஓர் ஆழ்துளைக் கிணறு போட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கிராமம், எட்டிக்கொட்டைமேடு விநாயகர் கோயில் பகுதியில் ஊராட்சி மூலம் புதியதாக மாற்று விசைப்பம்புடன் கூடிய ஆழ்துளைக்கிணறு தோண்டப்பட்டு மேல்நிலைத் தொட்டி மூலம் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

68—

**நெற்களம்**

**வினா எண் 26535—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி ஒன்றியம், புலிவாய் ஊராட்சிக்கு நெற்களம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி ஒன்றியம், புலிவாய் ஊராட்சியில் நெற்களம் அமைக்கும் பணி 2003-2004 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப மேற்கொள்ளப்படும்.

69—

**நெற்களம்**

**வினா எண் 26536—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, கீழ்சாத்தமங்கலம் ஊராட்சியில் நெற்களம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, கீழ்சாத்தமங்கலம் ஊராட்சியில் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ.60,000 மதிப்பீட்டில் நெற்களம் கட்டப்பட்டு வருகிறது.

70—

**நெற்களம்**

**வினா எண் 26537—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி ஒன்றியத்தில், வெண்மந்தை ஊராட்சியில் நெற்களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி ஒன்றியம், வெண்மந்தை ஊராட்சி ஒன்றியத்தில் நெற்களம் அமைக்கும் பணி வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப மேற்கொள்ளப்படும்.

71—

**நெற்களம்**

**வினா எண் 26538—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனக்காவூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருப்பூண்டி ஊராட்சியில் நெற்களம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பூண்டி ஊராட்சியில் 2002-2003 ஆம் நிதியாண்டில் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நெற்களம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**72—**

**குடிநீர்க் குழாய் இணைப்பு**

**வினா எண் 26974—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் புதிய குடிநீர் இணைப்பு கேட்டு விண்ணப்பம் செய்து காத்திருப்போரின் விவரம் என்ன?

(ஆ) அரசின் திட்டம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சியில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் புதிய குடிநீர் குழாய் இணைப்பு கேட்டு விண்ணப்பம் செய்து காத்திருப்போர் 25. தற்போது மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு மட்டுமே முன்னுரிமையுடன் குடிநீர் இணைப்பு வழங்கப்படுகிறது.

**73—**

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா எண் 26994—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், புகற்குளம் புதிய ஆழ்குழாய் கிணறு (மாற்று) அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், புகற்குளம் ஊராட்சியைச் சார்ந்த சுமார் 500 மக்கட்தொகை கொண்ட புகற்குளம் குடியிருப்புக்கு ஒரு கையிறைப்பான் மற்றும் மின் விசைத்திட்டத்தின் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் மாற்று ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசிலனையில் இல்லை.

**74—**

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா எண் 27053—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, கடையம் ஒன்றியம், ஐந்தாம்கட்டளை பிரதான சாலையின் மேல்புரம் ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், ஐந்தாங்கட்டளைக்கு ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆற்று நீர் வழங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் செயலுக்கு வந்தபின் ஐந்தாங்கட்டளை குடியிருப்பு முழுமையாக பயனடையும். எனவே, வேறு ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க வேண்டியதில்லை.

75— [2003 நவம்பர் 3

## இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

**வினா எண் 29029—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சியில் இந்திரா நினைவு குடியிருப்புகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சியில், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.3,20,000 மதிப்பீட்டில் 10 தொகுப்பு வீடுகளும், 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.96,000 மதிப்பீட்டில் 3 தொகுப்பு வீடுகளும் ஒதுக்கீடு செய்து கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் நிதியாண்டில் வெள்ளாளபுரம் ஊராட்சியில் 5 தொகுப்பு வீடுகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

76—

## கழிப்பிட வசதி

**வினா எண் 29519—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சி, ஊராட்சிகளில் வால்பாறை தொகுதியில் ஆண்களுக்கும் கழிப்பிட வசதி கட்டிதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 நவம்பர் 3]

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பேரூராட்சிப் பகுதியில் இரண்டு கட்டணக் கழிப்பிடங்களும், இரண்டு பொதுக் கழிப்பிடங்களும் உள்ளன. மேற்படி கழிப்பிடங்களை ஆண்கள் மற்றும் பெண்கள் உபயோகித்து வருகின்றனர். மேலும் ஆண்களுக்கென தனியாக கழிப்பறை வால்பாறை பேரூராட்சி பகுதியில் கட்டுவதற்கு போதிய இடவசதி இல்லை. பொதுக் கழிப்பிடம் எனக் கட்டினால் பொதுவாக இரு பாலர்களுக்கும் ஒரே இடத்தில் தடுப்புச் சுவர் கட்டித்தான் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே, ஆண்களுக்கென தனியாக கழிப்பறை கட்டும் நடவடிக்கை எதுவுமில்லை.

77—

## சாக்கடை அமைத்தல்

**வினா எண் 29562—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பகுட்டை ஊராட்சி, சின்னமாரியம்மன் கோயில் அருந்ததியர் காலனி மழை நீர் சூழ்ந்து குட்டை போல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த காலனிக்கு, சாக்கடை அமைத்து கான்கிரீட் தளம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பகுட்டை ஊராட்சி, சின்னமாரியம்மன் கோயில் அருந்ததியர் காலனி தெருவில் 2002-2003 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தற்பொழுது கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டுள்ளது.

[2003 நவம்பர் 3

78—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 29604—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி நரிக்குடி ஒன்றியத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் எத்தனை ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*2002-2003* ஆம் ஆண்டில் நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் ஆதி திராவிடர்களுக்கு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் *50* தொகுப்பு வீடுகளும், பிரதம மந்திரி கிராம குடியிருப்புத் திட்டத்தின் கீழ் *20* தொகுப்பு வீடுகளும் ஆக மொத்தம் *70* தொகுப்பு வீடுகள் வழங்கப்பட்டு கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

79—

**வினா எண் 29606—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் எத்தனை பிற்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விருதுநகர் மாவட்டம், அருப்புக் கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்தில் *2002-2003* ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் *9* தொகுப்பு வீடுகள் பிற்பட்டோருக்கு வழங்கப்பட்டு கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2003 நவம்பர் 3]

80—

**வினா எண் 29661—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகரில் புதுக்கிராமத்தில் முடி திருத்துவோருக்காக பட்டா வழங்கிய நிலத்தில் (120 நபர்கள்) தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊரக வளர்ச்சி திட்டப் பணியான தொகுப்பு வீடு கட்டும் பணியினை நகராட்சிப் பகுதியில் செய்ய சட்ட விதிமுறையில் வழி இல்லை.

81—

## தார்ச் சாலை

**வினா எண் 29716—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரம் பேரூராட்சி 2-வது வார்டு விளாத்திக்குளம் சாலையிலிருந்து தெரு கடைசி வரை தார்ச் சாலை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எட்டயபுரம் பேரூராட்சி 2-வது வார்டு விளாத்திக்குளம் சாலையிலிருந்து தெரு கடைசிவரை தார்ச் சாலை அமைக்கும் திட்டம் பேரூராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் தற்போது பரிசீலனையில் இல்லை.

[2003 நவம்பர் 3

82—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 29723—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி சுரைக்காய்ப்பட்டி ஊராட்சி ரணசூரெட்டு நாயக்கர்பட்டியில் 20 ஆண்டுகளுக்கு மேலாகத் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள நிலையில் உள்ள அந்த 23 வீடுகளை பழுது பார்க்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்பொழுது நடைமுறையில் இல்லை. எனவே பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

83—

## தார்ச் சாலைகள்

**வினா எண் 30025—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதிகளில் அகலமில்லாத தெருக்களில் சிமெண்ட் சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நகராட்சிப் பகுதிகளில் நகரின் உட்பகுதிச் சாலைகளுக்கு சிமெண்ட் சாலை அமைப்பதினால் ஏற்படும் கூடுதல் செலவினம் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு, மழைநீர் நிலத்திற்கு அடியில் செல்ல



2003 நவம்பர் 3]

முடியாத நிலை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு சிமெண்ட் சாலைகள் அமைப்பது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என ஏற்கெனவே நகராட்சிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு உள்ளது. பல பிரதானச் சாலைகளிலும், பேருந்துகள் செல்லும் சாலைகளிலும், பேருந்து நிலையங்களிலும் சிமெண்ட் சாலை அமைக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. உருளை செல்ல முடியாத சில குறுகலான சந்துகளில்/ தெருக்களில், தார்சாலை நல்லமுறையில் அமைக்க முடியாத சூழ்நிலைகளில் சிமெண்ட் சாலைகள் அமைப்பது தவிர்க்க முடியாததெனில் அத்தகைய பிரேரணைகள் சாதகமாகப் பரிசீலிக்கப்படும்.

84—

## வீடுகள் கட்டிக் கொடுக்க நிபந்தனை

**வினா எண் 30030—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இரண்டு குழந்தைகள் பெற்றுக் கொண்ட ஆதி திராவிடருக்குத் தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்கிற நிபந்தனை விதிக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இரண்டு குழந்தைகள் பெற்றுக் கொண்ட ஆதி திராவிடருக்குத் தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்கிற நிபந்தனை விதிக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

85—

## சாலைகளைச் சீர்செய்தல்

**வினா எண் 30035—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள சாலைகள் பழுதாகிவிட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

[2003 நவம்பர் 3

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள சாலைகளைப் பழுதுபார்க்க 11-வது நிதிக்குழு பரிந்துரையின் பேரில் ரூ.27.75 இலட்சமும், தேசிய குடிசை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ.3.75 இலட்சமும் செலவிட்டு சாலைகள் சீர் செய்யப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர வளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.100 இலட்சத்துக்கு 13.07 கி.மீ. நீளத்திற்கு சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. எஞ்சிய சாலைகளை நகராட்சியின் நிதிநிலைக்கேற்ப சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

86—

**சிறுமேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 30146—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் ஊராட்சி, இச்சடி அண்ணாநகரில் சிறுமேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் ஊராட்சி, இச்சடி அண்ணாநகருக்கு குழாய் நீட்டிப்பு மூலம் தற்பொழுது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இக்குடியிருப்புக்கு சிறுமேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது பரிசீலனையில் இல்லை.

87—

**தார்ச் சாலை**

**வினா எண் 30366—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

(அ) நெல்லை மாவட்டம், ராதாபுரம் வட்டம், பனகுடி பேரூராட்சியில்:

(1) கூலக்கடை பஜார்—அண்ணாநகர் தார்ச்சாலை அமைக்கவும்,

(2) கூலக்கடை பஜார்—தளவாய்புரம் சாலையின் இருபுறம் வாறுகால் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நெல்லை மாவட்டம், ராதாபுரம் வட்டம், பனகுடி பேரூராட்சியில் கூலக்கடை பஜார் பகுதியில் பணிகளைச் செய்ய பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் செய்ய இயலாமல் உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

88—

**பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டம்**

**வினா எண் 30394—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002—2003 ஆம் ஆண்டில் பாரதப் பிரதமர் கிராம வளர்ச்சித் திட்டத்தின் (ஊரக குடியிருப்பு வசதி) கீழ் வீடு கட்டுவதற்கு இன்னும் நிதி ஒதுக்கப்படவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்திற்கு 2002-2003 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி கிராம வளர்ச்சி (ஊரகக் குடியிருப்பு பிரிவு) திட்டத்தின் கீழ் 226 வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ. 72.33 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அரசாணை (நிலை) எண் 131, ஊரக வளர்ச்சி (ம.தி.1) துறை, நாள் 13-12-2002.

89—

**குடிநீர் விநியோகம்**

**வினா எண் 31178—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பாக்குடி ஒன்றியம், ஓடைமறிச்சான், உமையாம்புளியில் சிறுமின் விசை திட்டத்தின் கீழ் தரைமட்டத் தொட்டி அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், ஓடைமறிச்சான் ஊராட்சி, உமையாம்புளி கிராமத்தில் சென்ற நிதியாண்டில் சிறுமின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

90—

**கைப்பம்புகள்**

**வினா எண் 31283—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மொத்த கைப்பம்புகள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இதில் தற்காலிகமாக வறண்ட கைப்பம்புகள் எத்தனை உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மொத்த கைப்பம்புகள் எண்ணிக்கை 611 (அறுநூற்று பதினொன்று மட்டும்).



(ஆ) இதில் தற்காலிகமாக வறண்ட கைப்பம்புகளின் எண்ணிக்கை 18 (பதினெட்டு மட்டும்).

91—

**கைப்பம்புகள்**

**வினா எண் 31284—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மொத்த கைப்பம்புகள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இதில் தற்காலிகமாக வறண்ட கைப்பம்புகள் எத்தனை உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மொத்த கைப்பம்புகள் எண்ணிக்கை 446 (நானூற்று நாற்பத்தாறு மட்டும்).

(ஆ) இதில் தற்காலிகமாக வறண்ட கைப்பம்புகளின் எண்ணிக்கை 69 (அறுபத்தொன்பது மட்டும்).

92—

**வேலை உறுதியளிப்புத் திட்டம்**

**வினா எண் 31288—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் நிதியாண்டில் எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் எவ்வாறு பணிகள் ஒதுக்கப்பட்டது?

(ஆ) முடிவுற்ற பணிகள் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் 2001-2002 ஆம் நிதியாண்டில் வேலை

உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ.14,41,840 மதிப்பீட்டில் 25 பணிகள் செயல்படுத்தப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

93—

## தொலைக்காட்சிப் பெட்டி

**வினா எண் 31610—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், மேலப்பட்டி போயர் தெருவிற்கு பொது தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கூடச்சேரி ஊராட்சியைச் சேர்ந்த மேலப்பட்டி போயர் தெருவிற்கு அருகில் உள்ள ஆதிதிராவிடர் காலனியில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. ஊராட்சியில் போதிய நிதி வசதியின்மையால் மேலப்பட்டி போயர் தெருவிற்கு தனியாக தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று வழங்க வாய்ப்பில்லை.

94—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 33150—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) புதுக்கோட்டை கணேஷ்நகர், காமராஜபுரம் பகுதிகளுக்கும், திருவப்பூர் பகுதி, குன்னாண்டார் கோயில் ஒன்றியத்தில் கொப்பம்பட்டி, பள்ளத்துவயல் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தண்ணீர் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகர பகுதி புதுக்கோட்டை, கணேஷ்நகர், காமராஜபுரம், திருவப்பூர் பகுதிகள் புதுக்கோட்டை நகராட்சியைச் சேர்ந்த பகுதிகளாகும். காவேரி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் இருந்து புதுக்கோட்டை நகருக்கு சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர்கள் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வழங்கப்படும் குடிநீர் அத்தியாவசிய தேவைக்குப் போதுமானது.

**ஊரகப்பகுதி**

**கொப்பம்பட்டி (கொத்தம்பட்டி)**

குன்னாண்டார் கோயில் ஒன்றியத்தில் உள்ள கொப்பம்பட்டி குடியிருப்பில் தற்போது 2 கையிறைப்பான்கள் நல்லமுறையில் இயங்கி வருகின்றன. இதன்மூலம் இக்குடியிருப்பிற்கு தற்பொழுது போதுமான அளவு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**பள்ளத்துப்பட்டி (பள்ளத்துவயல்)**

குன்னாண்டார் கோயில் ஒன்றியத்தில் உள்ள பள்ளத்துப்பட்டி குடியிருப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய ஒரு மின்விசைத்திட்டம் 2001-2002 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு தற்பொழுது பயனில் உள்ளது. மேலும் 6 கையிறைப்பான்கள் உள்ளன. இவற்றின் மூலம் தற்பொழுது தேவையான அளவு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. எனவே இக்குடியிருப்புகளுக்கு புதிய மேல்நிலைத்தொட்டி அமைப்பது பரிசீலனையில் இல்லை.

[2003 நவம்பர் 3

95—

**முகாம்கள்**

**வினா எண் 14551—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்கள் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கடந்த 1999-2000 ஆம் ஆண்டில் 2 முகாம்களும், 2000-2001 ஆம் ஆண்டில் 12 முகாம்களும், 2001-2002 ஆம் ஆண்டில் 12 முகாம்களும் ஆக மொத்தம் 26 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. அதே போல் 2002-2003 ஆம் ஆண்டில் 13 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களும் நடத்தி முடிக்கப்பட்டுவிட்டன.

96—

**புலிகள் விவரம்**

**வினா எண் 32056—திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

(அ) இராஜபாளையம் தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவார வனப்பகுதிகளில் புலிகள் இருக்கின்றனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை புலிகள் உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இராஜபாளையம் தொகுதியில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவார வனப்பகுதியில் புலிகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

97—

**நச்சு வேதிப்பொருட்கள் கதிரியக்கக் கழிவுகளால் மாசுபடுதல்**

**வினா எண் 32065—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நச்சு வேதிப்பொருட்கள் கதிரியக்க மற்றும் கழிவுகளால் மாசுபடுவதை தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

இரசாயனப் பொருட்களைப் பாதுகாப்பாக கையாளுவதற்கும் இத்தகைய வேதிப்பொருட்களால் ஏற்படக்கூடிய நச்சுவிளைவுகளை தவிர்க்கவும் 2000 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட தீங்கு விளைவிக்கக்கூடிய

இரசாயனப் பொருட்கள் (உற்பத்தி, சேமிப்பு, இறக்குமதி) விதிகள் 1989-ன்படி இரசாயனப் பொருட்களை கையாளுமாறு சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளை தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரியம் வலியுறுத்தி வருகிறது. கையாளப்படும் வேதிப்பொருட்களின் அளவைப் பொறுத்து தொழிற்சாலைகள், இரசாயனப் பொருட்களைப் பாதுகாப்பான முறையில் கையாளுதல் குறித்த படிவம், விபத்துகளின் பொழுது நச்சுப் பொருட்களினால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான திட்ட அறிக்கைகளைத் தயாரித்து சம்மந்தப்பட்ட துறைகளுக்கு சமர்ப்பிக்குமாறு வாரியம் வலியுறுத்தி வருகிறது. இது சம்மந்தமாக தொழிற்சாலை எடுக்கும் நடவடிக்கையினை வாரியம் கண்காணித்து வருகிறது.

2. வாரியம் எடுத்த நடவடிக்கையினால் சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவு பொருட்கள் உற்பத்தியாகும் தொழிற்சாலைகள், இக்கழிவுகளை பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்த தொழிற்சாலைக் கழிவுகள் மேலாண்மைச் சங்கம் என்ற கூட்டமைப்பினை ஏற்படுத்தியுள்ளன. அரசுத் துறைகளின் ஒத்துழைப்புடன் காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மேலக்கோட்டையூர் கிராமத்தில் மேற்கூறிய வசதியினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3. கதிர் இயக்கத் தன்மை வேதிப் பொருட்கள் மற்றும் கழிவுகளால் ஏற்படும் பாதிப்பினைத் தவிர்ப்பதற்கான பொறுப்பு மத்திய அரசின் கதிர் இயக்கத் துறையில் உள்ள கதிர் இயக்க சக்தி முறைப்படுத்தும் வாரியத்தை (Atomic Energy Regulatory Board) சார்ந்ததாகும்.

**98—**

**பாதை வசதி**

**வினா எண் 33954—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) இராசிபுரம் தொகுதி, வெள்ளந்தூர் ஒன்றியம் ஊராட்சி போதமலைக்கு பாதை வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், இராசிபுரம் தொகுதி, வெள்ளந்தூர் ஒன்றியம், போதமலைக்கு பாதை வசதி அமைப்பது குறித்து தற்போது அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**99—**

**இந்தியக் கைத்தறி தொழில்நுட்பப் பயிலகம்**

**வினா எண் 26936—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் இந்தியக் கைத்தறி தொழில்நுட்பப் பயிலகம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை மாணவர்கள் பயிலுகிறார்கள்?

(இ) அவர்கள் உதவித் தொகை பெறுகிறார்களா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் இந்தியக் கைத்தறி தொழில்நுட்பப் பயிலகம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இப்பயிலகத்தில் ஒவ்வொரு ஆண்டும் 75 மாணவர்கள் பயிலுகின்றனர்.

(இ) அவர்கள் உதவித் தொகை பெறுகிறார்கள்.

**100—**

**வட்டி மானியத் தொகை**

**வினா எண் 31024—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 1-10-1998 முதல் 31-3-2002 வரை ஏற்பட்ட வட்டி மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) இதில் அரசு எவ்வளவு மானியமாகத் தந்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில் குடியாத்தம் பகுதியில் உள்ள 23 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 1-10-1998 முதல் 31-3-2002 வரையிலான காலத்திற்கு ரூ.26,62,208-க்கு வட்டி மானியக் கோரிக்கை பெறப்பட்டு, அதில் 1-10-1998 முதல் 31-12-2001 வரையிலான காலத்திற்கு ரூ.24,65,845 வட்டி மானியமாக அச்சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



## மூன்றாம் பட்டியல்

**1—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 16189—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கன்னியாகுமரி உவரி சாலையிலிருந்து கூத்தன்குழி கிராமத்திற்குச் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையைச் செப்பனிடுவது தொடர்பான கருத்துரு, பழுதுற்ற இதர மாவட்டச் சாலைப் பகுதிகள் சீரமைத்தல் கட்டம் 3-ல் ரூ. 9.20 இலட்சங்களுக்கு பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

**2—**

**மின் பராமரிப்புப் பணி**

**வினா எண் 16762—திரு. டி.கே. ராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூரில் அரசுக்குச் சொந்தமான அனைத்து கட்டடங்களிலும் மின்சார பழுது நீக்க ஊழியர் வேலூரில் இருந்து வரவேண்டியுள்ளதால் ஒரு ஊழியரை திருப்பத்தூர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை, மின்கோட்டத்தின்கீழ் இயங்கி வரும் வேலூர் மின் உபகோட்டம் பணியாளர்களே வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு கட்டடங்களின் மின் பராமரிப்புப் பணிகளை கவனித்து வருகின்றனர். இந்த உபகோட்டத்தில் தற்போது மின் கம்பியாளர் தரம் 1 மற்றும் மின் உதவியாளர் தரம் 2 ஆகிய இரண்டு மின் களப் பணியாளர் பணியிடங்கள் மட்டுமே ஒப்பளிக்கப்பட்டு இருவர் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். மாவட்டத் தலைமையகமாக வேலூர் இருப்பதால் திருப்பத்தூரை விட வேலூரில் அதிகமான அரசு கட்டடங்கள் உள்ளன. எனவே ஒரு மின் ஊழியரை வேலூரிலிருந்து திருப்பத்தூருக்கு மாற்றம் செய்ய வாய்ப்பில்லை. இருப்பினும் திருப்பத்தூரில் உள்ள அரசு கட்டடங்களில் மின் பராமரிப்புப் பணியை தாமதமின்றி கவனிக்குமாறு சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளருக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

3—

### முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம்

**வினா எண் 24853—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2001-2002* ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எவ்வளவு பேருக்கு முத்திரைத்தாள் விற்பனை செய்ய உரிமம் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*2001-2002* ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் யாருக்கும் வழங்கப்படவில்லை.



4—

### கோட்ட அலுவலகம்

**வினா எண் 24994—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் பொதுப் பணித் துறை கோட்ட அலுவலகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் பொதுப் பணித் துறையின் 10 ஏரிகளும் ஒரு அணைக்கட்டும் மட்டுமே உள்ளன. இவற்றைப் பராமரிக்க தற்போதுள்ள எடப்பாடி பிரிவு அலுவலகமே போதுமானதாகும். எனவே, எடப்பாடியில் பொதுப் பணித் துறை கோட்ட அலுவலகம் ஏற்படுத்த அவசியம் இல்லை.

5—

### புதிய வாய்க்கால்

**வினா எண் 24995—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி பெரிய ஏரிக்கு குள்ளம்பட்டி கிழக்கு கரை வாய்க்காலிலிருந்து, உபரி நீர் உள்ள காலத்தில், நிரப்ப புது வாய்க்கால் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குள்ளம்பட்டி கிழக்கு கரை வாய்க்காலின் மட்டத்தை விட எடப்பாடி பெரிய ஏரியின் மட்டம் உயரமாக உள்ளதால் கிழக்கு கரை வாய்க்காலிலிருந்து தண்ணீர் கொண்டு செல்ல, புதிய வாய்க்கால் அமைக்க தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

6—

**தூர் வாருதல்**

**வினா எண் 28546—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, கோட்டாத்தூர் பெரிய ஏரி தூர் எடுக்கப்பட்டு பாசன நீர் பெற அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ). முசிறி தொகுதி, கோட்டாத்தூர் பெரிய ஏரியை தூர் வாரி நவீனப்படுத்துவதற்கு ரூ. 13.85 இலட்சம் தேவைப்படும். இத்திட்டத்தை நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7—

**தூர் வாருதல்**

**வினா எண் 28791—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தொகுதி, போதமலை அடிவாரம் ஆலத்தூர் ஏரி வழியாக திருமணிமுத்தாறு செல்லும் ஓடையை தூர் எடுக்கும் திட்டம் அரசு வசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தொகுதியில் போதமலையிலிருந்து வரும் வரத்து வாய்க்காலில் உள்ள ஆலத்தூர் ஏரிக்கு தூர் எடுக்கும் திட்டம் எதுவும் தற்பொழுது அரசிடம் இல்லை.

8—

**கள்ளச் சாராயம் ஒழிப்பு**

**வினா எண் 31264—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் மூலம், சேலம் மண்டலத்தில் கள்ளச்சாராயத்தைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கையின்பேரில் எவ்வளவு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன?

(ஆ) ஆம் எனில், குண்டர் சட்டத்தின்மூலம் அவர்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மண்டலத்தில் 2002 ஆம் ஆண்டு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின்மூலம் 11,001 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2002 ஆம் ஆண்டு 47 குற்றவாளிகள் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின்படி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

9—

**குத்தகை பாக்கிகளை வசூலித்தல்**

**வினா எண் 21006—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம், சுவாமிமலை சுவாமிநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் தோப்புகளிலிருந்து வசூலாகாத குத்தகை பாக்கிகளை வசூலிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பாபநாசம், அருள்மிகு சுவாமிமலை சுவாமிநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் தோப்புகளிலிருந்து வசூலாகாத குத்தகை பாக்கிகளை வருவாய் நீதிமன்றம் மற்றும் உரிய நீதிமன்றங்கள் மூலம் வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனை வசூலிக்க தனியாக திட்டம் ஏதும் இல்லை.

10—

**மண்ணெண்ணெய் வழங்கு நிலையம்**

**வினா எண் 20390—திருமதி சி.எம் சூரியகலா:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் காமாட்சி அம்மன்பேட்டை, நெல்லூர்பேட்டை, புவனேஸ்வரிபேட்டை, போஸ்பேட்டை, பக்கிரிபேட்டை, செருவங்கி, சாயந்திபுரம் பகுதிகளில் மண்ணெண்ணெய் விநியோகக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணையின்படி ஒரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையத்துடன் 8,000 முதல் 10,000 வரை குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும். அதேபோல் இலாபகரமாக தன்னாற்றல் பெற்று செயல்பட மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 50,000 லிட்டர் வரை அந்நிலையங்களில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட



வேண்டும். வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் தற்போதுள்ள மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்துடன் இணைக்கப்படாமல் உள்ள 6 நியாய விலைக் கடைகளில் 6,199 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், மாதாந்திர மண்ணெண்ணெய் தேவையளவு 23,648 லிட்டர் மட்டுமே என்பதாலும் குடியாத்தம் நகரில் 6 நியாய விலைக் கடைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

11—

**வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்**

**வினா எண் 21678—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் உள்ள எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் எத்தனை 2001-2002 ஆம் ஆண்டில் இலாபகரமாக இயங்கி உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதியில் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இதில் எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 11 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன. இவற்றுள் பூலாம்பட்டி, நெடுங்குளம் மற்றும் சித்தூர் ஆகிய மூன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இலாபத்தில் செயல்படுகின்றன.

12—

**கூட்டுறவுச் சங்க ஊழியர்கள்**

**வினா எண் 27991—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர்? எத்தனை பணியாளர்கள் உள்ளனர்?

(ஆ) அச்சங்கம் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருவது உண்மையா?

(இ) ஆமெனில், அப்பணியாளர்களுக்குப் போதிய சம்பளமும் சலுகைகளும் வழங்கப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஈ) அரசு அதன்மீது நடவடிக்கை எடுத்து பணியாளர்கள் குறையைப் போக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) ஈரோடு வேளாண்மை உற்பத்தி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 31-10-2002-ல் 36,349 'அ' வகுப்பு உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கத்தில் 31-10-2002-ல் 9 (ஒன்பது) பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட 1960ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இலாபத்தில் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின் பணியாளர்களுக்குப் போதிய சம்பளமும், சலுகைகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

13—

## மின் ஆக்கி அமைத்தல்

**வினா எண் 1465—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி-அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நெற்குன்றத்தில் மின் ஆக்கி (Generator) அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி-அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் தலைமையிடம் தென்பெண்ணையாற்றில் நெற்குணம் என்ற ஊரின் அருகில் உள்ளது. இங்கிருந்து 40 எச்.பி. மின் மோட்டார் மூலம் 22 கி.மீ. தொலைவில் உள்ள உடையார் நத்தத்தில் உள்ள நீர்உந்து நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. அங்கிருந்து 40 எச்.பி. மின் மோட்டார் மூலம் 18 கி.மீ. தொலைவிலுள்ள அத்தியூருக்கு குடிநீர் அனுப்பப்படுகிறது. பின் அங்கிருந்து 15 எச்.பி. மின் மோட்டார் மூலம் 8 கி.மீ. தொலைவில் உள்ள செஞ்சி பேரூராட்சிக்கு அனுப்பப்படுகிறது. இதில் வழியோரக் கிராமங்களுக்கும் அனந்தபுரம் பேரூராட்சிக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதில் கடந்த மே 2001-ல் ஒரே வாரத்தில் தொடர்ச்சியாக இரண்டு முறை ஏற்பட்ட பலத்த காற்றினால் நிறைய மரங்கள் சாய்ந்து மின் பகிர்மானம் தடையேற்பட்டது. பின்னர் மின்சாரம் கிடைத்தபின் குடிநீர் விநியோகம் சீரடைந்தது. இது ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி ஆகும். தற்போது பொதுவாக குடிநீர் எவ்வித தடையுமில்லாமல் நீரேற்றப்படுகிறது. தமிழ்நாடு மின்வாரியம் தனது தனி மின்பாதை (Separate feeder) மூலமாக மின்சாரம் வழங்கி வருகின்றது. எனவே, மின் ஆக்கி (Generator) தற்போது தேவைப்படாது.

14—

## குடிநீர் வசதி

**வினா எண் 4229—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை, அந்தியூர் பஞ்சாயத்தில் குடிநீர் பொதுக் குழாய்களை 3 அடி ஆழம் தோண்டிதான் அனைத்துப் பகுதிகளிலும் தண்ணீர் பிடிக்க முடியும் என்ற குறையைப் போக்க அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை ஊராட்சி, அந்தியூர் கிராமத்தில் அனைத்து குழாய்களையும் தரைமட்டத்திற்கு மேல் அமைத்து குழிகள் மூடப்பட்டு, தற்போது குடிநீர் விநியோகம் சீராக நடைபெறுகிறது.

[2003 நவம்பர் 3

15—

### குடிநீர் வசதி

**வினா எண் 4237—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, அந்தியூர் அண்ணா நகர் பகுதியிலுள்ள ஏழை ஆதிதிராவிடர்களுக்கு மேலும் சில குடிநீர் பொதுக் குழாய்கள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை, அந்தியூர் ஊராட்சியில் போதுமான நிதிவசதியில்லை. எனவே, அண்ணாநகர் பகுதி ஏழை ஆதிதிராவிடர்களுக்கு மேலும் குடிநீர் பொதுக் குழாய்கள் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

16—

### குடிநீர் விநியோகம்

**வினா எண் 4318—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து, ஓனாக்கல்லூர் கிராமத்தில் தண்ணீர் விநியோகத்தைச் சரி செய்ய அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து ஓனாக்கல்லூர் கிராமத்தில் பூலாங்கிணறு குடிநீர்த் திட்டம் மற்றும் ஆழ்குழாய்க் கிணறு மூலம் போதுமான அளவு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.



2003 நவம்பர் 3]

17—

### புதிதாக தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 4650—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், அக்கரைப்பட்டி, பெரியாண்டிச்சி கோயில் பகுதியில் புதிதாக தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளபுரம் கிராம ஊராட்சியின் நிதிநிலை தற்போது சரியில்லை. மேலும், அக்கரைப்பட்டி பெரியாண்டிச்சி கோயில் நிர்வாகத்திற்கு போதுமான வருவாய் வந்து கொண்டிருப்பதால், கோவில் நிர்வாகம் மூலம் தெருவிளக்கு அமைக்க, கோயில் நிர்வாகத்திற்கு தகுந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

18—

### புதிய தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 4652—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், உலகப்பனூர் பகுதியில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், உலகப்பனூர் ஊராட்சியில் 11 தெரு விளக்குகள் உள்ளன. மேலும் இப்பகுதியில் புதிய தெரு விளக்கு கோரிய விண்ணப்பம் மின்வாரியத்திற்கு அனுப்பப்பெற்று தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

19— [2003 நவம்பர் 3

### தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்

**வினா எண் 4654—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எலவம்பாளையம் கிழக்கு காட்டுவளவு பகுதிக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், எலவம்பாளையம் கிழக்கு காட்டுவளவு பகுதிக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கவில்லை. ஊராட்சிக்கு போதுமான நிதி ஆதாரம் இல்லாததால் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க தற்போது சாத்தியமில்லை.

20—

### புதிய தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 4677—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கிராமம், கோவலன்காடு (தெற்குவளவு) பகுதியில் தெரு விளக்கு புதிதாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கிராமம், கோவலன்காடு (தெற்குவளவு) பகுதியில் ஒரு தெரு விளக்கும், மாரியம்மன் கோவில் அருகில் ஒரு மின் விளக்கும் உள்ளது. அவ்விடத்திற்கும் இவ்விரு விளக்குகளும் போதுமானதாக உள்ளன.



2003 நவம்பர் 3]

21—

### தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 4714—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தொப்பக்காட்டிற்கு பால் சொசைட்டி முன்பு தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தொப்பக்காட்டிலிருக்கும் பால் சொசைட்டி தனியாருக்குச் சொந்தமானது ஆகும். இப்பால் சொசைட்டியில் வருமானம் வருவதால் சொசைட்டி முன்பு அவர்களே மின்விளக்கு அமைத்துக் கொள்ளலாம். மேலும், தற்போது முகரம்பாடி ஊராட்சியில் நிதி வசதி போதுமானதாக இல்லாத காரணத்தால் மின்விளக்கு அமைக்க வாய்ப்பில்லை.

22—

### பேருந்து நிழற்குடை

**வினா எண் 8970—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சேந்தமங்கலம் கிராமத்திற்கு சிமெண்ட் கம்பெனி சாலையில் பேருந்து நிழற்குடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சேந்தமங்கலம் கிராமத்திற்கு சிமெண்ட் கம்பெனி சாலையில்

பேருந்து நிழற்குடை அமைக்க ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

23—

## நிழற்குடை அமைத்தல்

**வினா எண் 9038—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், நத்தகுழி கிராமத்திற்கு பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், நத்தகுழி கிராம பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை அமைத்துத்தர ஊராட்சியின் பொதுநிதியில் போதிய நிதி வசதி இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

24—

## சமுதாயக் கூடம்

**வினா எண் 10259—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கதிராமங்கலம் கிராமம், ஆதிதிராவிடர் தெருவில் சமுதாயக் கூடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கதிராமங்கலம் ஊராட்சியின் ஆதிதிராவிடர் மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

25—

## தொடக்கப் பள்ளிக்கு மின் இணைப்பு, கழிப்பிட வசதிகள்

**வினா எண் 10621—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், வள்ளியனூர் தொடக்கப் பள்ளிக்கு மின் இணைப்பு வசதி, கழிப்பிட வசதி, மண் அரிப்பைத் தடுக்க அணைச்சுவர் செய்து தர அரசு இந்நிதியாண்டில் ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், வள்ளியனூர் தொடக்கப் பள்ளிக்கு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து 2002-2003-ஆம் ஆண்டில் ரூ. 2,500 மதிப்பீட்டில் மின் இணைப்பு வசதி செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அப்பள்ளிக்கான கழிப்பிட வசதி ரூ.2,000 மதிப்பீட்டிலும், மண் அரிப்பைத் தடுக்க அணைச்சுவர் ரூ.20,000 மதிப்பீட்டிலும் 2001-2003-ஆம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழோ மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

26— [2003 நவம்பர் 3

**சுற்றுச் சுவர் மற்றும் குடிநீர் வசதி**

**வினா எண் 10673—திரு. பே.ப. காமராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம் எம். பழக்காரனூர் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் மற்றும் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேச்சேரி ஒன்றியம், எம். பழக்காரனூர் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட கிராம தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் பங்குத்தொகையாக 25% கிடைக்கப்பெற்றதும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இப்பள்ளிக்கு தற்போது பழக்காரனூர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் காவேரி நீர் வழங்கப்படுகிறது. தற்போது பழக்காரனூர் பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு ஊராட்சி நிதியிலிருந்து பம்ப் ரூம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவடைந்ததும் இதன் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

27—

**நிழற்கூடம்**

**வினா எண் 11167—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, அன்னை இந்திரா நகர் கீழ்காலனிக்கு நிழற்கூடம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, அன்னை இந்திரா நகர் கீழ்காலனிக்கு நிழற்கூடம் ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

28—

**தொலைக்காட்சி அறை**

**வினா எண் 12820—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், பாப்பரம்பாக்கம், வில்லியர் காலனி பகுதிக்கு தொலைக்காட்சி அறை எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாப்பரம்பாக்கம் ஊராட்சியைச் சேர்ந்த வில்லியர் காலனி பகுதிக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படவில்லை. எனவே, அப்பகுதிக்கு தொலைக்காட்சி அறை அமைக்க அவசியம் எழவில்லை.

29—

**குடிநீர் வசதி**

**வினா எண் 13435—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், பொச்சாரம்பட்டி சென்றாயன் கவுண்டர் கொட்டாயில் 20-க்கும் மேற்பட்ட வீடுகளுள்ளதால், இங்கு குடிநீர் வசதிக்காக ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—** [2003 நவம்பர் 3

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஒன்றியம், பொச்சாரம்பட்டி சென்றாயன் கவுண்டர் கொட்டாயில் 20 வீடுகள் உள்ள இடத்திற்கு புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்துத்தர ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சியில் நிதி வசதி இல்லை. பொச்சாரம்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே உள்ள ஓர் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து பொதுமக்களுக்குத் தேவையான அளவு குடிநீர் கிடைத்து வருகிறது.

**30—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 13448—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, குள்ளாத்திரம்பட்டி கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்துகொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, குள்ளாத்திரம்பட்டி கிராமத்திற்கு ஏற்கெனவே இரண்டு கைப்பம்புகளும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. இதைத்தவிர கூடுதலாக குடிநீர் வசதி செய்ய தற்போது வாய்ப்பில்லை.



2003 நவம்பர் 3]

**31—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 13463—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, எம்.தண்டா அடுத்த ஜிங்கிலிமேடு ஊரில் சுமார் 20 குடும்பங்கள் இருப்பதால், இங்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சியில் தற்போது போதிய நிதி வசதியில்லை. எனவே, எம்.தண்டா அடுத்த ஜிங்கிலிமேடு ஊரில் தற்போது ஆழ்துளைக் கிணறு அமைக்க இயலாது.

**32—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 13520—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பென்னாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், சென்றாயன் கொட்டாய்க்கு போர்வெல் அமைத்து குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

[2003 நவம்பர் 3

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம் சென்றாயன் கொட்டாய் குடியிருப்பிற்கு 2002-2003-ல் கூடுதலாக ஒரு கைப்பம்பு அமைக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

33—

### பழுது பார்த்தல்

**வினா எண் 13779—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம் ஈச்சம்பட்டி ஆதிதிராவிட காலனிக்கு சமுதாயக்கூடம், பழுதடைந்துள்ள காலனி வீடுகள் ஆகியவற்றை சீர் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பாலஜங்கமனஹள்ளி ஊராட்சி, ஈச்சம்பட்டி ஆதிதிராவிடர் காலனியில் அமைந்துள்ள சமுதாயக் கூடத்தில் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள வழிவகைகள் இல்லை. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடுகளைப் பராமரிப்பதற்கென தனியாக நிதி ஒதுக்கீடு ஏதும் அளிக்கப்படுவதில்லை. தனிப்பட்ட நபர்களுக்கு இலவசமாக தொகுப்பு வீடுகள் அளிக்கப்படுவதால், அந்த வீடுகளைப் பராமரிக்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட பயனாளிகளையே சாரும். எனவே, ஈச்சம்பட்டி காலனி தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்க்க வழிவகைகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2003 நவம்பர் 3]

34—

### நிழற்கூடம் அமைத்தல்

**வினா எண் 14874—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பூச்செட்டி அள்ளியை அடுத்த வீரச்செட்டி அள்ளியில் பஸ் நிறுத்தத்தில் நிழற்கூடம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அரசு சார்பில் நிழற்கூடம் அமைக்கும் திட்டம் தற்பொழுது நடைமுறையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

35—

### குடிநீர் வசதி

**வினா எண் 15625—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், வயலூர் அகரம் மற்றும் காலனி பகுதியில் குடிநீர் இல்லையென்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதிகளில் குடிநீர் வசதி எப்போது செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், வயலூர் அகரம் கிராமத்தில் 60,000

[2003 நவம்பர் 3

லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு 5 குதிரை திறன் கொண்ட நீர்மூழ்கி மோட்டார் மூலம் அகரம் கிராமம் மற்றும் காலனி பகுதிகளுக்கு குழாய் அமைத்து தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அகரம் காலனியில் ஒரு கைம்பம்பும், கிராமத்திற்கு இரண்டு கைப்பம்புகளும் தனியாக இயங்கி வருகிறது.

36—

**குடிநீர் வசதி**

**வினா எண் 15632—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், உளுந்தை கிராமம் வடுவர் காலனிக்கு போதுமான அளவு குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், 15 குடும்பங்கள் உள்ள உளுந்தை கிராமம், வடுவர் காலனிக்கு 1 எச்.பி. மின் மோட்டார் மூலம் 2001 நவம்பர் மாதம் கட்டப்பட்ட தரை நிலை நீர்த்தேக்கத் தொட்டி (ஜி.எல்.ஆர்) மூலம் குடிநீர் போதுமான அளவு வழங்கப்பட்டு வருகிறது. கூடுதலாக அப்பகுதியில் ஒரு கைப்பம்பும் இயங்கி வருகின்றது.

37—

**குடிநீர் வசதி**

**வினா எண் 15642—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், நரசிங்கபுரம் கிராமத்தில் குடிநீர் வசதியில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர் வசதி செய்து தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், நரசிங்கபுரம் கிராமத்தில் 60,000 கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பள்ளி அருகில் உள்ள ஒரு கைப்பம்பு மற்றும் நடுத்தெருவில் தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டி (ஜி.எல்.ஆர்) மூலமாகவும் மேற்கண்ட கிராமத்திற்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

38—

**அங்கன்வாடி மையம்**

**வினா எண் 15647—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கொண்டஞ்சேரி பழைய காலனியில் அங்கன்வாடி மையம் அமைத்துத் தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கொண்டஞ்சேரி பழைய காலனியில் அங்கன்வாடி மையம் அமைத்துத் தர ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை.

[2003 நவம்பர் 3

39—

## மின்மோட்டார் திறனை மாற்றுதல்

**வினா எண் 15671—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், ஏகாட்டூர் பஞ்சாயத்து, சீதேவிகுப்பம் கிராமத்தில் உள்ள குடிநீர் மோட்டாரை 7.5 ஹெச்.பி.-யாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஏகாட்டூர் ஊராட்சி, சீதேவிகுப்பம் கிராமத்தில் உள்ள குடிநீர் மோட்டார் 7.5 குதிரை திறன் கொண்ட மின் மோட்டாராக மாற்றப்பட்டு குடிநீர் சீரான முறையில் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

40—

## மேல்நிலைத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 15672—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், மும்முடிக் குப்பம் காலனியில் உள்ள நீர்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர் மேல்நிலைத் தொட்டி சரி செய்யப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், வயலூர் ஊராட்சி, மும்முடிக்குப்பம் காலனியில் உள்ள பழுதடைந்துள்ள தரை நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுது பார்க்க முடியாத நிலையில் உள்ளதால் அதற்குப் பதிலாக மேல்நிலைத் தொட்டி அமைத்து அதிலிருந்து குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் அங்குள்ள ஒரு கைப்பம்பு மூலமாகவும் நல்ல முறையில் தட்டுப்பாடு இல்லாமல் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.



2003 நவம்பர் 3]

41—

## குடிநீர் வசதி

**வினா எண் 15936—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம் ஊராட்சி, மாடன்பிள்ளை தர்மம், ரஜகிருஷ்ணாபுரம், கைலாசபுரம் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம் ஊராட்சி, மாடன்பிள்ளை தர்மம், ரஜகிருஷ்ணாபுரத்தில் மொத்தம் 2,600 பேர் வசித்து வருகிறார்கள். இங்கு மொத்தம் 4 அடிபம்புகள் நல்லமுறையில் இயங்குகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 1,00,000 மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மூலமும் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

கைலாசபுரத்தில் ஏற்கெனவே ஒரு அடிபம்பு நல்ல முறையில் இயங்குகிறது. மேலும் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது. 2002-2003-ஆம் வருட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கைலாசபுரத்திற்கு ரூ.25,000 மதிப்பீட்டில் புதிய ஆழ்குழாய் அமைக்க அனுமதியளிக்கப்பட்டு வேலை தொடங்கப்படும் நிலையில் உள்ளது.

42—

## குடிநீர் வசதி

**வினா எண் 15940—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரம்குளம் ஊராட்சி, செம்பிகுளம் கிராமத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோயியான்குளம் செம்பகுளம் கிராமத்தில் சுமார் 500 பேர் மக்கள்தொகை உள்ளனர். இக்கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இங்கு ஏற்கனவே 5 அடிபம்புகள் நல்லமுறையில் இயங்கி வருகின்ற நிலையில் தற்போது போதிய குடிநீர் வசதி உள்ளது.

43—

## குடிநீர் வசதி

**வினா எண் 15941—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, கோயியான்குளம் இந்திராநகர் பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, கோயியான்குளம், இந்திரா நகரின் மொத்த மக்கள் தொகை



200 ஆகும். இங்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. அதன் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஏற்கனவே ஓர் அடிபம்பு நல்லமுறையில் இயங்கி வருகிறது.

44—

## குடிநீர் வசதி

**வினா எண் 15947—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அடங்கார்குளம் ஊராட்சி, அழகனேரி கிராமத்திலுள்ள குடிநீர்ப் பிரச்சினையத் தீர்த்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அழகனேரி கிராமத்தில் மொத்தம் 500 பேர் வசித்து வருகிறார்கள். இங்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே 4 அடிபம்புகளும் உள்ளன. மேலும் 2002-2003 வருட வறட்சி நிவாரணத் திட்டத்தில் ஒரு புதிய அடிபம்பு அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.

45—

## நூலகம், தெருவிளக்கு மற்றும் சிமெண்டுதளம் அமைத்தல்

**வினா எண் 15948—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு கருங்குளம் ஊராட்சி, நரிப்பாறை கிராமத்தில் பொது நூலகப் பணியினை முடித்திடவும், தெரு விளக்குகள் சீராக எரியவும், தெருக்களில் சிமெண்ட் தளம் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு கருங்குளம் ஊராட்சி, நரிப்பாறை கிராமத்தில் ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டத்திற்கான 2001-2002 ஆம் வருட நிதியிலிருந்து ரூ. 5000/- மதிப்பீட்டில் பொது நூலகக் கட்டடம் கட்டப்பட்டு 27-3-2002-ல் பணிகள் முடிவடைந்து தற்போது நல்ல முறையில் இயங்கி வருகின்றன. ஊராட்சியில் தற்போது தெருவிளக்குகள் அனைத்தும் எரிகின்றன. எனினும், தெருக்கள் அனைத்திற்கும் சிமெண்ட் தளம் அமைக்க தற்போது ஊராட்சியில் நிதி வசதியில்லை.

46—

### குடிநீர் வசதி

**வினா எண் 15951—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், தனக்கர்குளம் ஊராட்சி, கோயியான்குளம் கிராமத்தில் குடிநீர் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், தனக்கர்குளம் ஊராட்சி, கோயியான்குளம் கிராமத்தில் சுமார் 1,000 பேர் உள்ளனர். இக்கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது.



2003 நவம்பர் 3]

அதன் மூலம் தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த் திட்ட குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 4 அடிபம்புகள் உள்ளன. அனைத்தும் நல்லமுறையில் இயங்குகின்றன.

47—

### குடிநீர் வசதி

**வினா எண் 15952—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு கருங்குளம் ஊராட்சி, சங்கனாபுரம் கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு கருங்குளம், சங்கனாபுரம் கிராமத்தில் சுமார் 30,000 பேர் வசித்து வருகின்றனர். இங்கு மொத்தம் 8 அடிபம்புகள் உள்ளன. அனைத்தும் நல்லமுறையில் இயங்குகின்றன. ஊராட்சியின் மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தற்போது குடிநீர் நல்லமுறையில் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

48—

### குடிநீர் வசதி

**வினா எண் 16306—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஜெ.ஜெ. நகரில் பொதுமக்கள் குடிநீரில்லாமல் மிகவும் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர்க் குழாய் அமைத்துக் கொடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறைத் தொகுதி, அங்கலக்குறிச்சி ஊராட்சி, ஜெ.ஜெ.நகரில் ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவில் குடிநீர் மேல்நிலைத்தொட்டி கட்டப்பட்டுப் பொதுக்குழாய்கள் மூலம் ஆற்றுநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. மேலும், இப்பகுதியில் 3 ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டு இப்பகுதியிலுள்ள மக்களுக்குப் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**49—**

## பள்ளியில் விளையாட்டுத்திடல் அமைத்தல்

**வினா எண் 16496—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, தெண்ணாம்பட்டினம் ஊராட்சியிலுள்ள அண்ணப்பன்பேட்டை நடுநிலைப்பள்ளிக்கு விளையாட்டுத்திடல் அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, தெண்ணாம்பட்டினம் ஊராட்சியிலுள்ள அண்ணப்பன்பேட்டை நடுநிலைப்பள்ளிக்கு விளையாட்டுத்திடல் அமைத்துக் கொடுக்க ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



**50—**

## மின்கம்பங்களை மாற்றுதல்

**வினா எண் 17694—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி - வழுதலம்பட்டு கிராமத்தில் இரண்டாவது தெருவில் உள்ள மின்கம்பங்கள் பழுதடைந்துள்ளதால் அவற்றை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதியைச் சேர்ந்த வழுதலம்பட்டு கிராமத்தில் உள்ள தெற்கு, வடக்கு ஆகிய இரு பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள 3 மின்கம்பங்களும் 29-10-2002 அன்று மாற்றப்பட்டுவிட்டன.

**51—**

## புதிய குடிநீர்த் திட்டம்

**வினா எண் 17705—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி - பேய்க்காநத்தம் கிராமத்தில் மிகவும் பழுதடைந்து உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 நவம்பர் 3

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி பேய்க்காநத்தம் கிராமத்தில் தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி பழுதடைந்ததை 2001-2002-ல் சிறுசேமிப்பு ஊக்க நிதியில் ரூ.17,000/- மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்யப்பட்டு நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. மேலும், இக்கிராமத்தில் மக்கள் பங்களிப்புடன் கூடிய ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் புதிய குடிநீர்த் திட்டம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

52—

## குடிநீர்த் திட்டம்

**வினா எண் 17706—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி - வடக்குத்து கிராமத்தில் வடகிழக்கு பகுதிக்குத் தனியாக ஆழ்குழாய் கிணறு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, வடக்குத்து கிராமத்தின் கிழக்குப் பாகத்தில் தற்போது 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி இயக்கத்தில் உள்ளது. அக்கிராமத்தில் வடக்குப் பகுதிக்குத் தனியாக குடிநீர்த் திட்டம் அமைக்க ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்கீழ் பொதுமக்கள் பங்குத்தொகை 10% வசூலித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள ஊராட்சி மன்றத் தலைவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.



2003 நவம்பர் 3]

53—

## கைப்பம்பு அமைத்தல்

**வினா எண் 17707—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி - கட்டியான்குப்பம் கிராமத் தெருவில் கைப்பம்புகள் போதுமான அளவில் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி - கட்டியான்குப்பம் கிராமத்தில் 1 லட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தொட்டி ஒன்று நல்ல நிலையில் இயங்குகிறது. இக்கிராமத்தில் நிலத்தடி நீர் மட்டம் 100 அடிக்கு கீழுள்ளதால் மார்க்-2 கைப்பம்பு அமைக்க வாய்ப்பில்லை.

54—

## கைப்பம்பு அமைத்தல்

**வினா எண் 17720—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி - திருவாமூர் ஊராட்சியில் காமாட்சிப்பேட்டையில் கைப்பம்புகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம் திருவாமூர் ஊராட்சி, காமாட்சிப்பேட்டை கிராமத்தில் புதியதாக கைப்பம்பு அமைக்க

ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு பொதுமக்கள் பங்குத்தொகை செலுத்தியபின் கைப்பம்பு அமைத்துத்தரப்படும்.

55—

**சமையலர் பணியாளர் நியமனம்**

**வினா எண் 18443—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி சீமானூத்து பஞ்சாயத்து பெரிய செம்மேட்டுப்பட்டியில் புதியதாக துவங்கியுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்கு சமையலர் பணியாளர் நியமனம் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெரிய செம்மேட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி சத்துணவு மையத்தில், திருமதி மலர்செல்வி என்பவர் சமையலராகவும், திருமதி பழனியம்மாள் என்பவர் உதவியாளராகவும் 4-9-2002 ஆம் தேதி முதல் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

56—

**கருமகாரியத்திற்குக் கட்டடம்**

**வினா எண் 18892—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே.நகர் தொகுதி 5-வது வட்டத்தில் கருமகாரியம் நடத்த இளைய முதலி தெரு, நாகாத்தம்மன் கோயில் அருகே கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர்.கே.நகர் 5-வது வட்டத்தில் கருமகாரியம் நடத்த இளைய முதலி தெரு, நாகாத்தம்மன் கோயில் அருகே கட்டடம் கட்டித்தர சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமாக இடம் ஏதும் இல்லாததால் கருமகாரியம் நடத்த கட்டடம் கட்டித்தர இயலாத நிலை உள்ளது. மேலும் நாகாத்தம்மன் கோயில் சுற்றுப்புறத்தில் கருமகாரியங்கள் நடத்தும் கட்டடம் ஏதும் இல்லை.

57—

**குடிநீர் வசதி**

**வினா எண் 19625—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், செம்பட்டி பஞ்சாயத்து கட்டத்தேவன்பட்டி 3-வது வார்டு பகுதிக்கு குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், வேப்பனூத்து ஊராட்சி, கட்டதேவன்பட்டியில் 2 கைப்பம்புகளும், 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 2001-2002 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.5.88 லட்சம் மதிப்பீட்டில் 24-7-2002-ல் கட்டி முடிக்கப்பட்டு 10-9-2002 அன்று வேப்பனூத்து ஊராட்சித் தலைவர் வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

58—

## தெரு விளக்கு

**வினா எண் 19693—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், சக்கரப்பநாயக்கனூர் பஞ்சாயத்து மேலப்பெருமாள்பட்டி தேவர் நகர் பகுதி மக்களுக்கு தெரு விளக்கு அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சக்கரப்பநாயக்கனூர் பஞ்சாயத்து மேலப்பெருமாள்பட்டி தேவர் நகர் பகுதியில் ஒரு மின்விளக்கு உள்ளது. ஊராட்சியில் தற்போது போதிய நிதிவசதி இல்லாததால் புதிய தெரு விளக்கு அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

59—

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 20265—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகராட்சியில் 1996-2001 வரை ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எத்தனை ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளது?

*(இ)* ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்க எவ்வளவு செலவாகிறது?





விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம். சேலம் மாநகராட்சியில் 1996-2001 வரை ஆழ்த்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

*(ஆ)* 879 ஆழ்த்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

*(இ)* ஒரு ஆழ்த்துளைக் கிணறு அமைப்பதற்கான செலவு 1996-97 முதல் 1999-2000 வரையிலான காலத்திற்கு ரூ.55,000 என்றும் 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.69,500 என்றும் செலவானது.

60—

## குடிநீர் வசதி

**வினா எண் 20345—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகராட்சிக்குட்பட்ட எல்லா தெருக்களுக்கும் குடிநீர் வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளதா?

*(ஆ)* இல்லை எனில், அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* முன்பு நகராட்சியாக செயல்பட்ட சேலம், மாநகராட்சி நிலைக்கு உயர்த்தப்பட்டதால் இணைக்கப்பட்ட சூரமங்கலம் நகராட்சி, கொண்டலாம்பட்டி, கன்னங்குறிச்சி பேரூராட்சியின் ஒரு பகுதி மற்றும் 21 பஞ்சாயத்துக்கள் ஆகிய அனைத்திற்கும் ரூ.24.84 கோடி திட்ட மதிப்பீட்டுச் செலவில் குடிநீர் வழங்கிட 1998-ல் அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன்படி நரசோதிப்பட்டியில் 20 லட்சம் லிட்டர் கொள்ளளவும் குகை பகுதியில் 10 லட்சம் லிட்டர் கொள்ளளவும் கொண்ட இரண்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளன. இத்திட்டத்தின்கீழ் கட்டப்படவுள்ள மீதமுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டிடவும் பகிர்மானக் குழாய்கள் அமைத்திடவும் தேவைப்படும் நிதியினை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனம் மூலம் பெற்று பணிகள் படிப்படியாக

நிறைவேற்றப்பட உள்ளன எனவும், இந்நிலையில் மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் சீரான முறையில் குடிநீர் வழங்கப்பட்டு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாவண்ணம் மாநகராட்சியின் 5 குடிநீர் லாரிகள் மற்றும் 10 அக்ரோ நிறுவனத்தின் டிராக்டர் டிரெய்லர்கள் மூலமாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

61—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 21110—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி யூனியன், போத்தம்பட்டி பஞ்சாயத்து மலைப்பட்டி தெற்கு பகுதியில் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஒன்றியம், போத்தம்பட்டி பஞ்சாயத்து மலைப்பட்டி தெற்குப் பகுதி தனிக்குடியிருப்பாக இல்லை. இது மலையப்பட்டியின் ஒரு பகுதியாக உள்ளது. இக்குடியிருப்பில் முறையே 15,000 லிட்டர் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுகள் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய 2 மின்னிறைப்பான் திட்டங்கள் 1983 மற்றும் 2000 முதல் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதன்மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஏதும் இக்குடியிருப்பிற்கு தேவைப்படவில்லை.

62—

**தண்ணீர் வசதி**

**வினா எண் 21134—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், மேலக்கடையநல்லூரில் அடிகுழாய் அமைத்து தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், மேலக்கடையநல்லூரில், வறட்சி நிவாரணத்திட்டத்தின்கீழ் மூன்று இடங்களில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 4 இடங்களில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் ஒரு இடத்தில் ஆழ்துளைக் குழாய்க் கிணறும், இரண்டு இடங்களில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளும் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

63—

**தெரு மின் விளக்குகள்**

**வினா எண் 21155—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆவணிப்பேரூர் கீழ்முகத்தைச் சேர்ந்த அண்ணா நகர், காமராஜ் நகர், மசையந் தெரு ஆலமரத்துக்காடு, சாமுண்டி வளவு, முனியன்வளவு, நஞ்சன்வளவு ஆகிய பகுதிகளுக்கு தெரு மின்விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நிதிப் பற்றாக்குறையின் காரணமாக, எடப்பாடி ஒன்றியம், ஆவணிப்பேரூர் கீழ்முகம் ஊராட்சியில் உள்ள அண்ணாநகர், காமராஜ் நகர், மசையந் தெரு ஆலமரத்துக்காடு, சாமுண்டிவளவு, முனியன் வளவு, நஞ்சன்வளவு ஆகிய பகுதிகளுக்குத் தேவையான தெரு மின் விளக்குகள் அமைத்துத்தர இயலவில்லை.

[2003 நவம்பர் 3

64—

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 21186—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு அருகிலுள்ள கீரைக்காடு கிராமம், இக்கிராமத்தில் தற்சமயம் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், வாழவந்தி ஊராட்சிக்குட்பட்ட கீரைக்காடு கிராமத்தில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆழ்துளைக் கிணறு போட்டு குடிதண்ணீர் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

65—

## குடிநீர் வசதி

**வினா எண் 21188—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப்பகுதி கிராமங்களில் குடிநீர் வசதி செய்து கொடுத்தும், ஆனால் அங்குள்ள மக்களுக்கு குடிநீர் வழங்கப்படாமல் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு மலைப் பிரதேசங்களில் 2002-2003 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்மூலம் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியின் மூலம் கீழ்க்கண்ட ஊராட்சிகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது:



2003 நவம்பர் 3]

1. தலைச்சோலை, 2. போட்டுக்காடு, 3. மஞ்சக்குட்டை, 4. செம்மநத்தம், 5. பெரியக்காடு.

**ஒன்றியப் பொது நிதி (திறந்தவெளிக் கிணறுகள்)**

1. நாகலூர், 2. செம்மநத்தம், 3. சோளூர், 4. ஜெரினாக்காடு, 5. வாழுவந்தி, 6. ஆணைக்காடு, 7. கொண்டையனூர்.

பதினோராவது நிதிக் குழு மானியம் மூலம் குடிநீருக்கு முன்னுரிமை அளித்து கிணறு ஆழம் வெட்டவும் பைப்லைன் விஸ்தரிப்பு பணியும் செய்யப்பட்டுள்ளது. அண்மையில் பெய்துள்ள மழையினால் குடிநீர் பற்றாக்குறையைப் போக்கிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

66—

## தொடக்கப் பள்ளிக்கு மின் இணைப்பு

**வினா எண் 21584—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் அம்மன்கோயில்காடு தொடக்கப்பள்ளிக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய தகவல்களை அரசு அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் அம்மன்கோயில்காடு தொடக்கப் பள்ளிக்கு மின் வசதி அமைத்துத்தர எடப்பாடி ஊராட்சி ஒன்றியப் பொதுநிதியில் தற்போது போதிய நிதி வசதி இல்லை.

67—

## கைப்பம்பு அமைத்தல்

**வினா எண் 22005—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சி, நரசிபுரம் மேற்கு தெருவில் கைப்பம்பு அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சி, நரசிபுரம் கிராமத்தில் ஏற்கெனவே 4 கைப்பம்புகள் மற்றும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. மேலும், இங்கு சுமார் 175 வீடுகள் உள்ளன. 865 நபர்கள்தான் உள்ளார்கள். எனவே, மேற்க்காணும் குடிநீர் ஆதாரங்கள் போதுமானதாகும்.

68—

## கைப்பம்பு அமைத்தல்

**வினா எண் 22010—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சி, எட்டிக்குழிக்கு கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சி, எட்டிக்குழிக்கு 2002 ஆம் ஆண்டு 11-வது



நிதிக்குழு மானியத்திலிருந்து ஒரு கைப்பம்பு அமைத்துக் கொடுத்து, அது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

69—

## குடிநீர் வசதி

**வினா எண் 22072—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, எட்டிக்குட்டை கிராமத்தில் போதுமான குடிநீர் வசதியில்லாமலிருப்பது அரசின் கவனத்திற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கூடுதலாக கைப்பம்பு அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், எட்டிக்குட்டை கிராமத்தில் சுமார் 70 வீடுகளில் 350 மக்கள் வசிக்கின்றனர். இந்தக் கிராமத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. இங்கு தற்போது நிலவி வரும் கடும் வறட்சியின் காரணமாக நீர்வரத்து குறைந்து உள்ளது. மேலும் மூன்று கைப்பம்புகள் உள்ளன. இதில் இரண்டு கைப்பம்புகளில் பருவகால வறட்சியின் காரணமாக நீர்வரத்து இல்லை. மற்றொரு ஆழ்துளைக் கிணற்றில் பொதுமக்களுக்கு போதுமான அளவு குடிநீர் கிடைத்து வருகிறது. மேலும், நடப்பாண்டில் 11-வது நிதிக் குழு மானியத்தில் ஒரு திறந்தவெளி பொதுக் கிணறு தூர்வாரி 1½ மீட்டர் ஆழப்படுத்தப்பட்டு அதன்மூலம் பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்க்காணும் குடிநீர் ஆதாரங்களே எட்டிக்குட்டை கிராமத்திற்கு போதுமானதாகும்.

70—

## குடிநீர் வசதி

**வினா எண் 22073—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, மாமரத்துப்பள்ளம் கிராமத்தில் குடிநீர் கஷ்டம் அதிகமாக இருப்பது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கூடுதலாகக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், தித்தியோப்பனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த மாமரத்துப்பள்ளம் கிராமம் மிகச் சிறிய குக்கிராமம் ஆகும். இக்கிராமத்தில் சுமார் 15 வீடுகள் ஒரே இடத்திலும் 10 வீடுகள் பரவலாகவும் உள்ளன. மக்கள் தொகை சுமார் 110 ஆகும். இக்கிராமத்தில் உள்ள ஒரு ஆழ்துளைக் கிணற்றின் மூலம் பொதுமக்களுக்குப் போதுமான அளவு குடிநீர் கிடைத்து வருகிறது. இக்கிராமத்திற்கு தற்போது உள்ள குடிநீர் ஆதாரமே போதுமானதாகும்.

71—

### மின்விளக்கு பழுதுபார்த்தல்

**வினா எண் 22104—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், தாதாபுரம் பஞ்சாயத்திற்குச் சம்பந்தப்பட்ட பூசாரிவளவு, கவுத்துக்காரன்வளவு, மாவிருக்கன்வளவு, கோணஞ்சேவிவளவு, வட்டகாடு, பூவேரியான்வளவு, மோட்டாங்காடுவளவு ஆகிய பகுதிகளிலுள்ள தெரு மின் விளக்குகளை எரிய வைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பூசாரிவளவு பகுதியில் 2 குழல் விளக்குகளும், கவுத்துக்காரன்வளவு பகுதியில் 1 குழல்விளக்கும், மாவிருக்கன்வளவு பகுதியில் 5 குழல் விளக்குகளும் கோணஞ்சேவிவளவு பகுதியில் 4 குழல்விளக்குகளும்



உள்ளன. வட்டக்காடு பகுதியில் ஒரு வீடு மட்டும் உள்ளதால் தெருவிளக்கு அமைக்க வாய்ப்பில்லை. மேலும் பூவேரியான்வளவு பகுதியில் 2 குழல் விளக்குகளும், மோட்டாங்காடுவளவு பகுதியில் 1 குழல்விளக்கும் தற்சமயம் நன்றாக எரிகின்றன.

72—

### தெரு மின்விளக்குகள் பழுதுபார்த்தல்

**வினா எண் 22107—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், தாதாபுரம் கிராமம், மணியகாரபாளையம் அருந்ததியர் தெரு, ஆதிதிராவிடர் தெரு ஆகியவற்றிற்கு தெரு மின்விளக்குகள் போட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, தாதாபுரம் ஊராட்சியில் மணியகாரபாளையத்தில் 4 குழல் விளக்குகளும், அருந்ததியர் தெருவில் 7 குழல் விளக்குகளும் மற்றும் ஆதிதிராவிடர் தெருவில் 8 குழல் விளக்குகளும் தற்சமயம் நல்ல நிலையில் எரிகின்றன.

73—

### தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 22110—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், வேம்பனேரி கிராமம், பொக்கட்டையன்வளவு பகுதியில் தெருவிளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி வட்டாரத்திற்கு உட்பட்ட வேம்பனேரி ஊராட்சியில் உள்ள பொக்கட்டையன்வளவில் தற்சமயம் தெருவிளக்கு இல்லை. ஊராட்சியில் நிதிநிலை மேம்படும்பொழுது முன்னுரிமை அடிப்படையில் தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

74—

**குடிநீர் வசதி**

**வினா எண் 22467—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியிலுள்ள புதுப்பட்டு கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 3751 மக்கள் தொகையுள்ள புதுப்பட்டு ஊராட்சியில் 22 கைப்பம்புகளும், 2 மின்விசை பம்புகளும் உள்ளன. இவை நல்லமுறையில் இயங்கி வருகின்றன. 2002 ஆம் ஆண்டிற்கான வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒரு கைப்பம்பு அமைக்கப்பட்டு வருகிறது. இக்கிராமத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப குடிநீர் வசதி உள்ளது.

75—

**மின்விளக்கு வசதி**

**வினா எண் 22470—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சங்கராபுரம் தொகுதியிலுள்ள புதுப்பட்டு காலனியில் மின்விளக்குகள் வசதி செய்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுப்பட்டு காலனியில் 2 சோடியம் விளக்குகளும் 19 குழல் விளக்குகளும் உள்ளன. மேலும், 6 குழல் விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் போதுமான தெருவிளக்கு வசதி உள்ளது.

76—

**குடிநீர்**

**வினா எண் 22970—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, ஆலமரத்துப்பட்டி மேல்நிலைத் தொட்டிக்கு குடிநீர் வழங்கி வந்த ஆழ்துளைக் கிணற்றில் நீர் வற்றிவிட்டதால் மாற்று ஏற்பாடு செய்து அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சியில் தற்போது வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் ஆலமரத்துப்பட்டியில் கைப்பம்பு ஆழ்துளைக் கிணறு ஒன்று போடப்பட்டுள்ளது. ஏற்கெனவே தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி ஒன்றும் இயங்கி வருகிறது. இங்கு குடிநீர் பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டு உள்ளது.

[2003 நவம்பர் 3

77—

### மின் விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 23094—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வெண்குன்றம் ஊராட்சியில் தேவையான மின் விளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதி, வெண்குன்றம் ஊராட்சியில் தற்போது 72 குழல் விளக்குகளும், ஒரு சோடியம் விளக்கும் அமைக்கப்பட்டுள்ளன. கூடுதலாகத் தெரு விளக்குகள் அமைக்க தற்போது ஊராட்சியில் நிதி வசதி இல்லை.

78—

### குடிநீர் வழங்குதல்

**வினா எண் 23103—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, ஏம்பலம் ஊராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, ஏம்பலம் ஊராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஏம்பலம் கிராமத்திற்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டப்பட்டு, ஒரு திறந்த வெளிக் கிணற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு ஒரு தனி மின் விசைத் திட்டம் மூலம் செயல்பட்டு வருகிறது. மேலும் நல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஏம்பலம் கிராமம் சேர்க்கப்பட்டு ஆற்று நீரும் இக்கிராமத்திற்கு வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.



2003 நவம்பர் 3]

79—

### சிறந்த கிராம ஊராட்சி

**வினா எண் 23326—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எந்தெந்த ஊர் கிராம ஊராட்சியில் சிறந்தது என்று அரசால் தேர்வு செய்யப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2001 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் சிறந்த கிராம ஊராட்சி தேர்வு செய்யப்படவில்லை.

80—

### பாதாளச் சாக்கடை

**வினா எண் 24248—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சியின் 1, 2, 3, 4, 5 வார்டுகளில் பாதாளச் சாக்கடை கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தற்போது சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன. விரைவில் இத்திட்டப் பணிகள் தொடங்கப்படும்.

[2003 நவம்பர் 3

81—

**உயர்நிலைப் பள்ளி**

**வினா எண்24334—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகராட்சி 39-வது வட்டம், வையாபுரி செட்டித் தெருவிலுள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வையாபுரி செட்டித் தெருவிலுள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த போதுமான மாணவர்கள் எண்ணிக்கை இல்லையாதலால் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த இயலாது.

82—

**நிழற்கூடம் அமைத்தல்**

**வினா எண் 26146—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சின்னம்பள்ளியில் பேருந்து நிறுத்தத்தில், பயணிகளின் வசதிக்காக நிழற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி.சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* பேருந்து நிறுத்தத்தில், நிழற்கூடம் அமைக்கும் பணி அரசுத் திட்டத்தில் இல்லை. எனவே, நிழற்கூடம் அமைக்கச் சாத்தியக்கூறு இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.



2003 நவம்பர் 3]

83—

**நிழற்கூடம்**

**வினா எண் 26148—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கவப்பம்பாடி ஊராட்சி, ஆஞ்சநேயர் கோயில் பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் அமைக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* அரசு சார்பில் நிழற்கூடம் அமைக்கும் திட்டம் தற்பொழுது நடைமுறையில் இல்லை. எனவே, நிழற்கூடம் அமைக்கச் சாத்தியக் கூறுகள் இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

84—

**நிழற்கூடம்**

**வினா எண் 26149—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கவப்பம்பாடி ஊராட்சி, கோம்பை பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* அரசுத் திட்டத்தில் நிழற்கூடம் அமைக்கும் திட்டம் தற்பொழுது நடைமுறையில் இல்லை. எனவே, நிழற்கூடம் அமைக்கச் சாத்தியக்கூறு இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

85—

## இரண்டு சக்கர வாகனங்கள்

**வினா எண் 26169—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சித் தலைவர்களுக்கு இரண்டு சக்கர வாகனங்கள் (மொபெட்ஸ்) வழங்கும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சித் தலைவர்களுக்கு இரண்டு சக்கர வாகனங்கள் (மொபெட்ஸ்) வழங்கும் முன்மொழிவுகள் ஏதும் இல்லை.

86—

## சத்துணவுக் கூடம் பராமரிப்புப் பணி

**வினா எண் 26205—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கொல்லப்பட்டி துவக்கப் பள்ளியிலுள்ள சத்துணவுக் கூடம் மிகவும் பழுதுபட்டு உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சி, கொல்லப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி சத்துணவுக் கூட பராமரிப்புப் பணி 2000-2001 ஆம் ஆண்டு 11-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் செய்து முடிக்கப்பட்டுள்ளது.



87—

## புதிய சமையல் அறை

**வினா எண் 26499—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, இருங்கல் மேட்டுக் காலனி சத்துணவுக் கூடத்திற்குப் புதிய சமையல் அறை ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, அனக்காவூர் ஊராட்சி ஒன்றியம், இருங்கல் மேட்டுக் காலனி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு, 2002-2003 ஆம் ஆண்டிற்கு சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இனம் I-ல் புதிய சமையல் அறைக் கட்டடம் ரூ.43,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

88—

## மின் விசை இறைப்பான்

**வினா எண் 26569—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டைத் தொகுதியிலுள்ள, புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் ஊராட்சி, கரையப்பட்டியில் சிறு தொட்டி (மினி டேங்க்) மின்விசை இறைப்பான் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 நவம்பர் 3

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வடவாளம் ஊராட்சியைச் சேர்ந்த, கரையப்பட்டி கிராமத்தில் ஒரு கையிறைப்பானும், ஒரு குழாய் நீட்டிப்பின் மூலமும் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய திட்டம் அமைக்க சிறப்பு அனுமதி அளிக்கப்பட்டு நீராதாரம் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. எனவே, சிறிய மின் இறைப்பான் திட்டம் அமைக்கத் தேவையில்லை.

89—

**கிராமத்தை ஊராட்சியில் சேர்க்கும் திட்டம்**

**வினா எண் 26605—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், சிவநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள கரட்டுப்புதூர் என்கின்ற கரியபெருமாள்புதூர் கிராமத்தைப் போடிநாயக்கன்பட்டி ஊராட்சியில் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், சிவநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள கரட்டுப்புதூர் என்கின்ற கரியபெருமாள்புதூர் கிராமத்தைப் போடிநாயக்கன்பட்டி ஊராட்சியில் சேர்க்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2003 நவம்பர் 3]

90—

**கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் செய்த பணிகள்**

**வினா எண் 27198—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாநகராட்சிக்கு கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(ஆ) அதன் பணி விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாநகராட்சிக்கு கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கிய தொகை ரூ.30,00,000/-.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் சாலை, வடிகால், சிறுபாலம், குடிநீர் பணி, பள்ளிக் கட்டடம் போன்ற வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

91—

**வீதியில் சுற்றித் திரியும் பிராணிகளை அகற்றுதல்**

**வினா எண் 27379—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி நகரிலுள்ள பஜார் வீதியில் சுற்றித் திரியும் மாடு, பன்றி மற்றும் நாய்களையும் அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி நகரில் சுற்றித் திரியும் மாடுகளைப் பிடிக்கவும், பிடிக்கப்பட்ட மாடுகளுக்கு அபராதக் கட்டணம் வசூலிக்கப்படுவதுடன் மாடுகளை வெளியில் திரியவிடக்கூடாது என மாட்டின் சொந்தக்காரர்களுக்கு நகராட்சியால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பிராணிகள் நல நிறுவனத்தின் உதவியுடன் நாய்களை மலடாக்க அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இனப் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்தவும், வெறிநாய்த் தடுப்பூசி போடுவதற்கும் நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பன்றித் தொல்லையைத் தடுக்க பன்றிகள் திறந்தவெளியில் மேயும் நிலையினைத் தவிர்த்து அவற்றினை வளர்ப்போர் வளாகத்திலேயே அடைத்து உரிய தீவனம் அளித்து பொது மக்களுக்கு இடைஞ்சல் தராமல் பராமரிக்கப் பன்றி வளர்ப்போருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

92—

**சூரிய ஒளி விளக்குகளைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 27681—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தொகுதி, வெண்ணந்தூர் ஒன்றியம், கரூர் ஊராட்சி, போதமலையிலுள்ள மேமூர், கெடமலை ஆகிய கிராமங்களில் சூரிய ஒளி மூலம் இயக்கும் தெரு விளக்குகளைப் பழுதுபார்க்கும் திட்டம் அரசின் வசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தொகுதி, வெண்ணந்தூர் ஒன்றியம், கீழூர் ஊராட்சி, போதமலையிலுள்ள மேலூர் மற்றும் கெடமலை ஆகிய கிராமங்களில் சூரிய ஒளி மூலம் இயக்கும் தெரு விளக்குகளைப் பழுதுபார்க்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

93—

**உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்குத் தேர்தல்**

**வினா எண் 28605—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேர்தல் இதுவரை நடைபெறாமல் உள்ள உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்கு (5 ஊராட்சிகள்) தேர்தல் நடத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேல் சாத்தாம்பூர் சிற்றூராட்சிக்கு ஏப்ரல் 2002-ல் தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தேர்தல் இதுவரை நடைபெறாமல் உள்ள மற்ற உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்கு வரும் ஏப்ரல் 2003-ல் தேர்தல்கள் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

94—

## குப்பைமேட்டினை அகற்றுதல்

**வினா எண் 28614—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியில் குப்பைமேடு நகரின் மையப் பகுதியான கிச்சிபாளையம் அருகே உள்ளதை அகற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம், முன்பு நகராட்சியாக இருந்தபோது நகரின் ஒதுக்குப்புறத்தில் இருந்த குப்பைமேடு பின்பு நகரைச் சுற்றியுள்ள பகுதிகள் இணைக்கப்பட்டு மாநகராட்சியாக மாற்றப்பட்டபோது இதே குப்பைமேடு மையப் பகுதியில் அமைந்து விட்டது. பொதுமக்களுக்குச் சுகாதாரப் பாதிப்பு ஏற்படாமலிருக்க மருந்துத் தெளிப்பு மற்றும் மருத்துவச் சிகிச்சை ஆகியவை உள்பட தற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதோடு குப்பைமேட்டினை நகரின் வெளிப்புறப் பகுதிக்கு மாற்றிட சில இடங்கள் கண்டறியப்பட்டு உரிய நடவடிக்கை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

95—

## குடிநீர் வசதி

**வினா எண் 30397—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சிக்கு உட்பட்ட தாசமணியக்காரன்வளவில் கைப்பம்பு அமைத்துக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சி, தாசமணியக்காரன்வளவில் பொதுமக்களுக்கு காவேரி குடிநீர் மேல்நிலைத் தொட்டி மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

96—

## குடிநீர் வசதி

**வினா எண் 30628—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சிக்கு உட்பட்ட தொப்பவளவில் புதிதாகக் கைப்பம்பு அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட சமுத்திரம் ஊராட்சி, தொப்ப வளவுப் பகுதி மக்களுக்கு வறட்சி நிவாரணத் திட்டத்தில் கைப்பம்பு ஆழ்துளைக் கிணறு அமைத்து, உயர்மின் அழுத்தம் கொண்ட மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

97—

## கழிவு நீர் அகற்றுதல்

**வினா எண் 31131—திரு. ராதாரவி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை, (வார்டு 133) எல்லையம்மன் குளக்கரை அருகில் கட்டப்பட்டுள்ள கழிப்பிட நீர் குளத்திற்குள் செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, வார்டு 133-க்கு உட்பட்ட எல்லையம்மன் கோயில் தெரு, குளக்கரை அருகில் கட்டப்பட்டுள்ள கழிப்பிடத்தின் கழிவு நீர், சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தின் கழிவு நீர்க் குழாய் மூலம் இணைக்கப்பட்டு அகற்றப்பட்டு வருகிறது. இக்குளத்திற்கு கழிப்பிடத்திலிருந்து கழிவு நீர் ஏதும் செல்லவில்லை.

**98—**

## உயர்மட்டப் பாலம் அமைத்தல்

**வினா எண் 31136—திரு. ராதாரவி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, சைதாப்பேட்டை, அன்னை சத்தியா நகர் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு கிண்டிப் பகுதிக்குச் செல்ல திண்காரை சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அன்னை சத்தியா நகர் பகுதியில் வசிக்கும் மக்கள் கிண்டி இராணுவக் காலனி செல்ல அடையார் ஆற்றினைக் கடக்க சிறிய உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும் என்ற பொது மக்களின் கோரிக்கையினை ஏற்று ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு தமிழக சமூக





நலத் துறை அமைச்சருமான திருமதி பா. வளர்மதி அவர்கள் தனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 15,00,000/— ஒதுக்கியுள்ளார். இப்பணியினை மேற்கொள்ள நெடுஞ்சாலைத் துறை கேட்டுக் கொள்ளப்பட்டு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

**99—**

## மருத்துவப் பணியாளர் காலியிடங்கள்

**வினா எண் 31152—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, டாக்டர் ஆர்.கே. நகர் தொகுதியிலுள்ள மாநகராட்சி மருத்துவமனைகள் 8-ல் காலியாக உள்ள மருத்துவப் பணியாளர் பணியிடங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சி, ஆர்.கே. நகர் தொகுதிக்குட்பட்ட மருத்துவ மனைகளில் காலியாக உள்ள மருத்துவப் பணியிடங்கள் 47.

**100—**

## மழைநீர் வடிகால்கள்

**வினா எண் 31513—திரு. ராதாரவி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுரங்கப் பாதைகளில் மழைநீர் தேங்காமல் தடுப்பதற்கு அப்பாதைகள் அமைக்கும்போதே உரிய வடிகால்கள் அமைக்கப் பெறாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பஜார் சாலையில் மழைநீர் வடிவதற்கு தக்க இணைப்பு வசதிகள் செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. சமீபத்திய வெள்ளத்தினால் இச்சுரங்கத்தில் மழைநீர்த் தேக்கம் ஏதுமில்லை.

1980-ம் வருடத்தில் அரங்கநாதன் சுரங்கப் பாதையில் மழைநீர் சேகரிப்புக் கிணறு கட்டப்பட்டது. கட்டி முடித்தவுடன் சுரங்கப் பாதையிலிருந்து கிணற்றுக்குக் குழாய் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள முடியாமல் கிணற்றில் நிலத்தடி நீர் சுரப்பு அளவுக்கு அதிகமாக இருந்த காரணத்தினால் சுரங்கப் பாதையினையும் கிணற்றினையும் இணைக்கவில்லை. இருப்பினும் சுரங்கப் பாதையில் சேரும் மழை நீரினை அகற்றுவதற்கேற்றாற்போல் சுரங்கப் பாதையில் இருமருங்கிலும் மழைநீர் சேரும் கிணறு (Collection Well) 3 எண்ணிக்கையில் உள்ளன. ஆனால் அவை அனைத்தும் தூர்ந்து போன நிலையில் இருந்தன. மேலும் அக்கிணறுகள் பயனற்ற நிலையில் இருந்த காரணத்தால் கடந்த 22 ஆண்டுகளில் அக்கிணற்றில் கட்டடக் கழிவுகள், குப்பைகள் போன்ற வேண்டாத பொருட்கள் போடப்பட்டு அக்கிணறுகள் முழுவதும் தூர்க்கப்பட்டன. இருப்பினும் 2002 நவம்பர் 15 முதல் மேற்குறிப்பிட்ட கிணற்றிலுள்ள கட்டடக் கழிவுகள், குப்பைகள் போன்றவை அகற்றப்பட்டு சுமார் ஒரு மாத காலத்திற்குள் மேற்குறிப்பிட்ட மூன்று கிணறுகளும் சுத்தம் செய்யப்பட்டன. மேலும் அந்தச் சுரங்கப் பாதையில் உள்ள இரண்டு மின் மோட்டார்கள் மற்றும் ஆறு டீசல் பம்பு செட்டுகள் பழுது மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் சுரங்கப் பாதையின் உள்ளே அமைந்துள்ள தரைத் தொட்டியிலிருந்து மழை நீர் சேமிப்புக் கிணறுகளுக்கு இணைப்புக் குழாய் வசதிகள் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



## நான்காம் பட்டியல்

**1—**

### வறட்சியான பகுதி அறிவிப்பு

**வினா எண் 24802—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டு பருவமழை தவறியதால், விவசாயம் பாதிப்பு அடைந்து உள்ளது என்று அரசு கண்டறிந்து வறட்சியான பகுதி என்று எந்தெந்தப் பகுதியை அறிவித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில், 87 சதவீதம் மழையளவு பெறப்பட்டுள்ளதால், எப்பகுதியையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என அறிவிக்கத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

**2—**

### கள்ளத்தனமாக முத்திரைத்தாள் விற்பனை

**வினா எண் 24870—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் உரிமம் பெறாமல் கள்ளத்தனமாக முத்திரைத்தாள் அதிக விலைக்கு விற்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இவற்றைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் (மேற்கு) மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உரிமம் பெறாமல் கள்ளத்தனமாக முத்திரைத்தாள் அதிக விலைக்கு விற்பனை செய்வது தொடர்பான வழக்கு ஏதும் இல்லை. இதுவரை அவ்வாறு வழக்குகள் ஏதும் இல்லையாயினும் தற்போது முத்திரைத்தாள் விற்பவர்கள் மீதான திடீர் ஆய்வு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3—

**தூர் வாரும் பணி**

**வினா எண் 24999—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, வேம்பனேரியில் உள்ள ஏரியைத் தூர் எடுத்து, பலப்படுத்தி கரையை விரிவுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, வேம்பனேரியில் உள்ள ஏரியைத் தூர் எடுத்து பலப்படுத்துதல் பற்றி வரும் நிதியாண்டுகளில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்வது தொடர்பாகக் கருத்தில் கொள்ளப்படும்.

4—

**தூர் வாரும் பணி**

**வினா எண் 25001—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) எடப்பாடி தொகுதி, ஆவணிப்பேரூர் கீழ்முகம் ஊராட்சி, கொண்டையம்பாளையம் அணை பழுதடைந்துள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தூர் எடுத்து கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, ஆவணிப் பேரூர் கீழ்முகம் ஊராட்சி, கொண்டையம்பாளையம் அணை என்று ஏதும் இல்லை. கொண்டையம்பட்டி ஏரி மட்டுமே உள்ளது. இந்த ஏரியில் வரும் நிதியாண்டுகளில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப தூர் வாரி புனரமைப்பு செய்வது பற்றி கருத்தில் கொள்ளப்படும்.

5—

**வாரிசுதாரர்களுக்கு வேலை**

**வினா எண் 25046—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பணிக் காலத்தில் மரணம் அடைந்த அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களில் வேலை கோரி விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் இதுவரை எத்தனை பேருக்கு வேலை வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இதுவரை கருணை அடிப்படையில் வேலை கோரி விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 134 ஆகும்.

(ஆ) அதில் 89 நபர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. போதிய கல்வித் தகுதியின்மையால் ஒருவரது மனு நிராகரிக்கப்பட்டு, எஞ்சிய 44 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

6—

**பதிவுத் திருமணம்**

**வினா எண் 25071—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவுத் திருமணம் செய்யும் பதிவுகளை இலவசமாகச் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் இந்துத் திருமணம் சார்-பதிவாளர்களால் பதிவு செய்யப்படுகின்றன. திருமணப் பதிவிற்குக் கட்டணம் ரூ.5/- ஆகும். தனித் திருமணச் சட்டம் பிரிவு 5-ன்கீழ் திருமண அறிவிப்புச் செய்திட ரூ.3/-ம் திருமணம் பதிவு செய்யக் கட்டணம் ரூ.10/-ம் வசூலிக்கப்படுகிறது. இந்தியக் கிறிஸ்தவ திருமணச் சட்டத்தின்கீழ் திருமணங்கள் தேவாலயக் குருமார்களால் முறைப்படுத்தப்படுகின்றன. இந்தியக் கிறிஸ்தவ திருமணச் சட்டம் 1872-ன் பிரிவு 9-ன்படி ஓராண்டு தேடுதல் கட்டணம் ரூ.10/-. சான்று வழங்க ரூ.10/-. இதற்குரிய பதிவுக் கட்டணம் மத குருமார்களாலும் உரிமதாரர்களாலும் பெற்றுக்கொள்ளப் படுகிறது. இவ்வாறாக, திருமணப் பதிவிற்கான கட்டணங்கள் சொற்ப அளவிலேயே உள்ளதால் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவுத் திருமணம் செய்யும் பதிவுகளை இலவசமாகச் செய்துதர கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.





7—

**கலப்பட மதுபான விற்பனை**

**வினா எண் 28115—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதிகளில் மதுபானக் கடைகளில் கலப்படம் செய்து சில கடைகளில் விற்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இதுபற்றி அரசின் கவனத்திற்கு வரவில்லை.

(ஆ) வால்பாறைப் பகுதியில் அமைந்துள்ள மதுபானக் கடைகள் அவ்வப்போது திடீர் தணிக்கைகள் செய்யப்பட்டு வருகின்றன. தணிக்கையின்போது கலப்பட மதுபானம் ஏதும் கண்டு பிடிக்கப்படவில்லை. மேலும் வால்பாறை வட்டத்திலுள்ள அனைத்து மதுபானக் கடைகளிலும் நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இதில் கலப்பட மதுபானம் விற்பனை செய்ய வாய்ப்பில்லை. இருப்பினும் மேற்படிக் கடைகளில் மதுபானங்களில் கலப்படம் செய்து விற்கப்படுகிறதா என அவ்வப்போது தணிக்கையின் போது உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது.

8—

**தார் வாருதல்**

**வினா எண் 29800—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், நெய்வேலி ஊராட்சியில் அமைந்துள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரியை தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதியில் உள்ள நெய்வேலி ஏரியை தூர் வார ரூ.21.30 இலட்சம் தேவைப்படும். இத்திட்டத்தை நபார்டு வங்கி நிதியுதவி திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**9—**

**தூர் வாரும் திட்டம்**

**வினா எண் 29816—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தொகுதி, இராசிபுரம் நகரம், இராசிபுரம் ஏரியில் இருந்து அனைப்பாளையம் ஏரிக்குச் செல்லும் ஓடையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர் வாரும் திட்டம் அரசின் வசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் ஏரியிலிருந்து அனைப்பாளையம் ஏரி வரை செல்லும் ஓடையை தூர் வாரும் திட்டம் தற்போது இல்லை.



2003 நவம்பர் 3]

**10—**

**தூர் வாரும் திட்டம்**

**வினா எண் 29818—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தொகுதி, கொல்லி மலையிலிருந்து குரங்காத்து பல்லம், மூவப்பள்ளிபட்டி, பள்ளக்காடு, நாமகிரிப்பேட்டை ஏரி, காக்காவேரி ஏரி, சிங்களாந்தபுரம் ஏரி வழியாக கதிராநல்லூர் ஏரிக்குச் செல்லும் ஓடையை தூர் எடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**11—**

**முத்திரைத்தாள் விற்பனை இடங்கள் சோதனை**

**வினா எண் 29864—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டு முத்திரைத்தாள் விற்பனை இடங்களை அரசு அதிகாரிகள் திடீரென சோதனை செய்து, எவ்வளவு பேர் மீது வழக்கு தொடரப்பட்டு உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் (மேற்கு) பதிவு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வழக்குகள் ஏதும் தொடரப்பட்டு நிலுவையில் இல்லை. சேலம் கிழக்கு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், 2 வழக்குகளில் முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

12—

**தூர் வாருதல்**

**வினா எண் 29934—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கன்னங்குறிச்சி ஏரியை தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள கன்னங்குறிச்சி ஏரி 1997-98 ஆம் ஆண்டில் ரூ.7.00 இலட்சம் செலவில் தூர் வாரப்பட்டு தற்சமயம் நல்ல நிலையிலுள்ளது.

13—

**தூர் வாரும் பணி**

**வினா எண் 30015—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், நத்தகுளம் பகுதி, ஆணைக்குளம் பெரிய கண்மாயை ஆழப்படுத்தித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆணைக்குளம் பெரிய கண்மாயின் பெரும் பகுதி இதுவரை தூர் வாரி சீரமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகளில் வரும் நிதியாண்டுகளில் தூர் எடுத்து சீரமைப்பது பற்றி கருத்தில் கொள்ளப்படும்.

14—

**கோயில் சொத்துக்களுக்கு வாடகை உரிமம்**

**வினா எண் 24174—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகர் அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள கோயில் சொத்துக்கள், முறையாக வாடகை உரிமம் பெறாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை நகரில் உள்ள திருக்கோயில் சொத்துக்களை முறையாக வாடகை உரிமம் பெறாமல் உள்ளவர்களைக் கண்டறிந்து, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சட்டம் 22/1959 பிரிவு 78-ன்படி ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்களை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

15—

## பக்தர்கள் தங்கும் விடுதி

**வினா எண் 31064—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி வட்டம், மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோயில் மூலமாக பக்தர்கள் தங்க விடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இத்திருக்கோயிலில் 10 அறைகள் கொண்ட சேவார்த்திகள் தங்கும் விடுதியினை ரூ.18.50 இலட்சம் மதிப்பில் கட்ட டெண்டர் அங்கீகரிக்கப்பட்டு, கடந்த 27-2-2003 அன்று பணி துவக்கப்பட்டுள்ளது. இதுதவிர ரூ.4.90 இலட்சம் மதிப்பில் சேவார்த்திகள் தங்குவதற்கு ஷெட் ஒன்றும் கட்டப்படவுள்ளது.

16—

## அன்னதானத் திட்டம்

**வினா எண் 31072—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில்களில் அன்னதானத் திட்டத்திற்கு, சமையல் கூடம், சாப்பாடு கூடம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தந்த கோயில் நிதியிலிருந்து கட்டிட முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அன்னதானத் திட்டம் செயல்பட்டு வரும் திருக்கோயில்களில், திருக்கோயில் வளாகத்திலேயே சுகாதாரமான முறையில் சமையல் செய்து அன்னதானம் வழங்க அறிவுரைகள் வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிதியாதாரம் உள்ள



திருக்கோயில்களில் சமையற் கூடமும், சாப்பாட்டுக் கூடமும் கட்டப்பட்டுள்ளன. எனவே, திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்திற்கு சமையற் கூடம், சாப்பாட்டுக் கூடம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

17—

## வாடகை மூலம் வருமானம்

**வினா எண் 31434—திரு. டி. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான கட்டடங்கள் வாடகைக்கு விடப்படுவதன் மூலமாக அரசுக்கு ஆண்டுதோறும் எவ்வளவு வருமானம் வருகிறது?

(ஆ) வாடகைதாரர்களிடமிருந்து வசூலிக்கப்படாத தொகை ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், இதனை வசூலிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான கட்டடங்கள் வாடகைக்கு விடப்படுவதன் மூலமாக அரசுக்கு ஆண்டுதோறும் ரூ.24,87,027/- வருமானம் வருகிறது.

(ஆ) வாடகைதாரரிடமிருந்து வசூலிக்கப்படாத தொகை ரூ.71,27,872/- உள்ளது.

(இ) நிலுவைத் தொகைகளை வசூலிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நடவடிக்கையில் உள்ளது.

[2003 நவம்பர் 3

18—

### நிலங்கள் மூலம் அரசுக்கு வருவாய்

**வினா எண் 31435—திரு. டி. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் நகர எல்லைக்குள் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமாக எவ்வளவு நிலம் உள்ளது?

(ஆ) அந்நிலங்களில் ஏதேனும் தனியார் கைவசம் உள்ளதா?

(இ) மேற்படி நிலங்கள் மூலம் ஆண்டொன்றுக்கு அரசு பெறும் வருவாய் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) நாகர்கோவில் நகர எல்லைக்குள் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமாக 16.92 ஏக்கர் நிலம் உள்ளது.

(ஆ) இல்லை.

(இ) மேற்படி நிலங்கள் மூலம் ஆண்டொன்றுக்கு அரசு பெறும் வருவாய் ரூ.40,08,207/-

19—

### ஆசிரியர் பணியிடம்

**வினா எண் 10084—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கீழ்ச்சக்கரக்கோட்டையிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணி இடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கீழச்சக்கரை கோட்டையிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியிடம் ஏதும் காலியில்லை.

20—

### கிளை நூலகத்திற்கு கூடுதல் கட்டடம்

**வினா எண் 10201—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரியிலுள்ள கிளை நூலகத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டித் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரியிலுள்ள கிளை நூலகம் இயங்கும் தற்போதுள்ள கட்டடம், புத்தகங்கள் வைப்பதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்கு இடவசதி குறைவாக உள்ளது. எனவே, கூடுதல் கட்டடம் தேவைப்படுகிறது. கூடுதல் கட்டடம் கட்ட காலி மனை பேரூராட்சி மன்றத் தீர்மானம் மூலம் புவனகிரி கிளை நூலகக் கட்டடத்தின் பின்புறம் தென்பகுதியில் உள்ள '20x20' அடி இடத்தினைப் பயன்படுத்திக்கொள்ள பேரூராட்சி மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், காலி மனை நூலக ஆணைக் குழுவிற்கு இன்னும் பத்திரப்பதிவு செய்து தரப்படவில்லை. பத்திரப்பதிவு செய்து கொடுத்த பின்பு, நிதிவசதிக்கேற்ப பொது நூலக இயக்குநரால் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

[2003 நவம்பர் 3

**21—**

### கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 12646—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி நகரில் திருவதிகையிலுள்ள நூலகம் வாடகை கட்டடத்தில் இயங்குவதால் அதற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, திருவதிகை கிளை நூலகம் ரூ. 750/- மாத வாடகையில் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. இந்நூலகத்திற்கு காலி மனை பெறப்படாததால் சொந்தக் கட்டடம் கட்ட இயலவில்லை. இக்கிளை நூலகத்திற்கு காலிமனை வழங்கக்கோரி பண்ருட்டி நகராட்சி ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.*

**22—**

### இடைநிலை ஆசிரியர் நியமனம்

**வினா எண் 13320—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பண்டஅள்ளி மேல்நிலைப் பள்ளியில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளது அரசுக்கு தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பண்டஅள்ளி மேல்நிலைப் பள்ளிக்கு 5 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. காலியாக இருந்த 4 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில், 2001-ல் 2 பணியிடங்களும், 2002-ல் 2 பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. எனவே, மேற்படி பள்ளியில் தற்போதைய நிலவரப்படி இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடம் ஏதுமில்லை.*

**23—**

### தமிழாசிரியர்களை நியமித்தல்

**வினா எண் 16387—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டையிலுள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களை புதியதாகப் பணி நியமனம் செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டையில் ஒரு அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி மற்றும் இரண்டு அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகள், ஆக மொத்தம் 3 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் மொத்தம் 13 தமிழாசிரியர் பணியிடங்கள் உள்ளன. அவற்றில் ஆசிரியர்கள் பணிபுரிந்து வருவதால், காலிப் பணியிடம் ஏதுமில்லை. மேலும் இப்பள்ளிகளில் பள்ளி உதவியாசிரியர் (தமிழ்) பணியிடங்கள் கூடுதலாக தேவை ஏதுமில்லை. எனவே, புதியதாக தமிழாசிரியர்களை நியமனம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.*

24—

## நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்

**வினா எண் 20549—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, செவ்வாத்தூர் புதூர் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக அரசு உயர்த்திக் கொடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி சரகத்திலுள்ள செவ்வாய் புதூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி, மைய/மாநில அரசு நிதி உதவியுடன் நடத்தப்படும் 'சர்வ சிக்ஷா அபியான்' (அனைவருக்கும் கல்வி) எனும் திட்டத்தின்கீழ் நடுநிலைப் பள்ளியாக 2002-2003-ம் கல்வியாண்டிலேயே நிலை உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

25—

## கற்றலின் இனிமைத் திட்டம்

**வினா எண் 20785—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிகளில் "கற்றலின் இனிமைத் திட்டம்" செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அது பயனுள்ளதாக உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஆரம்பப் பள்ளிகளில் "கற்றலின் இனிமைத் திட்டம்" செயல்படுகிறது.



(ஆ) ஆம், பயனுள்ளதாக உள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாவட்டக் கருத்தாளர்களாக 702 பேர்களுக்கும், ஒன்றியக் கருத்தாளர்களாக 3,634 பேர்களுக்கும் யூனிசெப் நிதியுதவியுடன் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. அவர்களைக் கொண்டு இதுவரை 23 மாவட்டங்களில் பணியாற்றும் 87,058 ஆசிரியர்களுக்கு கற்றலின் இனிமைப் பயிற்சி அளிக்கப்பட்டு, இவ்வாசிரியர்களால் ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

26—

## புதிய அரசுப் பள்ளி துவங்குதல்

**வினா எண் 24235—திரு கே.கே. சிவசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், மேலப்பாறைக்குளம் பகுதியில் புதியதாக அரசுப் பள்ளி துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

திருச்சுழி ஒன்றியம், மேலப்பாறைக்குளம் பகுதியில் அரசுப் பள்ளி துவங்கக்கோரி கருத்துரு எதுவும் பெறப்படவில்லை. மேலும், மேலப்பாறைக்குளத்தில் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி ஏற்கெனவே நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

27—

## உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 25647—திரு செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, புதுத் தெரு (கிச்சிப்பாளையம்) நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* இல்லை.

**28—**

**தையல் தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடம் நிரப்புதல்**

**வினா எண் 29804—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* குன்றத்தூர் தொகுதி, அரசுப் பள்ளிகளில் தையல்-தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடம் காலியாக உள்ளது. அப்பணியிடத்தினை நிரப்ப அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* குன்றத்தூர் தொகுதிக்கு உட்பட்ட 5 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 4 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் குன்றத்தூர் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் மட்டும் தையல் தொழிற் கல்வி ஆசிரியர் பணியிடம் உள்ளது. இப்பணியிடமும் நிரப்பப்பட்டு தற்போது தையற் தொழிற் கல்வி ஆசிரியர் பணியிடம் ஏதும் காலியாக இல்லை.

*(ஆ)* வினா எழாது.

**29—**

**பள்ளியில் கழிப்பிட வசதி**

**வினா எண் 33054— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* வால்பாறை தொகுதியில், கோட்டூர் பேரூராட்சி, பொங்காளியூர் நடுநிலைப் பள்ளிக்கு கழிப்பிட வசதி இல்லையென்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது கழிப்பிட வசதி செய்யப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* 11-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளுக்கு கழிப்பிட வசதி செய்துதர ரூ.67,60,000- 2002-2003-க்கான நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு அரசாணை (நிலை) எண் 1, பள்ளிக் கல்வித் துறை, நாள் 3-1-2003 வாயிலாக செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிதி ஒதுக்கீட்டில் வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி நடுநிலைப் பள்ளிக்கு கழிப்பிட வசதி செய்து தரப்படும்.

**30—**

**பள்ளிக்கு தண்ணீர் வசதி**

**வினா எண் 33148—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை மாவட்டம், முக்காணிப்பட்டி பள்ளிக்கு தண்ணீர் வசதி செய்திட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* 11-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, 1,000 தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளுக்கு 2002-2003-ம் நிதியாண்டில் தண்ணீர் வசதி செய்திட அரசாணை (நிலை) எண்1, பள்ளிக் கல்வித் துறை, நாள் 3-1-2003-ன்படி, ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிதி ஒதுக்கீட்டில் புதுக்கோட்டை மாவட்டம், முக்காணிப்பட்டி பள்ளிக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தப்படும்.

31—

## ஆசிரியர் பயிற்சி பெற்ற பார்வையற்றோருக்கு வேலை

**வினா எண் 22380—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டப் படிப்பு முடித்து ஆசிரியர் பயிற்சி பெற்ற எத்தனை கண் பார்வையற்றோருக்கு 2001 டிசம்பர் முடிய அரசு வேலை வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஜனவரி 2001 முதல் டிசம்பர் 2001 முடிய 7 கண் பார்வையற்ற பட்டப் படிப்பு முடித்து ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு அரசு வேலை வழங்கியுள்ளது.

32—

## ஊனமுற்றோருக்கு அரசு வேலைவாய்ப்பு

**வினா எண் 4667—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில், 2001-02 ஆம் ஆண்டில் ஊனமுற்றவர்கள் எத்தனை பேருக்கு அரசு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றது?

(ஆ) அதில் பெண்கள், ஆண்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002-ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 19 ஊனமுற்ற நபர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அவர்களில், பெண்கள் 9 நபர்களுக்கும், ஆண்கள் 10 நபர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.



33—

## சிமெண்ட் களமாக மாற்றுதல்

**வினா எண் 17440—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள பகத்சிங் நகரில் உள்ள களத்தை விற்பனைக் குழுவின் உதவியுடன் சிமெண்ட் களமாக மாற்றிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2002-03 ஆம் நிதியாண்டில் சீர்காழி தொகுதி, எடக்குடி வடபாதி ஊராட்சியில் பகத்சிங் நகரில் உள்ள களத்தை விற்பனைக் குழுவின் உதவியுடன் சிமெண்ட் களமாக மாற்றி அமைக்கும் திட்டம் ஏதுமில்லை. எனினும், 2003-04 ஆம் நிதியாண்டில் மேற்படி இடத்தில் சிமெண்ட் களம் கட்ட நாகப்பட்டினம் விற்பனைக் குழு மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

34—

## உலர்களம் அமைத்தல்

**வினா எண் 26517—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வெள்ளரி வெள்ளி ஒன்றியத்தில் விவசாய விளைபொருட்கள் உலர்த்துவதற்கு களம் ஒன்று அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியிலுள்ள வெள்ளரி வெள்ளி ஒன்றியத்தில் 2003-04 ஆம் நிதியாண்டில் உலர்களம் அமைக்க வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

35—

**சிமெண்ட் களமாக மாற்றுதல்**

**வினா எண் 29409—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சியில் உள்ள ரெங்கசமுத்திரம் களத்தை சிமெண்ட் களமாக மாற்றிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சியில் உள்ள ரெங்கசமுத்திரம் களத்தை சிமெண்ட் களமாக மாற்றும் திட்டம் தற்சமயம் இல்லை. எனினும் மேற்படி இடத்தில் உலர்களம் கட்ட நாகப்பட்டினம் விற்பனைக் குழு மூலம் 2003-2004 ஆம் நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

36—

**பொது உலர்களம் அமைத்தல்**

**வினா எண் 29413—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சீயாளம் ஊராட்சியில் பொது உலர்களம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2003-04 ஆம் நிதியாண்டில் சீயாளம் ஊராட்சியில் பொது உலர்களம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

37—

**ஊற்று நீர் தேக்கம்**

**வினா எண் 33511—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நரப்பாக்கம் கிராமத்தில் ஊற்று நீர் தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நரப்பாக்கம் கிராமத்தில் ஊற்று நீர் தேக்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எண் எழவில்லை.

38—

**விதைச் சான்று பயிற்சி**

**வினா எண் 33897—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியிலுள்ள காட்டாங்கொளத்தூர், திருக்கழுக்குன்றம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் விதைச் சான்று பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செங்கல்பட்டு தொகுதியிலுள்ள காட்டாங்கொளத்தூர் மற்றும் திருக்கழுக்குன்றம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் இந்த ஆண்டு 2003 'மே' மாதத்தில் விதைச் சான்று பற்றிய பயிற்சி அளிக்கப்படும்.

**39—**

### விதைச் சான்று பயிற்சி

**வினா எண் 33898—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியிலுள்ள அனைத்து பேரூராட்சிகளிலும் விதைச்சான்று பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செங்கல்பட்டு தொகுதியில் உள்ள அனைத்து பேரூராட்சிகளிலும் இவ்வாண்டு 2003-2004, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் விதைச் சான்று பற்றிய பயிற்சி அளிக்கப்படும்.





**40—**

### பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

**வினா எண் 21054—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் உள்ள பெண்கள் எத்தனை பேர் அரசு வைப்புத் தொகை வழங்கும் திட்டத்தில் உதவி கோரி மனு செய்து உள்ளார்கள்?

(ஆ) அவற்றில் கடந்த ஆண்டு வரை எத்தனை பேருக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆணை (நிலை) எண் 199, ச.ந.&ச.தி. துறை, நாள், 31-12-2001-ன்படி, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் புத்துயிர் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2001-2002-ஆம் நிதி ஆண்டில் எடப்பாடி நகராட்சியில் இருந்து உதவி கோரி யாரும் விண்ணப்பிக்கவில்லை. 2002-2003 ஆம் நிதியாண்டில் எடப்பாடி நகராட்சியில் இருந்து 8 நபர்கள் இரண்டு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உதவி கோரி விண்ணப்பித்துள்ளனர்.

(ஆ) அவர்களில் இரு நபர்களுக்கு அதாவது 4 (2x2) பயனாளிகளுக்கு வைப்புத் தொகை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 6 நபர்களுக்கு அதாவது 12 (6x2) பயனாளிகளுக்கு 2003-2004ஆம் நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து, முதுநிலை அடிப்படையில் உதவி வழங்கப்படும்.

**41—**

### உடல் ஊனமுற்றோருக்கு இலவசப் பயணச் சலுகை

**வினா எண் 21167—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்க்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

தமிழகத்தில் தனியார் பேருந்துகளில் உடல் ஊனமுற்றோர் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

12-ஆம் வகுப்பு வரை சிறப்புப் பள்ளி மற்றும் இதர பள்ளிகளில் பயிலும் அனைத்து ஊனமுற்ற மாணவ-மாணவியருக்கும் அவர்கள் இருப்பிடத்திலிருந்து பள்ளிக்குச் சென்றுவர எவ்வித நிபந்தனைகளுமின்றி இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. பார்வையற்றோருக்கு நிபந்தனையில்லாமலும், ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகைப்படாமல் உள்ள கை, கால், ஊனமுற்றோர், காது கேளாதோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர் 100 கி.மீ. தொலைவிற்கு மிகைப்படாமல், மருத்துவமனை, கல்லூரி, பயிற்சிக் கூடம், பணிபுரியுமிடம் மற்றும் சுயதொழில் புரியும் இடம் ஆகியவற்றிற்கு சென்றுவர இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகிறது. மனவளர்ச்சி குன்றியோர் தங்களுக்கு உதவியாக ஒருவரை அழைத்துச் செல்ல இலவச பயணச் சலுகை வழங்கப்படுகிறது. மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு இலவசப் பயணச் சலுகை வழங்க வருமான வரம்பு நீக்கப்பட்டுள்ளது. தனியார் பேருந்துகளில் குறைந்தபட்சம் இரு நபர்கள் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்குமாறு உள் துறை செயலர் அவர்களை ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**42—**

## சமுதாய ஊட்டச்சத்து மையங்களுக்கு உதவி

**வினா எண் 22755—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமுதாய ஊட்டச்சத்து மையங்களுக்கு உலக வங்கி உதவி கிடைக்கிறதா?

(ஆ) அது இலவசமான உதவியா? கடனுதவியா?

(இ) ஆமெனில், 2001-2002-ல் தமிழ்நாட்டுக்கு கிடைத்த நிதி உதவி எவ்வளவு?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். சமுதாய ஊட்டச்சத்து மையங்கள் உலக வங்கி உதவியுடன் தமிழகத்தின் 24 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) உலக வங்கியிடமிருந்து மத்திய அரசு மூலமாக இலவசமாக நிதி உதவி பெறப்படுகிறது.

(இ) சமுதாய ஊட்டச்சத்து மையங்களைச் செயல்படுத்த உலக வங்கி நிதி மத்திய அரசு மூலமாக இதுவரை ரூ.26.61 கோடி கிடைக்கப்பெற்று, செலவினம் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**43—**

## உதிஷா பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி

**வினா எண் 22790—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய அளவில் நடத்தப்படும் உதிஷா பயிற்சியாளர்களுக்கு என்ன விதமாக பயிற்சி போதிக்கப்படுகிறது?

(ஆ) அப்பயிற்சி பெற்ற பின் அவர்களது பணி என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1. புத்தாக்கப் பயிற்சி.

2. பணிப் பயிற்சி

3. ஊட்டச்சத்து மற்றும் முன்பருவக் கல்வி தொடர்பான பயிற்சி.

(ஆ) மேற்கண்ட பயிற்சிகள் அனைத்தும் இத்திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சியில் கற்றுக்கொண்டவைகளை செயல்படுத்துவதன் மூலம் திட்டப் பணிகள் மேம்படும்.

44—

## குழந்தைகள் காப்பகங்கள்

**வினா எண் 22795—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நலத் துறை மூலம் குழந்தைகள் காப்பகம் எத்தனை இயங்கி வருகின்றன?

(ஆ) அவற்றிற்கு வருடத்திற்கு எவ்வளவு செலவாகிறது?

(இ) மத்திய அரசின் நிதியுதவி கிடைக்கிறதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) சமூக நலத் துறை மூலம் 25 சத்தியா அம்மையார் நினைவு அரசு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன. அவற்றிற்கு வருடத்திற்கு தோராயமாக ரூ.431.11 இலட்சம் செலவாகின்றது. மாநில அரசால் நடத்தப்படும் அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு மத்திய அரசின் நிதியுதவி கிடைக்கப்பெறுவதில்லை. ஆனால், சமூக நல வாரியத்தின் மூலம் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடக்கும் குழந்தைகள் காப்பகத்திற்கு மத்திய அரசு நிதி உதவி கிடைக்கின்றது.

45—

## பார்வையற்றோரை திருமணம் செய்யும் பார்வையுள்ளோருக்கு அரசு சலுகைகள்

**வினா எண் 22808—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பார்வையற்றோரை திருமணம் செய்துகொள்ளும் பார்வை உள்ளவர்களுக்கு கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு அரசு சலுகைகள் வழங்கப்பட்டன?

(ஆ) அதன் விவரம் என்ன?





**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பார்வையற்றோரை திருமணம் செய்துகொள்ளும் பார்வை உள்ளவர்கள் பின்வரும் சலுகைகளைப் பெறத் தகுதியுள்ளவராகின்றனர்:

(அ) பாராட்டுச் சான்றிதழ்.

(ஆ) திருமணச் செலவிற்காக ரூ.3,000 பண உதவி.

(இ) தேசிய சேமிப்புச் சான்றிதழ் ரூ.7,000.

1987-88 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் 100 தம்பதியர்கள் பயனடைந்துள்ளனர்.

46—

## நலத் திட்டங்கள் குறித்த பிரச்சாரம்

**வினா எண் 27123—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நலத் துறை மூலம் வழங்கப்படும் உதவிகள் பற்றி அனைத்து கிராமப் பணியாளர்களையும் கொண்ட பிரச்சாரக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமூக நலத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் ஏழைப் பெண்களுக்கான உதவித் திட்டங்கள் பற்றிய விவரங்களை கிராமப் பணியாளர்கள் மூலமாகத்தான் கிராம மக்களிடையே தெரிவிக்கப்பட்டு, உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

[2003 நவம்பர் 3

நலத்திட்டங்கள் பற்றி கிராம மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் அவ்வப்போது கிராம அளவிலான கூட்டங்கள், முகாம்கள், கருத்தரங்குகள் இவற்றை கிராமப் பணியாளர்கள் நடத்துகின்றனர். மேலும், மகளிர் மன்றங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் வளர் இளம் பெண்கள் குழு போன்றவை மூலமாகவும் நலத் திட்டங்கள் பற்றிய விவரங்கள் கிராமப் பணியாளர்கள் வாயிலாக மக்களிடையே பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது.

**47—**

**ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்திற்கு இல்லம் கட்டுதல்**

**வினா எண் 32689—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்திற்கு காப்பக இல்லம் கட்டித்தர ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில், ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்திற்கு இல்லம் கட்டுவதற்கு எம்.எல்.ஏ., எம்.பி., தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து தருவதற்கும், இக்காப்பகம் கட்டுவதற்கு நிலம் வேண்டியும், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோருடன் சமூக நல இயக்குநரால் தொடர்புகொள்ளப்பட்டுள்ளது. காப்பகம் கட்டுவதற்கு நிலமும் அரசின் அனுமதியும் பெறப்பட்ட பின்னர், புதுக்கோட்டை ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்திற்கு இல்லம் கட்டுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2003 நவம்பர் 3]

**48—**

**ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி**

**வினா எண் 20398—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி கட்டும் பணிக்கு, 2001-2002 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் ரூ.31.50 இலட்சம் அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கான நில ஒதுக்கீடு ஆணை, நில நிர்வாக ஆணையரிடமிருந்து கிடைத்தவுடன் கட்டடப் பணிகள் துவக்கப்படும்.

**49—**

**மயானப் பாதை வசதி**

**வினா எண் 22722—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சி. கொத்தங்குடி கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு மயான பாதை வசதி செய்து தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் வட்டம், சி. கொத்தங்குடி கிராமத்தில் ரயில்வே பாதைக்கு மேல்புறம் வசிக்கும் ஆதிதிராவிடர் மயானத்திற்குச் செல்வதற்கு பாதை வசதி ஏற்கெனவே உள்ளது. மேற்படி பாதை ரி.ச. எண் 36/1ஏ 3ஏ/1ஏ-யின் வழியாகச் செல்கிறது. அக்கிராம ஆதிதிராவிடர்கள் தற்போது இந்தப் பாதையில்தான் சென்று வருகிறார்கள். சி. கொத்தங்குடி திடல்மேடு பகுதியில் வசிக்கும் ஆதிதிராவிடர்களும் இதே மயானத்தைத்தான் பயன்படுத்தி வருகின்றனர். இவர்கள் மயானத்திற்குச் செல்வதற்கு பாதை வசதி செய்ய வேண்டி உள்ளது. இது தொடர்பாக கிராமத்தில் புலத் தணிக்கை செய்து ரி.ச.எண் 38/2 மேல்புறத்தில் பூமியில் 3 மீட்டர் அகலம் உள்ள மண்பாதை சமீபத்தில் போடப்பட்டுள்ளது. இது தனியாருக்குச் சொந்தமான நன்செய் நிலம் ஆகும். இவர்கள் சமீப காலமாகப் பயன்படுத்தி வரும் ரி.ச.எண்38/2-ல் 0.03.5 ஹெக்டேர் நன்செய் நிலத்தில் பயன்படுத்தி வரும் பாதையை நிலக் கையகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**50—**

## நிலுவையில் உள்ள வழக்குகள்

**வினா எண் 32048—திரு. க. பாரமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டம் 1989-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு 31-3-2002 முடிய நீதிமன்றங்களின் நிலுவையிலுள்ள வழக்குகள் எத்தனை?

(ஆ) அவற்றில், 5 ஆண்டுகளுக்கு மேல் நிலுவையிலுள்ள வழக்குகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1903 வழக்குகள்.

(ஆ) 404 வழக்குகள்.



**51—**

## தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வி உதவித் தொகை

**வினா எண் 33010—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை கிருஷ்ணம்மாள் கல்லூரியில் சென்ற ஆண்டு முதலாம் ஆண்டு படித்து வந்த தாழ்த்தப்பட்டவர்களின் உதவித் தொகை இன்னும் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) உடனடியாக உதவித் தொகை வழங்கப்படுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சென்ற 2001-2002 ஆம் கல்வி ஆண்டில் கோவை கிருஷ்ணம்மாள் பெண்கள் கல்லூரியில் முதலாம் ஆண்டு பயின்ற மாணவிகளுக்கு 2002-2003ஆம் ஆண்டில் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுவிட்டது.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்வி எழவில்லை.

**52—**

## நியாய விலை கடைக்குக் கட்டடம்

**வினா எண் 21020—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமி செட்டிப்பட்டி ஊராட்சி, பங்கு நத்தம் கொட்டாய் நியாய விலை கடைக்கு கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் 397 குடும்ப அட்டைகளுடன் பங்குநத்தம் கொட்டாய் ஒரு பகுதிநேரக் கடையாகச் செயல்பட்டு வருகிறது. அரசு வரையறைகளின்படி பகுதிநேரக் கடைக்கு ஊர்மக்களே இலவசக் கட்டட வசதி செய்து தர வேண்டும். அவ்வாறே ஊர் மக்களால் அப்பகுதிநேரக் கடைக்கு இலவசக் கட்டடம் கட்டப்பட்டு அக்கடை அதில் செயல்படுகிறது.

**53—**

**கூட்டுறவு சிறப்பு அங்காடியில் சிறப்பு விற்பனை பரிசுத் திட்டம்**

**வினா எண் 21243—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடியில் பொங்கல் பண்டிகைக்கு ரூ.500 மதிப்புள்ள பொருட்களை வாங்கியவர்களுக்கு கூப்பன் வழங்கி வியாபாரத்தை அபிவிருத்தி செய்ததைப்போல் மற்ற மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு சிறப்பங்காடிகளில் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் உள்ள பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி மற்றும் அதன் கிளைகளில் விற்பனையை அதிகரிக்கும்பொருட்டு ஒவ்வோர் ஆண்டும் தீபாவளி அல்லது பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு விற்பனை பரிசுத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தி கடந்த நான்கு ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பரிசுத் திட்டம் மூலம் இப்பண்டகசாலையின் விற்பனை பொங்கல் மாதத்தில் கணிசமாக உயர்ந்துள்ளது. இதேபோன்ற திட்டத்தை திருச்சி சிந்தாமணி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையும் கடந்த பல வருடங்களாக தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இராமநாதபுரம், மதுரை மற்றும் திருச்சி அமராவதி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் இம்மாதிரியான திட்டத்தினை அமல் செய்வது குறித்து ஆய்வு செய்துவருவதாகத் தெரிவித்துள்ளன. சில பண்டகசாலைகள் நிதிப் பற்றாக்குறை காரணமாக இம்மாதிரியான திட்டத்தை அமல்படுத்துவதற்கு வாய்ப்பில்லை என்று தெரிவித்துள்ளன.



**54—**

**விவசாயக் கடன்கள்**

**வினா எண் 26449—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் மூலம் கிணறு வெட்ட, பம்புசெட் அமைக்க, நிலச் சீர்திருத்தம் செய்வது போன்றவற்றுக்கு வழங்கப்பட்ட விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிணறு வெட்டுவது, பம்புசெட் அமைப்பது நிலச் சீர்திருத்தம் செய்வது போன்றவற்றால் நிலத்தின் மதிப்பு நிரந்தரமாக உயருகிறது. மேலும், இப்பணிகளுக்கு கடன் வழங்கிய கூட்டுறவு வங்கிகள் நலிவுற்று இருப்பதால் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வது என்பது சாத்தியமில்லை.

[2003 நவம்பர் 3

**55—**

**நியாய விலைக் கடைக்கு கட்டடம்**

**வினா எண் 26493—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி ஒன்றியம், புலிவாய் ஊராட்சிக்கு புதிய கூட்டுறவு கடை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியத்தில் வடநாங்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் புலிவாய் முழுநேர கூட்டுறவு நியாய விலைக் கடை 226 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. புலிவாய் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் தகுதியான நிலம் தேர்வு செய்து நியாய விலைக் கடைக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடநாங்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் தனி அலுவலருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**56—**

**நியாய விலைக் கடைக்குக் கட்டடம்**

**வினா எண் 26507—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, அனக்காவூர் ஒன்றியம், சௌந்தர்யபுரம் நியாய விலைக் கடைக்கு புதிதாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, அனக்காவூர் ஒன்றியம், ஆலந்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் சௌந்தர்யபுரம் நியாய விலைக் கடை 265 குடும்ப அட்டைகளுடன் முழு நேரக்கடையாக செயல்பட்டு வருகிறது. இக்கடை தற்போது ஊராட்சி கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. சௌந்தர்யபுரம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் தகுதியான நிலம் தேர்வு செய்து மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டங்களின்கீழ் நியாய விலைக் கடைக்கான கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆலந்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் தனி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**57—**

**நியாய விலைக் கடைக்கு இலவசக் கட்டடம்**

**வினா எண் 28773—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோணங்கியூரில் நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருவது அரசின் கவனத்திலுள்ளதா?

(ஆ) ஆமெனில், அந்தப் பகுதியில் புறம்போக்கு நிலம் அதிகம் உள்ளதால், அதற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

[2003 நவம்பர் 3

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியிலுள்ள கச்சுப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் கோணங்கியூரில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை செயல்படுகிறது. ஊர்மக்களே இலவச கட்டட வசதி செய்துதர வேண்டும் என்ற நிபந்தனையில்தான் பகுதிநேரக் கடைக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. எனவே, கோணங்கியூரில் இயங்கும் பகுதிநேரக் கடைக்கு அரசு திட்டங்களின்கீழ் இலவச கட்டட வசதி செய்துதர வாய்ப்பில்லை.

58—

**கூட்டுறவுப் பண்டக சாலை மூலம் வருமானம்**

**வினா எண் 30134—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் செயல்பட்டு வரும் அர்பன் கூட்டுறவுப் பண்டகசாலையின் மூலம் அரசுக்கு வரும் வருமானம் எவ்வளவு?

(ஆ) விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகரில் செயல்பட்டுவரும் நகரக் (அர்பன்) கூட்டுறவுப் பண்டகசாலை தமிழ்நாடு கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு நிறுவனமாகும். இதன் மூலம் அரசுக்கு நேரடியான வருமானம் ஏதும் இல்லை.



2003 நவம்பர் 3]

59—

**அங்காடி கட்டடம்**

**வினா எண் 30518—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், முண்ணண்டார் கோவில் ஒன்றியம், தென்னங்குடி பஞ்சாயத்துக்கு அங்காடி கட்டடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், முண்ணண்டார் கோவில் ஒன்றியம், வைத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் தென்னங்குடி நியாய விலை அங்காடிக்கு கட்டடம் கட்ட இலவச இடம் தர ஊராட்சி ஒப்புக்கொண்டுள்ளதால், இந்த அங்காடிக்கு கட்டடம் கட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு புதுக்கோட்டை மண்டல இணைப் பதிவாளரால் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

60—

**புதிய நியாய விலைக் கடை**

**வினா எண் 33255—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், வீரணகுப்பம் ஊராட்சியில் புதிய நியாய விலைக் கடை திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, வீரணகுப்பம் பகுதியில் 335 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை ஏற்கெனவே இயங்கி வருகிறது. தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக உள்ளதால் மேலும் ஒரு புதிய நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

**61—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 1195—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், அல்லிகுண்டம் பஞ்சாயத்து, தும்மலப்பட்டிக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஒன்றியம், அல்லிகுண்டம் ஊராட்சியில் உள்ள தும்மலப்பட்டி குடியிருப்பிற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டு 12-09-2002 முதல் பராமரிப்பிற்காக ஊராட்சி வசம் ஒப்படைப்பட்டு தற்போது மக்கள் பயனில் உள்ளது.*

**62—**

**புதிய குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 1199—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

உசிலம்பட்டி தொகுதி, நல்லுத்தேவன்பட்டி பஞ்சாயத்து, சொக்கநாதபுரம் பகுதியில் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், நல்லுத்தேவன்பட்டி ஊராட்சி, என்.சொக்கநாதபுரம் குடியிருப்பிற்கு ஒரு கையிறைப்பான் மூலம் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டுகளில் தகுதி, தேவை மற்றும் நிதி ஆதார அடிப்படையில் புதிய குடிநீர் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**63—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 10145—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் பல கிராமங்களில் கடுமையாக உள்ள குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில், பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 318 குடியிருப்புகளில் 295 குடியிருப்புகளுக்கு அத்தியாவசிய தேவைக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள பகுதி அளவு குடிநீர் வசதி பெறும் 23 குடியிருப்புகளுக்கு தற்போது மின் விசைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறன்றன.*

*மொத்தமுள்ள 6 பேரூராட்சிகளில் ஏற்கெனவே குடிநீர் வசதி பெற்ற 4 பேரூராட்சிகளைத் தவிர மீதமுள்ள நல்லாம்பட்டி, பெத்தாம்பாளையம், காஞ்சிகோவில் மற்றும் பள்ளப்பாளையம் ஆகிய 4 பேரூராட்சிகளுக்கும், துடுப்பதி, சீனாபுரம், பட்டக்காரன் பாளையம், பெரிய புலியூர் ஆகிய 4*

[2003 நவம்பர் 3

ஊராட்சிகளில் உள்ள 64 குடியிருப்புகளுக்கும் நல்லாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டு ரூ.1247.20 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு அரசு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. திட்டம் முடிவுறும் உத்தேச காலம் 12/2003.

ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 293 குடியிருப்புகளில், 208 குடியிருப்புகளுக்கு அத்தியாவசிய தேவைக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 85 பகுதி அளவு குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளுக்கு தற்போது மின் விசைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், குன்னத்தூர், கொளப்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 76 குடியிருப்புகளுக்கு குடிநீர் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டு, மதிப்பீடு ரூ.77.45 இலட்சங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**64—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 10755—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாலஜங்கமனஅள்ளி ஊராட்சி, வெத்தலத்துப்பள்ளம், கொட்டாயில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பாலஜங்கமனஅள்ளி ஊராட்சி, வெத்தலத்துப்பள்ளம் கொட்டாய் (எ) வெத்தலத்துக்கொட்டாய் குடியிருப்பு மறு ஆய்வுப் பட்டியலில் இடம் பெறாத புதிய குடியிருப்பாகும். இதன் மக்கள் தொகை 50 ஆகும். வாரிய விதிமுறைகளின்படி இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர் திட்டம் அமைக்க வழியில்லை.



2003 நவம்பர் 3]

**65—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம்**

**வினா எண் 12611—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கீழ்மாம்பட்டு ஊராட்சியில் நீர்த்தேக்கத் தொட்டி இருந்தும் போர்வெல் இல்லையாதலால், போர்வெல் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கீழ்மாம்பட்டு ஊராட்சியிலுள்ள கீழ்மாம்பட்டு குடியிருப்பிற்கு மக்கள் பங்களிப்புடன் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின் விசைத் திட்டம் முடிக்கப்பட்டு தற்போது மக்கள் பயனில் உள்ளது.

**66—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 13513—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், ஓஜிஅள்ளி கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், ஓ.ஜி.அள்ளி குடியிருப்பின் குடிநீர் திட்டத்திற்கு மாற்று நீராதாரமாக திறந்தவெளிக் கிணறு உருவாக்கப்பட்டு 6/2002-ல் பராமரிப்பிற்காக ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது இத்திட்டம் மக்கள் பயனில் உள்ளது.

67—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம்**

**வினா எண் 19682—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், நக்கலப்பட்டி பஞ்சாயத்து, முத்துப்பாண்டி பட்டி கருப்பு கோவிலில் அடிகுழாய் (Bore Well) அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இக்குடியிருப்பில் அடிகுழாய் பொருத்திய ஆழ்குழாய் கிணறுகள் 4 உள்ளன. தவிரவும் இக்குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் 1989 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு தற்போது பயனில் உள்ளது. இத்திட்டங்களின் மூலம் தற்பொழுது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

68—

**ஆழ்குழாய்க் கிணறு**

**வினா எண் 19683—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நக்கலப்பட்டி பஞ்சாயத்து, மகாலிங்க நாடார் வீதியில் அடிகுழாய் (Bore Well) அமைத்துத் தர அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மகாலிங்க நாடார் பகுதி, நக்கலப்பட்டி குடியிருப்பில் ஒரு புதிய பகுதியாகும். இக்குடியிருப்பில் அடிகுழாய் பொருத்திய ஆழ்குழாய் கிணறுகள் 10 உள்ளன. தவிரவும் இக்குடியிருப்பிற்கு 1998ஆம் ஆண்டு முதல் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் மூலம் தற்பொழுது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

69—

**குடிநீர் அபிவிருத்தித் திட்டம்**

**வினா எண் 21112—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி நகராட்சி, 9-வது வார்டு, கருக்கட்டான்பட்டி பகுதியின் குடிதண்ணீர் பற்றாக்குறையை களைய அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி நகராட்சி, கருக்கட்டான்பட்டி (9-வது வார்டு) மக்கட்தொகை 1500 ஆகும். தற்பொழுது வைகை ஆற்றை நீராதாரமாகக் கொண்டு பயனில் உள்ள குடிநீர்த் திட்டத்திலிருந்தும் கருக்கட்டான்பட்டிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், 150 மி.மீ. விட்டமுள்ள ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு 1000 லிட்டர் கொள்ளளவு சின்டெக்ஸ் தொட்டிக்கு நீர் இறைப்பான் மூலம் நீர் ஏற்றி தல விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், ஐந்து கையிறைப்பான்கள் இயக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் மூலம் இப்பகுதிக்கு தற்போது தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு

[2003 நவம்பர் 3

வருகிறது. உசிலம்பட்டி நகராட்சிப் பகுதியில் தற்போது நிலவும் குடிநீர் பற்றாக்குறையை முழுமையாக நிவர்த்தி செய்யும் வகையில் உசிலம்பட்டி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.290.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின் 80 விழுக்காடு பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 31-3-2003-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் பயனுக்குக் கொண்டு வரப்படும்போது கருக்கட்டான்பட்டிக்கு முழு அளவு குடிநீர் தினந்தோறும் வழங்கப்படும். மேலும், இந்நகராட்சிக்கு சேடப்பட்டி-ஆண்டிப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இருந்தும் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**70—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 21187—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், ஏற்காடு மலைக்கு அருகிலுள்ள கிரைக்காடு கிராமத்தில் குடிநீர் மேல்நிலைத்தொட்டி கட்டி நீண்ட நாட்கள் ஆகியும் மேல்நிலைத்தொட்டிக்கு குடிநீர் ஏற்றவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், உடனடியாக குடிநீர் ஏற்றி சீராக குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், வாழவந்தி ஊராட்சிக்குட்பட்ட கிரைக்காடு குக்கிராமத்தில் குடிநீர் வடிகால் வாரியம் (புளோரைடு) மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, அந்த ஆழ்துளைக் கிணறு மூலம் தண்ணீர் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. தற்போது வறட்சியினால் அதில் தண்ணீர் இல்லை. இக்கிராமத்திற்கு திறந்தவெளிக் கிணறு உள்ளது. அதன் மூலம் தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது.



2003 நவம்பர் 3]

**71—**

**மேல்நிலைத் தொட்டி**

**வினா எண் 22423—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் கிராமம், புளியம்பட்டியில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆமெனில், அது பற்றிய தகவல்களை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட புளியம்பட்டிக்கு கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் தனியாக மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க திட்டம் நிறைவேற்றப்பட்டு, தற்போது மக்கள் பயனில் உள்ளது.

**72—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம்**

**வினா எண் 22457—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புவனகிரி தொகுதி, அகர ஆலம்பாடியில் 1973-ல் கட்டப்பட்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதை சீர் செய்து செப்பனிடும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகர ஆலம்பாடி கிராமத்தில் 1973-ல் கட்டப்பட்ட நீரேற்று அறையுடன் சேர்ந்த 9000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்து சீர் செய்ய இயலாத நிலையில் உள்ளதால் அதை செப்பனிடும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை. அதற்குப் பதிலாக 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய புதிய மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

73—

**சிறு மின்விசைத் திட்டம்**

**வினா எண் 22613—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அணைக்கரை ஊராட்சி, ஆந்திரா குடியிருப்புப் பகுதியில் குடிநீர் பிரச்சினை அதிக அளவில் உள்ளதால் ஜி.எல்.ஆர். கட்டி குடிநீர் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், அணைக்கரை ஊராட்சி, ஆந்திரா குடியிருப்பிற்கு 2002 ஆம் நிதியாண்டில் சிறு மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

74—

**கிராமத்தை ஊராட்சியில் சேர்த்தல்**

**வினா எண் 26605—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், சிவநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள கரட்டுப்புதூர் என்கின்ற சுரியபெருமாள் புதூர் கிராமத்தை போடிநாயக்கன்பட்டி ஊராட்சியில் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், சிவநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள கரட்டுப்புதூர் என்கின்ற சுரியபெருமாள் புதூர் கிராமத்தை போடிநாயக்கன்பட்டி ஊராட்சியில் சேர்க்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எண் எழவில்லை.

75—

**கால்நடை துணை மருத்துவ நிலையம்**

**வினா எண் 20862—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி-அழகப்ப சமுத்திரம் கிராமத்தில் கால்நடை துணை மருத்துவ நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

[2003 நவம்பர் 3

76—

## பசுமாடுகள் இறக்குமதி

**வினா எண் 21757—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திற்கு ஜெர்மன் நாட்டிலிருந்து பசுமாடுகள் ஏதேனும் இறக்குமதி செய்யப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்திற்கு ஜெர்மன் நாட்டிலிருந்து பசுமாடுகள் ஏதும் இதுவரை இறக்குமதி செய்யப்படவில்லை.

(ஆ) எழாது.

77—

## பசுமாடுகள் வாங்குதல்

**வினா எண் 21758—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்திற்கு வெளிநாட்டிலிருந்து எத்தனை பசுமாடுகள் வாங்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டத்திற்கு வெளிநாட்டிலிருந்து இதுவரை பசுமாடுகள் ஏதும் வாங்கப்படவில்லை.



2003 நவம்பர் 3]

78—

## கால்நடை மருத்துவர்கள் நியமனத்தில் ஒதுக்கீடுமுறை

**வினா எண் 30223—திரு. க. பாரமலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை ஆய்வாளர்களாகப் பணிபுரிந்து பி.வி.எஸ்.சி. பட்டம் பெற்றவர்களை கால்நடை உதவி மருத்துவர்களாக 2002 ஆம் ஆண்டு நியமனம் செய்திருப்பதில் "ஒதுக்கீடுமுறை" பின்பற்றப்பட்டிருக்கிறதா?

(ஆ) ஆமெனில், அதில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (எஸ்சி/எஸ்.டி.) எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கால்நடை ஆய்வாளர்கள் ஏற்கெனவே சுழற்சி முறையில் துறையில் பணி நியமனம் செய்யப்பட்ட பிறகு சிலர் (20 கால்நடை ஆய்வாளர்கள்) பி.வி.எஸ்.சி. பட்டம் பெற்றுள்ளதால் அவர்களை கால்நடை உதவி மருத்துவர்களாக பணி நியமனம் செய்தபோது ஒதுக்கீடுமுறை பின்பற்றப்படவில்லை.

(ஆ) கேள்வி எழாது.

79—

## கால்நடை மருத்துவர்கள் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 33773—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள கால்நடை மருத்துவர்களின் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நிரப்பப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள ஒரு கால்நடை மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட ஒரு கால்நடை மருத்துவர் பதவியும், 11 கால்நடை மருந்தகங்களுக்குரிய 11 கால்நடை உதவி மருத்துவர் பதவிகளும் நிரப்பப்பட்டுள்ளன. ஆனால், சேதுபாவாசத்திரம் மற்றும் பேராவூரணி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர் பதவிகள் மட்டுமே காலியாக உள்ளன. இக்காலிப் பணியிடங்களுக்கு விருப்ப மாறுதல் கோரி கால்நடை உதவி மருத்துவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் மாறுதல் வழங்கி மேற்படி பணியிடங்கள் நிரப்பப்படும்.

**80—**

**ஜெர்சி மாடு வாங்க கடன் உதவி**

**வினா எண் 33964—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், ஓலாங்கால் பகுதியில் ஜெர்சி மாடு கடன் உதவி கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், ஓலாங்கால் பகுதியில் ஜெர்சி மாடு கடன் உதவி கேட்டு விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.



**81—**

**பசுமாடு வாங்க கடன்**

**வினா எண் 37949—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, விவசாய பெண்களுக்கு குழு அமைத்து அவர்களுக்கு உயர்ந்த பசுமாடுகளை வாங்கவும், நீண்டகால கடனுக்கு கால்நடை அபிவிருத்தி செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) விவசாய பெண்களுக்கு குழு அமைத்து உயர்ந்த பசு மாடுகள் வாங்க நீண்டகால கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எண் எழாது.

**82—**

**கிராமங்களைத் தத்து எடுத்தல்**

**வினா எண் 21001—திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மரம் நடும் திட்டத்தின்கீழ் பரமக்குடி தொகுதியில் 10 கிராமங்களை தத்து எடுத்து செயல்படுத்தவும், அக்கிராமங்களில் சுற்றுச்சூழல் கிளப் (எக்கோ கிளப்) ஏற்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

[2003 நவம்பர் 3

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இடத்தில் காப்புக் காடுகள் இல்லை. தரம் தாழ்ந்த காப்புக்காடுகளில்தான் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதனால் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பரமக்குடி தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் சுற்றுச் சூழல் கிளப் ஏற்படுத்த இயலாது. ஆனால் தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டத்தின்கீழ் சமுதாய நிலங்களை பசுமையாக்கும் இனத்தில் 40 எக்டேர் பரப்பளவில் தோட்டம் 2003-2004 ஆம் ஆண்டில் எழுப்பப்பட உள்ளது.

பரமக்குடியில் 5 மேல்நிலைப் பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 5 மேல்நிலைப் பள்ளிகளிலும், ஒரு உயர்நிலைப் பள்ளியிலும் தேசிய பசுமைப்படை திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதியுதவியுடன் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்த சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**83—**

### மரக்கன்றுகள் நடுதல்

**வினா எண் 21062—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்பகுதிகளில் புறம்போக்கு நிலங்களில், ஓடைகளில், ஏரிப்பகுதிகளில் காடு வளர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி, வேலூர்,



2003 நவம்பர் 3]

திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 10 மாவட்டங்களில் மொத்தம் 3,100 எக்டேர் பரப்பளவில் 100 குளக்கரைகளில் வேம்பு, வாகை, சிசு, புளி, புங்கை, தைலம், சுபாபுல், சவுக்கு, ஆவி மற்றும் சிமருபா கிளாக்கா போன்ற மரக்கன்றுகள் 2003-2004 ஆம் ஆண்டில் நடவு செய்ய ரூ.350 இலட்சம் ஒப்பளிப்பு செய்து, 4-4-2003 ஆம் நாளிட்ட அரசாணை (டி) எண்34-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**84—**

### நீர்வழித் தடங்களைத் தூய்மைப்படுத்தல்

**வினா எண் 21063—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள நதிநீர் வழிகளை தூய்மைப்படுத்த மத்திய அரசு நிதி உதவி வழங்கி உள்ளதா? எவ்வளவு?

(ஆ) ஆம் எனில், தூய்மைப்படுத்தும் நதிகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். சென்னை நகரின் நீர்வழித்தடங்களை தூய்மைப்படுத்திட ஒருங்கிணைந்த திட்டம் ரூ.1,700 கோடிக்கு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. இதில் கழிவுநீரைத் தடுத்து நிறுத்தி சுத்திகரிப்பு நிலையம் அமைத்து சுத்திகரிக்கும் பணிகளுக்காக ரூ.491.52 கோடியினை மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் மானியமாக வழங்க ஒப்புதலளித்துள்ளது. இப்பணி சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை மத்திய அரசு வழங்கியுள்ள தொகை ரூ.104.58 கோடியாகும். மேற்கொண்டு ரூ.228.63 கோடியினை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது. இதேபோல தூர்வாரும் பணிகள் பொதுப்பணித் துறையின் மூலமும் அகற்றப்படும். ஆற்றோர குடிசைவாசிகளுக்கு மாற்றிடம் தரும் பணி குடிசை மாற்று வாரியம் மூலமும், நீர்வடிகால் அமைக்கும் பணிகள்

[2003 நவம்பர் 3

சென்னை மாநகராட்சி மூலமாகவும் அவரவர் திட்டப் பணிகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் தூய்மைப்படுத்தப்பட்டுள்ள நதிகள்/ நீர்வழிகள் பின்வருமாறு:-

1. அடையாறு
2. கூவம்
3. பக்கிங்காம் கால்வாய்
4. ஓட்டேரி ஓடை
5. கேப்டன் காட்டன் கால்வாய்
6. மாம்பலம் கால்வாய்

இத்திட்டத்தின்கீழ் உள்ள 16 துணைத் திட்டங்களில் பத்து துணைத் திட்டங்களில் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. இரண்டு துணைத் திட்டங்களுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளன. மீதமுள்ள நான்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் துணைத் திட்டங்களுக்கும் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளது. இத்திட்டப் பணிகள் மார்ச் 2005-க்குள் செயல்படுத்தப்பட்டு சென்னை நகர நீர்வழிகள் தூய்மைப்படுத்தப்படும்.

**85—**

**மரக்கன்றுகள் நடுதல்**

**வினா எண் 21518—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிப் பகுதியிலுள்ள பெரிய ஏரியில் புதிய மரங்களை நட்டு வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டம் உட்பட 10 மாவட்டங்களில் 3100 எக்டேரில் கிட்டத்தட்ட 100 குளக்கரைகளின் மேல் பகுதிகளில் ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் மரக்கன்றுகளை நடவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**86—**

**கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகள் நிறுவப்படாத சாயப்பட்டறை உரிமையாளர் மீது நடவடிக்கை**

**வினா எண் 21524—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் பள்ளிபாளையம் மற்றும் கொமரபாளையம் ஆகிய இடங்களில் சாயப்பட்டறையிலிருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்தம் செய்யும் ஆலை நிறுவப்படாத சாயப்பட்டறை உரிமையாளர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) அப்பகுதிகளில் எத்தனை கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தில், பள்ளிபாளையம் மற்றும் கொமரபாளையம் பகுதிகளில் மொத்தம் 232 சலவை மற்றும் சாயப்பட்டறைகள் அமைந்துள்ளன. அவற்றில் 130 சலவை மற்றும் சாயப்பட்டறைகளில் சுத்திகரிப்பு கழிவுநீர் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுத்திகரிப்பு நிலையம் கட்டப்படாத 102 பட்டறைகளில், 77 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளுக்கு மூடுதல்

உத்தரவு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் வழங்கப்பட்டு, அப்பட்டறைகளில் மின்இணைப்பும் துண்டிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 25 பட்டறைகள் மீதும், மூடுவதற்காக வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேலும், சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் இயக்கத்தினையும் வாரியத்தினால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

**87—**

## விவசாயிகளுக்கு நிலப்பட்டா வழங்குதல்

**வினா எண் 21616—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காடு, கல்வராயன்மலை, கலியல், வலியல், ஏலா ஆகிய இடங்களில் வனச்சட்டம் வரும் முன்னரே குடியிருந்துவரும் விவசாயிகளுக்கு நிலப்பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம் ஏற்காடு, கல்வராயன்மலை, கலியல், வலியல், ஏலா ஆகிய இடங்களில் உள்ள காப்புக்காடுகள் ஏற்கெனவே அரசால் தமிழ்நாடு வனச்சட்டம் 1882 பிரிவு 16-ன்படி காப்புக்காடாக அறிவிக்கை செய்யப்பட்ட பகுதியாகும். இவ்வாறு காப்பு வனமாக அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களை வனமல்லாத உபயோகத்திற்கு மாற்றம் செய்ய இயலாது. மேலும் மத்திய அரசின் 1980ஆம் ஆண்டு வனப்பாதுகாப்பு சட்டத்தின்படியும் நீதிப்பேராணை எண் 202/95-ல், உச்சநீதிமன்றம் 12-12-96 அன்று அளித்த ஆணையின்படியும் வன நிலங்களை வனமல்லாத பிற உபயோகத்திற்கு மாற்றம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. வனமல்லாத நிலங்களை காப்பு வனமாக, அறிவிக்கை செய்வதற்கு முன்பு அரசால் வருவாய் துறை அலுவலரை வன நிர்ணய அலுவலராக





நியமிக்கப்பட்டு வனச்சட்ட விதிகளின்படி பெறப்பட்ட மனுக்கள் ஏதும் இருப்பின் அவற்றை உரிய விசாரணை மேற்கொண்டு அதன்பிறகு முடிவாக காப்பு வனமாக அறிவிக்கை செய்யப்படுகிறது. மேற்கூறிய காரணங்களால் மேற்கண்ட இடங்களில் குடியிருந்துவரும் விவசாயிகளுக்கு பட்டா வழங்க இயலாது.

**88—**

## காடு வளர்ப்புத் திட்டம்

**வினா எண் 31059—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, காரை ஊராட்சி காடுகளில் காடு வளர்ப்புத் திட்டத்தில் 2001-2002 திட்டத்தில் செயல்பட்ட பணிகள் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

செஞ்சி தொகுதி, காரை ஊராட்சியைச் சேர்ந்த காப்புக் காட்டினை ஒட்டியுள்ள பகுதியில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கொசப்பாளையம் திட்ட கிராமமாக 2001 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டது. இத்திட்ட கிராமத்தின் அருகில் உள்ள காப்புக் காட்டில் 330 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 26.73 இலட்சங்கள் செலவில் மரம் வளர்க்கும் மற்றும் மண் வனப்பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் அப்பகுதி கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. மேலும் இத்திட்ட கிராம மக்களின் நலனுக்காக கீழ்க்காணும் பணிகள் செய்யப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 1. வனமகளிர் மன்றம் அமைத்தல் | ரூ. 10,000 |
| 2. விசை தெளிப்பான் | ரூ. 25,200 |
| 3. கறவை மாடுகள் வழங்குதல் | ரூ. 1,20,000 |
| 4. தானியக்களம் அமைத்தல் | ரூ. 1,41,248 |
| மொத்தம் .. | ரூ. 2,96,448 |

[2003 நவம்பர் 3

இக்கிராமத்தில் நீர் வளத்தை மேம்படுத்த கீழ்க்காணும் பணிகள் செய்யப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| (1) சிறுபாசன ஏரி மேம்பாடு | ரூ. 3,95,780 |
| (2) கசிவு நீர்க்குட்டை | ரூ. 7,48,973 |
| (3) அய்யனார் கோவில் குளம் மேம்பாடு | ரூ. 65,134 |
| மொத்தம் .. | ரூ. 12,09,887 |

89—

**பாதுகாக்கப்பட்ட சமூகக் காடுகள்**

**வினா எண் 35114—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் முதலைமேட்டில் 51.07 ஹெக்டேரிலும் அளக்குடியில் 183 ஹெக்டேரிலும் பாதுகாக்கப்பட்ட சமூக காடுகள் திட்டம் (Reserved Forest) உள்ளதால் அவ்விடத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேக்கு, சவுக்கு கன்றுகள் பயிரிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



2003 நவம்பர் 3]

90—

**பாதுகாக்கப்பட்ட சமூகக் காடுகள்**

**வினா எண் 35116—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் கொடியம்பாளையம் 73.60 ஹெக்டேரிலும், கோபாசமுத்திரம் 170.66 ஹெக்டேரிலும் பாதுகாக்கப்பட்ட சமூகக்காடுகள் திட்டம் (Reserved Forest) உள்ள இடத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேக்கு, சவுக்கு கன்றுகள் பயிரிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

91—

**கையகப்படுத்திய நிலங்கள்**

**வினா எண் 12305—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்திய நிலங்கள் எத்தனை ஏக்கர்?

(ஆ) கையகப்படுத்திய நிலங்களில் எவ்வளவு பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வீடு கட்டியுள்ளது?

(இ) மீதமுள்ள நிலங்கள் எவ்வளவு?

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடியில் வீட்டு வசதி வாரியம் இதுவரை கையகப்படுத்திய மொத்த நிலப்பரப்பு 86.20 ஏக்கர்.

(ஆ) கையகப்படுத்திய நிலப்பரப்பில் வாரியத் திட்டங்கள் செயல்படுத்திய நிலங்களின் பரப்பு 24.83 ஏக்கர்.

(இ) மீதமுள்ள 61.37 ஏக்கர் நிலத்தில் இனிவரும் காலங்களில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**92—**

**புதிய வீடுகள் கட்டுதல்**

**வினா எண் 22430—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியப் பகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் புதிய வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2003 நவம்பர் 3]

**93—**

**வீட்டு மனைகளுக்கு வட்டி குறைத்தல்**

**வினா எண் 33162—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வழங்கப்பட்ட வீட்டு மனைகளுக்கு நிலுவை தொகை வட்டி சதவீதம் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**94—**

**கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்பனை செய்த துணிகளின் மதிப்பு**

**வினா எண் 27185—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கோ-ஆப்டெக்ஸ் மூலம் கடந்த ஆண்டு விற்பனை செய்யப்பட்ட துணிகளின் மதிப்பு எவ்வளவு?

[2003 நவம்பர் 3

(ஆ) மேலும் விற்பனையை ஊக்குவிக்க புதிய திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களின் மூலமாக கடந்த ஆண்டு (2001-2002) ரூ. 190.12 கோடி மதிப்புள்ள துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

(ஆ) நுகர்வோரின் ரசனை மற்றும் விருப்பத்திற்கு ஏற்பவும், சந்தையில் நிலவும் போட்டியைக் கருத்திற்கொண்டும் புதிய வடிவமைப்புகள் மற்றும் நிறங்களைக் கொண்டு பருத்தி மற்றும் பட்டுச் சேலைகளை சென்னை தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனம் மற்றும் அகமதாபாத்/பெங்களூர் தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனம் மூலம் உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் கோ-ஆப்டெக்ஸால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**95—**

### தீன்தயாள் ஹத்கர்கா புராட்சாஹான் யோஜனா திட்டம்

**வினா எண் 31871—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தீன்தயாள் ஹத்கர்கா புராட்சாஹான் யோஜனா திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எவ்வளவு?



2003 நவம்பர் 3]

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் தீன்தயாள் ஹத்கர்கா புராட்சாஹான் யோஜனா திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் இதுவரை 27 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 1891 கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

**96—**

### மீனவர்களுக்கு இலவச வீடுகள்

**வினா எண் 20431—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆலமஞ்சிக்காடு, முத்துக்குடா, ஆர். புதுப்பட்டினம், மீமிசல், செல்லனேந்தல், ஜெகதாப்பட்டினம், ஆவுடையார்பட்டினம், பொன்னகரம், வடக்கு அம்மாபட்டினம், கட்டுமாவடி கிராமங்களில் மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தர திட்டம் ஏதேனும் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதிக்குட்பட்ட முத்துக்குடா கிராமத்திற்கு 50 வீடுகளும், ஆர். புதுப்பட்டினம் கிராமத்திற்கு 68 வீடுகளும், செல்லனேந்தல் கிராமத்திற்கு 75 வீடுகளும், பொன்னகரம் கிராமத்திற்கு 125 வீடுகளும், வடக்கு அம்மாபட்டினம் கிராமத்திற்கு 125 வீடுகளும், கட்டுமாவடி கிராமத்திற்கு 50 வீடுகளும்,

[2003 நவம்பர் 3

ஜெகதாப்பட்டினம் கிராமத்திற்கு 50 வீடுகளும், சென்ற 2001-2002 ஆம் ஆண்டு வரையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இத்தொகுதிக்குட்பட்ட ஆலமஞ்சிக்காடு, மீமிசல் மற்றும் ஆவுடையார்பட்டினம் ஆகிய கிராமங்களுக்கு வரும் ஆண்டுகளில் வரையறுக்கப்பட்ட தகுதிகள் மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் பரிந்துரை பெறப்பட்டால், வீடுகள் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

97—

## உள்நாட்டு மீன் வகைகள் உற்பத்தி

**வினா எண் 31039—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள நீர்நிலைகளில் எத்தனை வகையான மீன்கள் உற்பத்தியாகின்றன?

(ஆ) அவை உள்ளூர் தேவையை நிறைவு செய்ய போதுமானதாக உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள நீர்நிலைகளில் சுமார் 63 வகையான உள்நாட்டு மீன்வகைகள் உற்பத்தியாகின்றன. அவைகளில் முக்கியமானவை பெருங்கெண்டை இனங்களான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாக்கெண்டை ஆகியவை.

(ஆ) இல்லை.



2003 நவம்பர் 3]

98—

## கயல் ரோந்துப் படகு

**வினா எண் 32834—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினத்தில் அரசின் மீன்வளத் துறையில் கயல் போன்ற படகு ஒரு கோடி ரூபாயில் வாங்கப்பட்டு மூன்று மாதங்கள் மட்டும் ஓடி இப்போது பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

மல்லிப்பட்டினத்தில் நிறுத்தப்பட்டுள்ள "கயல்" படகு உட்பட ஐந்து ரோந்துப் படகுகளையும் தேவையான பழுதுகள் பார்த்து, கடலோரக் காவல் படையின் மூலம் இயக்குவதென அரசு முடிவெடுத்துள்ளது. இவ்விஷயத்தில் அரசினால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இது தொடர்பாக கடலோரக் காவல் படையுடன் ஒப்பந்தப் பத்திரம் ஒன்று கையொப்பமிடப்பட வேண்டியுள்ளது. இந்த ஒப்பந்தப் பத்திரத்தின் விதிமுறைகளுக்கான ஒப்புதலைக் கடலோரக் காவல் படை, புதுடில்லி பாதுகாப்பு அமைச்சகத்திடம் கோரி ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பந்தப் பத்திரம் ஒப்புதல் அளிக்கப்பெற்றதும், பழுதுகள் பார்த்து கடலோரக் காவல் படை மூலம் படகுகளை இயக்கிட ஆவன செய்யப்படும்.

99—

## பணி நிரந்தரம்

**வினா எண் 13896—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பணிபுரியும் அனைத்து தற்காலிகப் பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தற்பொழுது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மிகுந்த நிதி நெருக்கடியில் உள்ளதாலும், மேலும் நிதி நிலை சரியில்லாத நிறுவனங்களின் ஊழியர்களுக்கு தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாணை (நிலை) எண் 158, நிதி, நாள்: 13-5-2002-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின் அடிப்படையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பணிபுரியும் தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரம் செய்யும் உத்தேசம் ஏதும் இல்லை.

**100—**

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 22659—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஏரியை சுற்றுலாத் தலமுள்ள பகுதியாக மாற்ற அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஏரியை சுற்றுலாத் தலமுள்ள பகுதியாக மாற்ற செயற்குறிப்பு. **ஏதுமில்லை.**



2003 நவம்பர் 3]

## ஐந்தாம் பட்டியல்

**1—**

**பாலம் பழுதுபார்த்தல்**

**வினா எண் 23598—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர்-விருத்தாசலம் நெடுஞ்சாலையில் மந்தாரகுப்பம் (நெய்வேலி-2) ஜெய்ப்பிரியா தியேட்டர் அருகே அமைந்துள்ள வாய்க்கால் பாலம் உடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடன் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலத்தின் இடது பக்கத்தில் உள்ள கைப்பிடிச் சுவர் வாகனங்களினால் இடிக்கப்பட்டு சேதமடைந்துள்ளதை 24-1-2003 அன்று சீர் செய்யப்பட்டுள்ளது.

**2—**

**உதவித் தொகை**

**வினா எண் 24823—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் குடும்பத் தலைவர் இறந்தால் வழங்கும் உதவித் தொகை கோரி விண்ணப்பித்திருப்போர் எத்தனை பேர்?

[2003 நவம்பர் 3

*(ஆ) எடப்பாடி தாலுகாவில் இருந்து உதவித் தொகை கோரி விண்ணப்பித்திருப்போர் எத்தனை பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் குடும்பத் தலைவர் இறந்தால் வழங்கப்படும் உதவித் தொகை கோரி 7,225 நபர்களும், எடப்பாடி வட்டத்தில் 495 நபர்களும் விண்ணப்பம் செய்துள்ளார்கள்.*

**3—**

### ஆவண எழுத்தர் கல்வித் தகுதி

**வினா எண் 24866—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பத்திரங்களை எழுதுபவர்களுக்கு அரசு ஏதாவது கல்வித் தகுதி நிர்ணயித்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். 1982 ஆம் ஆண்டு ஆவண எழுத்தர்கள் உரிம விதிகளில் விதி எண் 7(2)-ன்படி உரிமம் பெற விரும்புபவர் குறைந்தபட்சம் எஸ்எஸ்எல்சி. அல்லது அதற்கு நிகரான தேர்வில் தேர்ச்சி பெற்றவராகவும், தமிழில் போதிய அனுபவம் பெற்றவராகவும் இருக்க வேண்டும். ஒருவர் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தமிழினை ஒரு பாடமாக எடுத்திருந்தாலோ அல்லது தமிழ் மொழியிலேயே படித்திருந்தாலோ தமிழில் போதிய அனுபவம் பெற்றவராக எடுத்துக்கொள்ளப்படும்.*



2003 நவம்பர் 3]

**4—**

### கழிவறை பழுதுபார்த்தல்

**வினா எண் 27895—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எட்டையபுரம் மருத்துவமனையில் கழிவறை மற்றும் கழிவை வெளியேற்றும் குழாய்கள் சிறப்பு பழுது நீக்கம் செய்யும் திட்டம் செயல்படுத்தப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) இப்பணிக்காக 2002-2003 நிதியாண்டில் ரூ.50,000 நிதி ஒதுக்கப்பட்டு மார்ச் 2003-ல் சிறப்பு பழுதுபார்ப்பு வேலைகள் செய்து முடிக்கப்பட்டு விட்டன.*

**5—**

### அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனை உரிமம்

**வினா எண் 31262—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மதுவிலக்கு & ஆயத்தீர்வை வருவாயைப் பெருக்க அரசே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனை உரிமம் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) நடப்பு உரிம ஆண்டில் (2002-2003) உரிமங்கள் வழங்கப்பட வேண்டிய கடைகளின் எண்ணிக்கையை 7,000 ஆக அரசு நிர்ணயம் செய்தது. இதில் 4,636 மதுபானக் கடைகளுக்கான உரிமங்கள் வழங்கப்பட்டன. உரிமம் வழங்கப்படாமல் மீதமுள்ள 2,364 கடைகளுக்கு மீண்டும் மீண்டும் அறிவிக்கை செய்தும், அவற்றுக்கு உரிமம் பெற எவரும் முன்வராத நிலையில், விற்பனையாகாத கடைகளில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1,300 கடைகளும் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 200 கடைகளும் நியமன அடிப்படையில் வழங்கப்பட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.*

**6—**

**அலுவலகக் குடியிருப்பு பழுதுபார்த்தல்**

**வினா எண் 31493—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் உள்ள வருவாய் வட்டாட்சியர் வளாகத்தில் அமைக்கப்பட்ட வட்டாட்சியர் அலுவலகக் குடியிருப்பு பழுதடைந்துள்ளது. இதனைச் செப்பனிட்டோ (அ) புதுப்பித்தோ தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) பண்ருட்டி நகரத்தில் உள்ள வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்ட வட்டாட்சியர் அலுவலகக் குடியிருப்பு செப்பனிட முடியாத அளவுக்குப் பழுதடைந்துள்ளமையால், இதனைச் செப்பனிடவோ அல்லது புதுப்பிக்கவோ இயலாது.*

*(ஆ) எழவில்லை.*



2003 நவம்பர் 3]

**7—**

**உடற்பயிற்சி மையம்**

**வினா எண் 31509—திரு. ராதாரவி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சென்னை, தாடண்டர் நகர் அரசுக் குடியிருப்பில் இளைஞர்கள் உடற்பயிற்சி மையம் ஏற்படுத்தித் தருவதற்கு செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழாது.*

**8—**

**மதுபான விற்பனை**

**வினா எண் 32119—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் ஒரு மாதத்திற்கு விற்பனையாகும் மதுபானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் ஒரு மாதத்தில் 25,802 பெட்டிகள் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களும், 25,662 பெட்டிகள் பீரும் விற்பனையாகின்றன.

[2003 நவம்பர் 3

9—

**விபத்துக்குள்ளாகும் சமையல் கலைஞர்களுக்கு நிவாரண பணம்**

**வினா எண் 35943—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழை சமையல் கலைஞர்கள் விபத்துக்குள்ளானால் நிவாரண பணம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 44 வகை ஏழைத் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும்பொழுதோ அல்லது இதர நேரங்களிலோ மரணமடைய நேரிடும்பொழுது அவர்களது குடும்பத்திற்கு விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ.15,000 நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி 44 வகை ஏழைத் தொழிலாளர்களில் சமையல் தொழில் செய்பவர்களும் அடங்குவர்.

10—

**வளர்ச்சிப் பணிகள் நிதி ஒதுக்கீடு**

**வினா எண் 32134—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகளுக்கு அதன் சிறப்புத் தன்மையைக் கருத்தில் கொண்டு கூடுதலாக 40 சதவிகிதம் நிதி அதிகரித்து வழங்க அரசு முன்வருமா?



2003 நவம்பர் 3]

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம் மலைப்பகுதி என்னும் சிறப்புக் காரணங்களுக்காக மத்திய/மாநில அரசுகள் பல்வேறு வழிமுறைகளில் அதன் வளர்ச்சிக்காகவும் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து பலவகையான முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக மத்திய அரசு தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தை மட்டும் தேர்வு செய்து 1975 ஆம் ஆண்டு முதல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் கணிசமான தொகையை சிறப்பு நிதியுதவியாக அளித்து வருகிறது. இவ்வகையில் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.85.95 கோடியும், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.107.44 கோடியும், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கடந்த (2002-2003) ஆண்டு மற்றும் நடப்பு (2003-2004) ஆண்டிற்கு ரூ.44.20 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், நிதி நெருக்கடி காரணங்களினால் 2001-2002-லிருந்து மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆண்டிற்கு ரூ.2210.00 இலட்சம் என்கிற இலக்கின்படி மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. ஆகவே, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

11—

**பட்டு வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவி**

**வினா எண் 35949—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் பட்டு வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எவ்வளவு பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் மத்திய அரசின் சிறப்பு நிதி உதவி மூலம்

1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆகையால் சேலம் மாவட்டத்தில் பட்டு வளர்ச்சித் திட்டங்களுக்காக மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**12—**

## தடுப்புச் சுவர்

**வினா எண் 38361—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சி, ஓர சோலை கரியப்பா வீட்டு முன்பு தடுப்புச் சுவர் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2003-2004 ஆம் ஆண்டிற்கான திட்டப்பணிகள் இறுதி செய்யப்பட்டு மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு அடிப்படையில் செயல்படுத்த துவங்கி விட்டபடியால் நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சி, ஓர சோலை கரியப்பா வீட்டு முன்பு தடுப்புச் சுவர் கட்டும் பணியை வரும் 2004-2005 ஆம் ஆண்டு திட்டத்தில் மேற்கொண்டு செயல்படுத்த பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**13—**

## நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடித்தல்

**வினா எண் 14104—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்குமாறு சம்பந்தப்பட்ட நடுவர் நீதிமன்ற நீதிபதி, சென்னை உயர் நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**14—**

## புதிய மின்மாற்றி

**வினா எண் 38958—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, சாட்டியக்குடி ஊராட்சி, தச்சமல்லியில் புதிய மின்மாற்றி (டிரான்ஸ்பார்மர்) அமைத்துத் தரும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, சாட்டியக்குடி ஊராட்சி, தச்சமல்லியில் புதிய மின்மாற்றி அமைக்க மதிப்பீடு ரூ.1,93,000/- செலவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மின்மாற்றி 30-11-2003-க்குள் அமைத்து மின் சப்ளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**15—**

## புதிய மின்மாற்றிகள்

**வினா எண் 38963—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அறந்தாங்கி தொகுதி, கொடிக்குளம் துணை மின் நிலையப்பகுதிக்குட்பட்ட புதுக்குடி, கடலூர் ஆகிய இடங்களில் புதிய மின்மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்) அமைத்துத் தரும் கருத்துரு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதியில் மணமேல்குடி மின் வாரிய பிரிவு அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள புதுக்குடி, புதுக்குடி வடக்கு, கடலூர் ஆகிய கிராமங்கள் இயங்கி வருகின்றன. அந்த ஊர்களுக்கு மின் சப்ளை செய்யும் பிரிவு மின்மாற்றியில் ஒரு முனையில் பழுது இருந்தது கண்டறியப்பட்டு சரி செய்யப்பட்டது. அந்தப் பகுதிகளில் தற்பொழுது சீரான மின்னழுத்தத்துடன் கூடிய மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. எனவே உடனடியாக அங்கு புதிய மின்மாற்றி அமைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**16—**

## தெப்பக்குளம் தூர் வாருதல்

**வினா எண் 18651—திரு. ப. பொன்னம்பலம்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை கிழக்கு ஒன்றியம், அழகர்கோவிலைச் சேர்ந்த பொய்கைக்கரைப்பட்டி தெப்பக்குளத்தை தூர் வார அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை கிழக்கு ஒன்றியம், அழகர்கோவிலைச் சார்ந்த பொய்கைக்கரைப்பட்டி தெப்பக்குளத்தை தூர் வாரி சுத்தம் செய்யும் பணி சமயநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ப. பொன்னம்பலம் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து செய்து கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். ஆகையால், மேற்படி தெப்பக்குளம் தூர் வாரி சீரமைக்கும் பணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி கிடைக்கப்பெற்றதும் பணி துவங்கி முடிக்கப்படும்.

**17—**

## புனிதத் தலமாக்குதல்

**வினா எண் 21335—திரு. கு. அன்பழகன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வத்தலக்குண்டு, சென்றாயப்பெருமாள் கோயிலை புனிதத் தலமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், கோட்டைப்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு சென்றாயப்பெருமாள் திருக்கோயிலில் வரலாற்றுச் சிறப்பங்கள் இல்லை. மேலும் புராணகாலத்துப் பின்னணியோ, பாடல் பெற்ற ஸ்தலமாகவோ இல்லாமலும் உள்ளது. மேற்படி திருக்கோயில் அந்தப் பகுதியில் உள்ள சாதாரண மக்கள் வழிபடும் வழிபாட்டு ஸ்தலமாக உள்ளது. எனவே, இத்திருக்கோயிலை புனிதத் தலமாக மாற்றும் நடவடிக்கைகள் ஏதுமில்லை.

[2003 நவம்பர் 3

18—

## சுற்றுலாத் தலம் அமைத்தல்

**வினா எண் 31031—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, கைலாசகிரி, உம்பராபாதிலுள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு பல்வேறு மாவட்டங்களிலிருந்து மக்கள் வருவதால், இதை சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு தீர்மானித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) பேரணாம்பட்டு தொகுதி, கைலாசகிரி, உம்பராபாதிலுள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலை, சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு ஏதும் முடிவெடுக்கவில்லை.

(ஆ) அவ்வாறு அறிவிக்கும் பட்சத்தில், அதற்குத் தகுந்தவாறு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

19—

## தமிழில் நூல் வெளியிடுதல்

**வினா எண் 32835—திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் தல வரலாற்றினை அடிப்படை ஆதாரங்களுடன் எளிய தமிழில் நூலாக அரசு வெளியிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது விற்பனைக்கு வரும்?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் தல வரலாறு அடிப்படை ஆதாரங்களுடன் எளிய தமிழில் ஏற்கெனவே பதினொன்று பதிப்புகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. மேலும், தற்போது பன்னிரெண்டாம் பதிப்பு எளிய தமிழில் அடிப்படை ஆதாரங்களுடன் அச்சிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

20—

## கோயில் வருமானம்

**வினா எண் 33092—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, குண்ணண்டார் கோயில் ஒன்றியம், பெரம்பார் கோயில் மாத வருமானம் எவ்வளவு?

(ஆ) செலவுகள், பராமரிப்புகள், எதிர்காலத் திட்டம் ஆகியவற்றின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை தொகுதி, குண்ணண்டார் கோயில் ஒன்றியம், பெரம்பார் கோயில் மாத வருமானம் சராசரியாக ரூ.3,20,339.20 ஆகும்.

(ஆ) நிர்வாகச் செலவுகள் நீங்கலாக நாளது தேதியில் உபரி நிதியாக ரூ.43,17,411/- வங்கியில் நிரந்தர முதலீடு செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் பெரம்பார் கிராமம் புல எண் 249/3 அரசு புறம்போக்கில் அமைந்துள்ளது. மேற்படி அரசு புறம்போக்கில் விஸ்தீரணம் 3 ஏக்கர் 60 சென்ட் ஆகும். பசலி 1411-க்கு திருக்கோயிலின் செலவு மாதம் ஒன்றுக்கு

சராசரியாக ரூ.51,000/-. இத்திருக்கோயிலின் அபிவிருத்தியினைக் கருத்தில் கொண்டு எட்டு திருப்பணி வேலைகளுக்கு உபயதாரர்களை வரவேற்று அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக ரூ.4,50,000/- செலவில் உபயதாரர் மூலம் திருக்கோயில் முன் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. முடி காணிக்கை மண்டபம் திருக்கோயில் நிதியில் இருந்து ரூ.1,65,000/-க்கு கட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மற்ற திருப்பணிகளை திருக்கோயில் நிதி நிலையின் அடிப்படையில் படிப்படியாகச் செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 15-08-2002 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் அன்னதானத் திட்டத்திற்காக அன்னதான மண்டபம் ரூ.4,50,000/- செலவில் திருக்கோயில் நிதி மூலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், திருமண மண்டபம் கட்டுமானப் பணி திருக்கோயில் நிதி மூலமாக ரூ.4,50,000/- செலவில் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**21—**

## கடைகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 38667—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகர், தாதகாப்பட்டி அருகே உள்ள செட்டு மாரியம்மன் கோயிலில் உள்ள கடைகளைப் புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாநகர், தாதகாப்பட்டி அருகே உள்ள செட்டு மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடங்கள் 12 உள்ளது என்றும் மேற்படி கட்டடங்களில் கான்கிரீட் கட்டடம் இரண்டும், ஓடு வேய்ந்த கட்டடங்கள் 10-ம் ஆகும் என்றும், மேற்படி கட்டடங்கள் அனைத்தும் வாடகைதாரர்களுக்கு குடியிருப்புக்காகவும், வணிக





நோக்கத்திற்காகவும் வாடகைக்கு விடப்பட்டு, வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது என்றும் மேற்படி 12 கட்டடங்களுக்கும் மாத வாடகையாக ரூ.8,295/- வருவாயாக வருகிறது என்பதாலும், இதில் 3 கட்டடங்களில் வாடகைதாரர்களின் மீது வாடகை பாக்கிக்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளது என்பதாலும், இக்கட்டடங்கள் எவையும் அவசர அவசியமான பழுதுபார்க்கும் நிலையில் இல்லை என்றும் கட்டடதாரர்கள் எவரும் கட்டடத்தை புதுப்பித்துத்தர வேண்டி எவ்வித விண்ணப்பமும் கொடுக்கவில்லை என்பதாலும், திருக்கோயில் நிதியிலிருந்து கட்டடங்கள் தற்போது கட்டித்தர உத்தேசம் எதுவும் இல்லை.

**22—**

## இசைப் பள்ளி துவக்குதல்

**வினா எண் 21294—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டத்தில் புதியதாக இசைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

தற்போது தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் அரசு இசைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இது தவிர, நான்கு இடங்களில் அரசு இசைக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. மேலும் சென்னையில் நான்கு இடங்களிலும் மதுரையில் ஒரு இடத்திலும் மாலை நேர அரசு இசைக் கல்லூரி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, புதியதாக நாமக்கல் மாவட்டத்தில் இசைப் பள்ளி துவக்குவது தொடர்பாக, அரசின் நடவடிக்கை ஏதும் தற்போது இல்லை.

23—

## விழாக்கள்

**வினா எண் 27140—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தைத் திருநாளில் மாவட்டந்தோறும், தமிழ் வளர்ச்சி பண்பாடு, கலை, கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் விழாக்கள் நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* ஆண்டுதோறும் தைத் திங்களில் கலை பண்பாட்டுத் துறை சார்பில் சென்னையில் 'பொங்கல் கலை விழா' கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. இவ்விழாவில் தமிழ்ப் பண்பாடு, கலை, கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள கலைஞர்கள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு இவ்விழாவில் பங்குகொண்டு நிகழ்ச்சி நடத்திட வாய்ப்பளிக்கப்படுகிறது. மாவட்டங்களில் கலை விழாக்கள் பல்வேறு மாதங்களில் நடத்தப்படுகின்றன.

ஆண்டுதோறும் தைத் திங்கள் 2-ஆம் நாள் திருவள்ளுவர் தினத்தன்று திருவள்ளுவர் விழா அரசு சார்பில் சென்னையில் கொண்டாடப்படுகிறது. அவ்விழாவில் தமிழ் மொழிக்கும், தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டாற்றிய சிறந்த தமிழறிஞர்களைத் தெரிவு செய்து பாராட்டி 'திருவள்ளுவர் விருது' என ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகையும், ஒரு சவரன் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை வழங்கியும் சிறப்பிக்கப்படுகிறது. இந்நிலையில் மாவட்டந்தோறும் விழாக்கள் நடத்தும் தேவை தற்போது எழவில்லை.



24—

## கலைக்கூடம் நிறுவுதல்

**வினா எண் 27141—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் தமிழ் கலை, கலாச்சாரம், பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கலைக்கூடம் நிறுவ அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் கலைக்கூடம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* எழவில்லை.

25—

## முன்னுரிமை

**வினா எண் 27154—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ் இலக்கியத்தை முதன்மைப் பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்புகளில் அரசு முன்னுரிமை வழங்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) அரசின் ஆய்வில் உள்ளது.

(ஆ) அறுதியிட்டுக் கூற இயலாது.

**26—**

**நூல்கள் வழங்கலும் மொழி வளர்ச்சியும்**

**வினா எண் 27165—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு தொல்காப்பியம், நன்னூல் மற்றும் காவியங்கள், காப்பியங்கள் கிடைக்கவும் மற்றும் மொழியின் வளர்ச்சிக்காகவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிங்கப்பூர் நாட்டிற்கு ரூ.11,428.80 மதிப்புள்ள 122 நூல்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும் பின்வரும் நாடுகளுக்கும் ஒவ்வொரு நாட்டிற்கும் தொகை மதிப்பில் 122 நூல்கள் அனுப்பப்பட்டுள்ளன:—

1. ரீயூனியன், 2. மொரிசியசு, 3. உஸ்பெகிஸ்தான், 4. சுவிட்சர்லாந்து, 5. மியான்மார் (பார்மி), 6. நெதர்லாந்து, 7. ஆஸ்திரேலியா, 8. இந்தோனேசியா, 9. தென் ஆப்பிரிக்கா, 10. கனடா, 11. பஹ்ரைன், 12. ஜெர்மனி.

எனவே, தேவை ஏற்படும் நேர்வில் மலேசியா நாட்டிற்கு நூல்கள் அனுப்புவது பற்றியும் கருதப்படும்.



**27—**

**ஆசிரியர் பணி இடங்கள் நிரப்புதல்**

**வினா எண் 31092—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், வல்லம் ஒன்றியத்தில் மேல் ஒலக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் பணி இடங்கள் நிரப்பப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல் ஒலக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், கணிதம் மற்றும் வரலாறு, பள்ளி உதவி ஆசிரியர் (பட்டதாரி ஆசிரியர்) பணியிடங்கள் காலியாக இல்லை. அறிவியல் பாட பள்ளி உதவி ஆசிரியர் பணியிடம் காலியாக உள்ளது. இப்பணியிடம் வரும் கல்வியாண்டில் நிரப்பப்படும்.

**28—**

**அகதிகளுக்கு நிதி ஒதுக்கீடு**

**வினா எண் 42913—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளுக்கு 2001-2002 ஆம் ஆண்டில் அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டு அகதிகள் மறுவாழ்வுக்காக தமிழக அரசு ரூ.26,74,76,000/- ஒதுக்கீடு செய்தது. 2001-2002 ஆம் ஆண்டில் அகதிகள் மறுவாழ்வுக்காக ரூ.25,48,70,937/- செலவு ஆகியுள்ளது.

[2003 நவம்பர் 3

29—

### புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு

**வினா எண் 8587—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் உள்ள மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனையில் மைய அரசு நிதி உதவியுடன் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செய்யப்பட்டு வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலத்திலுள்ள மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனையில் இயங்கும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு 04-04-2000 முதல் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

30—

### அறுவை சிகிச்சை

**வினா எண் 30814—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி மருத்துவமனை அறுவை சிகிச்சை அரங்கில் ஒரு நாளைக்கு எத்தனை அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன?

(ஆ) அதில் இருதய அறுவை சிகிச்சை மட்டும் எத்தனை?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை ஸ்டான்லி மருத்துவமனை அறுவை சிகிச்சை அரங்கில் ஒரு நாளைக்கு 110 அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

(ஆ) வாரத்திற்கு நான்கு நாட்கள் மட்டும் இருதய அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் சராசரியாக நாளொன்றுக்கு இரண்டு அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

31—

### தங்குமிடம் கட்டுதல்

**வினா எண் 32907—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆரம்பள்ளம் ஊராட்சி, நல்லூரிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணி செய்கின்ற ஊழியருக்கு தங்குவதற்கு இருப்பிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுப் பிரிவில் 9 குடியிருப்புகளும், குடும்ப நலப் பிரிவில் 5 குடியிருப்புகளும் உள்ளன. எனவே, நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு குடியிருப்புக் கட்டடங்கள் கட்டித்தர சாத்தியக்கூறுகள் இல்லை.

[2003 நவம்பர் 3

32—

## மனநலத் திட்டங்கள்

**வினா எண் 35532—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய அரசின் நிதி உதவியுடன் மனநலத் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திய அரசின் நிதி உதவியுடன் மனநலத் திட்டம் தமிழகத்தில் திருச்சி, மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

33—

## கட்டட வசதி

**வினா எண். 39595—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி அறிஞர் அண்ணா மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவுக்கு கட்டட வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி அறிஞர் அண்ணா மருத்துவமனையில் சித்த மருத்துவ பிரிவுக்கு கட்டட வசதி செய்து தரும் திட்டம் தற்போது இல்லை.



2003 நவம்பர் 3]

34—

## மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி

**வினா எண் 89631—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், ஆரப்பள்ளம் ஊராட்சியிலுள்ள நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், ஆரப்பள்ளம் ஊராட்சியிலுள்ள நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இடிந்து போன மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி புதிதாக கட்டப்பட்டு பிப்ரவரி 2002 முதல் உபயோகத்தில் உள்ளது.

35—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 39801—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, குன்னம் ஊராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தற்போது சுற்றுச் சுவர் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**36—**

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 40345—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மடத்துக்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. ஆகையால் உடுமலைப்பேட்டை தொகுதி, மடத்துக்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டும் சாத்தியக்கூறுகள் இல்லை.



**37—**

**மதில் சுவர்**

**வினா எண் 41727—திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் ஒன்றியம், சிறுங்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றிலும் மதில் சுவர் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை, ஆகையால் திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் ஒன்றியம், சிறுங்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தற்போது சுற்றுச் சுவர் கட்டித் தர சாத்தியக்கூறுகள் இல்லை.

**38—**

**சுகாதார நிலையம்**

**வினா எண் 41750—திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், ரெட்டிப்பாளையம் ஊராட்சியில் சுகாதார நிலைய கட்டடம் திறக்கப்படுமா?

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருப்போரூர் தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், ரெட்டிப்பாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டட கட்டுமானப் பணி தற்சமயம் கூரை மட்டம் வரை கட்டி முடிக்கப்பட்டு, இதர பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டவுடன் கட்டடம் திறக்கப்படும்.

39—

**தொழிலாளர் நல மையங்களில் குழந்தைகள் காப்பகம்**

**வினா எண் 34681—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2002 ஆம் ஆண்டில் எத்தனை தொழிலாளர்கள் நல மையங்களில் குழந்தைகள் காப்பகம் மற்றும் படிப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*2001-2002 ஆம் ஆண்டில் 19 தொழிலாளர் நல மையங்களில் குழந்தைகள் காப்பகங்களும், 64 தொழிலாளர் நல மையங்களில் படிப்பகங்களும் அமைக்கப்பட்டுள்ளன.*

40—

**திருமண உதவித் தொகை**

**வினா எண் 35513—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

*(அ) சேலம் மாவட்டத்தில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தொழிலாளியின் மகன்/மகள் ஆகியோருக்கு திருமண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எவ்வளவு பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 1994 முதல் 31-05-2003 வரை 85 பேர்களுக்கு ரூ.1,48,000/- திருமண உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.*

41—

**சத்துணவு சமையல் அறை**

**வினா எண் 3240—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டியிலுள்ள பத்திரக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த எஸ். புதுக்குப்பம் கிராம துவக்கப் பள்ளிக்கு சத்துணவு சமையல் அறை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2002-2003 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்பட்டு, பணி எடுக்கப்பட்டு, தற்போது பணி முடியும் தருவாயில் உள்ளது.*

42—

## பால்வாடி மையங்கள்

**வினா எண் 3438—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கிராமப்புறங்களில் எத்தனை பால்வாடி மையங்கள் இயங்குகின்றன?

(ஆ) அவற்றில் எத்தனை குழந்தைகள் பயில்கின்றனர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி வட்டாரத்தில் மொத்தம் 44 பால்வாடி மையங்கள் இயங்குகின்றன.

(ஆ) அவற்றில் 1,281 குழந்தைகள் பயின்று வருகின்றனர்.

43—

## பணி இடமாற்றம்

**வினா எண் 10085—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் அமைப்பாளர்களை அவர்களின் சொந்த ஊருக்கு அருகிலுள்ள மையத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சத்துணவு அமைப்பாளர்கள் திருமணம் மற்றும் குடும்பச் சூழ்நிலை போன்ற பல்வேறு காரணங்களினால் மாவட்ட மாறுதல் கோரும்பொழுது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்





தலைவர்களின் பரிந்துரையின் பேரில், கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்களுக்கு மாவட்ட மாறுதல் அளிக்கப்படுகிறது:—

1. விண்ணப்பதாரர் மாறுதல் கோரும் பணியிடம் காலியாக உள்ளது என்பதற்கான மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை.

2. சம்பந்தப்பட்ட இரு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரை.

3. மாறுதல் கோரும் விண்ணப்பதாரர் பணிபுரியும் மையத்தின் மீதான தணிக்கைகள் எந்த ஆண்டுவரை செய்யப்பட்டுள்ளது?

4. இதுவரை இவர் மீதுள்ள தணிக்கைத் தடைகள் விவரம்.

5. தணிக்கை செய்யப்படாத காலத்திற்கு இனிமேல் தணிக்கை செய்யப்படும்போது கட்டச் சொல்லப்படும் தொகை/அபராத தொகை, தணிக்கைத் தடைகளுக்கு பொறுப்பேற்றுக் கொள்வேன் என உறுதி மொழி பத்திரத்தாளில் ஊராட்சி ஒன்றிய ஆணையரிடம் எழுதிக்கொடுக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் உள்ளதா என்ற விவரம்.

மேற்காணும் நிபந்தனைகளை பூர்த்தி செய்த பின்னர், மாறுதல் கோரும் இடத்தில், காலியிடம் இருக்கும்பட்சத்தில் மாவட்ட மாறுதல்கள் வழங்கப்படுகின்றன.

44—

## ஊட்டச்சத்து மையம் புதுப்பித்தல்

**வினா எண் 10373—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், பரவாக்கரை ஊராட்சியில் பழுதடைந்துள்ள ஊட்டச்சத்து மையத்தினை புதுப்பித்தலுக்கு அரசு உதவுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டாரம், பரவாக்கரை மையக் கட்டடம் மிகவும் பழுதடைந்து சீர் செய்ய இயலாத அளவிற்கு இடிந்து போன நிலையில் உள்ளது. புதிய கட்டடம் கட்டுவதற்கு உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. இருப்பினும் புதிய கட்டடம் கட்ட நிதி நிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

45—

**ஊட்டச்சத்து மையம்**

**வினா எண் 10435—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், சிவராமபுரம் கிராமத்தில் ஊட்டச்சத்து மையமும் அதற்கான கட்டடமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

சிவராமபுரம் கிராமத்தின் மக்கள் தொகை 670, பயன்பெறும் பயனாளிகள் 6—36 மாதக் குழந்தைகள் 7 பேரும், 37—60 மாதக் குழந்தைகள் 15 பேரும் உள்ளனர். இக்கிராமத்தின் அருகில் 3 கி.மீ. தொலைவில், கன்னாசி நல்லூர் குழந்தை நல மையத்தின் மூலமாக பயனாளிகள் விடுபடாமல் பயனடைந்து வருகிறார்கள். மேலும் ஒரு கிராமத்தில் புதிய மையம் ஆரம்பிக்க வேண்டுமெனில் 37—60 மாத குழந்தைகள் குறைந்தபட்சம் 25 இருத்தல் வேண்டும் என்பதாலும், மக்கள் தொகை 1,000-க்கு குறையாமல் இருத்தல் வேண்டும்



என்பதாலும், சிவராமபுரம் கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையம் துவக்கிட வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

46—

**பாலர் பள்ளி அமைத்தல்**

**வினா எண் 10659—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், முத்தநாயக்கன்பட்டி ஊராட்சி, அல்லையனூர் பகுதியில் பாலர் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், முத்தநாயக்கன்பட்டி ஊராட்சி, அல்லையனூர் பகுதியில் மக்கள்தொகை மொத்தம் 428 மட்டுமே உள்ளது. புதியதாக பாலர் பள்ளி அமைக்க அரசு விதிப்படி குறைந்தபட்சம் மக்கள்தொகை 1,800 இருக்க வேண்டும். இப்பகுதியில் புதியதாக பாலர் பள்ளி அமைக்க விதிகளில் இடம் இல்லை.

47—

**பாலர் பள்ளி அமைத்தல்**

**வினா எண் 10670—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

(அ) சேலம், ஓமலூர் ஒன்றியத்திலுள்ள செம்மண்கூடல் ஆதிதிராவிடர் குழந்தைகளுக்கு பாலர் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியத்திலுள்ள செம்மண்கூடல் காலனி பகுதியில் மக்கள்தொகை 388 மட்டுமே. அரசு விதிகளின்படி மக்கள் தொகை 1,500 இல்லாததால் பாலர் பள்ளி அமைக்க அரசு விதிகளில் இடம் இல்லை. இருப்பினும் அருகில் உள்ள பாலர் பள்ளியுடன் சேர்த்துக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**48—**

**மதிய உணவு வழங்குதல்**

**வினா எண் 10732—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, மணியக்காரன் கொட்டாய் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவுத் திட்டத்தில் மதிய உணவு கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மணியக்காரன் கொட்டாய்



2003 நவம்பர் 3]

துவக்கப் பள்ளியில் 20-01-2003 முதல் சத்துணவு மையத்தில் மாணவர்கட்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

**49—**

**மகளிர் மன்றக் கட்டடங்கள்**

**வினா எண் 15018—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதியில், அதிக அளவில் உள்ள மகளிர் மன்றக் கூட்டங்கள் நடத்த கட்டடங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) அந்தந்த மாவட்டங்களில் உள்ள குழந்தை நல மையக் கட்டடத்தின் முக்கிய கூடத்தில் அன்றைய தினத்திற்கான குழந்தை நல மையம் மூடப்பட்டவுடன், மாலையில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் மன்றக் கூட்டங்கள் கூட்டப்படலாம் என்று அரசால் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**50—**

**சத்துணவுக் கூடம் அமைக்கும் திட்டம்**

**வினா எண் 16276—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதிக்குட்பட்ட பொகளூர், ஆலங்குப்பம், ஆகிய கிராமங்களில் சத்துணவுக் கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதிக்குட்பட்ட பொகளூர், ஆலங்குப்பம் ஆகிய கிராமங்களில், ஏற்கெனவே பள்ளி சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன.

51—

**கதவு, ஜன்னல்கள் பழுதுபார்த்தல்**

**வினா எண் 16490—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம், முத்துக்கொண்டாபுரம் அங்கன்வாடி மையத்தில் கதவு, சன்னல்களைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம், முத்துக்கொண்டாபுரம் அங்கன்வாடி மையத்தை பழுதுபார்க்கும் பணி ரூ.17,500/- திட்ட மதிப்பீட்டில் 2002-2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

52—

**சத்துணவுக் கூடம் பழுதுபார்த்தல்**

**வினா எண் 16662—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மகேந்திரப்பள்ளி ஊராட்சியில் உள்ள பால்வாடி கட்டடம் மற்றும் சத்துணவுக் கூடம் பழுது அடைந்துள்ளதை பழுது நீக்கிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் மகேந்திரப்பள்ளி ஊராட்சியில் உள்ள பால்வாடி ரூ.7,000 மதிப்பில் உலக வங்கி நிதியில் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது. சத்துணவுக் கூடம் ரூ.11,000 மதிப்பீட்டில் 11-ஆவது நிதிக் குழு திட்டத்தில் பழுது நீக்கம் செய்யப்படும்.

53—

**சத்துணவுத் திட்டம்**

**வினா எண் 20301—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் எத்தனை இடங்களில் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது?

(ஆ) இதில் பயனடைந்தோர் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்ற சத்துணவு மையங்கள் 72.

(ஆ) இதில் பயனடைந்தோர் எண்ணிக்கை 9,350.

[2003 நவம்பர் 3

**54—**

**சத்துணவு மையக் கட்டடம்**

**வினா எண் 20971—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, அழிச்சிகுடி கிராமத்தில் சத்துணவு மையக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, அழிச்சிகுடி கிராமத்தில் சத்துணவு மையக் கட்டடம் கீற்றுக் கொட்டகையில் இயங்கிவருகிறது. 2002-2003ஆம் நிதியாண்டில், சம்பூர்ணா கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1,40,000 மதிப்பீட்டுத் தொகையில், அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

**55—**

**உதவித் தொகை**

**வினா எண் 22323—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட பெண் குழந்தைகளுக்கு வழங்குவது போல் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பெண் குழந்தைகள் ஆறாம் வகுப்பில் கல்வி தொடர உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) இந்த நிதி ஆண்டில் செயல்படுத்தப்படுமா?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமூக நலத் துறையின்கீழ் 25 அரசு குழந்தைகள் காப்பகங்களும் 6 சேவை இல்லங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இக்காப்பகங்களில் தாய், தந்தையற்ற அல்லது தாயற்ற அல்லது தந்தையற்ற குழந்தைகள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, படுக்க உறைவிடம், கல்வி கற்க புத்தகம், நோட்டுப் புத்தகம், வெளிப்பள்ளியில் படிக்க வசதிகள்/இலவச காலணிகள் ஆகியவை வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரப்படுகின்றது. ஆனால் தாழ்த்தப்பட்ட குழந்தைகள் என்று தனிமைப்படுத்தப்படவில்லை. அனைத்து சமுதாயத்தைச் சார்ந்த, நலிவுற்ற/ஆதரவற்ற குழந்தைகளும் பயனடைந்து வருகின்றனர். அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ளுறைகின்ற 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர் வெளிப் பள்ளிகளுக்குச் சென்று கல்வி பயின்று வருகின்றனர். எனவே, தாழ்த்தப்பட்ட பெண் குழந்தைகள் என்ற பாகுபாடின்றி வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் தாய், தந்தையற்ற அல்லது தாய்/தந்தையற்ற குழந்தைகள் அரசு குழந்தைகள் காப்பகங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

**56—**

**குழந்தைகள் வளர்ச்சிப் பணிக்கு உலக வங்கி நிதி**

**வினா எண் 22772—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டத்திற்கு உலக வங்கி அளித்த நிதி எவ்வளவு?

(ஆ) பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டக்காலமான 1998-99 ஆம் ஆண்டு முதல்

[2003 நவம்பர் 3

2003-2004 ஆம் ஆண்டு வரை, மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.86.95 கோடியில் இதுகாறும் இத்திட்டத்திற்கு ஆண்டுவாரியாக பெறப்பட்ட நிதி பின்வருமாறு:—

| ஆண்டு | பெறப்பட்ட நிதி (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1998-1999 | 3.580 |
| 1999-2000 | 6.032 |
| 2000-2001 | 5.000 |
| 2001-2002 | 10.000 |
| 2002-2003 | - |
| **மொத்தம்** | **26.612** |

(ஆ) அக்டோபர் 1999 முதல் ஜனவரி 2003 வரை

| | | |
|---|---|---|
| 1 | உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் 3-வது திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட 0-36 மாதக் குழந்தைகளின் எண்ணிக்கை | - 73,76,268 |
| 2 | எடை எடுக்கப்பட்ட 0-36 மாதக் குழந்தைகளின் எண்ணிக்கை | - 71,62,935 |
| 3 | சத்துமாவு பெறப்பட்ட குழந்தைகள் (3-36) மாத வயதுக்குள் | - 14,59,701 |
| 4 | சத்துணவு பெற்ற குழந்தைகள் (37-60 மாத வயதுக்குள்) | - 27,48,504 |
| 5 | இணை உணவு பெற்ற கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | - 14,31,222 |
| 6 | பயனடைந்த முதியோர் | - 3,25,995 |



2003 நவம்பர் 3]

57—

### உதிஷா பயிற்சித் திட்டம்

**வினா எண் 22789—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய அளவில் நடத்தப்படும் உதிஷா பயிற்சித் திட்டத்தில் எத்தனை பேருக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) இதற்காக செலவிடப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

(இ) இதற்கு மத்திய அரசு மானியம் வழங்குகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) உதிஷா திட்டத்தின்கீழ் 431 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களில் பணிபுரியும் 30,016 பணியாளர்களில் அனைத்து பணியாளர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. புதிதாக செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ள மூன்று திட்டங்களில் 204 பணியாளர்களுக்கு 2003-2004 ஆம் ஆண்டு முதல் பயிற்சி அளிக்கப்படும்.

(ஆ) 1999-2000 முதல் 2002-2003 வரை சுமார் ரூ.200 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

(இ) மேற்குறிப்பிட்ட ரூ.200 இலட்சம் மத்திய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்பட்டுள்ளது.

58—

### முதியோர் உதவித் தொகை

**வினா எண் 24249—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், எம்.ஆர்.புதூர், எம்.ரெட்டிப்பட்டி, பூலாங்கால், மண்டபச்சாலை பகுதியில் முதியோர் உதவித்தொகை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு உதவித்தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், எம்.ஆர். புதூர், எம்.ரெட்டியபட்டி, பூலாங்கால், மண்டபசாலை பகுதியில் முதியோர் உதவித் தொகை கேட்டு முதியோர் உதவித் தொகை பெற்று வருபவர்களின் விவரம் பின்வருமாறு:—

| வ.எண் | கிராமங்களின் பெயர் | முதியோர் உதவித் தொகை பெறும் பயனாளிகள் எண்ணிக்கை (31-3-2003) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | எம்.ஆர். புதூர் எம். ரெட்டியப்பட்டி, மண்டபசாலை | 68 |
| 2. | பூலாங்கால் | 116 |

இதில் 2002 ஆம் ஆண்டில் மேற்கண்ட பகுதிகளில் 76 நபர்கள் முதியோர் உதவித் தொகை கேட்டு மனு செய்தவர்களில் 38 தகுதியான நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மீதியுள்ள மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள மனுக்கள் எதுவும் இல்லை. மனுக்கள் கிடைக்கும் பட்சத்தில் அவற்றைக் கருணையுடன் பரிசீலனை செய்து அரசு விதிகளின்படி முதியோர் உதவித் தொகை வழங்க ஆவன செய்யப்படும்.

**59—**

### முதியோர் உதவித் தொகை

**வினா எண் 24259—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம் மற்றும் செட்டிக்குளம், கணக்கி பகுதியில் முதியோர் உதவித் தொகை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருச்சுழி ஒன்றியம் மற்றும் கே. செட்டிக்குளத்தில் 38 நபர்களும் (அனைவரும் பெண்கள்) கணக்கியில் 10 நபர்களும் (1 ஆண் மற்றும் 9 பெண்கள்) முதியோர் உதவித்தொகை பெற்று வருகின்றனர். தற்போது முதியோர் உதவித்தொகை கோரி வரப்பெற்ற மனுக்கள் மேற்காணும் பகுதிகளுக்கு நிலுவையில் இல்லை. முதியோர் உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவைகள் அரசின் விதிப்படி கவனமாகவும் கருணையுடனும் பரிசீலனை செய்து வழங்க ஆவன செய்யப்படும்.

**60—**

### பணி நியமனம்

**வினா எண் 27132—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு திட்டத்தில் காலியாகும் பணிகளுக்கு புதிய நியமனம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது நேரடி நியமனங்களுக்கு அரசினால் பொதுவான தடையுத்தரவு வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ள காரணத்தால், மையங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்திடல் இயலாது. எனவே, சத்துணவு மையங்களில் உள்ள காலிப் பணியிடங்களை அந்தந்த மாவட்டத்தில் உபரியாக உள்ள பணியாளர்களை அவர்களின் முதுநிலைக்கேற்ப பட்டியலிட்டு அதிலுள்ளவர்களைக் கொண்டு காலியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. அவ்வாறு பூர்த்தி செய்யும்பட்சத்தில், பணி நியமனம் செய்யப்படும் மையம், பணியாளர்களின் இருப்பிடத்திலிருந்து 3 கி.மீ. பதிலாக 10 கி.மீ. தூரத்திற்குள் இருக்க வேண்டும் என மாற்றி வரையறுக்கப்பட்டுள்ளது.

61—

### கண்காணிப்புக் குழு

**வினா எண் 27433—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண் சிசுக் கொலை அதிகரித்து வரும் சேலம், தருமபுரி மாவட்டங்களில் கண்காணிப்புக் குழு அமைத்து இதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சம்பந்தப்பட்ட மாவட்டங்களில், ரங்கநாத கிராமத்திலும், கிராமப்புற அளவிலும் கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டு சிசுக் கொலைகளைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

62—

### சிறுவர் நல வாரியம்

**வினா எண் 30118—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிறுவர் நல வாரியம் செயல்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதைப்பற்றிய விவரங்கள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 1986 ஆம் ஆண்டில் இளைஞர் நலக் குழுமங்கள் செயல்பட்டன. அவையே இளைஞர் நீதி குழந்தைகள் (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம், 2000-ன்படி குழந்தைகள் நலக் குழுக்களாக செயல்படுகின்றன. இளைஞர் நீதிக் குழுமங்களும் இப்புதிய சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளன.





(ஆ) குழந்தைகள் நலக் குழுமங்கள் தமிழகத்தில் 18 மாவட்டங்களிலும், இளைஞர் நீதிக் குழுமங்கள் மாநிலத்தில் 8 மாவட்டங்களிலும் அமைக்க அரசு ஆணை வழங்கியுள்ளது. குழந்தைகள் நலக் குழுமங்களுக்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்வு செய்திட மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்/ஆணையரை உள்ளடக்கிய தேர்வுக் குழு தகுதிவாய்ந்த நபர்களைத் தேர்வு செய்து அரசுக்குப் பரிந்துரைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். இளைஞர் நலக் குழுக்களில் ஒரு தலைவரும், 4 உறுப்பினர்களும் அடங்குவர். இவர்கள் அனைவருமே சமூக நலப் பணிகளில் ஈடுபாடுடையவர்கள். இளைஞர் நீதிக் குழுமங்களைப் பொறுத்தமட்டில் நீதிமன்ற நடுவர் இதன் தலைவராகவும், இரு சமூக நலத் தொண்டர்கள் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

63—

### குழந்தைகள் நலக் காப்பகம்

**வினா எண் 30535—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சியில் மிகவும் பழுதடைந்துள்ள குழந்தைகள் நலக் காப்பகம் கட்டடத்தை புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சியில் மிகவும் பழுதடைந்துள்ள குழந்தைகள் நலக் காப்பகத்தைச் செப்பனிட ரூ.7,000-க்கும் மேலாக செலவு மேற்கொள்ள வேண்டியிருப்பதால் நடப்பாண்டில் நிதி ஒதுக்கீடு பெற்று பழுது நீக்கம் செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

64—

## தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம்

**வினா எண் 31719—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், மகளிர்க்கு தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். சேலம் மாவட்டத்தில் மகளிர்க்கு தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மட்டும் ரூ.166.95 லட்சம் செலவில் 20,373 பெண்களுக்குப் பயிற்சி அளித்து, தாட்கோ, ஊரக வளர்ச்சி முகமை, குடிசைப்பகுதி மாற்று வாரியம், வேளாண்மைத் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை, பிற்பட்டோர் நலத் துறை, பட்டுப்புழு வளர்ச்சித் துறை ஆகிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து 31-3-2003 முடிய மொத்தம் 1,25,755 பெண்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளித்துள்ளது.

65—

## சிறப்பு இல்லம்

**வினா எண் 31842—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு சிறப்பு இல்லத்தில் இரண்டு ஆண்டுகளாக பயிற்சி பெற்ற, சிறார் குற்றவாளிகள் எத்தனை பேர்?



(ஆ) அந்நிறுவனத்தின் உற்பத்தியில் கிடைக்கப்பெற்ற வருமானங்கள் எவ்வளவு? இனம் வாரியாக அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடந்த இரண்டு ஆண்டுகளாக சிறப்பு இல்லத்தில் பயிற்சி பெற்ற சிறார் குற்றவாளிகளின் விவரம் வருமாறு:—

*2001-ம் ஆண்டு - 24 பேர்*

*2002-ம் ஆண்டு - 20 பேர்*

உற்பத்திப் பிரிவு வருமானங்கள்:

| | 2001-2002 | 2002-2003 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| தையற் பிரிவு | 31,874/- | 37,321/- |
| பனியன் | 74,303/- | 74,595/- |
| விசைத்தறி | 38,215/- | 31,257/- |
| சோப்பு | 1,15,785/- | 1,59,678/- |

செங்கற்பட்டு அரசினர் சிறப்பில்லம் தற்போது இளைஞர் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம், 2000-ன்படி சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் சிறார்களுக்கான இல்லமாக இப்பொழுது செயல்படுகிறது.

[2003 நவம்பர் 3

66—

## தத்து கொடுத்தல்

**வினா எண் 32152—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொட்டில் குழந்தை திட்டத்திலுள்ள குழந்தைகள் குழந்தை இல்லாதவர்களுக்குத் தத்து கொடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தொட்டில் குழந்தை திட்டத்திலுள்ள குழந்தைகள் குழந்தை இல்லாதவர்களுக்குத் தத்து கொடுக்கப்படும். சட்டரீதியாக குழந்தையை தத்து எடுக்க அங்கீகரிக்கப்பட்ட தத்து நிறுவனங்கள் உள்ளன. அந்நிறுவனங்களுக்குத் தொட்டில் குழந்தைகள் வழங்கப்படும். அதன் மூலம் அக்குழந்தைகளை முறையாக தத்து எடுத்துக்கொள்ளலாம்.

67—

## தொட்டில் குழந்தைகள் திட்டம்

**வினா எண் 32154—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டில் குழந்தைகள் திட்டத்தின்கீழ் எத்தனை குழந்தைகள் வளர்க்கப்படுகின்றன?

(ஆ) அவர்களின் எதிர்காலத்திற்கு என்ன வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தொட்டில் குழந்தைகள் திட்டத்தின்கீழ் குழந்தைகள் வளர்க்கப்படுவதில்லை. தொட்டில்களில் பெறப்படும் குழந்தைகள் உடனே வரவேற்பு மையங்களுக்கு மாற்றப்பட்டு அங்கு அவர்கள் பராமரிக்கப்படுகிறார்கள்.

தொட்டில் குழந்தை திட்டத்தின் நோக்கமே ஆதரவற்ற நிலையில் விடப்படும் குழந்தைகளுக்குப் புகலிடமளித்து அவர்கள் தத்து எடுக்கப்படும் வரை அரசுரிமை பெற்ற தத்து கொடுக்கும் நிறுவனங்களால் பராமரிக்கப்பட வேண்டும் என்பதாகும். எனவே, தொட்டில் குழந்தை திட்டத்தின்கீழ் தொட்டில்களில் விழும் குழந்தைகள் அரசுரிமை பெற்ற தத்து கொடுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றனர். அக்குழந்தைகள் தொட்டில் குழந்தைகள் திட்டத்தின்கீழ் தனியாக வளர்க்கப்படுவதில்லை.

(ஆ) தொட்டில் குழந்தைகள் அரசு அங்கீகாரத்துடன் தத்து நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் வரை மட்டுமே அரசின் நேரடி கண்காணிப்பில் இருக்கிறார்கள். இக்குழந்தைகள் தத்து எடுக்கப்பட்ட பின்பு ஒரு குடும்பத்தில் அனைத்து வசதிகளுடனும், முக்கியமாக பெற்றோரின் அரவணைப்பிலும் சந்தோஷமாக வளர்க்கப்படுகிறார்கள். அதனால், அவர்களின் எதிர்காலத்திற்கு அரசின் உதவி என்ற வினா எழாது.

68—

## தொட்டில் குழந்தைகள் இல்லத்திலிருந்து தத்து எடுத்தல்

**வினா எண் 34808—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு தொட்டில் குழந்தைகள் இல்லத்திலிருந்து குழந்தைகள் இல்லாத பெற்றோர்கள் தத்து எடுப்பதற்கு அரசு என்னென்ன நிபந்தனைகள் வழங்கி உள்ளது?

(ஆ) *2001-2002* ஆம் ஆண்டில் தத்து எடுப்பதற்காக எத்தனை குழந்தைகள், குழந்தையில்லாப் பெற்றோருக்கு வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* தொட்டில் குழந்தைகள் இல்லத்திலிருந்து பெறப்படும் குழந்தைகளைத் தத்து கொடுக்க தனியான நிபந்தனைகள் ஏதுமில்லை. இக்குழந்தைகளைத் தத்து கொடுக்க, நடைமுறையில் உள்ள தத்து எடுக்கும் முறையே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தத்து திட்டத்தின்கீழ் ஆதரவற்ற மற்றும் பெற்றோர்களால் ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகள் உரிமம் பெற்ற தொண்டு நிறுவனங்கள் மூலம் சட்ட பூர்வமாக தத்து கொடுக்கப்படுகின்றன. தத்து எடுக்கும் பெற்றோர்கள் கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:

1. தத்தெடுக்கும் பெற்றோர்களின் மொத்த வயது 90-க்குள்ளும் அதில் ஒருவர் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும். இவ்வாறு இருந்தால் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்ளலாம்.

2. தனிப்பட்ட ஆணோ/பெண்ணோ அல்லது விதவையோ அல்லது முறையாக விவாகரத்து செய்தவர் தத்து எடுக்க விரும்பினால் அவர்களின் வயது 30-ம் அதற்கு மேலும் இருக்க வேண்டும். மற்றும் தத்து எடுக்கும் பெற்றோருக்கும் குழந்தைக்கும் குறைந்தது 21 வயது வித்தியாசம் இருக்க வேண்டும்.

மேலும் ஒரு குழந்தையை நல்ல முறையில் வளர்க்கத் தேவையான வருமானம் இருத்தல் வேண்டும்.

*(ஆ)* 2001 ஆம் ஆண்டில் மொத்தம் 251 குழந்தைகள் 'தத்து' கொடுக்கப்பட்டுள்ளனர். இவற்றில் 185 குழந்தைகள் உள்நாட்டிலும், 66 குழந்தைகள் வெளிநாட்டிலும் தத்து கொடுக்கப்பட்டுள்ளனர். மேலும் 2002 ஆம் ஆண்டில் 209 குழந்தைகள் தத்து கொடுக்கப்பட்டுள்ளனர். இவற்றில் 201 குழந்தைகள் உள் நாட்டிலும் 8 குழந்தைகள் வெளிநாட்டிலும் தத்து கொடுக்கப்பட்டுள்ளனர்.



**69—**

### பத்திரம் வழங்குதல்

**வினா எண் 34853—திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் மற்றும் நம்பியூர் ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் மற்றும் திருமண நிதியுதவித் திட்டம் மூலம் நிலுவை உள்ள பயனாளிகளுக்கு சமூக நலத் துறை மூலம் பத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* நிலுவையிலுள்ள விண்ணப்பங்களுக்கு 2003-2004 ஆம் நிதியாண்டில் முதுநிலை அடிப்படையில் பத்திரங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**70—**

### ஆயாக்கள் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 35287—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சங்கராபுரம் தொகுதியில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் காலியாகவுள்ள ஆயாக்களின் பணியிடங்களை நிரப்ப அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 212, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 29-11-2001-ன்படி தற்போது காலியாகவுள்ள பணியிடங்களை, புதிதாக நிரப்ப அரசு தடை விதித்துள்ளதால், அக்காலிப்பணியிடங்களைத் தற்போது நிரப்ப இயலாது.

**71—**

## சேவை இல்லங்கள்

**வினா எண்-37418—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் அரசு சேவை இல்லங்கள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) அரசு சேவை இல்லங்கள் தொடங்க புதிய பணியிடங்களை ஏற்படுத்தி பணியாளர்களைப் பணியமர்த்த வேண்டும். புதிய பணியிடங்களை ஏற்படுத்த அரசு தடை விதித்துள்ளதால், ஏற்காடு தொகுதியில் அரசு சேவை இல்லம் தொடங்குவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.





**72—**

## ஊட்டச்சத்து பயன்கள் அடையும் திட்டம்

**வினா எண் 37420—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், ஊட்டச்சத்து பயன்கள் அடையும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் 0-6 வயதுடைய குழந்தைகள் 1,941 பேரும், கர்ப்பிணிகள் 185 பேரும், பாலூட்டும் தாய்மார்கள் 201 பேரும் இணை உணவு பெறுகின்றனர். மதிய உணவு வழங்கும் திட்டத்தின்கீழ் 3-5 வயதுடைய குழந்தைகள் 1,270 பேரும், 462 முதியோரும் பயனடைகிறார்கள்.

**73—**

## கிராமோதய யோஜனா திட்டம்

**வினா எண் 37849—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் பாரதப் பிரதமரின் கிராமோதய யோஜனா திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் 21 மையங்களில் 0-3 வயதுடைய 78 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து இணை உணவு வழங்கப்படுகிறது.

**74—**

**எடை எடுக்கும் கருவிகள்**

**வினா எண் 38645—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் அங்கன்வாடி மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், குழந்தைகளை எடை எடுக்கும் கருவிகள் 2002-2003-ல் வாங்கப்பட உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். சேலம் மாவட்டத்தில் 1,261 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) ஆம். சேலம் மாவட்டத்திலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு அவை தொடங்கும்போது எடைக்கருவிகள் வழங்கப்பட்டன. அதன் பின்னர், பழுதடைந்த கருவிகளுக்குப் பதிலாக மார்ச் 2003-ல் 947-ம், மே 2003-ல், 121-ம் ஆக மொத்தம் 1,068 குழந்தைகள் எடை எடுக்கும் கருவிகள் இதுவரை புதிதாக வழங்கப்பட்டுள்ளன.

**75—**

**குழந்தைகள் காப்பகங்கள்**

**வினா எண் 38647—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

(அ) சேலம் மாவட்டத்தில் அரசு குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றனவா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 2 அரசு குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. சேலத்தில் ஒன்றும், பெத்தநாயக்கன் பாளையம் என்ற இடத்தில் ஒரு காப்பகமும் மொத்தம் இரண்டு காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன.

| (ஆ) | அனுமதிக்கப்பட்ட குழந்தைகள் | பயனடையும் குழந்தைகள் |
|---|---|---|
| சேலம் | 250 | 247 |
| பெத்தநாயக்கன் பாளையம் | 100 | 96 |

**76—**

**சுடுகாட்டுப் பாதை அமைத்தல்**

**வினா எண் 20869—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சின்ன எலந்தம்பட்டு ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதியில் சுடுகாட்டுப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், சின்ன எலந்தம்பட்டு கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு மயானப் பாதை அமைத்துத் தர எலந்தம்பட்டு கிராம ரி.ச.எண் 114/6,

114/2,3, 114/5, ஆகிய புலங்களில் நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு போதிய நிலத்தைக் கையகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**77—**

### கடன் வழங்கும் திட்டம்

**வினா எண் 24353—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலையில்லாத ஆதிதிராவிட பட்டதாரிகளுக்கு சிற்றுந்து வாங்க தாட்கோ மூலம் கடன் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாட்கோ மூலம் ஆதிதிராவிட பட்டதாரிகளுக்கு சிற்றுந்து உட்பட வாகன கடன்கள் வழங்கும் திட்டம் தேசிய தாழ்த்தப்பட்டோர் நிதி உதவி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகவும், தனி நபர் தொழில் முனைவோர் திட்டங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்படுகிறது. பயனாளிகள் பட்டதாரிகளாக இருந்தாலும், ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும். அவ்வாறு ஓட்டுநர் உரிமம் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் சிற்றுந்து வாங்க கடனுதவி கோரி விண்ணப்பம் அளித்தால் அக்கோரிக்கை தேசிய தாழ்த்தப்பட்டோர் நிதி உதவி மற்றும் மேம்பாட்டுக் கழகத் திட்டத்தின் கீழும் மற்றும் வங்கிகள் மூலமும் கடனுதவி வழங்கப்படுகிறது. தனி நபர் தொழில் முனைவோர் கடனுதவித் திட்டத்தின் கீழும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

**78—**

### மயான சாலை

**வினா எண் 29255—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சியிலுள்ள கண்ணபிராண்டி ஆதிதிராவிடர் பகுதி மயான சாலை போட்டுக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், மாதானம் கிராமத்தில் கண்ணபிராண்டி உட்கிராமத்தில் கீழ்க்கண்டுள்ள விவரப்படி நஞ்சை நிலம் 23-03-2003-ல் கையகப்படுத்தப்பட்டுள்ளது:

| புல எண் | வகைபாடு | பரப்பளவு ஏர்ஸ். |
|---|---|---|
| 211 | நஞ்சை | 0.03.5 |
| 242.9 | நஞ்சை | 0.02.5 |
| 242.9 | நஞ்சை | 0.01.0 |
| 244.11 | நஞ்சை | 0.02.0 |
| கூடுதல் | | 0.09.0 |

இந்நிலங்களை ஊராட்சிக்கு ஒப்படைத்து ஊராட்சி மூலம் நடப்பு நிதியாண்டில் (2003-2004) மயானத்திற்கு சாலை வசதி செய்து கொடுக்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

**79—**

### தாட்கோ திட்டங்கள்

**வினா எண் 31077—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாட்கோ திட்டங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தெரிந்துகொள்ள தாட்கோ செயல்விளக்கம் அதிகாரிகளைக் கொண்டு கிராமந்தோறும் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஆம், ஒவ்வொரு வட்டாரம் தோறும் ஆதிதிராவிடர் நல விரிவாக்க அலுவலர்கள் கிராமங்கள்தோறும் ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு தாட்கோ செயல் திட்டங்களை எடுத்துரைத்து, அவர்களுக்குக் கடன் பெறும் விண்ணப்பங்களை இலவசமாக அளித்து, அவை மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் அமைந்துள்ள குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்டு வங்கிக்கு பரிந்துரைக்கப்படும் வரையிலான பணிகளை மேற்கண்ட விரிவாக்க அலுவலர்கள் செயல்படுத்துகின்றனர்.

**80—**

**தொழிற்கூடங்கள் விவரம்**

**வினா எண் 34851—திரு. க. பாரமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், ஈங்கூரில் அமைந்துள்ள தாட்கோ பின்னலாடைத் தொழிற்சாலையில் உள்ள தொழிற்கூடங்கள் எத்தனை?

(ஆ) பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்ட தொழிற்கூடங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டம், ஈங்கூரில் அமைந்துள்ள தாட்கோ தொழிற்பேட்டையில் 200 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) அரசாணை(நிலை) எண் 110, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 30-12-2002-ல் வெளியிடப்பட்ட ஆணைப்படி ஈங்கூரில் உள்ள 200 தொழிற்கூடங்களுக்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் பயனாளிகளைத் தேர்வுசெய்ய ஆணையிடப்பட்டது. ஆனால், மேற்குறிப்பிட்ட அரசாணையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இந்த வழக்கில் உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. உயர் நீதிமன்ற இடைக்காலத் தடையை நீக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நீதிமன்றத் தடை நீக்கப்பட்டவுடன் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு தொழிற்கூடங்கள் ஒதுக்கப்படும்.





**81—**

**தொழிற்கூடங்கள்**

**வினா எண் 34855—திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், முதலிப்பாளையம் தாட்கோ தொழிற்பேட்டையில் எத்தனை தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) இதில் பயனாளிகளுக்கு எத்தனை ஒதுக்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், முதலிப்பாளையம் பின்னலாடைத் தொழிற்பேட்டையில் 100 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) இதில் 54 தொழிற்கூடங்கள் பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

**82—**

**பள்ளித் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 35425—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஆதிதிராவிடர் நலப் பள்ளியை 2001-02-ல் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த உத்தரவிட்டதைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002ஆம் ஆண்டில் நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளில் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியைச் சேர்ந்த மாதானம் அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி இடம் பெறவில்லை. எனினும், 2003-2004 ஆம் ஆண்டில் நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளில், இப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டு, அரசு ஆணை (நிலை) எண் 71, ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நலத் துறை, நாள் 22-5-2003-ல் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

83—

## இலவசப் பாட நூல் திட்டம்

**வினா எண் 35708—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் வழங்கும் இலவசப் பாட நூல் திட்டத்தின் மூலம் பயன்பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் வழங்கப்படும் இலவசப் பாட நூல் திட்டத்தின் மூலம் பயன்பெற்றவர்கள் எண்ணிக்கை மற்றும் செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு:—



2003 நவம்பர் 3]

| வரிசை எண் | திட்டம் | பயன்பெற்றவர்கள் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட பாட நூல்கள். | 2,552 | 1,32,769.96 |
| 2. | அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட குறிப்பேடுகள். | 2,198 | 90,725.00 |
| 3. | பொதுப்பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட பாட நூல்கள். | 8,533 | 6,53,816.00 |
| 4. | பொதுப்பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட குறிப்பேடுகள். | 31,830 | 19,69,080.00 |

84—

## ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள் கட்டுதல்

**வினா எண் 38296—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், ஆதிதிராவிடர் மாணவர்/ மாணவியருக்கு விடுதிகள் கட்ட "தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்திடம்" ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை விடுதிகள் கட்டப்படவுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[2003 நவம்பர் 3

(ஆ) சேலம் மாவட்டத்தில் வாடகையில் இயங்கி வரும் 14 விடுதிகளில் 10 விடுதிகளுக்கு தற்போது கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதி 4 விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.

85—

### போக்குவரத்துப் பணியாளர் சம்பள விவரம்

**வினா எண் 14294—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் அதிகாரிகள் (அரசு சம்பள விகிதத்தில்) எத்தனை பேர்?

(ஆ) தனித்தனியாக ஒவ்வொரு கழகத்திற்கும் அதிகாரிகள் வாங்கும் சம்பளம் ஒரு ஆண்டிற்கு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் 18 அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் மொத்தம் 778 அதிகாரிகள் அரசு சம்பள விகிதத்தில் பணிபுரிந்து வருகிறார்கள்.

(ஆ) ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் பணிபுரியும் அதிகாரிகளுக்கு ஒரு ஆண்டிற்கு வழங்கப்படும் சம்பள விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வரிசை எண் (1) | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் (2) | அதிகாரிகளின் எண்ணிக்கை (3) | ஓராண்டிற்கு வாங்கும் சம்பளம் ரூபாய் (4) |
|---|---|---|---|
| 1. | மாநகரப் போக்குவரத்துக் கழகம் | 86 | 2,07,50,000.00 |
| 2. | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் | 58 | 1,48,00,000.00 |
| 3. | அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் | 47 | 1,01,16,218.35 |



2003 நவம்பர் 3]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4. | வேலூர் | 34 | 76,36,602.00 |
| 5. | காஞ்சிபுரம் | 33 | 72,73,000.00 |
| 6. | சேலம் | 46 | 97,00,000.00 |
| 7. | தருமபுரி | 31 | 66,53,326.00 |
| 8. | கோவை | 94 | 2,03,51,831.00 |
| 9. | ஈரோடு | 46 | 1,05,20,043.00 |
| 10. | கும்பகோணம் | 31 | 66,53,326.00 |
| 11. | திருச்சி | 42 | 97,14,942.14 |
| 12. | காரைக்குடி | 32 | 68,01,012.00 |
| 13. | புதுக்கோட்டை | 20 | 43,81,000.00 |
| 14. | மதுரை | 41 | 96,80,448.00 |
| 15. | திருநெல்வேலி | 36 | 83,52,490.00 |
| 16. | நாகர்கோவில் | 37 | 87,13,984.80 |
| 17. | திண்டுக்கல் | 42 | 87,69,732.00 |
| 18. | விருதுநகர் | 22 | 44,76,791.40 |
| | மொத்தம் .. | 778 | 17,53,44,746.69 |

86—

### பேருந்து வசதி

**வினா எண் 15326—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், சிதம்பரபுரம் கிராமத்தின் மேற்குப் பகுதிக்கு பேருந்துகள் செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2003 நவம்பர் 3

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ராதாபுரம் - அத்தங்கரைப்பள்ளி வாசல் சாலையில் அமைந்துள்ள சிதம்பரபுரம் கிராமத்தில் தற்போது பேருந்துகள் நின்று செல்லும் பிரதான நிறுத்தத்திலிருந்து மேற்கு திசையில் 0.2 கி.மீ. தூரத்தில் சிதம்பரபுரம் மேற்குப் பகுதி அமைந்துள்ளது. ஆகவே இப்பகுதியைச் சார்ந்த பொதுமக்கள் தற்போது 0.2 கி.மீ. தூரத்திலேயே இருக்கும் சிதம்பரபுரம் பிரதான நிறுத்தத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, சிதம்பரபுரம் மேற்குப் பகுதியில் பேருந்துகள் நின்று செல்லும்படியாக இயக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. தவிர, சிதம்பரபுரம் மேற்குப் பகுதி என்பது சிதம்பரபுரம் கிராமத்தின் ஒரு அங்கமே ஆகும். எனவே சிதம்பரபுரம் மேற்குப் பகுதியில் பேருந்துகள் நின்று செல்வது பற்றி நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**87—**

## பேருந்து வசதி

**வினா எண் 17333—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், செட்டிகுளம் ஊராட்சி, புதுமனை கிராமத்திற்கு இரவு வேளையில் பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அஞ்சுகிராமம்-செட்டிக்குளம்-கூடன்குளம் பிரதான சாலையிலிருந்து பிரிந்து புதுமனை என்ற கிராமம் சுமார் 0.5 கி.மீ. தொலைவில் உட்புறமாக அமைந்துள்ளது. ஏற்கெனவே மேற்படி கிராமத்திற்கு மதுரை கோட்டம்-3 வாயிலாக கீழ்க்கண்டவாறு பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது:



2003 நவம்பர் 3]

| | | |
|---|---|---|
| 1 தடம் எண் 3ஜி. நாகர்கோவில் - பெருமணல் | - | 10 சுற்றுக்கள் |
| 2. தடம் எண் 22 கன்னியாகுமரி-கூடன்குளம் | - | 2 சுற்றுக்கள் |
| 3. தடம் எண் வி3 நாகர்கோவில் - புதுமனை | - | 4 சுற்றுக்கள் |
| மொத்தம் | - | 16 சுற்றுக்கள் |

இவற்றுள் தடம் எண் 3ஜி பேருந்து இரவில் நாகர்கோவிலிலிருந்து பெருமணல் செல்லும்பொழுது 22.30 மணியளவில் புதுமனைக்கு வந்து பெருமணல் வரை செல்கின்றது. எனவே மேற்படி கிராமத்திற்கு தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானதாகும். புதுமனையிலிருந்து 0.8 கி.மீ. தூரத்தில், பிரதான சாலையில் இருக்கும் செட்டிகுளத்திற்கு வந்து, இரவு நேரம் உட்பட, பிரதான சாலையில் இயக்கப்படும் பேருந்துகளையும் பயன்படுத்த போதிய வசதிகள் தற்போது உள்ளது. எனவே மேற்கொண்டு இரவு நேரத்தில் புதுமனை கிராமத்திற்கு பேருந்து வசதி செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

## போக்குவரத்துக் கழகங்களில் வசூல் தொகை

**வினா எண் 28917—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகரப் போக்குவரத்துக் கழகங்களில் நாளொன்றுக்கு வசூலாகும் தொகை எவ்வளவு?

(ஆ) செலவு விவரம் யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள மாநகரப் போக்குவரத்துக் கழகங்களில் 2002-2003 ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றுக்கு வசூலாகும் தொகை மற்றும் சராசரியாக நாளொன்றுக்கு ஏற்படும் செலவினங்களின் விவரம் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது:

[2003 நவம்பர் 3

| அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பெயர்கள் | 2002-2003 ஆம் ஆண்டில் சராசரி நாளொன்றுக்கு வசூலாகும் தொகை | 2002-2003 ஆம் ஆண்டில் சராசரி நாளொன்றுக்கு செலவாகும் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னை-2. | 106.77 | 115.89 |
| 2. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (சேலம்-கோட்டம்-1) சேலம். | 6.19 | 6.36 |
| 3. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கோவை-கோட்டம்-1) கோயம்புத்தூர். | 19.33 | 18.48 |
| 4. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கும்பகோணம்-கோட்டம்-2), திருச்சி. | 9.15 | 8.89 |
| 5. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (மதுரை - கோட்டம்-1), மதுரை. | 26.18 | 26.41 |
| 6. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (மதுரை - கோட்டம்-2), திருநெல்வேலி. | 3.25 | 4.83 |

**89—**

## பேருந்துகளால் இலாப, நஷ்ட விவரம்

**வினா எண் 29431—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்படும் பேருந்துகளால் கிடைக்கும் இலாபம் அல்லது அடையும் நட்டம் எவ்வளவு?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்படும் பேருந்துகளால் கிடைக்கப்பெற்ற இலாபம் (+) அல்லது அடையும் நட்டம் (-) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1996-1997 | 623.57 |
| 1997-1998 | 559.70 |
| 1998-1999 | 653.46 |
| 1999-2000 | 624.41 |
| 2000-2001 | 307.71 |
| 2001-2002 | +60.74 |
| **மொத்த நட்டம்** .. | **-2708.11** |

**90—**

## மணல் எடுத்தல்

**வினா எண் 31877—திரு. டி. மணி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மணச்சநல்லூர் வட்டம், திருவாசி ஊராட்சி, கொள்ளிடம் ஆற்றில் அரசு அனுமதியின்றி சட்ட விரோதமாக மணல் எடுப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள

[2003 நவம்பர் 3

அறிவுரைகளின்படி வருவாய்த் துறை அலுவலர்களாலும், கனிமத் துறையினராலும் அடிக்கடி நடத்தப்படும் திடீர் சோதனைகளாலும் குறைந்த விலைக்கு மணல் குவாரி உரிமதாரர்களால் மணல் விற்கப்படுவதாலும் கொள்ளிடம் ஆற்றில் அரசு அனுமதியின்றி சட்ட விரோதமாக மணல் எடுக்க வாய்ப்புகள் ஏதுமில்லை.

ஏற்கெனவே கொள்ளிடம் ஆற்றில் அரசு புறம்போக்கில் விரகாலூர், மேல்பத்து மற்றும் கிளியநல்லூர் ஆகிய கிராமங்களில் அரசு குத்தகை உரிமங்கள் பெறப்பட்ட மணல் குவாரிகள் நடைமுறையில் உள்ளன. தற்சமயம் திருவாசி ஊராட்சியில் மணல் குவாரி ஏதுமில்லை.

**91—**

**மணல் திருட்டு**

**வினா எண் 33356—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, கொடையாஞ்சி என்ற இடத்தில் செல்லும் பாலாற்றில் மணல் திருட்டை தடை செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டத்தில் நாட்ராம்பள்ளி தொகுதி எல்லைக்குட்பட்ட கொடையாஞ்சி மற்றும் அதன் அண்மையில் உள்ள பாலாற்றில் கள்ளத் தனமாக மணல் திருடுவதைத் தடுக்கும் தொடர் நடவடிக்கையாக கனிமத் துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களால் அடிக்கடி ரோந்துப்பணி மேற்கொள்ளப்படுகிறது. அவ்வகையில் ரோந்து பணியின்போது மணல் திருட்டில் ஈடுபடும் வாகனங்கள் கைப்பற்றப்பட்டு அவற்றின்மீது அபராதம் விதிக்கப்படுகிறது.

**92—**

**கூட்டுறவு சர்க்கரை ஆலை**

**வினா எண் 33394—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

*(அ)* கோயம்புத்தூர்-உடுமலைப்பேட்டை-அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சர்க்கரை குடோன் N.C.D.C. பேஸ் மூலம் கட்டும் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 35,000 சர்க்கரை மூட்டைகள் இருப்பு கொள்ளளவு கொண்ட 6 கிடங்குகள் உபயோகத்தில் உள்ளன. இதில் 2.10 இலட்சம் முதல் 2.15 இலட்சம் வரை சர்க்கரை மூட்டைகள் இருப்பு வைக்க போதுமானதாக உள்ளது. சர்க்கரை உற்பத்தி அதிகமான வருடத்திலும் மற்றும் மத்திய அரசிடமிருந்து போதுமான வெளிச் சந்தை விற்பனை அனுமதி கிடைக்காத பட்சத்திலும், கிடங்குகளில் கூடுதலான இருப்பு வைக்கும் சர்க்கரை மூட்டைகளை அரசு நிறுவன கிடங்குகளில் வாடகையில் சர்க்கரை இருப்பு சேமித்து வைக்கப்படுகிறது. எவ்வித சேதாரமும் இல்லாமல் வெளிக்கிடங்குகளில் உள்ள சர்க்கரை மூட்டைகளை மிகக் குறுகிய காலத்தில் முன்னுரிமை அடிப்படையில் முதலில் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் வெளிக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்படும் வாடகைச் செலவானது கிடங்கு கட்டுவதற்கு பெறப்படும் கடன் தொகைக்கான வட்டிச் சுமையை விட குறைவானதாகும். தற்போது கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மிகுந்த நிதி நெருக்கடி நிலையில் உள்ளதாலும், கூடுதல் கரும்பு விலையாலும், சர்க்கரை விலை வீழ்ச்சி அடைந்துள்ளதாலும், விவசாயிகளுக்குப் போதுமான கரும்பு விலை அளிக்கக்கூட இயலாத நிலையில் ஆலைகள் நட்டமடைந்து வருகின்றன. இந்நிலையில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கிடங்கு கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

**93—**

**கலப்பட ஆயில்**

**வினா எண் 21072—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

(அ) மோட்டார் வாகனத்திற்கு கலப்பட ஆயில் விற்றவர்கள் மீது 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை பேர் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) 2001-ல் தொடரப்பட்ட வழக்குகள் ஏதுமில்லை.

2002-ல் 43 நபர்கள் மீதும்

2003-ல் 36 நபர்கள் மீது (31-3-2003 வரை) வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

(ஆ) 2002-ல் தொடுக்கப்பட்ட மொத்த வழக்குகள் 25 ஆகும். மொத்த கலப்பட எரிபொருள் 15,295 லிட்டர். அதன் மதிப்பு ரூ.2,46,023/- இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்ட நபர்கள் எண்ணிக்கை 43, பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் எண்ணிக்கை 25, 2003-ல் (31-3-2003 வரை) தொடுக்கப்பட்ட மொத்த வழக்குகள் 25, மொத்த கலப்பட எரிபொருள் 19830 லிட்டர். அதன் மதிப்பு ரூ.3,26,801/- வழக்கு தொடரப்பட்ட நபர்கள் எண்ணிக்கை 36, பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் எண்ணிக்கை 25.

**94—**

### புதிய மண்ணெண்ணெய் நிலையம்

**வினா எண் 27864—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002ஆம் நிதியாண்டில் மண்ணெண்ணெய் பங்க் புதிதாக எத்தனை துவக்கப்பட்டன?

(ஆ) சேலம் மாவட்டத்தில் புதிதாக துவக்கப்பட்டது எத்தனை?



2003 நவம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் 18 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் புதிதாக துவக்கப்பட்டன.

(ஆ) சேலம் மாவட்டத்தில் தற்போது 15 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2001-2002 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் புதிதாக மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் ஏதும் துவக்கப்படவில்லை.

**95—**

### கூட்டுறவு கடைக்குக் கட்டடம்

**வினா எண் 28441—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மோசிவாக்கம் கிராமத்தில் இயங்கி வரும் கூட்டுறவு கடைக்கு கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மோசிவாக்கத்தில் இயங்கி வரும் கூட்டுறவு நியாய விலைக் கடை மேலேரிப்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினால் நடத்தப்படும் பகுதிநேரக் கடையாகும். அரசாணை வரையறைகளின்படி பகுதி நேரக் கடைக்கு ஊர் மக்களே இலவசமாக கட்டட வசதி செய்து தர வேண்டும். எனவே, மோசிவாக்கத்தில் இயங்கி வரும் பகுதி நேரக் கடைக்கு அரசு திட்டங்களின்கீழ் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

[2003 நவம்பர் 3

96—

**வாகனம் வழங்குதல்**

**வினா எண் 29771—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரத்தில் இயங்கிவரும் வட்ட வழங்கு அலுவலகத்திற்கு வாகனம் (Jeep) வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாகை மாவட்டத்தில் குடிமைப்பொருள் பணிகளுக்கு மொத்தம் 4 வாகனங்கள் அனுமதிக்கப்பட்டன. அதில் மாவட்ட விநியோக அலுவலருக்கு ட்டி.என்.51ஜி, 777-ம், நாகை வட்ட வழங்கல் அலுவலருக்கு ட்டி.என்.இசட். 2207-ம், மயிலாடுதுறை வட்ட வழங்கல் அலுவலருக்கு ட்டி.டி.ஓ. 5145-ம், சீர்காழி வட்ட வழங்கல் அலுவலருக்கு ட்டி.என்.இசட் 3165-ம் உபயோகத்தில் இருந்து வந்தது.

சீர்காழி வட்ட வழங்கல் அலுவலர் உபயோகித்து வந்த ஜீப்பு விபத்து ஏற்பட்டு, பயன்படுத்த இயலாத நிலையில், மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் கழிவு செய்ய மாவட்ட விநியோக அலுவலரால் அனுப்பப்பட்டுள்ளது. மோட்டார் வாகன பராமரிப்புத் துறையால் கழிவு செய்து, கழிவுசான்று பெற்றவுடன் அரசுக்கு முன்மொழிவு அனுப்பி அரசாணை பெற்றவுடன் புதிய வாகனம் வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

97—

**கோதுமை பயன்படுத்துதல்**

**வினா எண் 30376—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

கோதுமையை பொதுமக்கள் அதிக அளவில் பயன்படுத்த பிரச்சாரம் மேற்கொள்ளப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

இம்மாநிலத்தில், அரசு மற்றும் தனியார் துறைகள் பல்வேறு முறைகளில் விளம்பரம் மற்றும் பிரச்சாரம் போன்ற நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதால், கோதுமை மற்றும் கோதுமை பொருட்களான ரவா, மைதா ஆகியவைகளை பொதுமக்கள் தற்பொழுது அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

98—

**மரங்கள் பாதுகாத்தல்**

**வினா எண் 35662—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அழகிய பாண்டியபுரம் காட்டுப்பகுதியிலுள்ள தேக்கு, சந்தன மரங்களின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) இவைகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) காட்டுப்பகுதியிலுள்ள தேக்கு, சந்தன மரங்கள் நிலை மரங்களாக இருப்பதாலும், அவைகளின் வளர்ச்சி நாளுக்குநாள் வளர்ச்சி அடைந்து வருவதால் அவைகளின் மதிப்பை கணக்கிட முடியாது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள காட்டுப் பகுதிகளில் முதிர்ந்த தேக்குமரங்களின் அறுவடை காலம் வரும்போது அவைகளின் மதிப்பீடு கணக்கிடப்படும். சந்தன மரங்களைப் பொறுத்தவரை அப்பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறுசிறு செடிகளாக உள்ளன. எனவே, இவைகளின் மதிப்பினையும் கணக்கிட முடியாது.

(ஆ) காட்டுப் பகுதியிலுள்ள தேக்கு, சந்தன மரங்களைப் பாதுகாக்க அந்தந்தப் பகுதிகளில் வனக் காவலர்கள், வனக் காப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் தமிழ்நாடு வனச் சட்டத்தில் தக்க விதிகள் ஏற்படுத்தப்பட்டு, அவைகளை விதிகளுக்கு புறம்பாக வெட்டும் தனியார்/ சமூக விரோதிகளுக்கு தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**99—**

### தேக்கு மரங்கள்

**வினா எண் 35864—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த நிதியாண்டில் அனுமதி இல்லாமல் வெட்டப்பட்ட தேக்கு மரங்கள் எத்தனை?

(ஆ) தொடரப்பட்டுள்ள வழக்குகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) கடந்த நிதியாண்டில் அனுமதியின்றி வெட்டப்பட்ட தேக்கு மரங்கள் 137 (நூற்றி முப்பத்து ஏழு) ஆகும்.

(ஆ) அனுமதி இல்லாமல் மரங்கள் வெட்டியமைக்காக பதியப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 105 (நூற்றி ஐந்து) ஆகும்.

**100—**

### விளம்பரங்கள்

**வினா எண் 43353—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் விளம்பரங்கள் பத்திரிகைகளுக்கு எதன் அடிப்படையில் வழங்கப்படுகிறது.



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் விளம்பரங்கள் பொதுவாக அரசு அங்கீகாரப் பட்டியலில் உள்ள பத்திரிகைகளில் மட்டுமே வெளியிடப்படும். அரசின் அங்கீகாரப் பட்டியலில் இல்லாத பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடக்கோரும் துறைகளின் கோரிக்கைக்கிணங்க செய்தி, மக்கள் தொடர்புத் துறையின் மூலம் சிறப்பு நிகழ்வாகக் கருதி விளம்பரம் வெளியிடப்படும்.

விளம்பரம் வெளியிடக்கோரும் பத்திரிகைகளில் அவ்விளம்பரம் வெளியிடப்பட வேண்டியதற்கான முக்கியத்துவம் குறித்து அனைத்து தகவல்களும் அளிக்கப்பட்டால், அப்பத்திரிகைகளில் அவ்விளம்பரம் வெளியிட செய்தி, மக்கள் தொடர்புத் துறை முடிவெடுக்கும்.

(1) வரைகலையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு விளம்பரத்தின் தன்மை குறித்து, தேவைக்கேற்ப வெளியிடக்கோரும் விளம்பரம் பத்திரிகைகளில் வெளியிடப்பட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது குறித்து செய்தி, மக்கள் தொடர்புத் துறையின் முடிவே இறுதியானது.

(2) நிலம் கையகப்படுத்துதல் குறித்த விளம்பரங்கள் இரண்டு தமிழ் நாளிதழ்களில் மாவட்ட அளவில் மட்டும் வெளியிடப்படும்:

(3) ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களை நாளிதழ்களில் வெளியிடுவதற்குக் கீழ்க்காணும் நடைமுறைகள் பின்பற்றப்படும்:

| வ. எண் | விளம்பரங்கள் வெளியிடும் நாளிதழ்களின் எண்ணிக்கை மற்றும் பதிப்பு. | பணிகளின் மதிப்பு | வாங்கும் பொருட்கள்/ கருவிகளின் மதிப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | மாவட்ட அளவிலான விளம்பரம் இரண்டு தமிழ் நாளிதழ்கள் (மாவட்ட அளவில் மட்டும்) | ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.25 இலட்சத்திற்குள் | ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சத்திற்குள். |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 2 | மாநில அளவிலான விளம்பரம் ஒரு ஆங்கில நாளிதழ் (மாநில பதிப்பு) ஒரு தமிழ் நாளிதழ் (அனைத்துப் பதிப்புகள்) (தமிழ்நாட்டில்) | ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.1 கோடிக்குள். | ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ. 25 இலட்சத்திற்குள். |
| 3 | ஒரு ஆங்கில நாளிதழ் (சென்னைப் பதிப்பு) ஒரு தமிழ் நாளிதழ் (அனைத்துப் பதிப்புகள்) (தமிழ்நாட்டில்) | ரூ.1 கோடிக்கு மேல் ரூ. 5 கோடிக்குள். | ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ. 1 கோடிக்குள். |
| 4 | ஒரு ஆங்கில நாளிதழ் (அனைத்துப் பதிப்பு) ஒரு தமிழ் நாளிதழ் (அனைத்துப் பதிப்புகள்) (தமிழ்நாட்டில்) | ரூ.5 கோடிக்கு மேல் | ரூ. 1 கோடிக்கு மேல் |



# ஆறாம் பட்டியல்

1—

## ஆக்கிரமிப்பு அகற்றுதல்

**வினா எண் 17816—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கட்டக்கொம்பை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு செல்லும் பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பு எப்போது அகற்றப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கட்டக்கொம்பை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லும் பாதையில் இருந்த ஆக்கிரமிப்பு 14-5-2002 அன்று அகற்றப்பட்டு விட்டது.*

2—

## சாலை செப்பனிடல்

**வினா எண் 17958—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, செம்பூர்—எஸ். காட்டேரி— வேப்பங்கரணை சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் பெயர் செம்பூர்—எஸ். காட்டேரி சாலை முதல் வேப்பங்கரணை (வழி) நல்லூர் கி.மீ. 0/0-9/0 என்பதாகும். இச்சாலையில் கி.மீ. 0/0-3/2 வரை நல்ல நிலையில் உள்ளது. மற்றும் கி.மீ. 3/2-4/2 வரையுள்ள பகுதி பழுதுற்றடைந்த இதர மாவட்டச் சாலையை மேம்படுத்தும் திட்டம் கட்டம் 1-இல், ரூ.2.75 இலட்சங்கள் செலவிலும், கி.மீ.4/2-9/0 வரையுள்ள பகுதி மேற்படி திட்டத்தில் கட்டம் 2-இல் ரூ.10.00 இலட்சம் செலவிலும், மேம்படுத்தப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. தற்போது முழுச்சாலையும் கனரக வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றபடி நல்ல நிலையில் உள்ளது.

**3—**

## கையேடு

**வினா எண் 25275—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உடைமை பற்றிய கையேடு அரசு வெளியிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) நில உடைமைப் பதிவேடு வழங்கப்படுவதற்கான சட்டம் மற்றும் விதிகள் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டு உள்ளன. அவை தன்னிலை விளக்கமாக உள்ளன. எனவே, தனியாக நில உடைமைப் பதிவேடு பற்றிய கையேடு வெளியிடும் அவசியம் எழவில்லை.

(ஆ) எழவில்லை.



**4—**

## நிதி விவரம்

**வினா எண் 40563—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002-2003 ஆம் ஆண்டு மத்திய நிதிக் குழு தமிழகத்திற்கு அளித்த நிதி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

பதினோராவது நிதிக்குழு 2002-2003 ஆம் ஆண்டிற்கு தமிழகத்திற்கு பரிந்துரைத்த மானியங்களும், மேற்படி ஆண்டில் தமிழக அரசிற்கு உள்ளபடியான வரவும் (Actual Receipt) கீழ்வருமாறு:—

| விவரம் | 2002-2003 ஆம் ஆண்டிற்கான பதினோராவது நிதிக் குழுவின் பரிந்துரை | தமிழக அரசிற்கு உள்ளபடியான வரவு (Actual Receipt) |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| 1. வரிப் பகிர்வில் பங்கு | 3958.00 | 3048.00 |
| 2. நிர்வாக மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டங்களுக்கான மானியம் | 50.65 | 30.25 |
| 3. உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் | 131.90 | 65.95 |
| 4. இயற்கை சீற்ற நிவாரண நிதிக்கு மத்திய அரசின் பங்கு | 84.87 | 84.87 |
| 5. ஊக்க நிதி | 85.49 | @45.40 |
| மொத்தம் | 4310.91 | 3274.47 |

@2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியம் இந்த ஆண்டு பெறப்பட்டுள்ளது.

[2003 நவம்பர் 3

5—

### மேம்பாடு செய்தல்

**வினா எண் 21541—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில், நெருஞ்சிப்பேட்டை பேரைஜ்-2 நீர் தேக்கியதால் பாதிக்கப்பட்ட மயானத்திற்கு மண் கொட்டி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில் நெருஞ்சிப்பேட்டை கதவணை-2 நீர்த்தேக்கத்தால் பாதிக்கப்பட்ட மயானத்திற்கு மண்கொட்டி, மேம்பாடு செய்வதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு மின்சார வாரியம், தலைமை அலுவலகம், நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்கொண்டு வேலை செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வில் உள்ளன. ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு வேலை விரைவில் முடிக்கப்பட உள்ளது. மேற்கண்ட பணியின் தோராய மதிப்பு ரூ.3,73,800/- ஆகும்.

6—

### துணை மின் நிலையங்கள்

**வினா எண் 31641—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதியில் மின் அழுத்தக் குறைவினை தடுத்திட 110 கி.வா. துணை மின் நிலையங்கள் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?



2003 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மின் வாரிய பத்தாவது திட்டக் காலம், பகுதி 3-இல் (2003-2007) நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு துணை மின் நிலையம் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீடு சுமார் 635 இலட்சங்கள்.

7—

### மின்சாரம் எடுத்தல்

**வினா எண் 41971—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அட்டக்கட்டியில் காடம்பாறை மின் திட்டத்தின் மூலம் மின்சாரம் எடுத்துக்கொண்டு மீண்டும் அதே நீரை அணைக்கு ஏற்றி மின்சாரம் எடுப்பது போல், மேட்டூர் அணையிலும் செய்ய அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் மின் நிலையங்களில் இருந்து மின் உற்பத்திக்குப் பிறகு வெளிவரும் நீரைச் சேமித்து மீண்டும் அதே நீரை அணைக்கு ஏற்றுவதற்கு தனியாக ஒரு அணை (கீழ் அணை) தேவைப்படுகிறது. தகுந்த கீழ் அணையை மேட்டூரில் ஏற்படுத்துவது

இயலாது. எனவே, காடம்பாறை மின் திட்டத்தைப் போல் நீரை மீண்டும் அணைக்கு ஏற்றி மின்சாரம் எடுக்கும் தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் மேட்டூர் அணையில் கிடையாது.

8—

### துணை மின் நிலையங்கள்

**வினா எண் 42051—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் புதியதாக தொடங்கப்பட உள்ள துணை மின் நிலையங்கள் எத்தனை?

(ஆ) அதில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் புதியதாக நிறுவப்பட்ட துணை மின் நிலையங்கள் மொத்தம் 60 (அறுபது).

(ஆ) அதில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3 (மூன்று) புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

9—

### கோயில் நிலங்கள்

**வினா எண் 373—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலுள்ள அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு?

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் வருமானம் எவ்வளவு?



**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு பிரசன்ன நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயிலுக்கு ஆவணிப்பேரூர் கீழ்முகம் கிராமத்தில் புல எண்.1/35-இல் 0.58 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது. இந்நிலத்திற்கு ஆண்டு குத்தகை ரூ.150/- பெறப்பட்டு வருகிறது. மேலும், எடப்பாடி நகர் மையப்பகுதியில் புல எண். 508/6-இல் 2.47 ஏக்கர் காலி நிலத்தில் 0.75 ஏக்கர் நிலம் 4 சக்கர வாகனங்கள் நிறுத்தம் செய்வதற்கும் மற்றும் மேற்படி நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள தகரக் கொட்டகையில் சுமார் 100x100 சதுர அடி நிலத்தில் சைக்கிள் நிறுத்தம் வசூல் உரிமம் வருடந்தோறும் திருக்கோயில் மூலம் ஏலம் விடப்பட்டு திருக்கோயிலுக்கு பசலி 1412-க்கு ரூ.81,000/- வருமானம் வரப் பெற்றுள்ளது.

10—

### விபத்துகள் தடுத்தல்

**வினா எண் 20200—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்தியின் அமணலிங்கேஸ்வர் கோயில் அருகே சுற்றுலா பயணிகள் குளிக்கும்போது விபத்துகள் நடப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்தியின் அமணலிங்கேஸ்வர் கோயில் அருகே உள்ள நீர்வீழ்ச்சியின் தரைப்பகுதியில், கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டு பயணிகள் பாதுகாப்புடன் குளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், இதனைத்தாண்டி,

[2003 நவம்பர் 3

மலைப்பாறைகள் இருக்கும் இடத்தில் சிறிய குளம் போல் நீர்நிறைந்த பாறைகளுக்கிடையே நீர் கீழே விழுந்து கொண்டிருக்கும் பகுதியில் பாறைகள் நிறைந்து காணப்படுவதால், இதில் குளிக்கக்கூடாது எனவும், குதிக்கக்கூடாது எனவும் எச்சரிக்கை அறிவிப்புகள் வைக்கப்பட்டுள்ளன. மேலும், வன இலாகாவினரும், காவல் துறையினரும், அறநிலையத் துறையுடன் இணைந்து பல்வேறு எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். வனத் துறையின் சார்பாக ஒருவரும், திருக்கோயிலின் சார்பாக ஒருவரும் கூட்டம் அதிகம் வரும் நாட்களில் மேற்படி பஞ்சலிங்கத்தின் அருகில் காவல் புரிகின்றனர். மேலும், கூட்டம் அதிகம் வரும் காலங்களில் காவல் துறைக்கு தகவல் தெரிவித்து கூடுதல் பாதுகாப்பு கோரப்பட்டு, பாதுகாப்புப் பணிகள் செய்யப்பட்டு வருவதுடன் வருகின்ற பயணிகளின் கவனத்தில் நன்கு தெரியும் வண்ணம் பல இடங்களில் அபாய எச்சரிக்கை அறிவிப்பும் வைக்கப்பட்டுள்ளது.

11—

### சுற்றுச் சுவர்

**வினா எண் 20501—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சுப்பிரமணியர் (முருகர்) கோயிலைச் சுற்றி உட்பகுதியில் சுற்றுச்சுவர் இல்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கோயிலைச் சுற்றி பின்புறம் சுற்றுச்சுவர் அரசு அமைத்துத் தருமா? ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் வெளிப்பகுதி முழுவதும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. உட்பகுதி சற்றே சரிவாக உள்ளதால் இதில் கட்டிடங்கள் ஏதும் கட்ட இயலவில்லை. உட்புறப்பகுதியில் சுற்றுச்சுவர் இல்லாத பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்க திருக்கோயிலில் நிதிவசதி இல்லாததால் உபயதாரர்களை அணுகி உபயப் பணியாக செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2003 நவம்பர் 3]

12—

### கோயில் திருப்பணி

**வினா எண் 27366—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஒன்றியம், வெள்ளியம்பதி அருள்மிகு பத்ரகாளியம்மன் கோயில் திருப்பணி நடத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஒன்றியம், வெள்ளியம்பதி அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயிலுக்கு உபயதாரர்கள் மூலம் 5-6-1998 இல் திருப்பணி செய்யப்பட்டு கும்பாபிஷேகம் முடிவுற்றுள்ளது. கும்பாபிஷேகம் நடைபெற்று ஐந்து ஆண்டுகளே முடிவடைந்துள்ளதால் தற்போது திருப்பணி செய்ய வேண்டிய செயற்குறிப்பு ஏதுமில்லை.

13—

### அவசர கால ஊர்தி

**வினா எண் 32897—திரு. நா. சந்திரமோகன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனையில் அவசர கால ஊர்தி (ஆம்புலன்ஸ்) கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 நவம்பர் 3

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனையில் இரண்டு வாகனங்கள் தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. எனவே, மேற்கொண்டு புதிய வாகனங்கள் வழங்குவது குறித்து அவசியம் எழவில்லை.

14—

### ஆயுர்வேத் மருத்துவமனை

**வினா எண் 38711—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதியில் போத்தனூர் பகுதிக்கு ஆயுர்வேத மருத்துவமனை எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பேரூர் தொகுதியில், போத்தனூர் பகுதிக்கு ஆயுர்வேத மருத்துவமனை தொடங்க செயற்குறிப்பு எதுவும் பரிசிலனையில் இல்லை.

சித்தா மற்றும் ஆயுர்வேத, யுனானி பிரிவுகள் புதிதாக துவங்குவதற்கு அரசின் கொள்கை முடிவின்படி அவ்வப்போது அறிவிப்புகள் வெளியிடப்படும்போது இந்திய மருத்துவ முறை பிரிவுகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இனி வருங்காலங்களில் அரசு அனுமதிக்கும் நிலையில் புதிதாக ஆயுர்வேத பிரிவுகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2003 நவம்பர் 3]

15—

### உழவர் வயல்வெளிப் பள்ளி

**வினா எண் 15244—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் உழவர் வயல்வெளிப் பள்ளி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதியில் பத்தமடை பேரூராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டில் உழவர் வயல்வெளிப் பள்ளி அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

16—

### உழவர் வயல்வெளிப் பள்ளி அமைத்தல்

**வினா எண் 15280—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் உழவர் வயல்வெளிப் பள்ளி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதியில் மேலச்சேவல் பேரூராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டில் உழவர் வயல்வெளிப் பள்ளி நடத்த திட்டம் ஏதுமில்லை.

17—

## பால்வாடிப் பள்ளி

**வினா எண் 20584—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், பூசாரிபாளையத்தில் பால்வாடி பள்ளி இன்றி சிரமப்படுவது அரசின் கவனத்திற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், பூசாரிப்பாளையத்தில் மக்கள் தொகை 900 மட்டுமே உள்ளதாலும், குழந்தைகளின் எண்ணிக்கை 20-க்கு குறைவாக உள்ளதாலும், புதியதாக மையம் அமைக்க அரசு விதிகளில் இடமில்லை.

18—

## தங்கும் விடுதி

**வினா எண் 22758—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் மத்திய அரசின் 75 சதவீத மானியத்தில், பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) இல்லை எனில், எடப்பாடியில் பெண்களுக்கான தங்கும் விடுதிகள், யாரும் துவக்கப்படாமல் உள்ளதால் அங்கு விடுதி கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் மத்திய அரசின் மானியம் பெற்று பணிபுரியும் மகளிர் விடுதிகளை செயல்படுத்தி வருகின்றன. எனினும், எடப்பாடி நகரில் மத்திய அரசின் 75 சதவீத மானியத்தில் பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி கட்ட ஏதாவது தனியார் தொண்டு நிறுவனம் முன் வந்து விண்ணப்பித்தால் பரிசீலனை செய்யப்படும். ஆகவே, எடப்பாடியில் பணிபுரியும் பெண்கள் விடுதி கட்டுவதற்கோ அல்லது நடத்துவதற்கோ முன்மொழிவு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



19—

## அரசு மானியம்

**வினா எண் 22769—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நல வாரியத்தின்கீழ் கிராமப் புறங்களில் செயல்பட்டு வரும் தொண்டு நிறுவனங்கள் எத்தனை?

(ஆ) அவைகளுக்கு அரசு மானியம் எவ்வளவு வழங்குகிறது?

(இ) அவைகளை சிறப்பாக செய்ய மத்திய அரசிடம் மானியம் கோரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சமூக நல வாரியத்தின் கீழ் கிராமப்புறங்களில் மாநில அரசு மூலம் 391 மற்றும் மத்திய அரசு மூலம் 881 தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் 28-2-2003 வரை மாநில அரசு மூலம் ரூ.9.75 இலட்சமும், மத்திய சமூக நல வாரியம் மூலம் ரூ.88.38 இலட்சம் தொகை மானியமாக தொண்டு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

(இ) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை, மத்திய அரசு வழங்கும் நிதியுதவியை மத்திய சமூக நல வாரியம் பெறப்பட்டு அதன் மூலம் தன்னார்வு தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. தேவையின் அடிப்படையில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு மத்திய அரசு மானியம் கோரப்பட்டுள்ளது.

20—

**உதவித் தொகை**

**வினா எண் 24269—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியத்தில் கணவரால் கைவிடப்பட்டவர் மற்றும் ஆதரவற்ற விதவைக்கான உதவித் தொகை கேட்டு விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(இ) நிலுவையில் உள்ளவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) திருச்சுழி ஒன்றியத்தில் கணவரால் கைவிடப்பட்டவர் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கான உதவித் தொகை கோரி மொத்தம் 20 நபர்கள் விண்ணப்பித்தனர்.

(ஆ) அவர்களில் தகுதியின் அடிப்படையில் மூன்று நபர்களுக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்பட்டது.

(இ) நிலுவையில் விண்ணப்பங்கள் எதுவுமில்லை.

21—

**விடுதிக் கட்டடம்**

**வினா எண் 22277—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி புதிதாக கட்டித் தர அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் வெள்ளரிவெள்ளி மற்றும் கோனேரிப்பட்டியில் ஆதிதிராவிடர் நல விடுதிகள் எதுவும் தற்போது இயங்கவில்லை. எனவே, இங்கு விடுதிக்கான கட்டடம் கட்டும் கேள்விக்கு இடமில்லை. புதிதாக விடுதிகள் துவக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

22—

**விடுதிகள் அமைத்தல்**

**வினா எண் 25589—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் நகரிலுள்ள கல்லூரிகளில் படிக்கும் தாழ்த்தப்பட்ட மாணவ/மாணவியர்கள் தங்கும் விடுதிகள் இன்றி கஷ்டப்படுவதால், அரசு விடுதிகள் கட்டித்தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் நகரில் அரசு ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதி ஒன்றும் அதேபோல் கல்லூரி மாணவியர் நல விடுதி ஒன்றும் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. எனவே, புதியதாக விடுதிகள் துவங்கும் தேவை ஏற்படவில்லை.

23—

**மாணவர் விடுதி அமைத்தல்**

**வினா எண் 35423—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 நவம்பர் 3

(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் துவங்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**24—**

**மாணவ/மாணவியர் விடுதிகள்**

**வினா எண் 37600—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி தொகுதி, சேவூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் மாணவ/மாணவியர் விடுதிகள் நடப்பாண்டில் துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**25—**

**பேருந்துகள் நிறுத்தம் செய்தல்**

**வினா எண் 13879—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

(அ) பூவிருந்தவல்லி தொகுதி, நசரத்பேட்டை உயர்நிலைப் பள்ளிக்கு அருகில் காலை-மாலை இருவேளை பேருந்துகள் நின்று செல்வதற்கு ஆணையிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக செயல்பட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பத்து வழித் தடங்களில் இயக்கப்படும் 21 சாதாரணப் பேருந்துகள் பூவிருந்தவல்லி தொகுதி, நசரத்பேட்டை உயர்நிலைப்பள்ளி வழியாக நாளொன்றுக்கு 294 பயண நடைகள் இயக்கப்படுகிறது. நசரத்பேட்டை உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு 3-10-2001 முதல் இப்பேருந்துகள் அனைத்தும் அப்பள்ளி நிறுத்தத்தில் நின்று செல்கின்றன.

**26—**

**உரிமம் வழங்குதல்**

**வினா எண் 14884—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இயக்கப்படும் மினி பேருந்துகளுக்கு உரிமம் வழங்குவதை எளிதாக்கி மேலும் அதிகப்படியான மினி பேருந்துகளை இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள சிற்றுந்து திட்டத்தை மாற்றும் உத்தேசம் ஏதும் இல்லை.

**27—**

### பேருந்து வசதி

**வினா எண் 15334—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டை கருங்குளம் ஊராட்சிக்குட்பட்ட கன்னங்குளம்-வடசேரி காலனி பகுதியில் வசிக்கும் மக்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கன்னங்குளம் வடசேரி காலனி என்பது தற்போது பேருந்துகள் சென்றுவரும் வள்ளியூர் - சாத்தான்குளம்/திருச்செந்தூர் சாலையிலிருந்து பிரிந்து சுமார் 4.00 கி.மீ. தூரத்தில் மிகவும் உட்புறமாக அமைந்துள்ளது. மேற்படி காலனி 9 வீடுகளையும், மக்கள் தொகை 30-க்குள்ளும் கொண்ட மிகச் சிறிய பகுதி ஆகும். இவ்வூர் மக்கள் குறுக்குப் பாதையாக சுமார் 1.5 கி.மீ. தூரத்திலுள்ள சிலாத்திகுளம் சென்று பேருந்துகளைப் பயன்படுத்தி வருகின்றனர். 9 வீடுகளை மட்டுமே கொண்டுள்ள வடசேரி காலனிக்கு முன்னுரிமை கொடுத்து பேருந்து வசதி செய்யும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

**28—**

### அரசு பேருந்து

**வினா எண் 15582—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேங்காலிபுரம் ஊராட்சி வழியாக அரசு பேருந்து இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கும்பகோணத்திலிருந்து சேங்காலிபுரத்திற்கு கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் இரு நகரப் பேருந்துகள் மூலம் ஏற்கெனவே தினசரி 20 நடைகள் இயக்கப்படுகிறது. எனவே, சேங்காலிபுரம் கிராமம் வழியாக கூடுதலாக பேருந்துகள் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**29—**

### போக்குவரத்து வசதி

**வினா எண் 15848—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், குடவாசல்—வலங்கைமான் வழியாக மேலப்பாலையூர் வரை போக்குவரத்து வசதி அமைத்துத் தருவதற்கு இந்த நிதி ஆண்டில் ஏதேனும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குடவாசல்—வலங்கைமான் தடத்தில் மணப்பறவையிலிருந்து தெற்கு நோக்கி பிரிந்து செல்லும் பிரிவு சாலையிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் மேலப்பாலையூர் கிராமம் அமைந்துள்ளது. தற்சமயம் மேலப்பாலையூர் கிராமம் பேருந்து வசதி இல்லாத கிராமம் ஆகும். வலங்கைமான்—குடவாசல் தடத்தில் தினசரி கழகப் பேருந்துகள் 3 மூலம் 24 நடைகளும் தனியார் பேருந்து 3 மூலம் 12 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றது. கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை மணப்பறவையிலிருந்து மேலப்பாலையூர்வரை சென்று வரும் வகையில் இயக்கினால் குடவாசல்—வலங்கைமான் தடத்தில் பயணம் செய்யும் நேரடிப் பயணிகளுக்கு பயண நேரமும், பயணக் கட்டணமும் அதிகமாகவும், நடைகள் குறையவும் வாய்ப்புள்ளது. பயணிகளுக்கு

இடையூறு ஏற்படவும் வாய்ப்புள்ளது. தற்போதுள்ள பேருந்துகளைக் கொண்டு மேலப்பாலையூர் கிராமத்திற்கு பேருந்து வசதி அளித்திட இயலவில்லை. எனவே, குடவாசல் - வலங்கைமான் வழியாக மேலப்பாலையூர் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**30—**

### சர்க்கரையின் அளவு

**வினா எண் 27584—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை எத்தனை டன்கள் என அரசு அறிவிக்குமா?

(ஆ) இதில் விற்பனை செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு எவ்வளவு?

(இ) இருப்பில் உள்ள சர்க்கரையை விற்க எடுக்கப்படவுள்ள நடவடிக்கை என்ன என அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் அரவைப் பருவங்களில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு, விற்பனை செய்யப்பட்ட அளவு மற்றும் இருப்பு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| விவரம் | 2001-2002 அரவைப் பருவம் | 2002-2003 அரவைப் பருவம் (30-4-2003 வரை) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆரம்ப இருப்பு (அக்டோபர் 1ம் தேதி) | 10.41 | 8.47 |
| உற்பத்தி | 18.39 | 12.46 |
| விற்பனை | 20.33 | 9.57 |
| இருப்பு (2002 செப்டம்பர் 30-ந் தேதி) | 8.47 | 11.36 |



(இ) மத்திய அரசு மாதந்தோறும் விற்பனை செய்ய அனுமதிக்கும் அளவுப்படிதான் ஆலைகள் சர்க்கரையை விற்க இயலும். மேலும், சர்க்கரை இருப்பை குறைக்க சர்க்கரை ஆலைகள் சர்க்கரையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன.

**31—**

### எரிசாராயம்

**வினா எண் 34388—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள வடிப்பகங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட எரிசாராயம் எவ்வளவு?

(ஆ) விற்பனை மூலம் ஆலைக்குக் கிடைத்த தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள வடிப்பகம் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட எரிசாராயம் 464.64 இலட்சம் லிட்டர் ஆகும்.

(ஆ) சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள வடிப்பகம் மூலமாக ரூ.430.39 இலட்சம் லிட்டர் எரிசாராயம் விற்பனை செய்யப்பட்டது. அதன் மூலம் கிடைத்த தொகை ரூ.4865.93 இலட்சம் ஆகும்.

**32—**

### நியாய விலைக் கடை

**வினா எண் 17393—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சி வெருஷபத்து கிராமத்தில் நியாயவிலைக் கடை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி சட்டமன்றத் தொகுதியில் கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சி, வருஷபத்து கிராமத்தில் நியாயவிலைக் கடை கட்டிக் கொடுக்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் செய்வதற்கு பரிந்துரை பெற்று கட்டிக் கொடுக்கப்படும்.

**33—**

## குடும்ப அட்டை

**வினா எண் 31527—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை சேலம் மாவட்டம் மற்றும் எடப்பாடி வட்டத்தில் குடும்ப அட்டைகள் போலி உள்ளதாக அரசால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், உணவுத் துறை அமைச்சர்:**

2002 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை சேலம் மாவட்டம் மற்றும் எடப்பாடி வட்டத்தில் 3,551 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**34—**

## புதிய குடும்ப அட்டை

**வினா எண் 33787—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை மற்றும் மதுக்கூர் வட்டாரத்தில் 2001 முதல் 2002 வரை புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு எப்போது குடும்ப அட்டை வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை மற்றும் மதுக்கூர் வட்டாரங்களில் 2001-2002ஆம் ஆண்டுகளில் புதிய குடும்ப அட்டை கோரி 808 பேர் விண்ணப்பித்திருந்தனர். இதில் 548 விண்ணப்பதாரர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 260 விண்ணப்பங்கள் உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**35—**

## பகுதி நேர நியாய விலைக் கடைகள்

**வினா எண் 33798—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் முழுநேர நியாய விலைக் கடைகள், பகுதிநேர நியாய விலைக் கடைகள் எத்தனை செயல்பட்டு வருகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், உணவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 1049 முழுநேர நியாயவிலைக் கடைகளும் 182 பகுதி நேரக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

36— [2003 நவம்பர் 3

### நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 33909—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் இயங்கும் நியாய விலைக் கடைகளில் சொந்த கட்டடத்தில் இயங்குபவை எத்தனை?

(ஆ) வாடகை கட்டடத்தில் இயங்குபவை எத்தனை?

(இ) வாடகை கட்டடத்தில் இயங்கும் கடைகளுக்கு சொந்தக் கட்டிடம் கட்ட நடப்பாண்டில் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்பட்டு தொகுதியில் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் நியாய விலைக் கடைகள் 77.

(ஆ) வாடகைக் கட்டடங்களில் இயங்கும் நியாய விலைக் கடைகள் 77.

மொத்தம் 154 கடைகள்.

(இ) வாடகை கட்டடங்களில் இயங்கும் நியாய விலைக் கடைகளுக்குச் சொந்த கட்டடங்கள் கட்ட நடப்பாண்டில் தனியாக நிதி ஏதும் அரசிடமிருந்து ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

37—

### குடும்ப அட்டைகள்

**வினா எண் 34604—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 3]

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டத்தில் 2001 அக்டோபர் முதல் 2002 மார்ச் வரை குடும்ப அட்டை வேண்டி எத்தனை பேர் மனு செய்துள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு எப்பொழுது குடும்ப அட்டைகள் வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டத்தில் 2001 அக்டோபர் முதல் 2002 மார்ச் வரை குடும்ப அட்டை வேண்டி 71 பேர் மனு செய்துள்ளனர். இவற்றில் 14 பேருக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 57 மனுக்கள் தகுதியின்மையால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

38—

### பால்பண்ணை அமைத்தல்

**வினா எண் 24309—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமங்களிலுள்ள படித்த வேலையில்லா இளைஞர்கள் பயன்பெறும் வகையில் கால்நடைத் துறையின் மூலம் பால்பண்ணை அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கிராமங்களிலுள்ள படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் பால்பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 நவம்பர் 3

39—

### தேர்தல்கள்

**வினா எண் 30075—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கங்கள் எத்தனை?

(ஆ) அவற்றில் முறைப்படியும், விதிப்படியும் ஆண்டுதோறும் தேர்தல்கள் நடத்தப்படுகின்றனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 9204 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) இவற்றில் ஆண்டறிக்கை அனுப்பியுள்ள 2954 தொழிற்சங்கங்களில் 2224 தொழிற்சங்கங்களில் முறைப்படியும், விதிப்படியும் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

40—

### நிதி

**வினா எண் 31681—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முறைசாரா தொழிலாளர் நல வாரியத்திற்கு நிதி சேர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எந்த வகையில்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**



2003 நவம்பர் 3]

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் அரசு வழங்கிய ரூ.40 இலட்சத்துடன் 1999 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேரும் தொழிலாளர்களிடமிருந்து பதிவுக் கட்டணமாக ரூ.100-ம் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தல் கட்டணமாக ரூ.10-ம் வசூலிக்கப்படுகிறது. மோட்டார் வாகன வரியில் கூடுதல் கட்டணமாக 1 சதவீதம் வரி வசூலிக்கப்பட்டு இந்த வாரியத்திற்கு அளிக்கப்படுகிறது. மேலும், அமைப்புசாரா தொழிலாளர்களின் நலத் திட்டங்களுக்காக ரூபாய் ஒரு கோடி தொகுப்பு நிதியாக (Corpus Fund) 2001 ஆம் ஆண்டில் அரசு வழங்கியுள்ளது. இவ்வகையில் வாரியத்திற்கு நிதி திரட்டப்பட்டு வருகிறது.

41—

### வாரியம்

**வினா எண் 39418—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தங்க நகை தொழிலாளர்களுக்கு தனியான நல வாரியம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம் என்ற ஒரு வாரியத்தை 18-10-2000 அன்று அரசு அமைத்துள்ளது. இவ்வாரியத்தில், தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பதிவு செய்து கொண்டு நலத் திட்டங்களின் பயன்களைப் பெறுகின்றனர். தங்க நகைத் தொழிலாளர்களுக்கு தனியான நல வாரியம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

42—

### என்ஜினியரிங் தொழிற்சாலை

**வினா எண் 39421—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள பஞ்சாலை என்ஜினியரிங் தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) எத்தனை தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் மொத்தம் 44 பஞ்சாலைகளும், 12 என்ஜினியரிங் தொழிற்சாலைகளும் மூடப்பட்டுள்ளன.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள 44 பஞ்சாலைகளில் சுமார் 10,865 தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். மேலும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள 12 என்ஜினியரிங் தொழிற்சாலைகளில் சுமார் 3,958 தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

43—

### உதவித் தொகை

**வினா எண் 39485—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தொழிலாளியின் மகன்/மகள் ஆகியோருக்கு பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, தொழில் நுட்பக்கல்வி ஆகியவற்றிற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறதா?





(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர் பயனடைந்துள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நான்கு பேருக்கு தலா ரூ.2,000/- வீதம் ரூ.8,000/- உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

44—

### அடிப்படை வசதிகள்

**வினா எண் 41764—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகளை செய்துதர நிர்வாகத்தை அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கீழ்க்கண்ட வசதிகள் நிர்வாகத்தால் ஏற்கெனவே செய்து தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| கட்டப்பட்ட வீடுகள் | 17,332 |
| மின் இணைப்பு அளிக்கப்பட்ட வீடுகள் | 17,324 |
| குழந்தைகள் காப்பகங்கள் | 123 |
| சிற்றுண்டி சாலைகள் | 35 |
| பள்ளிகள் | 56 |

மின் இணைப்பு தரப்படாமல் உள்ள 8 வீடுகளில் 2 வீடுகளுக்கு மின் இணைப்புக்காட வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 6 வீடுகளுக்கு வைப்புத் தொகை செலுத்தப்படாததற்கு சம்பந்தப்பட்ட தோட்ட நிறுவன மேலாளர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

**45—**

## தனி வாரியம் அமைக்கும் திட்டம்

**வினா எண் 42522—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகரில் தங்க நகை செய்யும் தொழிலாளர்களுக்கு தனிவாரியம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம் என்ற ஒரு வாரியத்தை 18-10-2000 அன்று அரசு அமைத்துள்ளது. இவ்வாரியத்தில், தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பதிவு செய்து கொண்டு நலத் திட்டங்களின் பயன்களைப் பெறுகின்றனர். தங்க நகைத் தொழிலாளர்களுக்கு தனியான நல வாரியம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**46—**

## காலனி கட்டுதல்

**வினா எண் 22285—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* 2001-2002-இல் சேலம் மாவட்டத்தில் நெசவாளர்களுக்கு காலனி கட்டப்பட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* 2000-2001 இல் சேலம் மாவட்டத்திலிருந்து 25 வீடுகளுக்கு மத்திய அரசுக்கு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அவ்வாண்டில், மத்திய அரசால் தொகை ஏதும் அனுமதிக்கப்படாததால், அதே கோரிக்கைகள் 2001-2002 ஆம் ஆண்டில் மீண்டும் மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான தொகை பற்றாக்குறை காரணமாக மத்திய அரசால் 2001-2002 ஆம் ஆண்டிலும் அனுமதிக்கப்படவில்லை. எனவே, 2002-2003 ஆம் ஆண்டிற்கு இத்திட்டம் மைய அரசுக்கு மீண்டும் பரிந்துரைக்கப்பட்டு, தற்போது 25 வீடுகள் கட்டுவதற்கு மத்திய அரசின் பங்காக 50 சதவீதம் முதல் தவணைத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, சேலம் மாவட்டத்தில் நடப்பாண்டில் 25 வீடுகள் கட்டிக் கொடுக்க தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு வீடுகள் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**47—**

## காலனி கட்டுதல்

**வினா எண் 22295—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 2001-2002-ல் நாமக்கல் மாவட்டத்தில் நெசவாளர்களுக்கு காலனி கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002-ல் நாமக்கல் மாவட்டத்திலிருந்து 17 வீடுகளுக்கு மத்திய அரசுக்கு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அவ்வாண்டில், மத்திய அரசால் தொகை ஏதும் அனுமதிக்கப்படாததால், அதே கோரிக்கைகள் 2001-2002 ஆம் ஆண்டில் மீண்டும் மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான தொகை பற்றாக்குறை காரணமாக மத்திய அரசால் 2001-2002 ஆம் ஆண்டிலும் அனுமதிக்கப்படவில்லை. எனவே, 2002-2003 ஆம் ஆண்டிற்கு இத்திட்டம் மைய அரசுக்கு மீண்டும் பரிந்துரைக்கப்பட்டு, தற்போது 17 வீடுகள் ஏற்கப்பட்டு மத்திய அரசின் பங்காக 50 சதவீதம் முதல் தவணைத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, நாமக்கல் மாவட்டத்தில் நடப்பாண்டில் 17 வீடுகள் கட்டிக் கொடுக்க தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

48—

## பட்டுத் துணிகள் விற்பனை

**வினா எண் 27183—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் பட்டு விழாவில் எவ்வளவு மதிப்புள்ள பட்டுத் துணிகள் விற்பனை செய்யப்பட்டன?

(ஆ) வெளிநாட்டுக்கு இந்த பட்டு விழாவின் மூலம் ஏற்றுமதி வாய்ப்பு கிட்டியதா?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**



(அ) காஞ்சிபுரத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கென, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து காஞ்சிபுரம் அண்ணா அரங்கத்தில் 2002ஆம் ஆண்டு அக்டோபர் 16 முதல் 18 வரை பட்டு சுற்றுலா விழா நடத்தியது. காஞ்சிபுரத்தில் அனைத்து பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் விற்பனைக் கூடம் உள்ளதால், இவ்விழாவில் கலந்து கொண்ட 10 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் ரூ.12,080/- மதிப்புள்ள இரண்டு சேலைகள் மட்டுமே மேற்படி பட்டு சுற்றுலா விழாவில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

(ஆ) சுற்றுலா பயணிகளைக் கவர்வதற்கும், காஞ்சிபுரம் பட்டு சேலைகளை விளம்பரப்படுத்தவும் சுற்றுலாத் துறையால் நடத்தப்பட்ட பட்டு சுற்றுலா விழாவில், அயல்நாட்டு பயணிகளின் வருகை குறைவாக இருந்ததால் ஏற்றுமதிக்கான வாய்ப்பு ஏதும் கிடைக்கவில்லை.

49—

## வேட்டி உற்பத்தி

**வினா எண் 31799—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் மகளிர் சங்கம், நாகம்மையார் பட்டு கைத்தறி சங்கம் எஸ்.ஏ.எம்.145-இல் சிறப்பு சலுகையாக வேட்டி உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) எஸ்.ஏ. 145 அன்னை நாகம்மையார் மகளிர் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திடமிருந்து சிறப்பு சலுகையாக வேட்டி உற்பத்தி செய்ய அரசுக்கு கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. அவ்வாறு கோரிக்கை பெறப்படின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

50—

## கூட்டுறவு சங்கக் கட்டடங்கள்

**வினா எண் 31801—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் எவ்வளவு கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் உள்ளன?

(ஆ) கூட்டுறவு சங்கங்கள் சொந்தக் கட்டடத்தில் உள்ளனவா? வாடகை கட்டிடத்தில் உள்ளனவா?

(இ) வாடகை கட்டடமெனில், வாடகை தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகரில் 26 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

(ஆ) சேலம் மாநகரில் உள்ள 26 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 13 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் சொந்தக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றன. எஞ்சிய 13 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றன.

(இ) வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வரும் 13 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் மாத வாடகையாக மொத்தம் ரூ.40,750/- செலுத்தி வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 3. தகவல் கோரல்

### (ஆ) கோயில்களில் ஆடு, கோழி பலியிடுதல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு, (குறுக்கீடுகள்) சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன்கீழ்..

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே.....

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே தமிழக அரசு ஆடு கோழி பலியிடக்கூடாது என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இவற்றை எல்லாம் அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்)

## 4. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப் பேரவையின் 6-வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. செ.கு. தமிழரசன்

**திரு. ஜி .கே. மணி:** தலைவர் அவர்களே,...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே,...

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** தலைவர் அவர்களே,..

[2003 நவம்பர் 3

# 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

## (அ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீங்கள் எல்லாம் விதிமுறைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். இது முதல் நாள். துணை நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும். அடுத்த நாள் நீங்கள் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



2003 நவம்பர் 3] (பேரவைத் தலைவர்)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

## (ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

[2003 நவம்பர் 3

### (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2003-2004, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2003 நவம்பர் 3] [திரு. சி. பொன்னையன்]

2003-2004 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின் முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை@இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் 578.36 கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில் 498.83 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான 79.53 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2003 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் நாளன்று கடந்த நிதியாண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகள் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று "புதுப்பணிகள்" குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

3. வேளாண்மைச் சாகுபடியில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக, 2003-2004 ஆம் ஆண்டில், உழவர்களுக்கான சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன ஏற்பாட்டைச் செயல்படுத்தும் வகையில் அரசு 25.10 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. "மானியம் எண் 5—வேளாண்மைத் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் 15.00 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

4. வேளாண் குடும்பங்களின் வருமானம் வறட்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டதைக் கருத்திற்கொண்டு, சிறு மற்றும் குறுநில உழவர்கள் கூட்டுறவு வங்கிகளிலிருந்து பெற்ற பயிர்க் கடன்கள் மீதான வட்டியைத் தள்ளுபடி செய்வது தொடர்பாக, அரசு, 20.00 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து 3.00 கோடி ரூபாய் முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என்பதன்கீழ் 20.00 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

5. பருவமழை தவறியதையடுத்து, புனல் மின்சக்தி உற்பத்தி குறைந்த காரணத்தால் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. புனல் மின்சக்தி உற்பத்தி குறைந்த காரணத்தால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக, இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை" என்பதன் கீழ் 200.00 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

@அறிக்கையில் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகள் 451 மற்றும் 452 ஆம் பக்கங்களில் அச்சிடப் பெற்றுள்ளன.

6. 2004 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மேலும் நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் பயனடையும் வகையில் 81 இலட்சம் பாலியஸ்டர் பருத்திப் புடவைகளும், 74 இலட்சம் பாலியஸ்டர் பருத்தி வேட்டிகளும் இலவசமாக வழங்குவதற்காக, அரசு, 120.00 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து 20.00 கோடி ரூபாய் முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 16—கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணிநூல்" என்பதன் கீழ் 120.00 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

7. கும்பகோணம் புறவழிச்சாலை அமைப்பதற்காக அரசு 24.09 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. வரவிருக்கும் மகாமகம் திருவிழாவையொட்டி கும்பகோணம் நகர மற்றும் நகரைச் சுற்றியுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக அரசு 1.50 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 20—நெடுஞ்சாலைகள் துறை" என்பதன்கீழ் 25.59 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

8. "தேசிய சமச்சீர் வளர்ச்சித் திட்டத்தை" (Rashtriya Sam Vikas Yojana) நிறைவேற்றுவதற்காக திருவண்ணாமலை மாவட்டத்திற்கு அரசு மொத்தம் 15.00 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக 3.00 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 35—திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் 7.50 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

9. காவிரி கழிமுகப் பகுதி மாவட்டங்களில் காவிரி நதியின் குறுக்கேயும், கால்வாய்களிலும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும், மதகுகளை மாற்றவும் மற்றும் பழுது பார்ப்பதற்காகவும் அரசு 34.00 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து 5.00 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 38-பொதுப் பணித் துறை" என்பதன்கீழ் 34.00 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

10. மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், வறட்சியின் காரணமாக சிறு மற்றும் குறு நில உழவர்கள் மற்றும் வேளாண் தொழிலாளர்களில் தகுதியுடைய குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு



இலவசமாக 30 கிலோ கிராம் அரிசி வழங்கும் திட்டத்தை அறிவித்திருந்தார்கள். உணவுப் பாதுகாப்பு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஏற்பட்ட செலவுத் தொகைகளைக் கொடுத்து தீர்ப்பதற்காக துணை மதிப்பீடுகளில் "மானியம் எண் 49—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் 75.00 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

11. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

(449 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

பிற்பகல் 12-20

## 2003-2004 ஆம் ஆண்டு "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 3 நீதி நிருவாகம் | 42,08 | - | - |
| 4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 1,14,34 | - | - |
| 5 வேளாண்மைத் துறை | 17,02,52 | - | - |
| 6 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு | 82,50 | - | - |
| 9 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 25,00 | - | - |
| 12 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 23,31,80 | - | - |
| 13 எரிசக்தித் துறை | 200,00,00 | - | - |
| 15 நிதித் துறை | 8,00 | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் | 120,00,00 | - | - |
| 18 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 2,53,65 | - | - |
| 19 | உயர் கல்வித் துறை | 89,90 | 50,00 | - |
| 20 | நெடுஞ்சாலைகள் துறை | - | 25,59,45 | - |
| 21 | உள் துறை—காவல் | 3,64,34 | - | - |
| 26 | தொழில் துறை | - | - | 6,00,28 |
| 27 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் | 5,24,50 | - | - |
| 29 | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—எழுதுபொருள் மற்றும் அச்சு | 1,59,08 | 43,00 | - |
| 31 | தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | 85,64 | - | - |
| 35 | திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை | 7,50,00 | . | - |
| 37 | பொதுத் துறை | 26,00 | - | - |
| 38 | பொதுப் பணித் துறை | 30,58,65 | 45,20,50 | - |
| 43 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 7,24,60 | 50,00 | - |
| 44 | தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 40,00 | - | - |
| 47 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | - | 1,30,00 | - |
| 49 | இயற்கைச்சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 75,00,00 | - | - |
| | **பெருமொத்தம்** | **498,82,60** | **73,52,95** | **6,00,28** |



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4-11-2003) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர் பேரவை, பிற்பகல் 12-24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*1. 1972ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின் திருத்தங்கள் செய்தது குறித்தும் மற்றும் 1973ஆம் ஆண்டு அடுக்குமாடி மற்றும் பொது கட்டட விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்தும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 11-10-2002 ஆம் நாளிட்ட 138ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*2. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்தும் மற்றும் 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மலைப்பிரதேச) கட்டட விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்தும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 16-8-2002ஆம் நாளிட்ட 112ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*3. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் (ஒப்புதல் பெறாமலும் விதிகளுக்குப் புறம்பாகவும் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் நிலமேம்பாடுகளை முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 31-7-2002 ஆம் நாளிட்ட 104 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி (மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு,*

1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
29/1994) 11(3) மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர ஊரமைப்புச்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவு ஆகிய பிரிவுகளின்
கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

4. 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநராட்சிகள் பணி விதிகளில்
திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்
துறையின் 14-2-2003-ஆம் நாளிட்ட 13-ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981-ஆம் ஆண்டு
கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431
(2) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி
மாநராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும்
1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
29/1994) 11(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

5. மேட்டூர், பாரதி நகர், திரு. பழனியப்பன் என்பவரின் மகன்
திரு. பி. மாணிக்கம், என்பவருக்குச் சொந்தமான எம்.டி.இ.0972 என்ற
எண் கொண்ட சரக்கு உந்து தொடர்பாக, 1-1-1991 முதல் 30-4-1995 முடிய
உள்ள கால அளவுக்குரிய வசூலிக்க இயலாத மோட்டார் வாகன வரி
ரூ.31,534/- மற்றும் அபராதம் ரூ.51,024/- வகையில் மொத்தம் ரூ.82,558/-ஐ
(ரூபாய் எண்பத்து இரண்டாயிரத்து ஐநூற்று ஐம்பத்தெட்டு மட்டும்)
தள்ளுபடி செய்தது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 19-2-2003-
ஆம் நாளிட்ட 159-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி
விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ்
பேரவைமுன் வைக்கப்பெற்றது).

6. 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு
விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின்
7-2-2003-ஆம் நாளிட்ட 118-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி
விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ்
பேரவைமுன் வைக்கப்பெற்றது).





7. 3-1-1996, 12-3-1997 மற்றும் 8-7-1998 ஆகிய நாட்களில் தமிழ்நாடு
அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் ஆகியவற்றை ரத்து செய்து
அதற்குப் பதிலாக 1-4-2003 ஆம் நாள் முதற்கொண்டு அல்லது
அந்நாளிலிருந்து மதுரையில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம், (மதுரை கோட்டம்-I), கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு அரசு
போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர் கோட்டம்-I) மற்றும்
காரைக்குடியில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(கும்பகோணம் கோட்டம்-III) ஆகியவற்றால் இயக்கப்பட்டு, முறையே
மதுரை மாநகரம், நீலகிரி மாவட்டம் மற்றும் இராமநாதபுரம்
மாவட்டத்தில் உள்ள இராமேஸ்வரம் தீவில் ஓடுகின்ற பயணிப்
பேருந்துகளுக்குச் செலுத்தக்கூடிய வரி மற்றும் மேல் வரி வீதங்களை
ஒரு காலாண்டிற்கு இருக்கை ஒன்றினுக்கு முறையே ரூ.80.00 (ரூபாய்
எண்பது மட்டும்) மற்றும் மேற்சொன்ன வரிக்கு மேல்வரியாக 25
சதவீதமும் குறைக்கப்படுவதாக அறிவித்தது குறித்து மேற்சொன்ன வரிக்கு
மேல்வரியாக 25 சதவீதமும் குறைக்கப்படுவதாக அறிவித்தது குறித்து
உள் (போக்குவரத்து-I) துறையின் 9-5-2003-ஆம் நாளிட்ட 395-ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு
மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

8. 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில்
திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறையின் 23-5-2003 ஆம் நாளிட்ட 190 ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983 ஆம் ஆண்டு
தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
30/1983) 180(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

9. TN.. 07 Y 5386 ஆம் பதிவு எண் கொண்ட மாருதி ஆம்னி
ஆம்புலன்ஸ் வண்டியை பொறுத்தமட்டில் அவ்வண்டி சென்னை
திருவாளர்கள் மூர்துழுவியா இரத்த சேமிப்பு வங்கிக்குச் சொந்தமாக
இருக்கின்ற வரையிலும் வாடகைக்கு விடாமல் அல்லது பயன் ஏதும்
பெறாமல் மனித நேயத்துடன் உதவும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும்
வரையிலும், அந்த வண்டி குறித்து திருவாளர்கள் சென்னை,
மூர்துழுவியா இரத்த சேமிப்பு வங்கி செலுத்தத்தக்க வரி வீதத்தில் 50
சதவீத வரிக்குறைப்பது (ஐம்பது சதவீதம்) குறித்து உள் (போக்குவரத்து-I)

துறையின் 4-2-2003 ஆம் நாளிட்ட 113 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார்
வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2)
பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

10. எண். 359, டி.எம்.எஸ். வளாகம் (சத்துணவு கட்டிடத் தொகுதி),
தேனாம்பேட்டை, சென்னை-6 என்ற முகவரியிலுள்ள தேசிய
இளம்பிள்ளைவாத நோய் கண்காணிப்புத் திட்டம், உலகச் சுகாதார
நிறுவனத்தின் கண்காணிப்பு மருத்துவ அதிகாரி மற்றும் 'பா/பெ.
சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர், விஸ்வநாதபுரம், மதுரை-625 014,"
என்ற முகவரியிலுள்ள தேசிய இளம்பிள்ளைவாத நோய் கண்காணிப்புத்
திட்டம், உலகச் சுகாதார நிறுவனத்தின் கண்காணிப்பு மருத்துவ அதிகாரி
ஆகியோரைப் பொறுத்தவரையில், மேற்சொன்ன திட்டத்திற்காக
மேற்சொன்ன நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பயன்படுத்தப்படுகின்ற
வகையில் (1) அடிச்சட்டம் எண் MAI PN4 DFC 32-A65434 உடன்
எஞ்சின் எண். DF34A 17011. மற்றும் (2) அடிச்சட்டம் எண். MAI PN4
DFC 32 A-65538, உடன் எஞ்சின் எண். DF 34A 17046 ஆகியவற்றைக்
கொண்டுள்ள இரண்டு மஹிந்திரா பொலேரோ ஜீப்புகளுக்குச்
செலுத்தத்தக்க மோட்டார் வண்டிகள் வரியிலிருந்து விலக்களிப்பது
குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 21-5-2003 ஆம் நாளிட்ட 422
ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம்
ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன்
வைக்கப்பெற்றது).

11. திருப்பி. முருகேசன், மாவட்ட நீதிபதி, தலைமை நிர்வாகி மற்றும்
அலுவல் முறை அறங்காவலர், சென்னை அவர்களை சென்னையிலுள்ள
தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவராக
நியமித்தது குறித்து வணிகவரித் துறையின் 25-4-2003 ஆம் நாளிட்ட
அரசாணை (3D) எண். 9-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம்
ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

12. முதன்மைச் சார்பு நீதிபதி திருட்டி. சங்கரலிங்கம், அவர்களை
மதுரை, தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின்
(கூடுதல் ஆயம்) கூடுதல் உறுப்பினர் (நீதித்துறை)-ஆக நியமித்தது குறித்து
வணிகவரித் துறையின் 9-5-2003 ஆம் நாளிட்ட அரசாணை (2D) எண் 54-ல்



வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

13. உரிமையியல் நீதிபதி (முதுநிலைப் பிரிவு) திரு. வி. சுப்பிரமணியன் அவர்களை சென்னை, தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் ஆயம்) கூடுதல் உறுப்பினர் (நீதித்துறை)-ஆக நியமித்தது குறித்து வணிகவரித் துறையின் 9-5-2003 ஆம் நாளிட்ட அரசாணை (2D) எண் 55-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

14. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி ஆறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்.)

15. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ, பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

16. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதை தடைசெய்தல் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2003)

2. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2003)

3. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2003)

4. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2003)

5. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2003)

6. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2003)

7. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2003)

8. 2003-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2003)

9. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

10. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

11. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

12. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

13. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

14. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை [illegible] 1 முதல் 50 வரை)

சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை– 600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.